# இதய நாதம்

நாவல்

MADURAI UNIVERSITY LI
16 JUN 1970
MADURAI

ந. சிதம்பர சுப்ரமண்யன்

ஸ்டார் பிரசுரம்
66, பெரிய தெரு
திருவல்லிக்கேணி :: சென்னை - 5.

முதற் பதிப்பு : 1952
இரண்டாம் பதிப்பு : 1960
மூன்றாம் பதிப்பு : 1964

விலை ரூபாய் 3-50

45947
O31:3N123:12
K4

STAR PUBLICATIONS
66, Big Street,
TRIPLICANE :: MADRAS-5.

அச்சிட்டது: மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

# சமர்ப்பணம்

நாதத்தை யோகமாக
உபாஸித்த மஹானுபாவர்களுக்கு
இந்தப் புத்தகத்தை சமர்ப்பிக்கிறேன்.

"எந்தரோ மஹானுபாவுலு
அந்தரிகி வந்தனமு.

* * *

பதித பாவனுடனே பராத்பருனி
குரிஞ்சி பரமார்த்தமுகு
நிஜமார்க்கமுதோனு பாடுசுனு
ஸல்லாபமுதோ ஸ்வரலயாதி
ராகமுலு தெலியுவாரு (எந்தரோ)

* * *

பாகவத ராமாயண கீதாதி
ச்ருதி சாஸ்த்ர புராணமு
மர்மமுலன் சிவாதி ஷண்மதமுல,
கூட்முலன் முப்பதி முக்கோடி சுராந்தரங்கமுல
பாவம்புல நெருகி பாவராக
லயாதி சௌக்யமுசே சிராயுவுல்
கலிகி நிரவதி சுகாத்முல,
தியாக ராஜாப்துல" (எந்தரோ)

ஸ்ரீ தியாகராஜர்

# முன்னுரை

---

ஸ்ரீ. என். ரகுநாதன், 'ஹிந்து' துணை ஆசிரியர்.

ஸ்ரீ. சிதம்பர சுப்ரமண்யன் சிறுகதைகள் எழுதிப் புகழ் பெற்ற எழுத்தாளர்களில் ஒரு முக்ய ஸ்தானம் வகிப்பவர். அவர் வெளியிட்டிருக்கும் கதைகளின் தொகை குறைவே. ஆனால் அவைகளில் காணப்படும் கலைச் செல்வமும் உண்மை யுணர்ச்சியும் படிப்பவர் மனதை வசீகரம் பண்ணுவதால் அவைகளை மறப்பதற்கில்லை.

இதுவே அவருடைய முதல் நாவல்; ஒரு ஸங்கீதக் கலைவாணனின் வாழ்க்கைச் சித்திரமாக அமைந்தது. கலை களையும் கலைஞர்களையும் கற்பனைக் கண்ணால் நோக்கிப் பிறரும் காணும்படி செய்யும் ஆற்றல் அரிது. பிரபல பிரஞ்சு ஆசிரியரான ரோமான் ரோலந்த் தன்னுடைய ஜ்யான் கிரிஸ்டோபி என்ற கியாதி வாய்ந்த நவீனத்தில் ஒரு வாக்கேயகாரரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஓரளவு வெற்றி பெற்றிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். அந்த அளவுக்கு முயற்சி பலித்திருக்கும் மற்ற கற்பனைகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். கலைஞனின் மனோபாவமும் (artistic temperament), அவன் கற்ற வித்தை யும் (technique), உடலும் உயிரும்போல் சேர்ந்து உருவக மாவதே கலைச்சிகரம். அதை எட்டிய கலைவாணன் ஒருவனின் வாழ்க்கைப் போக்கைச் சித்திரிக்க எத்தனிக்கும் கதாசிரியனுக்கு கலையின் ஸ்தூல அம்சமான வித்தையை ஒரு சிறு அளவே கற்பனை உணர்ச்சியின் ஒளியைக் கொண்டு பிரகாசிக்கச் செய்ய முடியும். வித்தையைத் தொழிலாளி களும் தொழில் மர்மங்களை முறையே பயின்றவர்களும் மட்டும் அறியும்படி பரிபாஷை மூலம் விளக்கலாம். ஸங்கீத சாஸ்திரத்தில் பயிற்சி இல்லாதவர்களுக்கு பாட்டில் எவ்வளவு மோகம் இருந்தாலும் ஒரு சிறந்த பாடகனின் முதல்தரமான கச்சேரியின் நுணுக்கங்களை அவர்களுக்கு விவரமாக விளக்கு வது இயலாத காரியம். ஆயினும் நம் தக்ஷிண தேசத்தில் கர்னாடக ஸங்கீதம் ஊறிக் கிடப்பதால் கதாநாயகனை கிட்டு

என்ற கிருஷ்ண பாகவதரின் கலையில் காணப்படும் ஞானத்தின் பெருமையை கதாசிரியர் தமது உண்மையான சங்கீத அறிவைக் கொண்டு ஆங்காங்கு விளக்கி இருப்பது ரஸிகர்களுக்கு உவகை தரும்.

மேலான கலையில் வித்தையைவிட ரஸபாவமும் அது வளர்க்கும் மனோ தர்மமுமே சிறந்த அம்சங்கள். கலைஞன் தனிப்பிறவி. நாடோடி மனிதனுக்கும் அவனுக்கும் வெகு தூரம். கிட்டுவின் விசித்திர நடத்தையைக் கவனிப்போம். ஆறு வயதுப் பையன் தன்னிடத்தில் பிரியமில்லாத மாமா வீட்டிற்குப் போய் சாஸ்திரம் பயில இஷ்டப்படாமல், தன்னையே நம்பி இருக்கும் தாய்க்குச் சொல்லாமலே ஊரை விட்டு ஓடுகிறான். உடன் பிறந்ததான ஸங்கீத வாஸனையை, நல்லாசிரியனை அடைந்த புண்யவசத்தால் வளர்க்கிறான். பத்து வருஷம் தாயையும் ஊரையும் மறந்து ஆசிரியனைத் தெய்வமாக எண்ணிக் கலையில் பூரண பாண்டித்யத்தையும் அபார மேதா விலாஸத்தையும் பெற்ற பிறகு குரு காலகதியடையவே, அந்த வருத்தத்தில் ஊரையும் தாயையும் மறுபடி நினைக்கிறான். மனதில் வேதனையும் பச்சாத்தாபமும் ஒருங்கே எழ, தாயைத் தேடிச் செல்லும் கன்றைப்போல் ஓடோடியும் போய்ப் பார்க்கிறான். தாய் இறந்து ஆறு வருஷங்கள் ஆனதையும் தன் வீடு திடலானதையும் கண்டு மனம் வெதும்பி ஒரு கணமும் அங்கே நிற்கமுடியாமல் திருவையாறு திரும்புகிறான்.

இதைவிடவும் விசித்திரமானது அவன் தொழில் நடத்திய தினுசு. வெகு சீக்கிரத்தில் தன் கலைத் திறமையால் பாமரர் பண்டிதர் முதலான எல்லோர் மனதையும் கவர்ந்து பேரும் புகழும் பெறுகிறான். அப்பொழுது ஒரு சின்னச் சம்பவம். ஒரு பணக்காரர் வீட்டுக் கலியாணத்தில் பாட ஒப்புக்கொண்ட அவன், கச்சேரிக்குக் குறிப்பிட்டிருந்த காலத்தில் வராமல் ஸந்தியா வந்தனத்தில் ஈடுபடவே, தனவந்தர் வெகு கோபமாயும் உதாசீனமாகவும் பேசி விடுகிறார். அந்த நிமிஷம் கிட்டு பீஷ்மப் பிரதிக்ஞை செய்கிறான். அது என்ன தெரியுமா? இனிக் காலணாக்கூட ஊதியம் பெற்றுப் பாடுவதில்லை என்பதும், ஸங்கீதத்தை ஈசுவரார்ப்பணம் செய்வதும் என்பதுமே. சொத்து சுதந்திரமில்லாத இவன் பணமில்லாமல் குடும்ப வாழ்க்கையை எப்படி நடத்துவது என்று அரைக் கணம்கூட யோசிக்கவில்லை. அவனுக்கு வாய்த்த சம்சாரத்திற்கோ பண விஷயத்திலும் மற்ற பல விஷயங்களிலும் நேர் விரோதமான மனப்

பான்மை. இதிலிருந்து நேரிடும் பல இடர்களையும் சட்டை பண்ணாமல் கடைசி வரையில் தன் தீர்மானத்தை நிறை வேற்றி விடுகிறான்.

ஸங்கீதமும் ஒரு யோகம் என்பது ஆன்றோர் மரபு. யோகத்திற்குத் தியாகம் இன்றியமையாதது. சின்னதை விட்டுத் தானே பெரியதைப் பிடிக்கவேண்டும். "காமினி காஞ்சனம்" என்ற பிரதிபந்தங்களில், கிட்டுவுக்கு பணத் தாசை லேசாக அகன்று விட்டது. உண்மைக் கலையின் வளர்ச்சி காரணமாகவும் இயற்கை வாஸனையாலும் அவனுக் குச் சிற்றின்பத்தில் கிராம்யமான பற்று எப்பொழுதும் இல்லை. ஓரளவு விரக்திக்குக் காரணம் தனக்கு வாய்த்த மனையாளின் லௌகிக மனோநிலை. அவள் 'சுபாவத்'தில் நல்லவள். ஆனாலும் ஸாமான்ய ஸ்திரீகளைப்போல் ஆடை யாபரணங்களில் ஆசையும், பகட்டாய்ப் பிழைத்து ஊரார் மதிப்பைப் பெறவேண்டுமென்ற எண்ணமும் உண்டு. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஜட்காக் குதிரை யையும் பந்தயக் குதிரையையும் சேர்த்தால் எப்படியோ அப்படி இருந்தது இந்தத் தாம்பத்யம்.

இவ்விதம் இணைப்பில் பிணக்கு ஏற்படாமல் செய்ய பந்தயக் குதிரையால்தானே முடியும்? அது தன் அகங் காரத்தை அடக்கிக்கொண்டு ஜோடியாக ஓடக் கற்க வேண்டும். இந்த உண்மையைக் கிட்டு ஒருநாள் வீட்டில் ஏற்பட்ட சண்டையில் வெறுப்படைந்து வெளியேற எண்ணு கையில் திடீரென்று அறிகிறான். சாரைப் பாம்பைப்போல் தன் குறியை நோக்கிப் பாய்பவருக்கு பிறர் மனோ நிலையில் கவனம் செல்வதில்லை. அவனுடைய சங்கடங்களுக்கு அகங் காரத்தை ஒட்டிய பிடிவாதமே காரணம் என்பதை அவனுடைய நண்பரும் பக்குவமடைந்த மனதோடு கூடிய வருமான கந்தசாமி பாகவதர் எடுத்துக் காட்டுகிறார். இவரே அவன் சிறுபிராயத்தில் செய்த முதல் கச்சேரியில் காட்டின சொற்ப கர்வத்தை நாசூக்காகக் கண்டித்தவர்.

இந்த உபதேசம் கிட்டுவிடம் பெரிய உள்ளக் கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறது. இரவில் வீடு திரும்புகிறான். தான் அசட்டுத்தனமாய் நடந்து கொண்டதால் என்ன விளையுமோ என்ற கவலையுடன் நீலாம்பாள் வாசலிலேயே காத்திருக் கிறாள். ஒரு புயலுக்குப் பின் இருவரும் சந்திப்பதில் பரபரப்போ, மேலெழுந்த வாரியான அன்புக் கொந் தளிப்போ காணப்படவில்லை. நிதானமும் மன ஆறுதலும் தான் இருக்கின்றன. "விதி செய்யும் கொடுமை போதும். நீயும்

நானும் ஒருவருக்கொருவர் கொடுமை செய்துகொள்ள வேண்டாம்'' என்று கிட்டு சொன்ன முடிவு மனித ஹிருதயத்தை ஆராய்ந்து பார்க்கும் ஆசிரியரின் ஆழ்ந்த ஞானத்தைப் புலனுக்குகிறது.

மேற்கூறிய காட்சியையே இந்த நூலின் ஸ்தாயி எனலாம். அதற்கப்புறம் வரும் சம்பவங்கள் கதையை வெறும் கதையாய்ப் பார்த்தால் இன்றியமையாதன என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவை கிட்டுவின் தபஸ் வளர்ச்சிக்கு அளவுகோலாக நிற்கின்றன. ஸங்கீதத்தினிடம் பக்தியும், கிருஷ்ண பாகவதர் வழியில் அலாதியான மோகமும் உள்ள தாஸி ஒருத்திக்கு சிக்ஷை சொல்லிவைக்க ஒரு நண்பரின் நிர்ப்பந்தத்தால் அவன் ஒப்புக்கொள்கிறான். இது தன் குலத்திற்கும் விருத்திக்கும் விரோதம் என்று அவனே முதலில் தயங்கினதுண்டு. ஊராரும் இதைப்பற்றி ஏளனமாகப் பேசுகிறார்கள். ஆனால் நாளடைவில் அந்தப் பெண்ணின் குணமும் ஸங்கீதத்திலுள்ள ஆர்வமும் லௌகிகமான இந்த ஆக்ஷேபணைகளை அவன் புறக்கணிக்கும்படி செய்கின்றன. அவள் பயிற்சி வளர்ந்தோங்கி வருவதோடு அவளுக்குத் தெரியாமல் அவள் உள்ளத்தில் அவனிடம் பிரேமையும் உதிக்கிறது. இதைத் தற்செயலாகத் தெரிந்து கொண்ட அவன் இருட்டில் பாம்பை மிதித்தவன் போல் திடுக்கிடுகிறான். வம்பர் உலகத்தை இகழ்ந்த அவன் தன் விரக்தி எல்லோரிடமும் இருக்கும் என்று தான் எதிர்பார்த்தது உலக ஞானம் போதாததால் என்பதை அறிகிறான். அதே நிமிஷம் பாலாம்பாள் பழக்கத்தை நிறுத்திக்கொள்கிறான். கற்பனைக் கனலைத் தகுதியான உள்ளத்தில் மூட்டி அதன் மூலம் ஆனந்தத்தை அடைய நினைப்பதுகூட அகங்காரம்தான் என்று உணர்ந்தான் போலும்! இது அவன் தியாகத்தில் இரண்டாவது படி.

இத்துடன் அவனுக்குவந்த சோதனை நிற்கவில்லை. ஸங்கீத தேவதையை உபாஸிக்கத் தகுந்த ஸாதனமாகக் கருதி வெகு ஆவலுடன் வளர்த்து புஷ்டிபண்ணிவந்த அவனுடைய கந்தர்வ சாரீரம் திடீரென்று அடைபடுகிறது. அவன் ஏக்கம் அளவு கடந்து நிற்கிறது. தன்னுடையது என்று சொல்லக்கூடிய கடைசி வஸ்துவும் கைநழுவி விட்டதே என்று துக்கிக்கிறான். இப்போதும் கந்தசாமி பாகவதரே ஞானசாரியனாகத் திகழ்கிறார். வெளிப்படையான சாரீரம் போய்விட்டால் உலகம் போற்றுவது குறையலாமேயன்றி ஸங்கீத உபாஸனையால் அடைந்த பண்பு போய்விடாது

என்றும், பண்பட்ட மனதை உள்ளே திருப்பி ஆத்மானந்தம் அடையலாம் என்றும் அவர் கூறியது, பச்சை மரத்து ஆணி போல் பதிகிறது. கிட்டு வாய் மூடி மௌனியாகிறான்.

இந்த நவீனத்தில் கதையின் ஆடம்பரத்தையோ, பாத்திரங்களின் பெருக்கையுமோ வின்யாசத்தையுமோ ஆசிரியர் முக்கியமாக நாடவில்லை. தெய்வத் தன்மை வாய்ந்த கலையை ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குச் சாதனமாக உபயோகிக்கத் துணிந்த தீரனுக்கு வாழ்க்கை செய்யும் துன்பங்களும் இன்பமாகவே திகழ்கின்றன என்பதை உலக ரீதிக்கு ஒட்டியும், மிகைப்படுத்தாமலும், நம்பத்தகுந்த வகையிலும், காட்டுவதே அவர் கருத்து. இந்தக் கருத்து வெற்றியடைந் திருக்கிறதென்றே எனக்குத் தோன்றுகிறது. 'முற்போக்காளர்' என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர் களுக்கு இதெல்லாம் பழைய கட்டுப் பெட்டி மனப்பான்மை யாகப் படலாம். ஸ்ரீ சிதம்பர சுப்ரமண்யன் 'பாரதீய ஸமஸ் கிருதி' என்று தலைமுறை தத்துவமாக வழங்கிவரும் இந்தியப் பண்பாட்டிற்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தவராகவே இங்கு விளங்குகிறார். அவருடைய நடை அமைதியும் இனிமை கலந்த ஹாஸ்யச் சுவையும் 'ஸ்வபாவோக்தி' என்று ஆலங்காரிகர்கள் கொண்டாடும் அழகும் பொருந்தி இருக்கின்றது. இந்த நவீனத்தைப் படிப்பவர்கள் தாம் ஒரு சிறந்த அனுபவம் பெற்றதாகவே எண்ணுவார்கள் என்று நம்புகிறேன்.

அலமேலுமங்காபுரம்
மயிலாப்பூர், சென்னை
15.2.'52.

ந. ரகுநாதன்

# ஒரு வார்த்தை

சங்கீதம் எங்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்து. ஆனால் என்னுடைய முன்னோர்களுக்குச் சரியான வாரிசாக நான் ஏற்படவில்லை. என் குடும்பத்தில் எனக்கு முன்னே பிறந்திருந்த சங்கீத சிம்மங்களுக்குப் பின்னால் வருவதற்கு நான் கொஞ்சமேனும் யோக்கியதை இல்லாதவன். இருந்தாலும் இரத்தத்தில் ஊறியிருக்கும் பரம்பரைச் சங்கீத வாஸனை, நான் லௌகிக முறைப்படி எந்தத் தொழில் செய்து கொண்டிருந்தாலும், இதயத்தைச் சங்கீதத்திலேயே நாட வைத்தது. நாதத்தை முறைப்படி உபாசிக்காத நான் நாத யோகிகளை உபாசிக்கலாயினேன். அந்த முயற்சியின் பயன்தான் இந்தப் புத்தகம்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் போன்ற நாதப்பிரம்மங்களைப் பற்றியும், மஹா வைத்தியநாத சிவன் போன்ற சங்கீத உபாஸகர்களைப் பற்றியும் கேட்டு, என் இதயம் ஒரு நாதோபாசகனைப்பற்றி எழுதத் தூண்டியது. அநேக சங்கீதப் பெரியார்களைப் பார்த்தும் கேட்டும், அவர்கள் பட்ட சிரமங்களையும், அவர்கள் செய்திருக்கும் தபசையும் அறிந்ததிலிருந்து, ஒரு நாதயோகியைக் கதாநாயகனாக வைத்து எழுதவேண்டும் என்ற ஆசை வெகு நாட்களாக இருந்து வந்தது. அதன் விளைவே இப்புத்தகம்.

வாழ்க்கையிலே சில சங்கீதப் பெரியார்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் சிலவற்றைப் போன்று தொகுத்துக் காட்ட முயன்றிருக்கிறேன். காளிதாஸன் சொல்லியிருப்பது போல், "நாதயோகம் எங்கே, நான் எங்கே." இருந்தாலும் ஆசை வெட்கமறியாது என்ற முறையில் இதை எழுதியிருக்கிறேன்.

நம்முடைய கலாசாரத்திற்கும் பண்பிற்கும் உண்மைப் பிரதிநிதியாக நிற்கும் ஸ்ரீ நா. ரகுநாதய்யர் அவர்கள் இதற்கு மனமுவந்து முகவுரை எழுதித் தந்ததற்கு என் மனப்பூர்வமான நன்றி.

ந. சிதம்பர சுப்ரமண்யன்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI

# 1

சுமார் எழுபது வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் இலுப்பூர் கிராமத்து வீதியின் திருப்பத்திலிருந்த மா மரத் தடியில் நாலைந்து சிறுவர்கள் கோலி விளையாடிக்கொண்டிருந் தார்கள்.

கௌரி அம்மாள் தன் வீட்டின் சமையலறையிலிருந்து ''கிட்டு கிட்டு'' என்று கூப்பிட்டாள். பதிலே இல்லை. உள்ளே யிருந்து கூடத்திற்கு வந்து பார்த்தாள். கிட்டுவைக் காணோம்.

''சனியன் தொலைந்து போயிடுத்தா!'' என்று முனகிக் கொண்டே, வாசல் பக்கம் வந்தாள். வீதியில், மாமரத்தின் நிழலிலே, ஆனந்தமாகக் கோலி விளையாடிக் கொண்டிருந் தான் கிட்டு.

வேகமாக அவர்கள் பக்கம் போனாள் கௌரியம்மாள். அந்த அம்மாள் வருவதைப் பார்த்தவுடனேயே மெள்ள நகர்ந்து விட்டார்கள் மற்றப் பையன்கள். கிட்டு, கீழே குனிந்தபடி நின்று கொண்டிருந்தான். அவன் காதைப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து, தலையில் ஒரு குட்டுக் குட்டினாள். ''இல்லேம்மா, இல்லேம்மா. இனிமே விளை யாடல் லேம்மா'' என்று கதறினான் கிட்டு.

''நீ நாசமாப் போக. நீயாவது உருப்படுவா யென்று பார்த்தால், அப்பன் மாதிரி தறிதலையாகத் தான் போய் விடுவாய் போலிருக்கு. இன்னிக்கு 'ஜரா' சப்தம் சொல்லல் லேன்னா உனக்குப் பிண்டம் கிடையாது'' என்று சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள் கௌரியம்மாள்.

அந்த ஜில்லாவிலேயே, பிரசித்திபெற்ற பஞ்சநத தீக்ஷிதரின் பெண் அவள். ஆனால், அவளுடைய துரதிர்ஷ்டம்! அவளுக்குத் தகுந்த மணாளன் வாய்க்கவில்லை. அவளுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஓரளவு பயிற்சி இருந்தது. தவிரவும்,

தீக்ஷிதர் குடும்பத்தின் நியமங்கள் அவளுக்கு நன்கு பழகிப் போயிருந்தன.

ஆனால், வாய்த்த கணவன், அவளுடைய சுபாவத்திற்கு முற்றிலும் மாறுபட்டவனா யிருந்தான். அவளுடைய புருஷனான வைத்திக்கு சாஸ்திரங்களில் பரிச்சயம் கிடையாது. நியம நிஷ்டைகள் ஒன்றும் கிடையாது. ஒருவித ஆசாரமும் கிடையாது. ஆனல், அவனுக்கு சங்கீதத்தில் மாத்திரம் ஒரு விதத்தில் விசேஷமான ஞானம் இருந்ததாகச் சொல்லிக் கொண்டார்கள். ஆனால், அதையும் ஒரு உருப்படியான வழியில் பராமரிப்பதில்லை. எங்கேயாவது தாசி வீட்டில் போய் இரவு முழுவதும் பாடிக்கொண்டிருந்து விட்டு, மத்தியானம் மூன்று மணிக்கு சாப்பிட வருவான். சாப்பிட்டு, விட்டு இரவு எட்டுமணி வரையில் தூங்குவான். அதற்குமேல் குளித்துவிட்டு, பஜனைமடத்தில் போய்ப் பன்னிரண்டு மணி வரையில் பஜனையில் கலந்துகொண்டு பாடுவான். வாழ்க்கையில் ஒரு அமைதி, ஒழுங்கு, நியதி ஒன்றும் கிடையாது. எல்லாம் எந்தெந்த சமயங்களில் எப்படி எப்படி மனம் போய்க் கொண்டிருந்ததோ அப்படித்தான் அவன் நடவடிக்கைகள். சங்கீதத்தையாவது விருத்தி செய்வானா! அதையும் செய்யமாட்டான்.

கௌரிக்கு இப்படிப்பட்ட புருஷனுடன் எப்படி வாழ்வது என்பதுதான் நிரந்தரமான பிரச்னையாக இருந்தது. ஆனால், அவளிடம் ஒருவித 'அடம்' இருந்தது. எப்படியாவது, தன் புருஷனைச் சீர்திருத்துவது என்று நினைத்து முயன்று பார்த்தாள். ஆனால், அவள் புருஷனுடைய சுபாவத்தை மாற்றுவது நாயின் வாலை நேராக்க முயல்வது போலத்தான் என்பது அவளுக்குத் தெரியாமல் இல்லை.

ஆனால், இவளுடைய பிரயத்தனங்களுக்கு அதிகம் தேவையில்லாமலேயே காரியங்கள் நடந்து விட்டன. வைத்தியினுடைய ஒழுங்கு முறையில்லாத வாழ்வினாலோ அல்லது விதியினாலோ, அவன் உடல் நலம் குன்றிக்கொண்டே வந்தது. அத்துடன் கொடிய காச நோயும் பற்றிக் கொண்டது. கடைசியில் வாழ்க்கையிலேயே அதிகம் போராடாத வைத்தி வியாதியுடனும் வெகுநாள் போராடவில்லை. வியாதி வந்த சில மாதங்களுக்குள், இரண்டு வயதுக் குழந்தையான கிட்டுவையும், மனைவியான கௌரியையும் விட்டு விட்டு, தனக்குத் தகுந்த உலகம் எங்காவது இருக்குமா என்று தேடிப் புறப்பட்டு விட்டான்.

விதவையான கௌரி தன் வைதவ்யத்தைப் பொருட் படுத்தவில்லை. ஏனென்றால், சிறிதேனும் பொறுப்பில்லா தவனும், துளியும் ஒழுக்கமில்லாதவனுமான கணவனுடன் வாழ்வதுதான் அவளுக்கு மிகவும் கொடுமையாயிருந்தது. ஆனால் அவளுக்கு மிகவும் கவலையைக் கொடுத்தது, தன் மகன் கிட்டுவை முன்னுக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்புத் தான். அவளுக்குத் தன்மகன், கணவனுடைய விசேஷ குணங்களைக் கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்பது தான் பெருத்த கவலையைக் கொடுத்தது. புருஷனிட மிருந்த ஒரு வெறுப்பினால் சங்கீதத்தைக் கண்டாலே அவ ளுக்குக் கசப்பாகி விட்டது. தன் புருஷன் சீர்குலைந்து போவதற்குக் காரணம் அவனிடம் உள்ள அந்த அரை குறை சங்கீத வித்தை தான் என்பது அவளுடைய திட்டமான அபிப்பிராயம்.

ஆகவே, அவளுடைய மகன் ஸம்ஸ்கிருதத்திலும், சாஸ்தி ரங்களிலும் பயிற்சிபெறவேண்டும் என விரும்பினாள். அவள் தகப்பனாரின் கீர்த்தியும், தமையன்மார்களின் செல்வாக்கும் அவளுக்குப் பலவிதத்திலும் பெருமையாக இருந்தது. அத்தகைய வாழ்க்கைதான் தன் புத்திரனுக்குக் கிட்ட வேண்டு மென்று திட்டம் போட்டிருந்தாள். ஆனால், அதிலும் அவள் ஆசை வியர்த்தமாகி விடும்போலத் தானிருந்தது.

கிட்டுவின் மனம் பாடத்தில் செல்லவில்லை. அதற்குப் பதிலாக, அவனுக்குச் சுலபமாக சங்கீதம் வரக்கூடியதா யிருந்தது. பஜனைகளுக்குப் போய் அவனுக்கு எல்லாப் பஜனைப் பாட்டுகளும் சுலபத்தில் உருவாகிவிட்டன. தலை கீழாக நின்றாலும் அவனுக்கு 'ராம சப்தம்' வருவதில்லை. ஆனால், பஜனைப் பாட்டுகள், தெம்மாங்குகள், தில்லானாக் கள், ஜாவளிகள் எல்லாம்ஒன்றுவிடாமல் அவனுக்குப் பாடம். அவன் சாரீரமோ கந்தர்வனுடையதாகவே இருந்தது அவன். குரலையும், அவன் பாட்டையும் கேட்ட சில பெரியவர்கள் கௌரியிடம் வந்து, ''அம்மா, உன் பிள்ளைக்கு நன்றாகச் சங்கீதம் சொல்லி வையம்மா. விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்காது. பெரிய சங்கீத பரம்பரையில் வந்திருக்கும் இந்தக் குழந்தையை யாராவது பெரியவர் களிடம் கொண்டுபோய் விட்டால் மிகவும் சிரேயசை அடைவான்'' என்று சொல்வார்கள்.

ஆனால், அந்த வார்த்தைகள் அவளுக்கு மிகவும் நாராசமாயிருக்கும். ''சங்கீதமாம் சங்கீதம்! அதிலென்ன யோக்யதை இருக்கிறது? ஒரு மதிப்பும் கிடையாது. அப்பன்

காலியாத்திரிந்தது மாதிரிதான் பிள்ளையையும் பண்ணுவதற்கு யுக்தி சொல்ல வருகிறார்கள். அவன் அப்பா சங்கீதம் கற்றுக் கொண்டு சிரிப்பாய்ச் சிரித்தது போதும். இவனுக்கு சங்கீதம் வேண்டாம்'' என்று மனத்திற்குள் சொல்லிக் கொள்வாள்.

போட்ட திட்டம் சரிதான். ஆனால் அதன்படி நடக்கக் கிட்டுவால் முடியவில்லை. அவனுக்குப் படிப்பு வேம்பாயிருந்தது. மேளக் கச்சேரி எங்கு நடக்கிறது, பஜனை எங்கு நடக்கிறது, கூத்து எங்கு நடக்கிறது என்று ஓடிக்கொண்டிருப்பான். அவனைத் திருத்த, எவ்வளவோ கடுமையான வழிகளை கௌரி அனுசரித்தும், அவன் திருந்துவதாயில்லை. ஆகவே அவள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

அவள் தமையன் சங்கர கனபாடிகள் ஒரு வேதாத்யயனப் பாடசாலைக்குத் தலைவர். அங்கு பிள்ளையை அனுப்பி வைத்தால், வேதாத்யயனம் பண்ணுவதற்கும், சாஸ்திரோக்தமான கல்வி பயில்வதற்கும், ஒழுக்கம் திருந்துவதற்கும் சௌகரியமாயிருக்கும் என்று எண்ணித் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தாள். சங்கர கனபாடிகளும் அதை ஒப்புகொண்டு, இன்னும் இரண்டு நாளில் வந்து அழைத்துப் போவதாகச் சொல்லி யனுப்பியிருந்தார். அவர் வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தாள் கௌரி.

கைக்காரியத்தை முடித்துக்கொண்டு, கூடத்திற்கு வந்து பார்த்தாள். மார்பிலே கையைவைத்துக் கொண்டே, ''ஜரா, ஜரே, ஜராஹ'' என்று ஜபித்துக்கொண்டிருந்தான் கிட்டு. அவன் கண்ணிலிருந்து கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீர் இன்னும் உலரவில்லை. அழுது நின்ற குழந்தையின் முகத்தைப் பார்த்ததும், தாய்க்குக் கருணை பிறந்தது. தான் குட்டிய குட்டு அழுத்தமாகவே விழுந்து விட்டது என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. அருகில் வந்து தலையைத் தடவிக்கொடுத்தாள். தலை புடைத்திருந்தது. அவனை அருகில் அழைத்துக் கட்டிக் கொண்டு, ''ஏண்டா குழந்தை இப்படிப் படுத்தறே? படித்து, பெரியவனாகி, யோக்யதையுள்ளவனாயிருந்தாத்தானே நாலுபேர் மதிப்பா? படிப்பு இல்லேன்னா யார் தேடுவா? சமையற்காரனாப் போகவேண்டியதுதான். இனிமேப் படுத்தாதே'' என்று முகவாய்க்கட்டையைப் பிடித்தாள்.

முன்பிருந்த கோபம் போய், இப்பொழுது அன்பைக் காட்டும் தாயின் வார்த்தைகள் குளுமையாகக் காதில் விழுந்தன. அவனுக்கு உற்சாகம் பிறந்தது.

"இனிமேல் படுத்தல்லேம்மா; நீ சொன்னபடி கேட்கிறேன்" என்றான்.

"திங்கட்கிழமையன்று மாமா வரப்போரு. உன்னை அழைத்துக்கொண்டு போய் பாடசாலையிலே சேர்க்கப் போறது. நீ அங்கேயே இருந்து சமத்தாப் படிக்கணும்" என்றாள்.

இந்தச் செய்தியைக் கேட்டதும், கிட்டுவிற்கு வெல வெலத்து விட்டது. அவனுக்குப் பாடசாலைப் படிப்பில் கொஞ்சமும் இஷ்டமில்லை. காலையிலும் மாலையிலும் மடாத் தவளை போல அத்யயனம் செய்வதற்கு அவனுக்குக் கொஞ்ச மேனும் விருப்பமில்லை. சுமுகமாகப் பேசிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் தாயை எதிர்த்துச் சொல்ல இஷ்டப் படவு மில்லை. ஆனால் நிச்சயமாக மாமாவின் வீட்டிற்குப் போய் அத்யயனம் செய்வதில்லை என்பதை மட்டும் தீர்மானித்துக் கொண்டான்.

அதற்கு முக்கியமான காரணம், சங்கர கனபாடிகளைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்காததுதான். மாமா படித்தவர் தான். ஆனால் முன்கோபி. சிறிது அகம்பாவியும் கூட. அவருக்கு வைத்தி என்றால் மிகவும் இளப்பம். வைத்தியினுடைய ஒழுங்கற்ற வாழ்க்கையைக் கண்டாலே, அவருக்கு அருவருப்பு உண்டாகும். தங்கை புருஷனைக் கண்டால் கொஞ்சமேனும் முகங் கொடுத்துப் பேசமாட்டார். வைத்தியிடம் அவருக்கு இருந்த வெறுப்பு அவனுடைய பிள்ளையான கிட்டு விடமும் பரவிற்று. தகப்பனைப் போல ஆகாமல் இருக்கவேண்டுமானால், குளவியைப்போல அவனைக்கொட்டிக் கொண்டேயிருக்க வேண்டுமென்பது அவர் அபிப்பிராயம். கிட்டுவைக் கண்டால் எப்பொழுதும் எரிந்து விழுந்துகொண்டிருப்பார். அவனிடம் ஏதாவது குற்றம் கண்டு பிடித்துக் கொண்டேயிருப்பார்.

மாமாவின் வீட்டிற்கு ஒருதரம் கிட்டுபோயிருந்தான். அப்பொழுது அருமையான நாதஸ்வர கோஷ்டி ஒன்று வந்திருந்தது. அதைப்போய்க் கேட்க வேண்டுமென்றுகிட்டுவிற்கு ஆசை. ஆனால், மாமா முன்ஜாக்கிரதையாகவே, "டே பயலே கிட்டு, நீ எங்காவது மேளம் கீளம் என்று ஊர் சுற்றத் தொடங்கினுயோ, உன் காலை முறித்து விடுவேன். நீ இங்கேயிருக்கும் வரையில் காலித்தனமாகச் சுத்தக் கூடாது. ஜாக்கிரதை" என்று உஷார்ப் படுத்திவிட்டார். கிட்டு பல்லைக் கடித்துக்கொண்டு இருந்து பார்த்தான். மூலை

திரும்பியதும் மேளத்தின் சப்தம் இலேசாக அவன் காதில் விழுந்தது. மாமா உள்ளே படுத்திருந்தார். ரகசியமாக எழுந்திருந்து மேளக் கச்சேரிக்குப் போய்விட்டான்.

மாமாவிற்குத் தகவல் தெரிந்ததும், அசாத்யமாகக் கோபம் மூண்டது. ''ஏண்டா காமாட்டிப் பயலே, படிப் பிலே எருமை மாடாயிருக்கே. உனக்குப் பாட்டு, கூத்து இல்லாமல் சரிப்படல்லேயோ? அப்பனுக்குப்பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கியே. அபஸவ்ய பாரதி. இனிமேல் இது மாதிரி செய், பார்க்கிறேன்'' என்று முதுகுத் தோலை உரித்துவிட் டார். ஆனால் கிட்டுவிற்கு, உடல் வேதனையைவிட, தன் தகப்பனாரைச் சொன்னதுதான் மிகுந்த வேதனையை உண்டு பண்ணியது. சங்கீதத்தைக் கேட்கக்கூடாது என்று ராட்சசன் போலக் குறுக்கே நிற்கும் தன் மாமாவிடம் அளவில்லாத கசப்பு உண்டாயிற்று. ''இவர் ஒரு மனிதனே இல்லை; சிறிதும் அறிவில்லாத ஒரு மூர்க்கன்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

தகப்பனாரை இழித்துக் கூறும்போது அவர் காட்டிய கோபம், உதாசீனம் எல்லாம் அவனுடைய உள்ளத்தில் நன்கு ஊடுருவிப்பாய்ந்தன. தன் மேலும், தன் தந்தையின் மேலும், விஷத்தைப்போல் வெறுப்பைக் கொட்டும் அவரு டைய ஞாபகம் அவனுடைய நெஞ்சத்தின் ஆழத்தில் அழிக்க முடியாத ஒரு வடுவை உண்டாக்கியிருந்தது.

ஆகவே அவன் தாயார், பாடசாலைப் படிப்புக்கு அங்கு அனுப்புவதாகச் சொன்ன செய்தி அவனுக்கு மிகுந்த கல வரத்தை உண்டு பண்ணியிருந்தது. அவரிடம்போய்ப் பாடம் கேட்பதாவது! அதுவும் அத்யயனம்! அதைவிடக் கிணற்றில் விழுந்து சாகலாம்!

கிட்டு சொல்ல முடியாத துக்கத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தான். இதிலிருந்து தப்புவதற்கு ஏதாவது வழி கண்டு பிடித்துத் தீரவேண்டு மென்ற முடிவுக்கு வந்தான். எங்காவது ஓடிப்போய் விடுவது என்று தீர்மானித்தான். அந்த நிமிஷத்திலேயே அந்த எண்ணம் அவன்மனத்தில் வேரூன்றிப் பதிந்து விட்டது.

வாசல் பக்கம் நிழல் தெரிந்தது. ரேழியிலிருந்து அவன் எட்டிப் பார்க்கையில், ராமு அவனை சமிக்ஞை செய்து அழைத்தான்.

''என்னடா?'' என்றான் கிட்டு.

''ஏண்டா பித்துக்குள்ளி, இன்னிக்கு மாத்தூர் தேருடா, அதை மறந்துட்டியா?'' என்றான். அப்பொழுது தான் கிட்டு விற்கு ஞாபகம் வந்தது. ''மறந்தே போயிட்டேண்டா: கிளம்புவோமா. யார் யாரு வரா?'' என்றான் கிட்டு.

''எல்லோரும் வராங்கள்டா. கிளம்பறதுன்னு சீக்கிரம் ஆகட்டும்'' என்றான் ராமு.

கிட்டு, அம்மா என்ன செய்கிறாள் என்று பார்த்தான். கொல்லையிலே பற்றுத் தேய்த்துக் கொண்டிருந்தாள். அரிசிப் பானைக்குப் பக்கத்திலுள்ள தகர டப்பாவைப் பார்த்தான். அதில் இரண்டு ரூபாயிருந்தது. அதைக் கையில் எடுத்துக் கொண்டான். வாசற் பக்கம் நண்பர்கள் காத்துக்கொண் டிருந்தார்கள். அம்மாவிடம் சொல்லிக் கொண்டு போகலாமா என்று ஒரு நிமிஷம் நினைத்தான். அம்மா தேருக்குப் போகக் கூடாது என்று தடுத்து விடுவாள். அவன் தேர் பார்த்ததற்குப்பின் செய்யவேண்டிய திட்டங்கள் தடைப் பட்டு விடும். ஆகவே, சொல்லிக் கொள்ளாமல் கிளம்புவது தான் சரி. வாசற் படியைத்தாண்டும் பொழுது என்னமோ அவன் மனதில் குடைந்து கொண்டு வேதனை செய்தது. அவனுடைய அந்தரங்க வேதனையை அறியாத நண்பர்களோ, ''என்னடா கிட்டு, முகத்திலே சுரத்து இல்லை?'' என்று கேட்டுப் பார்த்தார்கள். அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ''ஒன்றுமில்லேடா'' என்று மௌனம் சாதித்தான்.

அவர்களுடைய விளையாட்டுக்களிலும், கேலிப் பேச்சுக் களிலும், விதண்டா வாதங்களிலும் கலந்து கொள்ளாமலேயே, மௌனமாக அவன் பின்தொடர்ந்து வந்து கொண் டிருந்தான்; அவன் இன்று புறப்பட்டு வருவது வெறும் விளையாட்டுக்கு இல்லை என்பதை அறியாமலேயே அவனுடைய நண்பர்கள் அவனுடன் சென்றார்கள்.

# 2

மாத்தூர் குளத்தின் வடகரையில் ஒரு தண்ணீர்ப் பந்தல் இருந்தது. அங்கு சுவாமி வரும்பொழுது சுண்டலும், நீர்மோரும் வினியோகம் செய்வார்கள். கிட்டுவும் நண்பர்களும் அந்தச் சுண்டலைக் கை நிறைய வாங்கிக் கொண்டு, எதிர்த்தாற்போல் இருந்த திண்ணையில் உட்கார்ந்து தின்று கொண்டிருந்தார்கள். அது சத்திரத்தைச் சேர்ந்த பெரிய விடுதி. அதிலே கல்யாணத்திற்குப் போய்க் கொண்டிருந்த பெரிய கோஷ்டி ஒன்று தங்கியிருந்தது. அதைச் சேர்ந்த கிழவர் ஒருவர் திண்ணையின் சாய்மானத்தில் சாய்ந்து கொண்டிருந்தார். ஏதோ நினைத்துக் கொண்டவராய், அந்தப் பையன்களைப் பார்த்து ''அம்பி யாராவது ஒருத்தன் கொஞ்சம் வாங்கோடா'' என்றார். எல்லோரும் கிழவரிடம் சென்றார்கள். சம்புடத்தைத் திறந்து ஒரு காலணாவை எடுத்து, ''யாராவது போய் காலணாவுக்குப் பொடி வாங்கிண்டு வாங்களேன்'' என்றார். கூப்பிட்ட காரியம் தெரிந்தவுடன் சிறுவர்கள் அசுவாரசியத்துடன், "இங்கே பொடி கிடையாது தாத்தா'' என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தனர். கிட்டு காலணாவை வாங்கிக் கொண்டு, ''நான் வாங்கி வருகிறேன்'' என்று பொடிக் கடைக்குப் போனான். மற்ற நண்பர்கள் ''நாங்கள் ராட்டினம் சுற்றும் இடத்தில் இருக்கிறோம், நீ வா'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள்.

கிட்டு, பொடி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். ஒரு சிமிட்டா உறிஞ்சியவுடன், கிழவர் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. ''பலே அம்பி! நல்ல பையன். நீ நன்னா முன்னுக்கு வருவாய். பெரியவர்கள் சொன்னால், அதைத் தட்டாமல் கேட்கணும்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் ஒரு வாழைப் பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். அதைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் கிட்டு, கிழவர் பையனைப் பற்றி அறிய ஆவல் கொண்டு, "என்ன வாசித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்றார். இந்தக் கேள்வி

யார் கேட்டாலும், கிட்டு திணறுவது வழக்கம். அந்தந்த சமயங்களில் எது தோன்றுகிறதோ, அந்தப் பதிலைக் கொடுப்பான். ''நான், படிக்கவில்லை தாத்தா'' என்று தாழ்மையுடன் சொன்னான்.

''படிக்க வயசாகலையா உனக்கு?'' என்றார்.

''படிக்க வைக்க ஒருவரும் எனக்கு நாதியில்லெ தாத்தா'' என்றான். கிழவரின் நன்மதிப்பை எப்படியும் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், பொய்சொல்வதைப் பற்றிக் கூசவில்லை.

கிழவருக்குப் பையன்மேல் இரக்கம் பிறந்தது. ''எங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்கே?'' என்றார்.

''சொந்தக்காரரர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு இருக்கேன்'' என்றான்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, உள்ளிருந்து ஒரு வாலிபன் வந்தான். கிழவரிடம், ''சாப்பிடுவதற்கு இலை இல்லையே'' என்றான். ''இங்கே எங்கேயாவது அகப்படாதா?'' என்றார் கிழவர். ''அடுத்த குளத்திலே தாமரை இலை நிறைய இருக்கு. நான் பறித்துக்கொண்டு வரட்டுமா'' என்றான் கிட்டு. பையனைத் தனியாக அனுப்பக் கிழவருக்கு இஷ்டமில்லை. ''முத்து நீயும் போய்ப் பறித்து வா. ரொம்ப ஜாக்கிறதையாகப் பறிக்கணும்'' என்று அனுப்பினார். சிறிது நேரத்தில் கை நிறைய இலைகளுடன் வந்தனர் இருவரும்.

''அம்பி பலே கெட்டிக்காரன்'' என்று உபசாரம் சொன்னான் முத்து.

''நம்ப கூடவே அழைத்துக் கொண்டு போயிடுவோமா?'' என்றார் கிழவர்.

''யோசனை சரி; ஆனால் அவனுடைய அப்பா அம்மா தேட மாட்டாளா?''

''பாவம், அந்தப் பையனுக்குத் தாய் தகப்பனார் ஒருவரும் கிடையாதாம்.''

''அதெப்படி நம்பறது? விசாரிக்காமே கூட்டிக் கொண்டு போகலாமா? வீட்டிலே கோபித்துக் கொண்டு வந்திருந்தாலும் வந்திருக்கலாம். ஏண்டா அம்பி?'' என்றான்.

கிட்டுவுக்கு உண்மையில் நடுக்கம் கண்டது. இந்தப் பிரச்சினைகளை யார் இவனைக் கிளப்பச் சொன்னார்கள்? முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு, "எனக்கு ஒத்தரும் இல்லை தாத்தா. வேண்டுமானால், என்னுடன் வந்த பையன் களைக் கேட்டுப் பாருங்கள். நான் உங்களோடு வரேன்" என்று ஒரு அடி அடித்தான். இந்தக் கிழவர் உருவத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடுவதில் பிடித்தமில்லை அவனுக்கு.

"விசாரிக்காமல் கூட்டிக் கொண்டு போகலாமா?" என்று மறுபடியும் சந்தேகத்தைக் கிளப்பினான் முத்து.

"குழந்தை பொய்யா சொல்லப்போறான்? வாடா அம்பி எங்கள் பின்னாடே. சில்லுண்டிக் காரியங்களுக்கு ஒரு பொடியன் வேண்டித்தானிருக்கு" என்று உள்ளே, சாப்பிட அழைத்துச் சென்றார். கிட்டு அந்தக் கோஷ்டியில் ஒருவனாகி விட்டான்.

மறு நாள் இரவு, கோஷ்டி வேறு ஒரு ஊர் சத்திரத்தில் தங்கியது. சாப்பாடு முடிந்தவுடன் வம்பளப்புக் கச்சேரி ஆரம்பமாயிற்று. கல்யாணமாகப் போகும் பிள்ளையின் தமக்கை புதல்வன், ஒரே பையன். எல்லோருக்கும் செல்லக் குழந்தை. அவன் ஏதோ முனகிக்கொண்டிருந்தான். கல்யாணப் பையன் கிழவரைப்பார்த்து, "நம்ப குஞ்சு என்ன அழகாப் பாடுவான் தெரியுமா!" என்றான்.

"அடே, பாட்டு வேறே பாடுவானா? எனக்குத் தெரியாதே! எங்கேடா குழந்தை, ஒரு பாட்டுப் பாடு" என்றார் கிழவர்.

"நான் பாடமாட்டேன் போ. எனக்கு வெக்கமாயிருக்கு" என்று சொல்லிக்கொண்டு அம்மா பக்கம் ஓடப் பார்த்தான். அதற்குள் கல்யாணப் பையன், அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து. "தாத்தா கேட்கணும்னார் பாடு. பாடினாத்தான் சமத்து. கோணங்கித்தனம் பண்ணாமல் பாடிவிடு" என்றான்.

"பள்ளிக் கூடத்திலே யெல்லாம் 'பிரைஸ்' வாங்கி வந்திருக்கான். லேசுப்பட்டவனா என்ன! அவனுக்கு இஷ்டப் பட்டால் தான். அவ்வளவு அடம்" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டாள் அவன் தாயார்.

அரை மணி நேரம் குழையடித்து, பலவித உபசாரங்கள், பயமுறுத்தல்களுக்குப் பின் பையன் பாட ஆரம்பித்தான்.

எல்லோரும் ஏதோ குழந்தை பாடுகிறதே என்று சிலாகித்து, மரியாதைக்குத் தலை யாட்டினுர்கள்.

கிட்டு கேட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு அந்தப் பாட்டைக் கேட்டதும் சிரிப்பு வந்தது. ஆத்திரமும் வந்தது. இந்தப் பாட்டுக்கா இவ்வளவு பாராட்டு அந்தப் பையனுக்கு! ஆனுல், தான்பாட ஆரம்பித்தாலோ, கன்னத்திலே கிள்ளு வாள் தாயார். தன் அருமை அறியாத தாயாரிடம் அப் பொழுது கோபம் வந்தது அவனுக்கு. அறிவுக்கும், நியாயத் துக்கும் மீறிய பாராட்டுதலை அடையும் அந்தப் பையனிடம் அருவருப்பு வந்தது. தன்னை யாராவது அந்த நேரத்தில் 'நீ பாடுவாயா அம்பி' என்று ஒரு வார்த்தை கேட்க மாட்டார் களா? கேட்டால், அப்படியே கான மழை பொழிய மாட்டானு? அந்தப் பையனுடைய குளறல் சங்கீதத்தைக் கேட்ட காதுகளுக்குத் தேனருவி போன்ற சங்கீதத்தைக் கொட்டமாட்டானு? ஆனுல், ஒருவரும் கிட்டுவைப் பாடச் சொல்லவில்லை. அவன் இருப்பதே ஒருவர் கண்ணிலும் பட வில்லை. அவன் யார் அவர்கள் கவனத்தை இழுப்பதற்கு! அந்தச் செல்லப் பிள்ளை தான் அட்டகாசம் செய்து கொண் டிருந்தான்.

செல்லப் பிள்ளையின் பாட்டு முடிந்தது. அவரவர்கள் படுக்கையைப் போட்டுக்கொண்டு படுக்க ஆரம்பித்தார்கள். கிழவரும் படுக்கையைப் போட்டுவிட்டார். பாக்கைப் போட்டுக் கொண்டு, வெற்றிலைக் கொட்டானைப் பார்த்தார். சுண்ணும்பு இல்லை. "பயலே கிட்டு, சுண்ணும்பு எடுத்துவா" என்ருர். கிட்டு சுண்ணும்பைக் கொடுத்துவிட்டு நின்று கொண்டிருந்தான். "ஏண்டா, போய் படுத்துக்கோயேன்" என்ருர். கிட்டு தயங்கித் தயங்கி நின்ருன்.

"என்னடா வேணும்?" என்ருர் கிழவர்.

"நான் பாடறேன், கேட்கிறியளா தாத்தா" என்ருன். யாரையாவது தன் பாட்டைக் கேட்க வைத்தால் தேவலை என்ற ஆசை உள்ளே துடித்துக் கொண்டிருந்தது.

செல்லப் பிள்ளையின் பாட்டைக் கேட்டு அலுத்துப் போயிருந்த கிழவருக்கு சுவாரசியப் படவில்லை. அதோடு தூக்கம் வேறு வர ஆரம்பித்துவிட்டது.

"இன்னொரு நாளைக்கு உன்பாட்டுக் கச்சேரியை வைத்துக் கொள்வோம், இன்று பேசாமல் போய்ப் படுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டுப் படுக்கையில் படுத்தார்.

அந்த கோஷ்டியில் தன்னிடம் அனுதாபம் காட்டக் கூடிய அவரும், தன் திறமை வெளியிலே வருவதற்கு வேண்டிய ஒத்தாசை செய்யாமல் போகவே, கிட்டுவுக்கு மிகவும் ஏமாற்றம் உண்டாயிற்று.

இந்த ஜன்மத்தில் நிறையப் புண்ணியம் பண்ணி, அந்தச் செல்லப் பிள்ளையைப்போல, எல்லோருக்கும் செல்லப் பிள்ளை யாக அடுத்த ஜன்மாவிலாவது பிறக்கவேண்டும் என்று தீர்மானித்தான். தனக்குச் சிறந்த வித்தையையும், கீர்த்தி யையும் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டே புரண்டு கொண்டிருந்தான். அவனுக்கு லேசில் தூக்கம் வரவில்லை. தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிக் குருட்டு யோசனைகள் செய்துகொண்டே, வெகு நேரம் கழித்துக் கண் அயர்ந்தான்.

# 3

கல்யாண கோஷ்டி பெண் வீட்டாரின் ஊரை அடைந்தது. பெண் வீடும், மாப்பிள்ளை வீடும் பெரிய இடங்களாகையால், எல்லாம் விமரிசையாக நடந்தன. கல்யாணத்திற்கு வாசிக்க அமர்த்தியிருந்த நாயனக்காரர்கள் உள்ளூரைச் சேர்ந்தவர்களானாலும் ஸுஸ்வரமாகவும், சுத்தமாகவும் வாசித்தார்கள்.

கிட்டு மேளக்காரன் வாசிக்கும்பொழுது அங்கு வந்து உட்கார்ந்து விடுவான். அவனுக்கு அனேக சில்லுண்டி வேலைகள் கொடுத்துக் கொண்டுதானிருந்தார்கள். எந்த வேலையைக் கொடுத்தாலும் அதை முடித்துவிட்டு, நாதஸ்வர கோஷ்டிக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து விடுவான்.

ஒரு சந்தர்ப்பத்தில், 'ஜாலரா' போடும் பையனை எங்கோ அனுப்பியிருந்தான் தவுல்காரன். உள்ளே ஹோமமோ ஏதோ நடந்து கொண்டிருந்தது. "மேளம்— மேளம் நடக்கட்டும்" என்று சாஸ்திரிகளில் ஒருவர் கத்தினார். ஒத்தூதுபவன் ஒத்தை ஊத ஆரம்பித்தான். தவுல்காரன் தவுலைத் தட்டினான். தாளம் போடும் பையன் இல்லாதபடியால், ஒரு கையால் ஜாலராவைப் போட்டுக் கொண்டிருந்தான். நாதஸ்வரக்காரன் ராகம் வாசித்துவிட்டு, ஒரு கீர்த்தனம் வாசித்து, ஸ்வரம் வாசிக்க ஆரம்பித்தான்.

கிட்டு, தூண் பக்கம் உட்கார்ந்து கொண்டு, கவனித்துக் கொண்டு வந்தான். ஒத்து ஊதுபவன் சரியாகத்தாளம் போடவில்லை. தவுல்காரன், அவனை எரிப்பவன்போல் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். கிட்டு துணிச்சலுடன் ஒத்தூதுபவனுக்கு எதிர்த்தாற்போல் நின்றுகொண்டு கை விரல்களை நீட்டி மடக்கி, காலப் பிரமாணத்திற்குத் தகுந்தாற்போல், தாளம் போட்டுக் காட்டிக்கொண்டிருந்தான். நாதஸ்வரக்காரனும் தவுல் வாசிப்பவனும் ஆச்சரியத்தால் பிரமித்து நின்றனர். இவ்வளவு சின்னப் பையனுக்கு,

இவ்வளவு தீர்மான கால நிர்ணயம் எப்படி உண்டாயிற்று என்பது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இதற்குள், ஒருவர் கிட்டுவைத் தேடி வந்தார். ''ஏண்டா பயலே, அப்பவே பிடிச்சுச் சொல்லிக்கொண்டிருக்கேனு இல்லியா, உள்ளே விட்டு நகரக்கூடா துன்னு? நீ என்ன டான்னு, இங்கே வந்து பழி வாங்கரே. இன்னமே இங்கே உன்னே பார்த்தேன்னு பாத்துக்கோ'' என்று அதட்டிவிட்டு உள்ளே போனார். வாயைத் திறவாமல் கிட்டு எழுந்து சென்றான்.

அவனுக்குக் காரியங்களுக்குக் குறைவேயில்லை. சாப்பிடு வோருக்குத் தீர்த்தம் கொடுப்பது, வெற்றிலைத் தட்டிலே, வெற்றிலை பாக்கு எடுத்து வைப்பது, கொஞ்ச நேரத்திற்கு ஒருதரம் கல்யாணம் விசாரிக்க வந்து கொண்டிருக்கும் விருந்தினர்களுக்கு சந்தனக் கிண்ணத்தையும், சர்க்கரைத் தட்டையும் நீட்டுவது முதலிய பலவித ஜோலிகள் இருந்து கொண்டுதானிருந்தன. ஆயினும், இதிலும் மிஞ்சிய இடை வேளைகளில் தான் மேளக்கார கோஷ்டியிடம் உட்கார்ந்து கொண்டு அவன் சங்கீதம் கேட்டான்.

அன்று மாலை நலங்கு வைப்பதற்கு முன்பு, அதற்கு வாசிக்க வந்த நாயனக் கோஷ்டியார் பக்கத்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள். கிட்டு மெள்ள அங்கு போய்ச் சேர்ந்தான். நாதஸ்வரக்காரனுக்கு கிட்டுவைப் பார்த்ததும், அவனிடம் ஒருவிதப் பிரியம் உண்டாயிற்று. ''இங்கேவா தம்பி, நீ நல்லாப் பாடுவே போலிருக்கே!'' என்றான்.

''பாடுவேன்'' என்றான் அலட்சியத்துடன் கிட்டு.

''எங்கே, ஒரு பாட்டுப் பாடு.''

கிட்டுவிற்குக் குஷி பிறந்துவிட்டது. அவன் பாட ஆரம்பித்தான். வேறு ஒருவரிடமும் இல்லாத திவ்யமான சாரீரம். வெள்ளி மணி அடிப்பதுபோல், கண கண வென்று உருளும் இனிமையான குரல். சிறு பையனானபடியால், சாரீரம் இன்னும் 'உடைய'வில்லை. அப்படியே மைனாக் குருவி பாடுவதுபோல், 'ஜிலு ஜிலு' வென்று சங்கதிகள் விழுந்துகொண்டிருந்தன; வயதுக்கு மீறிய ஞானம். காலம் வெகு கச்சிதம்; ராக பாவம் பொங்கித் ததும்பும் பாட்டுக்கள்.

மேளக்காரன் பிரமித்து விட்டான். அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

''கிட்டு, கிட்டு'' என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தார் கிழவர். ஏதோ பாட்டுச் சப்தம் கேட்டுப் பக்கத்துத் திண்ணையை எட்டிப் பார்த்தார். கிட்டு பாடிக்கொண்டிருந்தான். அந்தப் பாட்டை கேட்கக் கேட்க அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அவன் பாடி முடித்தவுடன், அவன் கிட்ட வந்து பையனை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

"என்ன சாரீரம்! என்ன ஞானம் சாமி இந்த வயதிலே!" என்றான் மேளக்காரன். கிட்டுவை கிழவனாரின் பேரன் என்று அவன் நினைத்து விட்டான்.

''தம்பி யாரிடம் சிக்ஷை சொல்லிக்கிறது?'' என்றான்.

''பாவம், இவன் யாரோ அனாதைக் குழந்தை.''

''ஏண்டா கிட்டு, யாரிட்டேடா நீ சங்கீதம் சொல்லிக்கிண்டே?'' என்றார்.

''ஒத்தரும் சொல்லிக் கொடுக்கலே தாத்தா. கேட்டுக் கேட்டுத்தான் பாடறேன்'' என்றான்.

''பாவம், ஆதரவில்லாத குழந்தைக்கு இந்தமாதிரி ஞானத்தைக் கொடுத்திருக்கான். கடவுளுடைய விளையாட்டைப் பாருங்க சாமி. இதுக்கு மாத்திரம் சங்கீதம் சரியாகச் சொல்லி வைத்தால், எப்படியாகும் தெரியுங்களா! இது ஒரு மாணிக்கம் சாமி'' என்றான் மேளக்காரன்.

''இந்தப் பயலிடம் இவ்வளவு வித்தை இருக்கும் னு நான் எதிர்பார்க்கவேயில்லே. அன்னிக்குப் பாடறேன்னு சொன்ன போது நான் சாதாரணமா நினைச்சேன். பயகிட்டே பெரிய சரக்குன்னு இருக்கு!''

''பையனை முன்னுக்குக் கொண்டு வந்தால், சங்கீதத்துக்கே ஒரு பெருமையாகத் தானிருக்கும் சாமி.''

"எனக்கு ஒரு யோசனை, திருவையாறு சபேசய்யரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா?'' என்றார் கிழவர்.

''அதென்ன சாமி அப்படிக் கேட்கிறீங்க! திருவையாற்று சுவாமியைத் தெரியாதவன் ஒரு சங்கீதக்காரனா? அவர் ரொம்பப் பெரியவர். சிறந்த லக்ஷண வித்வான். சங்கீதத்திற்கே வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர்கள். என்னவோ இன்னிக்கு பாடிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் அவர்கிட்ட இருந்து கற்றுக்கொண்ட ஒரு துளி ஞானத்தால் பிரகாசிக்கிறார்கள்'' என்றான்,

"அவர் எனக்கு மிகவும் வேண்டியவர்; பந்துவும் கூட. அவரிடம் சொல்லி, இவனை அங்கே சேர்த்துவிடலாம் என்று யோசிக்கிறேன்!" என்றார்.

"அங்கே சேர்த்தால் பையன் அதிர்ஷ்டக்காரன் தான்! அங்கே வித்தை கற்றுக் கொள்வதற்குப் பாக்கியம் செய் திருக்க வேண்டும்."

"அதற்கு நான் பொறுப்பு!" என்றார் கிழவர்.

"விட்ட குறை தொட்ட குறையாக, பையனுக்கு சங்கீதம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. நல்லபடி விருத்தி செய்தால், ரொம்பப் பெருமையாக இருக்கும்" என்றான். கிழவர் அதை ஆமோதித்தார். எப்படியும், திருவையாறு சபேசய்யரிடம் பையனைச் சேர்த்துவிடுவது என்று தீர்மானித் தார். நாடோடி என்று இழுத்து வந்த பையனிடம் மேதா விலாசம் இருப்பது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ' என்பதை யார் கண்டறியக்கூடும். அந்தப் பையனிடம் அவருக்கு உண்டான நல்லெண்ணம் ஒரு சரியான இடத்தில்தான் விழுந்திருக்கிறது என்ற திருப்தி இருந்தது.

கிட்டுவுக்கோ, சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவன் ஊரைவிட்டு வந்தது நல்லதுதான். பாடசாலைக்குப் போகாமல், மடாத் தவளையாகக் கத்தாமல், சங்கீதம் கற்றுக்கொள்வது எவ்வளவு இன்பகரமானது! ஏதோ, பகவானுக்கு அந்த மட்டில் கருணை பிறந்ததே!

கிட்டுவின் பெருமை கல்யாண வீடு முழுவதும் பரவி விட்டது. நலங்கிற்கு முக்கால்வாசிப் பாட்டுக்கள், கிட்டு தான் பாடினான். சில்லரைக் காரியங்கள் செய்துவந்த பையனின் பாட்டுக்களைக் கேட்டு எல்லோரும் பிரமித்து நின்றார்கள். கிட்டுவின் மதிப்பு அந்த வீட்டாரிடையே மிகவும் உயர்ந்து விட்டது. கண்டபடி வேலைகளைக் கொடுத்து ஏவியவர்கள், கொஞ்சம் புன்சிரிப்புடனும், பிரியத்துடனும், அவனுக்கு வேலை கொடுத்தார்கள். ஆனால், முன்பு சத்திரத் தில் பாடிய செல்லக் குழந்தைக்கு மாத்திரம் கிட்டுவிடம் அசாத்தியமான வெறுப்பு உண்டாயிற்று. எங்கிருந்தோ முளைத்து வந்த ஓர் அநாமதேயப் பேர்வழி, நன்றாகப் பாடு கிறான் என்று பெயர் வாங்கிக் கொள்ளவாவது! தன் அதிருப் தியையும், வெறுப்பையும் காட்டும் தோரணையில். அவனை அலக்ஷியமாகப் பார்ப்பான். ஆனால், கிட்டு அவனைப் பொருட்படுத்தவேயில்லை. தன் வித்தை எங்கே! இந்த ஞான சூன்யம் எங்கே! ஆகவே அந்தப் பையனுடைய பொறாமை யும் அவனுக்குச் சந்தோஷத்தையே கொடுத்தது.

# 4

கிட்டுவும் கிழவனாரும், திருவையாற்றில் சபேசய்யர் வீட்டை அடைந்த பொழுது, பிற்பகல் சுமார் மூன்று மணி இருக்கும்.

சபேசய்யர் ஒரு பலகையில் சாய்ந்து கொண்டிருந்தார். கீழே புலித்தோல் போட்டிருந்தது. கையில் வால்மீகி ராமாயணம், ஆஜானுபாகுவான சரீரம். முகத்தில் தேஜஸ் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. வித்தை, ஒழுக்கம், இவைகளின் நிறைவினால், அவர் உருவத்திலே ஒரு காம்பீர்யம் இருந்தது. ராமாயணத்தைக் கீழே இருந்த சிக்குப் பலகையில் வைத்து விட்டு "வாருங்கள் கணேச சாஸ்திரிகளே, என்ன வெகு நாட்களாகக் காணோம்'' என்றார். கிட்டுவிற்கு, அவன் செய்ய வேண்டியதென்ன வென்பதைப்பற்றி முன்பே சொல்லி வைத்திருந்தார் கிழவர்—கணேச சாஸ்திரிகள்.

அதன்படி, வந்தவுடன் சபேசய்யருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் கிட்டு. அவனை ஆசீர்வதித்தார். கிட்டு உட்காராமலேயே, பணிவுடன் சிறிது தள்ளி நின்றுகொண்டிருந்தான். கணேச சாஸ்திரிகள் மாத்திரம் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அந்தக் கூடத்தைக் கவனித்தான் கிட்டு. ஒரு மூலையில் அழகான சுரைக்காய்த் தம்புரா தொங்கிக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கத்தில் வீணை ஒன்று இருந்தது. எதிரில் இராமர் பட்டாபிஷேகப் படம். அதற்குப்பக்கத்தில் தியாகப் பிரம்மத்தின் படம். படங்களுக்குக் கீழே பூஜை அறையில் பூஜைப் பெட்டியும், பூஜா பாத்திரங்களும் இருந்தன.

''என்ன, ரொம்ப நாளாகக் காணோம்'' என்றார் சபேசய்யர்.

''இப்படி ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன். வெங்கிட்டுவின் பேரனுக்குக் கல்யாணமோல்லியோ! அவர்களோடு

தெற்கு வட்டகை யெல்லாம் சுற்றிவிட்டு வந்தேன். அதான் இந்தப் பக்கம் வரவில்லை!''

''குழந்தை யாரு?'' என்றார்.

கணேச சாஸ்திரிகள் கனைத்துக் கொண்டார். ''இந்தப் பையன் சம்பந்தமாகத்தான் இப்பொழுது இங்கு வந்திருக்கிறது'' என்றார். சபேசய்யர் பேசாமல் பையனைப் பார்த்த படி இருந்தார்.

''கல்யாணத்திற்குப் போயிருந்த சமயத்தில், இந்தப் பையன் வந்து சேர்ந்தான் எங்களிடம். நல்ல குணமுள்ள பையன். தாய் தகப்பனார் ஒருவரும் இல்லை. அனுதரவாக இருக்கும் பையனைப் பார்த்தவுடன் எனக்கு இரக்கமாயிருந்தது. ஏதோ முன்னுக்குக் கொண்டுவரலாமென்று நினைத்துக் கூடவே அழைத்து வந்துவிட்டேன். வந்த பிறகு பார்த்தால்...'' என்று நிறுத்தினார்.

சபேசய்யர் ஆச்சரியத்துடன், மேலே என்ன சொல்லப் போகிறார் என்று புரியாமல் திகைப்புடன் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

''நான் கூட்டிக்கொண்டு வந்தது சரியோ தப்போ, பையனை என்னிடம் வைத்துக்கொள்வது சரியில்லை என்று தெரிகிறது!'' என்று முடித்தார்.

''எனக்கு ஒன்றும் புரிய வில்லையே'' என்றார் சபேசய்யர்.

''அது என்னவோ போங்கோ. பையனுக்கு திவ்யமான சாரீரம். அசாத்யமான ஞானம் இருக்கு. அவனை நான் வைத்துக்கொண்டு என்ன பண்ணுவது! அவன் இருக்க வேண்டியது இங்கேதான். அவனை உருவாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. பையனுடைய பாட்டைக் கேட்டவுடனேயே, நான் இந்த முடிவுக்கு வந்துவிட்டேன். நீங்கள் கிருபைசெய்து அவனுக்கு வித்தையை அளிக்கவேண்டும்'' என்றார்.

''சாஸ்திரிகளே, நீங்கள் சொல்வது சரி. ஆனல், எனக்கு வரவர வயசாயிடுத்து. நான் என்ன சொல்லிக் கொடுக்கப் போகிறேன். என்னிடம் பாடம் கேட்டவர்கள் இருக்கிறார்கள்; வேறு பல வித்வான்களும் இருக்கிறார்கள். அங்கே எங்கேயாவது ஏற்பாடு செய்யுங்களேன். உங்களுக்கு முடியல்லேன்னு, நான் சொல்லி ஏற்பாடுசெய்து வைக்கிறேன்'' என்றார்.

''நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. வேறு யாரிடம் பாடம் கேட்டாலும் அது உங்களிடம் கேட்டதாகிவிடுமா? பையனிடம் ஏதோ விசேஷமான யோக்கியதாம்சம் இருப்ப தாக எண்ணிக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் பரீக்ஷை செய்து பாருங்கள். உங்களுக்குத் திருப்தியில்லா விட்டால் உங்கள் உசிதம்போல் செய்யுங்கள். அந்தப் பையன் யாரோ நான் யாரோ. திறமை இருக்கும் இடத்தை பிரகாசிக்கப் பண்ண வேண்டியது அவசியம் என்பதை உத்தேசித்துத்தான் அழைத்து வந்திருக்கிறேன்'' என்றார்.

வாஸ்தவம்தான். இதில் அவருக்கு என்ன லாபம்? சாஸ்திரிகள் சொல்வதில் நியாயம் இருக்கிறதென்று பட்டது சபேசய்யருக்கு.

''கணேச சாஸ்திரிகள்வாள்! வித்தை என்று யாசிப்ப வனுக்கு இல்லை என்பது தோஷம் என்று சாஸ்திரங்கள் எல்லாம் சொல்லுகின்றன. நானும் ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சிலருக்குச் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் சங்கீதம் என்பது என்ன, அதை எப்படி சாதகம் பண்ணுவது என்பதையே அநேகர் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை'' என்று சற்று நிறுத்தினார். மீண்டும், ''சங்கீதத்தை ஒரு யோகமாகவும், தபஸாகவும் பெரியவர்கள் கருதி வந்தார்கள். ஆனால் தற்காலத்திலே, பாடகர்கள் கீர்த்தியும், செல்வமும், செல்வாக்கும் அடைவதுடன், தங்கள் சாதனை பூரணத்துவம் பெற்றுவிட்டதாக நினைத்து விடுகிறார்கள். சங்கீதம் என்பது ஒரு தொழில்முறையாகி விட்டது. மனிதனின் ஆத்ம ஞானத்தை உயர வைப்பதற்குப் பதிலாக, அது கீழிறங்கிவந்து லௌகிக பேரம் பேசுவதாகிவிட்டது. ஆகையினால், எதற்காகப் பாடம் சொல்லிக் கொடுப்பது என்று அலுத்துப்போய் விட்டது'' என்று முடித்தார்.

''நீங்கள் சொல்வது முற்றிலும் வாஸ்தவம். ஆனால், உலகம் சரியாயில்லை என்பதற்காக, நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறலாமா? இந்தக் குழந்தையினால், சங்கீத உலகத்திற்கே ஒரு பெருமை ஏற்படுவதாயிருககலாம். அதை இல்லாமல் செய்வானேன்? நாம் செய்வதைச் செய்து விட்டால், அப்புறம் ஈச்வரன் இட்ட கட்டளைபோல் நடக் கட்டும்'' என்றார்.

''பையனுக்கு எந்த ஊர்?''

''நான் மாத்தூரில் பையனைப் பார்த்து அழைத்து வந்தேன். அந்தப் பையனுக்கு இலுப்பூர்.''

"உங்கப்பா பெயர் என்ன அம்பி?" என்ருர் சபேசய்யர்.

"எங்கப்பா பெயர் வைத்தி" என்ருன் பதவிசாக கிட்டு.

"ஏண்டா, இலுப்பூர் வைத்தி பிள்ளேயா நீ?" என்ருர் சபேசய்யர். அப்பா பெயரைச் சொல்லி ஆச்சரியப்பட்ட வுடன் பையனுக்குத் தாது விழுந்துவிட்டது. அப்பாவைப் பற்றிய பேச்சு வரும்பொழுதெல்லாம் இகழ்ச்சியைத் தவிர வேறு ஒன்றையும் தாயாரிடமும், மாமாவிடமும் கேட்ட தில்லேயே! ஆகவே, இவரும் அவ்வாறு அவமதிப்பாகத்தான் பேசுவார் என்று நினேத்தான். ஆனல் கிட்டு எதிர்பார்த்த தற்கு மாருக, சபேசய்யரின் முகம் பிரகாசம் அடைந்தது.

கணேச சாஸ்திரிகளேப் பார்த்தார். "சாஸ்திரிகள் வாள்! இந்தப் பையன் தகப்பனுரை ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்திருக் கிறேன். பாடச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். பாவம். அல்பாயு சாகப் போய்விட்டான். என்ன சாரீரம்! வித்வத் திலும் குறைவில்லே. ஆனல், அவ்வளவும் வக்ர குணம். சங்கீதத்திலும் வக்ரம்தான். பெரிய சங்கீத பரம்பரையில் பிறந்தவன். ஒழுங்காயிருந்திருந்தானுனல், மகத்தான கீர்த்தியை அடைந்திருப்பான். ஒரு நண்பர் என்னிடம் அவனேக் கூட்டி வந்து, அவனே என்னிடம் சிறிது காலம் இருக்கச் செய்ய முயற்சித்தார். அதற்கு வைத்தியும் உடன்பட்டு, ஊருக்குப் போய்விட்டுத் திரும்பிவருவதாகச் சொல்லிவிட்டுப் போனுன். ஆனல், அவன் திரும்பி வரவே யில்லே. வருவான் என்று நான் எதிர்பார்த்தேன். இங்கே வரவேண்டியவன் உலகத்தையே விட்டுப் போய்விட்டான் என்றதை அறிந்தபோது துக்கமாகத் தானிருந்தது. அவனே ஒரு உயர்ந்த பொருளாக ஆக்க முடியாமல் போய் விட்டதே என்பதுதான் என் வருத்தத்துக்குக் காரணம்" என்று சொல்லி விட்டுச் சற்று மௌனமாக இருந்தார்.

பிறகு சாவதானமாக, "ஈச்வரனுடைய சங்கல்பம் விசித்திரமாகத்தானிருக்கிறது. தகப்பனுக்குப் பதிலாக பிள்ளேயை என்னிடம் கொண்டுவந்திருக்கிறது பாருங் களேன்! ஏதோ நடக்கட்டும் பார்ப்போம். பையனுடைய சுகிர்தம்போல் நடக்கிறது" என்று முடித்தார் சபேசய்யர்.

கிட்டுவுக்கும், கணேச சாஸ்திரிகளுக்கும் என்ன சொல்வ தென்றே தெரியவில்லே.

கணேச சாஸ்திரிகள் மரியாதையாக, "எதற்கும் நீங்கள் ஒருதரம் பையன் பாடுவதைக் கேட்கவேண்டாமா?" என்ருர்.

“அதற்குத் தேவையே இல்லை. அந்தக் குழந்தையின் உடம்பில் ஊறும் இரத்தத்தில் நாலைந்து தலைமுறை சங்கீதம் ஓடிக்கொண்டிருக்கிறது. அவனுக்கு சங்கீதம் சொல்லிக் கொடுப்பானேன்! தானாகவே வரும். ஏதோ நிமித்த மாத்திரம் யாராவது ஒருவர் வழிகாட்டியா யிருக்க வேண்டும்!'' என்றார்.

''இனி உங்கள் பொறுப்பு'' என்றார் சாஸ்திரி.

''எல்லாம் பகவான் பொறுப்பு. அவர்தானே இலுப் பூரிலிருந்து இங்கே கொண்டுவந்து விட்டிருக்கிறார். சந்தர்ப்ப மும் சரியாகத்தானிருக்கிறது. விஜயதசமி சமீபத்தில் வருகிறது. விஜய்தசமியன்று ஆரம்பித்துவிடுகிறேன். நல்ல நாள் பார்த்து பையனை இங்கே கொண்டு வந்து விட்டு விடுங்கள்'' என்றார் சபேசய்யர்.

''சரி'' என்று சொல்லிவிட்டு சாஸ்திரிகள் கிட்டுவைப் பார்த்தார். அந்தப் பார்வையினால் அவன் மனதில் என்ன தோன்றியதோ, அவன் சபேசய்யர் பாதங்களில் சாஷ்டாங்க மாக விழுந்து நமஸ்கரித்தான்.

சாஸ்திரிகளும், கிட்டுவும் விடைபெற்றுச் சென்றார்கள்.

# 5

விஜயதசமியன்று கிட்டுவுக்கு வித்யாப்பியாசம் ஆரம்பமாயிற்று.

சபேசய்யர் சங்கீதத்தில் மாத்திரம் அதிகமான வித்வத்தைப் பெற்றிருக்கவில்லை. அவர் சகலகலாவிற்பன்னர். வால்மீகி ராமாயணத்தைக் கரைத்துக் குடித்தவர். யௌவன தசையாய் இருந்த பொழுதே, அவர் அதிகம் பாட்டுக் கச்சேரி செய்தது கிடையாது. வயது முதிர்ந்து தேகத்தில் பலம் இழந்து நிற்கும் இந்தத் தள்ளாத வயதில் அவரால் கச்சேரி எப்படிச் செய்ய முடியும்? அதற்குப் பதிலாக, ராமாயண ஹரிகதைகள் அடிக்கடி செய்வார். மனிதனுக்கு லக்ஷியவாழ்வை நடத்திக் காட்டிய ராம கதையை ஜனங்களுக்கு எடுத்துரைப்பதிலும், வால்மீகியின் மகத்தான காவியத்தைத் திரும்பத்திரும்பப் படிப்பதிலும் அவருக்கு அளவிறந்த இன்பம் இருந்து கொண்டிருந்தது.

சங்கீதத்திலோ அவருடைய ஞானத்தைச் சொல்லவேண்டியதில்லை. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் நேர்சிஷ்ய பரம்பரையில் வந்தவர். ஆகவே தியாகப்பிரும்மத்தின் நாதோபாஸனையும் ராமபக்தியும் அவரிடம் பரிபூரணமாகப் பரிணமித்திருந்தன. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளை வால்மீகியின் மறு அவதாரமாக அவர் பாவித்து, பூஜித்து வந்ததில் ஆச்சரியமேயில்லை. வால்மீகி எப்படி ராம நாமத்தைத் தனது அழியாத கிரந்தத்தின் மூலம் ஜனங்கள் உள்ளத்தில் எழுதி வைத்திருக்கிறாரோ, அதே போல் ராம நாமம் என்றும் ஜனங்கள் நாவில் ஒளிர்ந்து கொண்டிருக்கும்படி செய்ய வந்த மகாத்மாவே தியாகப்பிரம்மம் என்ற திடமான எண்ணம் கொண்டவர். ஆகவே, அவர் அந்தராத்மாவில் ராம பிரானது திவ்ய ரூபமும், நாவில் தியாகய்யரின் கிருதியும், மனத்தில் வால்மீகியின் மகத்தான கதையும் இயங்கிக் கொண்டேயிருந்தன.

அவருடைய ஒழுக்கத்தாலும், படிப்பினாலும், ஜனங்கள் அவரிடம் அபாரமான பக்தியும் விஸ்வாசமும்கொண்டிருந்

தனர். அவருடைய தேஜஸ் நிறைந்த முகத்தையும், அவர் முகத்தில் நிலவும் சாந்தியையும், காம்பீர்யத்தையும் கண்ட யாருக்கும் "இவர் சாதாரணப் பேர்வழி அல்ல; இவர் ஒரு மகான்" என்று சொல்லும்படி தோன்றும்.

நாலரை மணிக்கு எழுந்துவிடுவார்; கிட்டுவையும் எழுப்பி விடுவார். முகத்தை அலம்பிக்கொண்டு, இராமாயணத்தில் சில சுலோகங்களைத் தான் சொல்லிக்கொண்டே கிட்டுவையும் சொல்லச் சொல்லுவார்.

கிட்டுவும் சொல்லிக் கொண்டே போவான். அவனுக்கு இது அவ்வளவு வெறுப்பாயிருக்கவில்லை. சப்தம் உருப்போடுவதுபோலவோ, அத்யயனம் பண்ணுவது போலவோ இல்லையே. சொன்னதைத் திரும்பச் சொல்லிக் கொண்டு போக வேண்டியதுதானே. ஆனாலும், சங்கீதம் சொல்லிக் கொள்ள வேண்டிய இடத்தில், இந்தப் பாடமும் வந்து நிற்கிறதே என்று முதலில் அவனுக்குக் கஷ்டமாகத் தானிருந்தது. 'நம் ஜாதகத்தில் இந்த ஸம்ஸ்கிருதம் நம்மை விடாது போலிருக்கிறதே' என்று ஆயாசப்பட்டான்.

ஆனால், நாளாவட்டத்தில், அந்தச் சிரமம் மாறிவிட்டது. அவனுக்கு, இது பாடத்தைச் சேர்ந்தது இல்லை என்று தெரிந்து விட்டது. எழுந்திருந்தவுடன், ராம நாமத்தை உச்சரிப்பதற்கு சாதன முறையாகத்தான் சபேசய்யர் ராமாயணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் சொல்லச் சொல்கிறார் என்பது தெரிந்தது. ஆகவே அது பாடம் என்கிற பயம் போய்விட்டது. தவிரவும், சபேசய்யரின் ராம பக்தி மெதுவாகக் கிட்டுவின் உள்ளத்தில் சிறிது சிறிதாகப் பரவ ஆரம்பித்தது.

எழுந்திருந்தவுடன் ராமாயணச் சுலோகங்களைச் சொல்லச் சொல்வார். பிறகுதான் சங்கீதபாடம். அது முடியும்பொழுது கிழக்கு வெளுக்கும் சமயமாயிருக்கும். எழுந்திருந்து காவேரிக்கு ஸ்நானத்திற்குக் கிளம்பி விடுவார்கள். ஸ்நானம் முடிந்து வந்தவுடன் பூஜையில் உட்கார்ந்து விடுவார். பூஜை சுமார் பத்துமணி வரையில் நடக்கும். பூஜை முடிந்தவுடன் தம்பூராவை வைத்துக்கொண்டு தியாகய்யரின் படத்தின் முன்னிலையில் அரைமணி நேரம் பாடுவார். அது முடிந்தவுடன் சிறிது நேரம் இளைப்பாறுவார். இதற்குள் மணி பன்னிரண்டு ஆகிவிடும். காலையில் அவர் ஒன்றும் ஆகாரம் செய்வதில்லையாகையால்,

பன்னிரண்டானதும் சாப்பிட உட்கார்ந்து விடுவார். கிட்டு, காலையில் பழயது சாப்பிட்டிருப்பான்; கொஞ்ச நேரம் கழித்துச் சாப்பிடுவான்.

சாப்பிட்டுவிட்டு ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு வால் மீகி ராமாயணத்தைப் புரட்டிக்கொண்டிருப்பார். சில சமயங்களில், அவரைமீறி கண்ணைச் சுழற்ற ஆரம்பித்தால் சிறிது நேரம் ஊஞ்சலில் சாய்ந்தபடியே தூங்குவார். அப்படித் தூங்கினாலும் அரைமணி முக்கால் மணிக்குமேல் தூங்கமாட்டார்.

சுமார் மூன்றுமணிக்குக் கிட்டுவைக் கூப்பிட்டுப் பாடச் சொல்வார். அவன் பாடிக்கொண்டே யிருப்பான். அப் போதைக்கப்போது சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கொண்டு இருப்பார்.

இதன் மத்தியில், சாஸ்திர விற்பன்னர்களோ, அல்லது சங்கீத விற்பன்னர்களோ, அல்லது வித்யார்த்திகளோ வரு வார்கள். அவரவர்களுக்குத் தகுந்தவாறு பேசி அனுப்புவார்.

மாலைவேளையில், அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சிறிதுநேரம் தம்புராவை வைத்துக்கொண்டு பாடுவார். அவர் பாடுவதைக் கவனித்தால், அவர் சங்கீதத்தையே பூஜா விதிகளில் ஒன்றாக்கி, ஈச்வரார்ப்பண மாக்கிவிட்டார் என்று தான் தோன்றும். சிறிதுநேரம் பாடி முடிந்தவுடன், ஆகாராதிகளை முடித்துக்கொண்டு, வாசலில் ஒரு பெஞ்சி யைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுவார்.

அவருடைய வாழ்க்கையில் ஒழுங்கு, அமைதி, சாந்தி எல்லாம் பூரணமாக நிரம்பியிருந்தன. அவருடைய உள்ளத் திலே இருந்த பற்றின்மை அவருடைய நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் பிரதிபலித்தது. அவருக்குப் பாசங்கள் அதிகமில்லை. அவருடைய தரும பத்தினியான தருமாம்பாள் மகா உத்தமி. ஹிந்து தர்மத்தில் திளைத்து வந்த பாரதப் பெண் பரம்பரையில் வந்தவள் என்று கூறலாம் இந்த அம்மணியை.

சபேசய்யருக்கு அதிகமான குடும்ப பாரம் இல்லை. ஒரே ஒரு பெண்குழந்தை இருந்தது. அந்தப் பெண்ணை மிகுந்த பிரியத்துடன் தான் வளர்த்து வந்தார். கௌரவமான குடும் பத்தைச் சேர்ந்தவனும், செல்வமும் படிப்பும் நிரம்பி இருந்தவனுமான ஒரு பையனுக்குக் கொடுத்திருந்தார். ஆனால் அந்தப் பெண் புருஷன் வீட்டிற்குப்போன நாலு

வருஷத்திற்குள், ஓர் ஆண்குழந்தையை விட்டுவிட்டு இறந்து விட்டாள்.

இந்தச் சம்பவம் அவர் மனோ பக்குவத்திற்கு அனுசரணை யாகவே இருந்தது. இயற்கையிலேயே, ஒரு பக்குவம் அடைந்த உள்ளப்பாங்கைக் கொண்டவர், ராமாயணத்தி லும், தியாகய்யர் கீர்த்தனைகளிலும் மூழ்கியிருந்ததால் பக்தி பெருகி, உலக விவகாரங்களில் உள்ள ஈடுபாடு மிகவும் குறைந்துபோயிருந்தது. இந்தச் சம்பவத்தினுல், அவர் மனம் பூரணமான பற்றின்மையை அடைய முடிந்தது.

அவருடைய மனைவியான தருமாம்பாளுக்கு மாத்திரம் அது சகிக்க முடியாத துக்கமாயிருந்தது. சபேச அய்யர் எத்தனையோ தர்மங்களையும், நீதிகளையும் சொல்லி ஆறுதல் செய்யப் பார்த்தார். ஆனுல் துக்கத்தை, காலத்தைப்போல் ஆற்ற வேறு யாரால் முடியும்? நாட்கள் செல்லச் செல்ல அவள் துக்கத்தைச் சிறிது சிறிதாக மறப்பாள் என்று சபேசய்யர் நம்பினுர். அவளுக்கு ஆறுதலளிக்கும் பொருட்டு, தன் பெண் விட்டுவிட்டுப் போன குழந்தையை இருவரும் வளர்த்து வந்தனர். அந்தப் பையன் பெயர் மகாதேவன். கிட்டு வித்தியாப்பியாசம் செய்ய ஆரம்பித்த சமயத்தில் அவனுக்குக் கிட்டத்திட்ட கிட்டுவின் வயது இருக்கும். அவனும், சங்கீதமும், சாஸ்திரமும், சபேசய்யரிடம் கற்று வந்தான்.

சபேசய்யரின் ராமாயண ஹரிகதை கிட்டுவின் உள்ளத் தில் ராமனின் திவ்யரூபத்தை நன்கு பதியவைக்க ஆரம் பித்தது. எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கும் அந்த அற்புதக் கதையை, வெகு அழகாக சபேசய்யர் சொல்வார். அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல், தியாகய்யர் கீர்த் தனங்களைப் பொருத்தமாகக் கையாளும் பொழுது, கேட்ப தற்கு அது மிகவும் அற்புதமாயிருக்கும். இலக்கியத்திற்கு சிகரமாக நிற்கும் வால் மீகியும், சங்கீதத்திற்குச் சிகரமாக நிற்கும் தியாகய்யரும், கிட்டுவின் குழந்தை உள்ளத் தில், வாழ்க்கைக்கே ஆதர்சபுருஷனுன ராமனின் திவ்யரூ பத்தைப் பதிய வைத்துக் கொண்டிருந்தனர். குருவின் பரிசுத்தமான வாழ்வும், அரிய எண்ணங்களும் அவன் மனத்தில் தூய்மையை வளர்த்து வந்தன.

"ஒழுக்கம் இல்லாத வித்தை வித்தையாகுமா?" என்று கேட்பார் சபேசய்யர். சாஸ்திரம், கலைகள், எல்லாவற்றிற் கும் ஒரு பணி உண்டு. மனிதன் ஆத்மானுபவம் அடைவ

தற்கு அனேக படிகளை ஏற்படுத்தியிருக்கிறான். சாஸ்திரங்கள், சங்கீதம் முதலியவை இத்தகைய சாதன முறைகள்தான். அதை ஒரு யோகமாக மதிக்காமல், கேவலப்படுத்துவது அவருக்கு மிகுந்த துக்கத்தை உண்டுபண்ணும்.

இப்படிப்பட்ட குருவிடம், வித்தைகற்கும் வாய்ப்பு கிட்டு விற்குக் கிடைத்தது அவன் பூர்வஜன்மத்தில் செய்த பாக்கியந் தான். சபேசய்யருடைய வாழ்க்கை ஒரு லக்ஷிய வாழ்வாக இருந்தது. கலையையும், அறிவையும் கிட்டுவிற்கு அவர் பெருக்கியதுபோலவே, அவருடைய வாழ்க்கை முறையும், அவருடைய துல்யமான சீலமும், அவனுடைய குழந்தை உள்ளத்திலே பதிந்து அவனுடைய வாழ்க்கை விதிக்கு வழி காட்டியாக இருந்துகொண்டிருந்தன.

ஆகவே, அவருடைய மதிப்பைப் பெறவேண்டும், அவருடைய ஆசீர்வாதத்தை அடையவேண்டும் என்ற எண்ணம் அவன் மனத்தில் நன்கு விழுந்திருந்தது. சங்கீ தத்தில் அவனுக்கு இயற்கையாகவே நன்கு கற்கக்கூடிய சக்தி இருந்தபடியாலும், ஜன்மாந்தர வாசனையாலும் சங்கீதம் பிரயாசையின்றி அவனுக்கு வந்துகொண்டிருந்தது. ஆனால், அவனுக்கு இதுவரையில் பிடிக்காமலிருந்த இலக்கியத்திலும் வர வர சிரத்தை விழ ஆரம்பித்தது. தாயார் தொந்தரவினால் பவம்பாக இருந்த பாடங்களைப்போல, சபேசய்யரின் ராமாயண சுலோகங்கள் உருப்போடுவதில் அவன் வருத்தப் படுவது குறைந்து விட்டது. ராமன் சரித்திரம் பூராவையும் பாடம் பண்ணவேண்டும் என்ற ஆசை கூட உண்டாயிற்று.

தன் தகப்பனாரைப் பற்றி யாவரும் கேவலமாகப் பேசிப் பேசிக் கேட்டதால் தான் அதற்கு மாறாக வாழவேண்டும் என்ற ஆசை அவன் மனத்தில் பதுங்கிக்கொண்டே யிருந்தது. தான் நல்ல மனிதன் என்று போற்றப்படவேண்டும், "இவன் தந்தையைப் போலில்லை; எல்லாவற்றிலும் மிகவும் சிறந் தவன்" என்று பெயர் வாங்கவேண்டும் என்ற ஆசை அவ னுக்கு அந்தச் சிறிய பருவத்திலேயே அடிக்கடி வந்துகொண் டிருக்கும்.

அந்த எண்ணத்திற்கு முழு உருவமும் பலமும் உண்டாகி விட்டது சபேசய்யரின் பழக்கத்தினால். சபேசய்யர் வாழ்க்கை ஒரு லக்ஷ்ய வாழ்வு. அவர் உபதேசம் செய்யும் ராமநாமமோ, ஒரு ஆதர்ச புருஷனுடையது. ஆகவே, சகலரும் போற்றும்

உன்னத லக்ஷ்ய வாழ்வு வாழவேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்த கிட்டுவின் மனத்திலே தூயவாழ்விற்கும், பக்குவ நிலேக்கும் வேண்டிய விதைகளை சபேசய்யரின் வாழ்க்கை முறை தூவி வர ஆரம்பித்தது. சங்கீதத்தைக் கற்றுக்கொள்வது போலவே, அவருடைய குண விசேஷத்திலும் ஈடுபட்டு, அதைக் கடைப் பிடித்துக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அது அவன் வாழ்க்கை முறையையும், திருஷ்டியையும், விசேஷமான முறையில் அமைக்கக் கூடியதாகச் செய்திருந்தது.

# 6

குருகுலவாசம் செய்து வித்யாப்யாசம் செய்வதில் எவ்வளவோ சிரமங்களும், சில செளகரியங்களும் உண்டு. வித்யார்த்திகளில் எத்தனை விதங்கள் உண்டோ, அதற்கு மேல் குருவின் மனோபாவங்களும் உண்டு. குருவை அனுசரித்து வாழ்க்கை நடத்தி, அவருடைய ஆதரவினாலும், அனுக்கிரகத்தாலும், ஆசீர்வாதத்தாலும், வித்தையை அடைய வேண்டியிருந்தது வித்யார்த்திகள். ஆகவே குருமார்களின் இஷ்டம் போல நடக்கவும், அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவும் அவர்கள் மிகவும் பாடுபட்டனர். சபேசய்யரிடம் வித்தை அப்பியசிப்பதற்கு ஒரு சுகிர்தம் வேண்டும். ஏனென்றால், அவர் வித்தையில் எவ்வளவுக்கெவ்வளவு களஞ்சியமாயிருந்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு வித்யார்த்திகளுக்கு சுலபமானவராகவும் இருந்தார். கோபம் சிறிதும் இல்லாதவரும், எப்பொழுதும் அன்பைக் காட்டுபவருமான அவரிடம் இருந்து வித்தை கற்பது எல்லோருக்கும் கிட்டக் கூடியதன்று. தன் சொந்தக் குமாரனைப் போலவே, வித்யார்த்திகளைப் பாராட்டி நடத்துவார். வித்யார்த்திகளின் குணங்களையும், சக்தியையும் அறிந்து அவரவர்களுக்குத் தக்கவாறு போதனை முறைகளைக் கையாளுவர்.

ஆகவே, கிட்டுவிற்கு அவரிடம் இருந்து வித்யாப்யாசம் செய்வதில், கொஞ்சமேனும் சிரமமில்லை. "நாம் ஆதரவு இன்றி இருக்கிறோம்; வித்தையினால்தான் உலகத்தில் ஒரு மனிதனாக முடியும்" என்ற எண்ணமும் அவனுடைய குழந்தை உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தது, வித்தையில் சிரத்தையும், குருவிடத்தில் பக்தியும், இயற்கையாகவுள்ள புத்திசாலித்தனமும், முன் செய்த நற்பயனும் சேர்ந்து கொண்டு அவனுக்கு வித்தையை வெகு சீக்கிரத்தில் சித்தியடையச் செய்து கொண்டிருந்தன.

ஆனால், அவனுக்குச் சிரமம் கொடுக்கும்படியான அம்சமும் இல்லாமல் இல்லை. அது சபேசய்யர் பேரன் மகாதேவன் ரூபத்திலே இருந்தது. மகாதேவனும் கிட்டுவும் ஏறக்குறைய

சமவயதினர். மகாதேவனுக்குப் பாட்டியிடம் கொஞ்சம் சலுகை அதிகம். தாயில்லாக் குழந்தை என்பதற்காக, தருமாம்பாள் தன் பேரனிடம் விசேஷமான பிரியம் வைத்திருந்தாள்.

மகாதேவனுக்கும் சபேசய்யர் சங்கீதம் சொல்லிக் கொடுத்து வந்தார். அவனுக்கு சங்கீதம் மிகவும் தாமதமாக வந்தது. கிட்டுவிற்கு வெகுசீக்கிரத்தில் வருவதைப்பற்றி, அவன் மனத்திலே அசூயை பெருகிக் கொண்டுவந்தது. சபேசய்யர் கிட்டுவின் சாதுரியத்தைப்பற்றி புகழும் பொழுதும், தன் தாமதத்தைப் பற்றிக் கண்டிக்கும் பொழுதும், அவனுக்குக் கிட்டுவின்மேல் ஆத்திரம் வரும். தான் சகல சௌபாக்கியங்களையும் அடையவேண்டிய இந்த வீட்டில், தன்னைச் சிறுமைப் படுத்துவதற்காக எங்கிருந்தோ வந்த இந்த அநாமதேயன் யார் என்று பொருமுவான். தன்னைவிட அவன் எப்படிப் புத்திசாலி ஆகிவிட முடியும். அவன் வெகு நாட்களாகப் பாடிக்கொண்டே வந்திருக்கிறான். அதனால், அவனுக்குச் சங்கீதம் சீக்கிரம் வருகிறது. தான் ஆரம்பித்தது சமீபத்தில்தானே? தன்னையும் அவனையும் தாத்தா ஏன் ஒத்துப் பார்க்கவேண்டும் என்று நினைப்பான். சோற்றுக்கு விதியில்லாத பையன் ஒருவன் தன்னைக் கீழே இறக்கி விட்டு, தன் பாட்டனாரின் இதய பீடத்தில் இருக்கவாவது என்பதை நினைக்கும் பொழுது அவனுக்கு மிகவும் துக்கம் உண்டாகும்.

ஆகவே, அவன் சதா கிட்டுவை அரித்துக் கொண்டே இருப்பான். தன் பாட்டி சிறிதேனும் அவனிடம் அன்பைக் காட்டவிடமாட்டான். தருமாம்பாள் ஏதாவது தின்பண்டங்கள் கொடுப்பதாக இருந்தாலும், முதலில் மகாதேவனுக்குக் கொடுத்து அவனை வெளியே அனுப்பிவிட்டு. பிறகு ரகசியமாகத்தான் கிட்டுவிற்குக் கொடுப்பாள். இல்லாவிட்டால், மகாதேவன் சண்டை போட்டு நிர்தூளி செய்து விடுவான்.

கிட்டுவின்மேல் சதா ஏதாவது புகார் செய்து கொண்டேயிருப்பான். கிட்டுவை ஏதாவது வேலை வாங்கிக் கொண்டிருப்பான். அவனைத் தன் வேலைக்காரனைப்போல நடத்திக்கொண்டிருப்பான். தன் சிநேகிதர்களிடம் கிட்டுவைப்பற்றி உதாசீனமாகப் பேசுவான். இதையெல்லாம் கிட்டு கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. தனது குருவான சபேசய்யரும், அவர் பத்தினியான தருமாம்பாளும் அவனிடம் பிரியமாக நடந்துகொள்ளும் பொழுது, இந்தப் பயல் என்ன சொன்னால் என்ன? என்ன செய்தால் என்ன? என்று உதறிவிட்டுக் கொண்டிருந்தான். தவிரவும், தான் கோரி வந்த காரியம்

மகத்தானது. அது கை கூடி தானும் உலகத்தில் ஒரு மனித னாகும் வரையில், எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்தக் கூடாது என்ற தீர்மானம் இருந்தது. அதற்காகத்தானே, தாயாரையும் வீட்டையும் விட்டுவிட்டு தேசாந்தரம் கிளம் பியது? இருந்தாலும், சிற்சில சமயங்களில் மகாதேவன் காரியங்கள் அவன் மனத்தைப் புண்படுத்தும். ''இருக்கட்டும் காலம் மாறும்'' என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்வான்.

சபேசய்யர் மகாதேவன் விஷமங்களையும், அவன் கொடுமைகளையும் கவனிக்கும் பொழுதெல்லாம் கண்டித்து வந்தார். ஆனால் அது நிரந்தரமான மாறுதல் ஒன்றையும் மகாதேவனிடம் உண்டுபண்ணவில்லை. ஒரு சமயம் கிட்டு சபேசய்யர் வேஷ்டியைத் துவைத்துவிட்டு. மகாதேவன் வேஷ்டியையும் துவைத்துக் கொண்டிருந்தான். மகாதேவன் கிட்டுவை வேலை வாங்குவது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. ''கிட்டு, இனிமேல் மகாதேவன் வேஷ்டியைத் துவைக்காதே. அவனுக்கென்ன கொள்ளை வந்து விட்டது'' என்று கண்டிப்பாக உத்தரவிட்டுப் போய்விட்டார்.

மறுநாள் காலை, கிட்டுவும் மகாதேவனும் குளிப்பதற்குக் காவேரி புஷ்ப மண்டபத்துறைக்கு போனார்கள். கிட்டு தன் வேஷ்டியைத் துவைத்துக் கொண்டிருந்தான். மகாவேதன் தன் வேஷ்டியையும் கொடுத்துத் துவைக்கச் சொன்னான்.

''மகாதேவா, இனிமேல் உன் வேஷ்டியை நீயே துவைத் துக்கொள். என்னைத் துவைக்காதே என்று தாத்தா சொல்லி விட்டார்'' என்றான்.

''அவர் சொன்னால் என்னடா? நீ துவைக்கிறது அவருக் குத் தெரியணுமா. துவைத்துக்கொடு'' என்றான் அதிகார தோரணையில்.

''அவருக்குத் தெரிந்தால் கோபித்துக்கொள்வார் அப்பா. நீயே துவைத்துக்கொள்'' என்றான் கிட்டு.

மகாதேவனுக்குக் கோபம் வந்தது. ''துவைக்கிறாயா இல்லையாடா'' என்றான்.

''மாட்டேன்'' என்றான் கிட்டு தீர்மானத்துடன்.

அவ்வளவுதான். அப்படியே ஒரு தாவுத் தாவி, தள்ளி விட்டான் கிட்டுவை. நல்லவேளை! அவன் நின்றுகொண் டிருந்தது கடைசிப் படிக்கட்டில். ஆகவே கிட்டு மணலில்

விழுந்தான். தோளிலும், துடையிலும் ஊமைக்காயம். கன்னத்தில் சிராய்த்திருந்தது. பக்கத்தில், சபேசய்யர் வீட்டிற்கு எதிர் வீட்டிலிருந்த வெங்குவய்யர் இதைப் பார்த்துக்கொண்டே யிருந்தார்.

''ஏண்டா பாவி, அந்தப் பையனைக் கொல்லத் தெரிஞ்சியேடா. இரு உங்கள் தாத்தாவிடம் சொல்கிறேன்'' என்று சொல்லி மகாதேவனை வெகுவாகக் கண்டித்தார். மகாதேவன், யாரையோ முணுமுணுத்துச் சபித்துக்கொண்டிருந்தான்.

வீட்டிற்கு வந்தவுடன், கிட்டுவை ஏற இறங்கப் பார்த்தார் சபேசய்யர். ''என்னடா நெற்றியில் காயம்?'' என்ருர். ''படித் துறையில், வழுக்கி விழுந்துவிட்டேன் சிராய்த்திருக்கு'' என்று பொய் சொன்னுன். ஆனுல், சபேசய்யர் முகத்தில் கோபம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. ''அந்தக் கழிசரை உன்னைத் தள்ளிவிட்டாணு'' என்ருர். கிட்டு பேசாமல் இருந்தான்.

சபேசய்யர் தன் மனைவியைக் கூப்பிட்டு மகாதேவனைக் குறித்து, "அந்தப் பயலை உள்ளே வரவிடாதே. வாசலிலேயே நிற்கட்டும். அவனுக்கு இன்னிக்குச் சோறு போட்டாயாணுல், நீயும் இந்த வீட்டிலே இருக்கக்கூடாது" என்று ஆத்திரத்துடன் ஆக்ஞாபித்தார். சபேசய்யருக்கு வெகு அபூர்வமாகத்தான் கோபம் வரும். ஆனுல் வந்தால் ருத்திரன்தான். லேசில் சமாதானமாவதில்லை. ஆகவே, தருமாம்பாள் பேரன் பக்கமாக ஒரு வார்த்தையும் பேசவில்லை. கோபம் சமாதானம் ஆகும் வரையில் பேசுவதில் பிரயோசனம் இல்லை என்பதை அவள் அறிவாள்.

சபேசய்யர் சாப்பிட்டாகிவிட்டது. கிட்டு சாப்பிட்டாகிவிட்டது. தருமாம்பாளும் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினுள். சபேசய்யர் ஊஞ்சலில் படுத்துக் கண் அயர்ந்து கொண்டிருந்தார். தருமாம்பாளும் கண் அயர்ந்த சமயம். கிட்டு உலர்ந்த வேஷ்டியை எடுத்து வைப்பதற்காக வெளியே வந்தான். நல்ல வெய்யில், பகல் மூன்று மணி இருக்கும். வெளியே நின்றிருந்த மகாதேவனின் இடுப்பிலிருந்த ஈர வேஷ்டி உலர்ந்துவிட்டது. வயிற்றுப்பசி அவன் குடலைக் கிள்ளிக் கொண்டிருந்தது. தாத்தா கோபித்துக் கொண்டதும், தன்னை வெளியே நிறுத்தி அவமானப் படுத்தியதும், தன்னை விட்டுவிட்டு உள்ளே மற்றவர்கள் வயிறு நிரம்பச் சாப்பிட்டிருப்பதும், தான் பட்டினி கிடப்பதைக் கண்டு

கொஞ்சமேனும் ஆதரவு காட்டாமல் உள்ளே அவர்கள் தூங்குவதையும், கண்டு அவனுக்குத் துக்கம் பொருமிக் கொண்டு வந்தது. கிட்டுவைக் கண்டதும், அவனுக்குப் பொறுக்க முடியவில்லை. கண்ணீர் மள மள வென்று பெருகிக் கொண்டிருந்தது. அவன் அழுவதையும் பட்டினியால் வருந்துவதையும் கண்ட கிட்டுவிற்கு இரக்கம் உண்டாயிற்று.

''என்னடா மகாதேவா?'' என்ருன் கிட்டு.

''பசி வயிற்றைக் கிள்ளுகிறதுடா'' என்ருன் மகா தேவன்.

''நான் என்னடா பண்றது,பாட்டி சமையல் உள் வாசற் படியிலே படுத்துக்கொண்டிருக்காள். கொஞ்சம் சத்தப் பட்டாலும் எழுந்துவிடுவார்களே'' என்ருன் கிட்டு.

''எப்படியாவது கொஞ்சம் மோர் மாத்திரமாவது கொண்டு வந்து கொடேன்'' என்ருன் மகாதேவன்.

கிட்டு ரகசியமாக அடிமேல் அடிவைத்து, ஒருவரையும் எழுப்பாமல் மோரைக் கொண்டு வந்து கொடுத்துக் குடிக்கச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆனுல், மோர் கொண்டு வந்த ஈயக் குவளையைத் திருப்பி அதன் இடத்தில் சேர்ப்பதற்குள், சபேசய்யர் விழித்துக் கொள்ளவா வேண்டும்!

அவருக்கு விஷயம் புரிந்துவிட்டது. ஆனுல், மகாதேவன் தான், கிட்டுவை எப்படியாவது ஏதாவது கொண்டு வரச் செய்திருக்க வேண்டும் என்று நினைத்தார். மகாதேவன் பேரிலே அவருக்கு இருந்த கோபம் மேலும் அதிகமாயிற்று.

''என்னடா கொண்டுபோய்க் கொடுத்தாய்?'' என்ருர்.

''மோர்'' என்று தலையைக் குனிந்து கொண்டே சொன்ஞன் கிட்டு.

''நான் ஒன்றும் கொடுக்கக்கூடாதுன்னு சொல்லி யிருக்கிற பொழுது ஏன் கொண்டுபோய்க் கொடுத்தாய்?'' என்ருர்.

''பசிக்கிறதுன்னு தவித்தான். பாவமாயிருந்தது'' என்று கூறித் தலைகுனிந்து நின்ருன், கிட்டு.

''அதிகப் பிரசங்கி. வெகு பெரிய மனுஷனுப் போயிட்டி யாக்கும். இரக்கப்படறியாக்கும். உனக்கும் இராத்திரி சாப்பாடு கிடையாது'' என்ருர்.

''நான் பட்டினி கிடக்கேன். பாதகமில்லே. ஆனுல் மகாதேவன் பசி தாங்க மாட்டானே'' என்றுன் கிட்டு.

''சபேசய்யர் பதில் ஒன்றும் சொல்லவில்லே. ஆனுல் இந்தப் பால்ய வயதிலேயே, இந்தப் பையனுக்கு இவ்வளவு தன்னலத் தியாகமும், பெருந்தன்மையும் எப்படி வந்தது என்று ஆச்சரியப் படாமலிருக்க முடியவில்லே.

மகாதேவன் கிட்டு இவர்கள் உறவில்கூட ஒரு பெரிய மாறுதல் அன்றைய தினத்திலிருந்து ஏற்பட்டது.

சபேசய்யர் பூஜைப் பொருள்களில் ஒரு வீணேயும் இருந்தது. அது அவருடைய குரு கையாண்ட வீணே. சபேசய்யரின் குரு தியாகப் பிரம்மத்தின் நேர் சிஷ்யர். அத்துடன் சாஹித்ய கர்த்தாவும்கூட. தமிழில் சில கீர்த்தனே களேயும் செய்திருப்பவர். சங்கீத ஞானம் பூர்த்தியாவதற்கு வீணே அவசியமானபடியால் வீணேயையும் பயிற்சி செய்து சாதகம் செய்துவந்தார். தான் செய்யும் கீர்த்தனங்களின் சஞ்சாரங்களே வீணேயில் வாசித்துப் பார்த்து அதன் தரா தரத்தை அறிந்து கொள்வார்.

தன் குரு கையாண்ட வீணே என்பதற்காக அந்த வீணே யைத் தன் குருவாகவே பாவித்து பூஜித்துவந்தார் சபேசய்யர். அதை ஒருவரும் தொடச் சம்மதிக்க மாட்டார். அதை பூஜைக்கு முன்பு, சுருதி சேர்த்து வைத்து, பூஜையை நடத்துவார். சில சமயங்களில், வாய்க்குள்ளேயே, ஸ்வரங் களே முணு முணுத்துக் கொண்டிருக்கும் பொழுது, திடீரென்று கற்பனே ஏதாவது தோன்றினுல், வீணேயில் அதைப் பிடித்துப் பார்ப்பார். அவருக்கு லக்ஷ்யத்தில் எவ்வளவு உன்னதமான கற்பனே இருந்ததோ, அவ்வாறே சங்கீத லக்ஷணத்திலும் பரிபூரணமான ஞானம் இருந்தது. ஆகவே, சில ராகங்களின் சஞ்சாரங்களேப் பற்றிய பரிசீலனே யில் இறங்கும் பொழுது அவருக்கு வீணே மிகவும் உதவியாக இருக்கும். இதற்காக அவர் அந்த வீணேயை ஜாக்கிரதை யாகப் பார்த்துக் கொள்வார்.

அந்த வீணே பழைய காலத்து வீணே. அதை மிகவும் சிரமப்பட்டு, ஒரு கைதேர்ந்த தஞ்சாவூர் ஆசாரியிடம் மேளம் செய்யச் சொல்லி, சரிபார்த்து வைத்திருந்தார். அவருக்கு ஒரே கவலே என்ன வென்றுல், தன் பேரன் மகாதேவன் ஏதாவது விஷமம் செய்துவிடப் போகிறுனே என்பதுதான். மகாதேவனே, அந்த வீணேயின் பக்கமே போகாதபடி விரட்டிக் கொண்டிருப்பார்.

ஒரு சமயம், மகாதேவன் வேஷ்டியை உலர்த்துவதற்காகக் கொடியில் போட்டுக் கொண்டிருந்தான். குச்சியினால் கொடியில் போடும்பொழுது, தவறி அது விழுந்துவிட்டது. அந்தக் கொடிக்குக் கீழே வீணை இருந்தது. வீணைக்கு வெகு சமீபத்தில் வேஷ்டி விழுந்துவிட்டது. குடத்தின் மேல் பட்டு அதை ஒரு ஆட்டம் ஆட்டிற்று. அவ்வளவுதான் அதைப் பார்த்துக்கொண்டிருந்த சபேசய்யருக்கு அளவிறந்த கோபம் வந்துவிட்டது. தன் பூஜைக்குரிய வீணை அல்லவா? வேகமாக வந்து மகாதேவன் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை அறைந்தார். அந்த அறை என்றென்றும் ஞாபகம் இருக்கக் கூடியது! அவ்வளவு கோபத்தில் ஒரு சமயம் கூடக் கிட்டு அவரைப் பார்த்ததில்லை. "கழிசரை, கீழே வீணை இருக்கிறது. கண் தெரியாமே, ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு காரியம் செய்வதைப்பார்!'' என்று கண்டித்தார். அந்தக் காட்சி, கிட்டுவின் மனத்தில் நன்கு பதிந்திருந்தது. வீணையிடம் அவருக்குள்ள பக்தியையும் அதை அவர் போற்றிக் காப்பாற்றுவதையும் நன்கு அறிவான். ஆனாலும், ஒரு சமயமாவது தான் அதை மீட்டிப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவன் உள்ளத்திலே குமுறிக் கொண்டேயிருந்தது. அது சாத்தியமில்லை, செய்யவும் கூடாது என்பதை அவன் நன்கு அறிந்திருந்தாலும், எப்படியாவது ஒருதரம் அதை மீட்டி வாசித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் கூடவே இருந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில், வீணை வித்வான் ஒருவர் கல்யாணத்தில் கச்சேரி செய்வதற்கு வந்திருந்தார். அதைக் கேட்பதற்குச் சபேசய்யர், கிட்டு எல்லோரும் போயிருந்தார்கள். அந்த வித்வான் வீணையில் நல்ல தேர்ச்சி பெற்றவர். அவர் வாசித்தது மிகவும் அற்புதமாயிருந்தது. அன்று கேட்ட இசை வெள்ளமானது, கிட்டுவின் காதிலே ஒலித்துக் கொண்டேயிருந்தது. வீட்டிற்கு வந்தது முதல், அவன் வீட்டு வீணையை மீட்டிப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அபரிமிதமாக அவனைப் பிடித்துக் கொண்டது. அதனருகில் போவது மகத்தான அபசாரம் என்பது தெரிந்திருந்தும், அதையும் மீறி வாசித்தே பார்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

மறுநாள், அவனுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. சபேசய்யர் லௌகிக விஷயமாக எங்கேயோ வெளியே போயிருந்தார். தருமாம்பாள் காவேரிக் கரைக்கு ஸ்நானத்திற்குப் போயிருந்தாள். மகாதேவனும் பாட்டி

யுடன் போயிருந்தான். இத்தகைய சந்தர்ப்பம் மறுபடியும் கிடைக்காதே!

ஓர் ஓரமாக உட்கார்ந்துகொண்டு வீணையை எடுத்துச் சுருதியைச் சேர்த்துக் கொண்டான். அவன் இதைக் கையாள வில்லையே தவிர, சபேசய்யர் அதைச் சுருதிகூட்டி மீட்டுவதை யும், ஸ்வரங்களைப் பிடித்துப் பார்ப்பதையும் கவனித்திருக் கிருனல்லவா? அந்த சுருதியின் நாதத்திலேயே, தான் கேட்ட வீணு கானத்தை ஞாபகப்படுத்திக்கொண்டான். "நேற்று அந்த வித்வான் கையிலிருந்த வீணையிலிருந்து எப்படிப்பட்ட மகோன்னத இசை வெள்ளம் பெருகிற்று! என் கையிலே வீணையை வைத்துக்கொண்டு, ஊமைபோல் உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறதே!'' என்று ஏங்கிக்கொண்டே, தனக்கு நடந்துகொண்டிருந்த பாடத்தை, ஸ்வர ஸ்தானங்களைத் தடவித்தடவி வாசித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். யாரோ வாசல்பக்கம் வருவதுபோல் தெரிந்தது. பதை பதைக்கும் நெஞ்சுடன் வீணையைத் திருப்பிவைக்கப் போனுன். என்ன போதாத காலம்! இவனுடைய பதபதைப் பிலும் நடுக்கத்திலும், வீணையின் பிருடை ஒன்று சுவரில் மோதி உடைந்து கீழே விழுந்தது. என்ன கொடுமையான சம்பவம்! கிட்டுவின் சுவாசமே ஒரு கணம் நின்று விட்டது. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று. உடல் எல்லாம் நடுக்கம் கொடுத்தது. வாசல் பக்கம் ஒருவரும் வரவில்லை. கேவலம் மனப்பிராந்தி! அதனுல் வாத்தியம் பின்னமுற்றது.

கிட்டுவிற்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னை ஒரு பூதமோ பிசாசோ வந்து அப்படியே விழுங்கிவிடாதா என்று நினைத் தான். இவ்வளவு நாள் இல்லாமல், தன்னை வஞ்சித்த ஆசையையும் விதியையும் நொந்துகொண்டான். இனி அவன் எப்படி சபேசய்யர் முகத்தில் விழிப்பது. தன் அரை குறைப் படிப்புடன் வெளியேற வேண்டியதுதானு? விநாச காலத்திற்காகத்தான் இந்த விபரீத எண்ணம் வந்ததா? அவருக்கு எவ்வளவு வருத்தம் ஏற்படும். தன் குருவாகவே பூஜித்த வீணைக்குப் பங்கம் ஏற்படுவதா? "நான் வந்து குருவுக்கு அளவிறந்த வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய அமங்கள காரியத்தைத்தானு செய்ய வேண்டும்!''

நல்லவேளை. இதை ஒருவரும் பார்க்கவில்லை. பேசாமல் இருந்த இடத்தில் வைத்துவிட்டால், தான் செய்தது அவருக்கு எப்படித் தெரியப்போகிறது. மகாதேவன்தான் செய்திருப்பான் என்று தீர்மானித்து அவனை வைவார்.

அவ்வளவுதானே. ஆனால், இந்த அபாண்டமான பழியை மகாதேவன்மேல் சுமத்திவிட்டு, தான் தப்பித்துக்கொள்ளக் கிட்டு விரும்பவில்லை. ஏதோ தவறுதல் செய்தாகி விட்டது; சொல்லி விடுவோம். வரும் பலாபலன்களை அனுபவிக்க வேண்டியதுதான். நேர்மையான வழியிலே போவதுதான் சரி. ஒரு தப்புக்காரியத்தின் பலன்தானே இப்பொழுது இந்த இக்கட்டான நிலையை உண்டு பண்ணியிருப்பது என்று நினைத்தான் கிட்டு. அவன் மனம் பலவிதமாகக் குழம்பினாலும் முடிவில் நேர்வழியை நோக்கிற்று. வீணையை இருந்த இடத்தில் வைத்துவிட்டு, சபேசய்யர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இந்தப் பிரச்னை எப்படியோ ஒரு வழியாகத் தீர்ந்தால்தான், அவனுக்கு மனத்திலிருக்கும் பளு நீங்கும் போலிருந்தது. ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு மரணவேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

சபேசய்யர் வந்தார். அவர் முகம் வாடியிருந்தது. போன காரியம் எப்படியோ? முகமெல்லாம் வியர்த்திருந்தது. வந்து ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்தார். ஆட்டிக் கொண்டே, சிறிது காற்று வாங்கிக்கொண்டு சிரமபரிகாரம் செய்து கொண்டிருந்தார்.

காரணமின்றிச் சுற்றித் திரிந்த அவர் கண்களை மூலையில் கிடந்த வஸ்து பிடித்து இழுத்தது. ஒரு தாவுத் தாவி அதை எடுத்துப் பார்த்தார். அவருக்குத் திகைப்பாயிருந்தது. வீணையிடம் ஓடினார். ஆம், அது மூளியாகி யிருந்தது. அவர் முகத்தில் பொரி பறந்தது. "மகாதேவா'' என்று ஒரு கூச்சல் போட்டார். என்ன ஆவேசத்தை அது ஒலித்தது! ''மகாதேவன் எங்கேடா'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டார். கிட்டுவிற்குப் பேச நாவெழவில்லை. அவன் உடல் உதறல் எடுத்தது. உதடுகள் துடித்தன. அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை. கண்ணிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. ''நான்தான்'' "நான்தான்'' என்றான். அதற்கு மேல் பேச்சு வரவில்லை. ஒரு நிமிஷம் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அவருக்குத் தெரிந்தது. "தெரியாமல் செய்துவிட்டேன்'' என்று கதறினான், விம்மலுக்கிடையே. அவர் முகத்திலே கொதித்த கோபம் மறு விநாடியில் கருணையைக் காட்டிற்று. சாந்தமாக ''இங்கே வா'' என்றார். எதையும் வாங்கிக்கொள்ளத் தயாராக கிட்டு வந்தான். தனக்கு எந்தத் தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கட்டும். ஆனால் வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லாமல் மட்டும் இருந்தால் போதும் என்று இருந்தது அவனுக்கு.

கிட்டுவின் தோள்மேல் கையை வைத்துக்கொண்டு, ''உனக்கு ஏன் இந்தப் புத்தி வந்தது?'' என்றார். கிட்டுவிற்கு ஆயிரம் ஈட்டிகளை வைத்துக் குத்தினதுபோல் இருந்தது இந்தக் கேள்வி. அவன் கண்களிலிருந்து வழியும் கண்ணீர் அவன் வேதனையை நன்கு வெளிக் காட்டியது. அவன் உதடுகள் அசைந்தன. ஆனால் வார்த்தைகள் ஏதும் வெளி வரவில்லை.

சபேசய்யர் சொன்னார்: ''போனால் போகிறது. அது முன்பே விரிந்திருந்தது. ஏதோ நடந்துவிட்டது. ஆனால் நீ உண்மையை ஒப்புக்கொண்டாயே, அதுவே போதும். வீணை உயர்ந்ததுதான். ஆனால் உண்மை அதைவிட உயர்ந்தது'' என்றார்.

கிட்டு தன் காதுகளை நம்பவேயில்லை. இது வெறும் கனவா? அல்லது உண்மைதானா?

சபேசய்யர் சொன்னார்: ''நீ எதைச் செய்தாலும் சரி. உண்மையை மாத்திரம் தவற விடாதே'' என்றார். கிட்டு அப்படியே மெய்ம்மறந்து நின்றான். அவர் அப்பொழுது காட்டிய அன்பும் கருணையும் அவனுக்குப் புத்துயிரைக் கொடுத்தன. விஷத்தை எதிர்பார்ப்பவனுக்கு அமிருதம் கிடைப்பது போல் இருந்தது. சபேசய்யர் அவனுடைய கண்கண்ட தெய்வமாக விளங்கினார். அவர் சொன்ன வார்த்தைகள் அவன் நெஞ்சிலே வெகு ஆழமாகப் பதிந்தன. ''என் உயிர் போனாலும் இனி உண்மையை விடமாட்டேன்'' என்று சொல்லிக் கொண்டான். அதற்கு வேண்டிய அஸ்திவாரம் அன்றே அவன் நெஞ்சில் ஆழமாக விழுந்து விட்டது.

# 7

மகாதேவனுக்கு அந்த வருஷம் உபநயனம் செய்து விடுவது என்று தீர்மானித்து விட்டார்கள். மகாதேவன் தகப்பனுர் இது சம்பந்தமாக அக்கரை காட்டா விட்டாலும் சபேசய்யரும் அவர் மனைவியும், அவனுக்கு இந்த வருஷம் உபநயனம் செய்து விடுவது என்று தீர்மானித்திருந்தார்கள். அதற்கு வேண்டிய பொருளைச் சேர்ப்பதிலும், பண்டங்களைத் தயாரிப்பதிலும் முனைந்து நின்றார்கள். மகாதேவன் அருமைப் பேரன். எத்தனையோ நாட்களுக்குப் பிறகு இது தான் அவர்கள் வீட்டில் நடக்கப்போகும் சுபகாரியம். எல்லாம் திருப்திகரமாகவே நடந்தன. பெரிய பெரிய வித்வான்களெல்லாம் கச்சேரி செய்ய நான் முந்தி நீ முந்தி என்று வருவதற்குத் தயாராயிருந்தனர்.

முகூர்த்தம் இரண்டு நாளிருப்பதற்கு முன்பே ஒரு நாள் சபேசய்யர் சாவகாசமாக உட்கார்ந்திருந்தார். தருமாம்பாளும் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

"ஆமா, நான் உங்களிடம் சொல்லணும்னு அப்பவே பிடிச்சுப் பார்க்கறேன் சந்தர்ப்பம் சரியாகவேயில்லை" என்று ஆரம்பித்தாள் தருமாம்பாள்.

"என்ன விஷயம்" என்று திரும்பி உட்கார்ந்தார் சபேசய்யர்.

"இல்லை, மகாதேவன் பூணலோடே, கிட்டுவிற்கும் போட்டுவிட்டா என்ன; அவனுக்கு நம்மைவிட்டா யார் கதி? குழந்தை நம்மாத்துக்குன்னு வந்துட்டான். நம்ம செய்யலேன்னு வேறு யார் செய்யப் போறு?" என்றுள்,

ஒரு நிமிஷம் யோசனை செய்தார். மறு விநாடி, "நீ சொல்வது சரிதான். எனக்கு இந்த யோசனை இல்லாமல் இல்லை. இருந்தாலும் கொஞ்சம் அசிரத்தையா யிருந்தேன். அது என்மேல் தப்புதான். என்ன இருந்தாலும் ஸ்திரீகளுக்கு முன் யோசனை அதிகம்தான். யோசிக்க வேண்டாம். நான்

ஆசாரியிடம் சொல்லி, இன்னொரு ஜதை தங்கப் பூணூல் வெள்ளிப் பூணூல், செய்துவரச் சொல்லி விடுகிறேன்'' என்ருர்.

இரண்டு பேருக்கும் உபநயனம் செய்வதென்று உடனே முடிவாயிற்று. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

மகாதேவன் தகப்பனரும் அவருடைய இளைய சம்சாரமும் வந்திருந்தார்கள். மகாதேவனுக்குத் தந்தை என்ற முறையில் அவர் பிரும்மோபதேசம் செய்தார்.

தருமாம்பாள், சபேசய்யரைக் கூப்பிட்டாள். "ஆமாம், கிட்டுவிற்கு யார் பிரம்மோபதேசம் செய்வது?" என்ருள்.

சபேசய்யர் பதில் பேசாமலிருந்தார். அவருக்கு என்ன யோசனையோ என்று நினைத்து, ''என்ன யோசிக்கிறியள். ஒரு குழந்தைக்குப் பூணல் போட்டு, பிரம்மோபதேசம் செய்வது எத்தனை புண்யம்! கொடுத்து வைக்க வேண்டாமா?'' என்ருள் சிபார்சு செய்யும் தோரணையில். சபேசய்யர் பதில் பேச வில்லை. இருந்தாலும் அவர் எண்ணம் அவர் முகத்திலே நன்கு தெளிவாயிற்று. ''வேறு யார்? நாம் தான்'' என்ருர்.

ஆகவே, சபேசய்யரும் தருமாம்பாளும் ஸ்நானம் செய்து விட்டு, புது வஸ்திரம் உடுத்திக் கொண்டு, கிட்டுவின் பக்கத்தில் வந்தவுடன் எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அநேகருக்குப் பொருமையாகக் கூட இருந்தது. உத்தமரும், சகல கலாவல்லவரும், ஞானபண்டிதருமான, அந்த விருத்தர் தம் வீடு தேடி வந்து வித்தையை யாசிக்கும் ஒரு அனதைப் பையனைச் சொந்தப் புத்திரனைப் போலக்கருதி பிரம்மோபதேசம் செய்வது என்ருல் அது ஆச்சரியப் படத்தக்கது தானே.

''அந்தப் பையன் அதிர்ஷ்டந்தான் என்ன!'' என்ருர் ஒருவர்.

''அவர் சொந்தப் பேரனுக்குக்கூடக் கிடைக்கவில்லை; இவனுக்கு அவர் மூலம் பிரம்மோபதேசம் கிடைப்பது என்ருல் அவன் பாக்யமே பாக்யம்!'' என்ருர் மற்ருெருவர்.

சபேசய்யர், அவனுக்கு பிரம்மோபதேசம் செய்தாரா? அல்லது பிரம்ம ஞானத்தையே போதித்தாரா?

கிட்டுவின் உள்ளம் ஆனந்தத்தால் பூரித்தது. தனக்கு அறிவை மாத்திரம் தன் குரு உபதேசிக்கவில்லை, தனக்கு ஆத்ம ஞானத்தையே உபதேசிக்கிறார் என்பதற்கு அறிகுறியாகத்தான், இந்த விசேஷம் நடந்தது போலும். தந்தையும், தாயும் அற்று காற்றுவாக்கில் பறந்து வந்த உலர்ந்த சருகைப் போல அவர் காலடியில் விழுந்த தனக்குத் தந்தையாக ஆகி வித்தையையும், வித்தையில் பிறக்க வேண்டிய ஞானத்தையும் உபதேசிக்கும் பரமாசார்யனைக் குறித்து அவன் மனத்தில் பக்திப் பெருக்கெடுத்தது; அது கண்ணினின்றும் பொங்கி வழிந்தது; உள்ளத்தில் பெருகும் நன்றி அவன் முகத்தில் பிரதிபலித்து நின்றது.

குருவை நமஸ்கரித்து நின்றான். அவன் நின்ற தோரணையில், "இகத்திற்கும் பரத்திற்கும் வாழ்வின் மார்க்கத்தை எனக்குப் போதிக்கும் என் குருநாதருக்கு காணிக்கையாகக் கொடுக்க என் ஹ்ருதயத்தைத் தவிர என்னிடம் என்ன இருக்கிறது!" என்று சொல்வது போல் இருந்தது. சிறுவனுளும் அவன் உள்ளத்திலே அம்மாதிரி எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

பேரனையும் கிட்டுவையும் மாறி மாறிப் பார்த்தார் சபேசய்யர். பேரனை அன்புடன் தடவிக் கொடுத்தார். கிட்டுவைப் பார்க்கும் பார்வையில் அன்பு கனிந்திருந்தது.

"க்ஷேமமாயிருங்கள்; பகவான் அனுக்ரஹம் பண்ணுவார்" என்று ஆசீர்வதித்தார்.

கிட்டு அவர் வாயைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"கிட்டு, இன்று உனக்குப் புதியபிறவி. இது வெறும் கயிற்றுச் சரடு மட்டும் இல்லை, அதன் தத்துவம் உனக்குப் போகப் போகத் தெரியும். அதற்கு வேண்டிய குணத்தையும், ஞானத்தையும் கடவுள் உனக்கு அனுக்ரஹிப்பார்" என்று ஆசீர்வதித்தார்.

அவர் சொன்னதன் முழு அர்த்தத்தையும் கிட்டு வாங்கிக் கொண்டானோ என்னவோ: அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். அவன் உள்ளம் பூரணத்துவம் அடைந்திருந்தது.

கிட்டு சிறு பையனாயிருந்த காலத்திலேயே, ஒரு சமயம் தஞ்சாவூருக்கு ஒரு நாடகக் கோஷ்டி வந்திருந்தது. அந்த கோஷ்டியிலிருந்தவர்கள் பெரும்பாலும் மிகுந்த அறிவாளிகள். வடமொழியிலும், தென் மொழியிலும் நல்ல பாண்டித்தியம் பெற்றவர்கள். நிமிஷப் பொழுதில், கவனம் செய்யக் கூடிய கவித்துவ சக்தி பெற்றவர்கள். அத்துடன் கூட சங்கீதத்திலும் நல்ல பூரணமான ஞானத்தைக் கொண்டவர்கள்.

அறிவாளிகளும், பண்டிதர்களும் நிறைந்து இருந்தபடியால், அவர்கள் எல்லோரிடமும் உயர்ந்த ஒழுக்கம் இருந்தது. அந்தக் கோஷ்டிக்குத் தலைவராயிருந்தவர் மிகவும் உத்தமரானபடியால், அவர் கோஷ்டியின் கௌரவத்தை நிலைத்து நிற்கும்படியாகச் செய்துவந்தார்.

அவர்கள் புண்ணிய சரித்திரங்களை, நாடகத் தன்மை நிறைந்து இருக்கும்படியும், இலக்கிய மணம் கமழும்படியாகவும், இன்னிசை விருந்தாக இருக்கும்படியாகவும் அழகாக நடத்திக் கொண்டிருந்தார்கள். பொது ஜனங்களும் அவர்களுடைய நாடகங்களை ரசித்து நன்கு ஆதரித்துவந்தார்கள். அவர்களுடைய நாடகங்களுக்கு எங்கு சென்றாலும் நல்ல மதிப்பு இருந்தது.

சபேசய்யர் சங்கீதத்திலும், சாஸ்திரத்திலும் சிறந்த விற்பன்னராகையால், அவரைக் கூட்டிக் கொண்டுவந்து சில நாடகங்களை அவருக்குக் காட்டவேண்டுமென்ற அவா அந்த நாடகக் கோஷ்டித் தலைவருக்கு இருந்தது. சிறந்த ஞானஸ்தரான சபேசய்யரின் மதிப்பையும் ஆசீர்வாதத்தையும் அடைய வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு.

ஆகவே, திருவையாற்றிலிருந்து தஞ்சாவூருக்கு வில் வண்டியில் அழைத்துக் கொண்டுவந்து, அவருக்குத் தனி விடுதி ஏற்படுத்தி சகல மரியாதைகளும் உபசாரங்களும் செய்து, அவரிடம் மிகவும் மரியாதையாகவும், பிரியமாகவும்

நடந்துகொண்டு அவருடைய நன்மதிப்பைப் பெற மிகவும் பாடுபட்டார்.

சபேசய்யர் ஒருவாரம் தங்கியிருந்து அவர்களுடைய நாடகங்களில் இரண்டு மூன்றைப் பார்த்தார். அந்த நாடகங்கள் அவருக்கு மிகுந்த திருப்தியை அளித்தன. நடிகர்களுடைய நடிப்பும், அவர்களுடைய பாஷா ஞானமும், சங்கீத ஞானமும், நாடகத்தை அமைத்திருந்த அழகும், அவர்களுடைய ஒழுக்கமும், அவருக்கு மிகுந்த ஆனந்தத்தைக் கொடுத்தன. அத்துடன், தம்மிடம் அவர்கள் நடந்துகொண்ட தோரணையும் அவர்களுடைய விநயத்தைக் காட்டியது.

கோஷ்டித் தலைவரிடம், "உங்கள் நாடகங்களில் எல்லாம் பூரணமாயிருக்கின்றன. நீங்கள் சமூகத்திற்குப் பெரிய சேவை செய்து வருகிறீர்கள்" என்றார் சபேசய்யர்.

"நாங்கள் செய்வது ஏதோ சொல்பம். உங்களைப்போன்றவர்கள் வந்து அனுக்ரகிக்கும் படியாக ஏற்படுவது எங்கள் பாக்கியம்" என்றார் கோஷ்டித் தலைவர்.

"நாடகத்தை, 'பார்க்கப்படும் காவியம்' என்றுசொல்லுவார்கள். உங்கள் நாடகங்கள் அந்த வார்த்தைக்குப் பூரண அர்த்தத்தைக் கொடுக்கக் கூடியவையாயிருக்கின்றன. மேன்மேலும் உங்கள் கலை விருத்தியடைய வேண்டும்" என்றார்.

கிட்டு அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அவன் சபேசய்யருடன் அந்த வாரம் பூராவும் தங்கியிருந்தான். அவனுடைய முகவெட்டு, கோஷ்டித் தலைவரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அவனுடைய பணிவும் குணமும் அவருக்கு மிகுந்த திருப்தியைக் கொடுத்தன. இந்தப் பையனுடைய ஞானத்தையும், அவனுடைய சாரீர சம்பத்தையும் பற்றிய பேச்சுக்கள், கோஷ்டித்தலைவரின் காதில் ஏற்கனவே விழுந்திருந்தன. சபேசய்யர் இல்லாத சமயம் கிட்டுவைக் கூப்பிட்டு, "குழந்தை எங்கே ஒரு பாட்டு பாடு பார்ப்போம்" என்றார்.

கிட்டு சொன்னான். "நான் என்ன பாடப்போகிறேன். நான் ஒரு வித்தியார்த்தி. பாடும்படியான அளவுக்குப் பயிற்சி ஏற்படவில்லை" என்றான்.

"இருக்கட்டுமப்பா, உனக்குத் தெரிந்தவரை பாடு கேட்போம். உன்னைப்பற்றி மிகவும் பிராபல்யமாக இருக்கிறதே!" என்றார்.

கிட்டு தட்டிச் சொல்லாமல், இரண்டு உருப்படிகள் பாடினுன். அவனுடைய சாரீரத்திலுள்ள கணிப்பும், லாகவமும், கோஷ்டித் தலைவரைப் பரவசப் படுத்தியது. அவர் மனத்திலிருந்த ஆசை வேரூன்றியது. கிட்டுவையும் தன் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான், அந்த ஆசை. அதற்கு சந்தர்ப்பமும் சரியாயிருந்தது.

அவர்களுக்கு முகவெட்டும், சங்கீத ஞானமும் உள்ள சிறு பையன் ஒருவன் மிகவும் அவசியமாயிருந்தது. அவர்கள் கோஷ்டியில், ஒரு பையன் இருந்து வந்தான். அவர்களுடைய சரித்திரங்களில், பிரஹ்லாதன், துருவன், முதலிய வேஷங் களைத் தரித்து, மிகத் திறமையுடன் நடித்து வந்தான். திடீரென்று அவனுக்கு வயிற்றுப்போக்கு வந்து, அகால மரண மடைந்தான். அந்தப் பையன் இடத்தைப் பூர்த்தி செய்ய, வலைபோட்டு அரித்து வந்தார்கள். திருப்திகரமாகப் பையன்கள் அகப்படவில்லை. இவர்களைத் திருப்தி செய்யும் படியான சிறுவர்கள் கிடைப்பது துர்லபம்தான். ஏனென் ருல், இவர்கள் தான் மனிதர்களைத் துல்யமாக எடை போட்டுப் பார்ப்பவர்களாயிற்றே!

கிட்டுவைப் பார்த்ததிலிருந்து, கோஷ்டித் தலைவருக்கு அவனைத் தம் கோஷ்டியில் சேர்க்கவேண்டு மென்ற ஆசை அதிகமாயிருந்தது. அவன் பாட்டைக் கேட்டவுடன், அதற்கு வேகம் அதிகமாயிற்று.

''ஏன் குழந்தை, உனக்கு நாடகத்தில் சேரவேண்டும் என்ற ஆசை உண்டா?'' என்ருர்.

கிட்டு பதில் சொல்லவில்லை. இருந்தாலும் இந்தக் கேள்வியின் உட்பொருள் அவனுக்குப் பளிச்சென்று விளங் கியது. அவனுக்கு ஒரு கணம் மெய் சிலிர்த்தது. தானும் இந்தக் கோஷ்டியில் சேர்ந்து, லக்ஷக் கணக்கான ஜனங்கள் முன் தோன்றி அவர்களைப் பரவசப்படுத்துவது என்ருல், அது லேசான காரியமா! ஒரு விநாடி அவன் மேடையில் இருந்து கொண்டு ஜனங்கள் முன் நின்று பாடுவது போலவே தோன் றியது. இருந்தாலும் அவனுக்குப் பதில் சொல்லவில்லை.

''என்ன குழந்தை, எங்கள் கோஷ்டியில் சேருகிருயா?'' என்று கேட்டார் வெளிப்படையாக.

''பெரியவரைக் கேளுங்கள்'' என்ருன் கிட்டு.

அன்று இரவு சபேசய்யர் சாப்பிட்டுவிட்டு தாம்பூலத்தை வைத்துக்கொண்டு சாவகாசமாக உட்கார்ந்து கொண்டிருந்த பொழுது கோஷ்டித் தலைவர் வந்தார்.

"இவ்விடத்திலே ஒரு விக்ஞாபனம்" என்றார்.

"என்ன?" என்றார் சபேசய்யர் ஆச்சரியத்துடன்.

"நீங்கள் வித்தியாசமாக எடுத்துக்கொள்ளாம லிருந்தால் சொல்லுகிறேன்..." என்று தயங்கினார்.

"சும்மா சொல்லுங்கள்" என்றார் சபேசய்யர்.

"இல்லை, தங்கள் சிஷ்யப் பையன் இருக்கானே, அவன் எங்களுக்கு மிகவும் உபயோகமாயிருப்பான்......" என்று மேலே பூர்த்தி செய்யாமல் நிறுத்தினார்.

சபேசய்யர் முகத்தில் அதிருப்தியைக் காட்டிற்றோ என்று சொல்லும்படியான ஒரு சிறு தோற்றம் உண்டாயிற்று. அவர் பேசாமல், ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தார். அவருடைய மௌனமும், முகத் தோற்றமும் கோஷ்டித் தலைவரின் உற்சாகத்தையும் ஆசையையும் தகர்த் தெறிந்து விட்டன. அந்தச் சிறு தோற்றமே, அவரை மன்னிப்புக் கேட்கும் தோரணையில் பேசத்தூண்டியது.

"இல்லை. நீங்கள் தவறுதலாக நினைக்கக் கூடாது. பையனுக்கு மிகுந்த யோக்கியதை இருக்கிறது. அவனுக்குப் புகழ் ஓங்கி நிற்கவேண்டும் என்ற எண்ணம் தான் என்னைக் கேட்கத் தூண்டியது" என்றார்.

"அப்பொழுது உங்கள் சொந்த சௌகரியத்துக்காக அவனைக் கோரவில்லை, அவனுடைய பிற்கால நன்மையை உத்தேசித்துத்தானே?" என்றார் குத்தலாக சபேசய்யர்.

"இல்லை, அது இரண்டாம் பக்ஷம்தான். முதலில் அவனால் எங்கள் நாடகக் கலைக்கு பெரும்புகழும் வருவாயும் ஏற்படும் என்றுதான்" என்றார்.

"பையனுடைய அபிப்பிராயம் என்ன? கேட்டுத் தெரிந்து கொண்டீர்களா?"

"அவனை என்ன கேட்பது......நீங்கள் சொன்னால் சரி என்று சொல்லி விட்டான்" என்றார்.

"நீங்கள் உத்தமமானவர். மிகவும் உயர்ந்த முறையில் உங்கள் நாடகங்களை நடத்துகிறீர்கள். கிட்டு இந்தத்

தொழிலில் ஈடுபடுவதாயிருந்தால், இதைவிடச் சிறந்த ஒரு சேர்க்கை அவனுக்குக் கிடைக்காது. ஆனாலும், அவனை நான் இதற்கு அனுமதிக்கப் போவதில்லை. நாடகக்கலைக்கு அவனைக் கேட்கிறீர்கள். சங்கீதத்திற்கு அவன் செய்யவேண்டிய தொண்டு நிரம்ப இருக்கிறது. ஆகையினால், அவனுக்கு இது வேண்டாம். அவனை விரும்பாதீர்கள்'' என்றார் சபேசய்யர் தீர்மானத்துடன்.

கோஷ்டித் தலைவருக்கு அவர் சொன்னதில் ஏமாற்றம் ஏற்பட்டது. இருந்தாலும், தன்னைக் கவுரவித்தே பேசியது அவருக்குப் பெருமையையும் ஒரு மகிழ்ச்சியையும் கொடுத்தது.

''நான் இப்படித் திடீரென்று கேட்டு விட்டதற்கு மன்னிக்கவேண்டும். கலையை விருத்தி செய்யவேண்டும் என்ற எண்ணம்தான் அதைக் கேட்கச் செய்தது. எதிலாவது அவன் முன்னுக்கு வந்தால் உலகத்துக்கு நன்மைதான். தங்கள் அனுக்ரகம் இருக்கும் பொழுது அவனுக்கு என்ன குறைவு?'' என்றார்.

''வாழ்க்கையிலே மனிதன் ஏதாவது ஒன்றுதான் செய்ய முடியும். சங்கீதத்தில் அவன் ஏதாவது உருப்படியாகச் செய்ய முடியும் என்று தீர்மானமாகத் தோன்றுகிறது. ஈசன் கட்டளை எப்படியோ!'' என்றார் சபேசய்யர்.

''நடக்கட்டும்!'' என்றார் கோஷ்டித் தலைவர். இந்த சம்பாஷணைகள் நடக்கும் பொழுது கிட்டு அவர்கள் பக்கம் வரவேயில்லை. இது எல்லாம் முடிந்து வெகுநேரம் கழித்து கிட்டு அங்கு வந்தபொழுது, கிட்டுவை நோக்கி சபேசய்யர் கேட்டார்: ''ஏண்டா கிட்டு, உனக்கு நாடகத்தில் சேர வேண்டும் என்ற ஆசையிருக்கிறதா?''

கிட்டுவிற்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. பேசாமல் நின்றான். ''ஏண்டா, வாயைத் திறந்து சொல்லேன்'' என்றார் சபேசய்யர்.

''எனக்கு என்ன தெரியும்? என் கண்ணைத் திறந்து உருவாக்க வேண்டியவர்கள் நீங்கள், நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்றான்.

சபேசய்யர் முகம் மலர்ந்தது. ''உனக்கு அது வேண்டாம். உனக்குத் துளி ஆசை அதில் ஏற்பட்டிருந்தாலும் அதை விட்டு விடு. உன் புத்தியைச் சங்கீதத்திலேயே செலுத்து. எல்லோருக்கும் அதனால் நன்மை உண்டு''

என்று சொன்னார். கிட்டு பதில் சொல்லவில்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்பு திடீரென்று தோன்றிய நாடகமேடை ஆசை நிராசையானதில் கொஞ்சம் ஏமாற்றம் உண்டா யிற்று. ஆனால் அது நீடித்து நிற்கவில்லை. ஏனென்றால், அது மேலெழுந்த வாரியாக உண்டான ஒரு பிரமையான தோற்றம் தான். தவிரவும், 'உனக்கு எவ்வளவோ மேன்மை யைத் தரக்கூடிய சங்கீதத்தை விட்டு, நாடகத்திற்குப் போகவாவது!' என்று அவர் சொல்லுவது போலிருந்தது அவனுக்கு. சபேசய்யர் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, "நீ தியாகய்யர்வாளின் சிஷ்யபரம்பரையைச் சேர்ந்தவன் அப்பா!" என்றார். கிட்டுவின் நெஞ்சில் அந்த வார்த்தைகள் அமுதமாகப் பாய்ந்தன.

"எனக்கு ஞானம் விருத்தியாகி, இந்தப் பரம்பரையில் வந்தவன் என்று சொல்லும்படியான யோக்கியதையை அடைந்தால் அதுவே என் மகத்தான பாக்கியம்; வேறு ஒன்றும் எனக்குத் தேவையில்லை" என்ற எண்ணமே கிட்டுவின் உள்ளத்தில் தலைதூக்கி நின்றது.

# 9

நாளுக்கு நாள் கிட்டு வித்தையில் முன்னேறிக்கொண்டு வந்தான். கிரமமாக அவனுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியதையெல்லாம் சொல்லிக் கொடுத்து வந்தார் சபேசய்யர். சொல்லிக் கொடுப்பதை அவன் வாங்கிக் கொள்ளும் முறையையும் அதை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக்கொள்ளும் சாமர்த்தியத்தையும் கண்டு சபேசய்யராலேயே வியக்காமலிருக்க முடியவில்லை.

சங்கீதத்தில், சொல்லிக் கொடுப்பதென்பது ஒரு வியாஜம் தானே? சில கோடிகளைக் காட்டிவிட்டால் அந்த வழி அவரவர்கள் மனோ தர்மத்திற்குத் தகுந்தாற்போலப் போக வேண்டியதுதானே! இவர் சொல்லிக் கொடுத்த ஒவ்வொன்றையும் தான் ஏற்கனவே கற்றிருந்து மறந்துபோனதைத் திரும்ப ஞாபகப்படுத்திக் கொள்வது போலவே அவன் வாங்கிக் கொண்டான்.

அவனுக்கிருந்த ஞானபாவத்துடன் ஒருவித வைராக்கியமும் 'அடமும்' இருந்தன. மணிக் கணக்காகச் சோர்வின்றிச் சாதகம் செய்து கொண்டிருப்பான். பாட உட்கார்ந்து விட்டால் அந்த சங்கீதத்திற்குள் புகுந்து கொண்டு வெளி உலகத்தை அறவே மறந்து விடுவான். பசி, தாகம் ஒன்றுமே அவனைப் பாதிக்காது. யோகத்திலிருக்கும் ரிஷி குமாரனைப் போலத்தான் தோன்றுவான்.

அவனுடைய சாதகத்தையும் மேதா விலாசத்தையும் கண்டவர்கள், இவன் சங்கீத உலகத்திற்கே ஒரு சிகரமாக வரப்போகிறான் என்பதைக் கண்டு கொண்டார்கள். அவனுடைய விநயத்தையும் குண விசேஷத்தையும் கண்டவர்கள் இவன் ஒரு மகா உத்தமனாக இருப்பான் என்பதையும் கண்டார்கள்.

கிட்டுவுக்கு முறையாக எல்லாவிதப் பாடங்களும் முடியும் காலத்தில், வயது பதினாறு பூர்த்தியாகி இருந்தது. அவ்வருஷத்தில்தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

சபேசய்யர் வருஷா வருஷம் ஸ்ரீராம நவமி உற்சவத்தை விமரிசையாக நடத்துவது வழக்கம். அநேக வித்வான்கள் பல ஊர்களிலிருந்து பங்கெடுத்துக் கொள்ள வருவார்கள். சபேசய்யர் அன்று பாடுவார். அவர் பாட்டைக் கேட்கவே, வெளியூர்களிலிருந்து வித்வான்கள் உற்சவத்திற்கு வந்து கலந்து கொள்வார்கள்.

ஆனால் அந்த வருஷம் ஸ்ரீராம நவமிக்கு ஒரு மாதத்திற்கு முன்பே அவருக்குக் கடுமையான ஜுரம் வந்து படுத்த படுக்கையாக அவரை விழுக்காட்டிவிட்டது. ஸ்ரீராம நவமிக்கு இரண்டுநாள் முன்புதான் அவர் ஜுரம் நின்று தலைக்கு ஜலம் விட்டுக்கொண்டார். அவர் உடல் நலம் மிகவும் குன்றியிருந்தது அத்துடன் வயது முதிர்ந்து தள்ளாமையால் ஏற்கனவே தளர்ச்சியடைந்த தேகம். ஆகவே அவர் அந்த வருஷம் பாடுவது சாத்தியமில்லாமல் போய்விட்டது. அவர் கச்சேரி செய்து பிரகாசிக்க வேண்டுமென்பதனால் அல்ல—தம் கைங்கரியம் நின்றுவிடுமே என்பது பற்றி அவர் கவலை அடைந்தார்.

இதற்காக அவர் காரியங்கள் ஒன்றையும் நிறுத்தி வைக்கவில்லை. உற்சவத்திற்கு வேண்டிய காரியங்களைச் செய்வதற்குத் தம் சிஷ்யர்களையும் நண்பர்களையும் பொறுப்பாக்கி யிருந்தார்.

ஸ்ரீராமநவமி தினத்தன்று இரவுதான் சபேசய்யர் வழக்கமாகப் பாடுவார். ஆனால் அந்த வருஷம் யார் பாடுவது என்பதுபற்றிப் பிரஸ்தாபம் வந்தது. அவருடைய பழைய சிஷ்யனும் இப்பொழுது உற்சவத்தின் நிர்வாகத்தில் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பவனுமான விசுவநாதன் வந்து, "இன்று சாயந்திரத்திற்கு யார் பாடப் போகிறீர்கள்" என்று சபேசய்யரைக் கேட்டான்.

சபேசய்யர் பெருமூச்சு விட்டார். "இத்தனை வருஷங்களாக ஒரு வருஷம் தவறாமல் பாடியிருக்கிறேன். இந்த வருஷம்தான் எனக்குப் பிராப்தியில்லை" என்றார். அவர் குரலில் அளவிறந்த விசனம் தொனித்தது.

"யாரைப் போடலாம்?" என்று திரும்பவும் கேட்டான் விசுவநாதன்.

"வேறு யாரையடா போடணும்? இந்தப்பய 'கிட்டு' இருக்கானே, அவன் பாடட்டும் இந்த வருஷம் எனக்குப் பதிலாக" என்றார் சபேசய்யர்.

விசுவநாதனுக்கு ஒரு விதத் திகைப்பும் அசூயையும் பெருகி வந்தது. தான் பாடவேண்டிய ஸ்தானத்தை இந்த வாண்டுப் பயலுக்குக் கொடுத்ததில் திகைப்பு. வேறு பிரபல வித்வான்களும் தன் போன்ற பழைய சிஷ்யர்களும் இருக்கும் பொழுது, இந்த 'நண்டு'க்குச் சந்தர்ப்பம் கொடுப்பதா என்ற அசூயை.

''கிட்டுவிற்குக் கிரமமாக அரங்கேற்றுபடி ஆகவில்லையே. முதல் தரம் பாடும்பொழுது நாள் பார்த்து ஆரம்பிக்க வேண்டாமா? இன்று நவமி!'' என்று அவன் பக்கம் பரிந்து பேசுவதுபோலப் பேசினான்.

''என்னடா, இதைவிட திவ்வியமான நாள் வேறு எது கிடைக்கும். சாக்ஷாத் பகவான் பிறந்த தினத்திலே, பகவானைப் பற்றிப் பாடுவதற்கு நாள் வேறு பார்க்கவேண்டுமா? இதுவே சுபதினம். அவன் பாடட்டும், அவனுக்குப் பகவான் அனுக்ரகம் வேண்டுமென்பதுதான் என் பிரார்த்தனையும்'' என்றார்.

அவர் கோரினபடியே நடக்க வேண்டியதுதானே. கிட்டு பாடச் செல்வதற்குமுன் வந்து அவரை வணங்கி நின்றான்.

''நான் எதைப்பாடுவது இவ்வளவு பெரிய வித்வத் சதஸிலே?'' என்று சொல்லிக்கொண்டே அவர் காலிலே விழுந்து வணங்கி நின்றான்.

''ஏண்டா கிட்டு, நீ எதற்கடா திகைக்கிறாய்! பகவான் நாமத்தையல்லவா பாடப்போகிறாய்! இதில் யோசனை என்ன? உன் வித்வத்தைக் காட்டுவதற்காகவா உன்னைப் பாடச் சொன்னேன்! இல்லவே இல்லை. நீ தைரியமாகப் பாடு; பக்தியுடன் பாடு. உனக்குப் பகவான் அருளும் ஸத்குரு தியாகப் பிரம்மத்தின் கிருபையும் கிடைக்கும். சங்கீதம் என்பதே பகவானுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டிய வஸ்து. அதை மறந்துவிடாதே'' என்றார்.

கிட்டு எழுந்திருந்து, குருபக்தி நிறைந்த கண்களுடன் சபேசய்யர் முகத்தைப் பார்த்தான். அவர் முகத்தில் கருணையும் அனுக்ரஹமும் நிறைந்திருந்தன. ''ஈசன் ஆக்ஞை'' என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீராமபிரான் படத்திற்கு எதிரே போட்டிருந்த மேடையில் உட்கார்ந்து பாட ஆரம்பித்தான்.

அவனுடைய இளங்குரல் கணீரென்று பெருகி வந்தது. அவனுக்குள்ள ஞானமும் லயத்திலும், சுருதியிலுமுள்ள

45947
UNIVERSITY

சுத்தமும் போகப்போக வெகு நன்ருகப் பிரகாசித்தன. அவன் கைக்கொண்டிருந்த பாணியோ அப்படியே சபேசய்யர் பரம்பரை வழியாக, கச்சிதமாக இருந்தது. அவர் போட்ட மார்க்கத்தில் சர்வ லாவகமான அவனுடைய கற்பனைக் குதிரையை விட்டு மேலும் கீழும் சஞ்சாரம் செய்தான். குரலில் ஒரு பிசிர் கிடையாது; ஒரு தேசல் ஸ்வரம் இல்லை. ஸ்வரங்கள் குண்டு குண்டாக, அதற்குரிய கமகங்களுடன் வந்தன. ஸ்வரச் சேர்க்கைகளும் அந்தந்த ராகங்களுக்குரிய ஜீவனைக் காட்டும் கோர்வைகளாகவே இருந்தன.

அன்று கேட்க வந்த பிரமுகர்களும், வித்வத்கோஷ்டி களும் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர். "இது சாதாரணப் பாட்டு இல்லை அப்பா. ஈச்வரார்ப்பணமான சங்கீதம், தேவகானம்'' என்ருர் ஒருவர். "இந்தச் சிறு வயதில் இந்தப் பையனுக்கு இவ்வளவு ஞானமும் வித்வத்தும் எப்படி வந்தன!'' என்று ஆச்சரியப்பட்டார் மற்ருெருவர். ''இதெல்லாம் விட்ட குறை தொட்டகுறை என்று சொல்லு வார்களே, அதைச் சேர்ந்தது! இல்லாவிட்டால் சொல்லிக் கொடுத்து வருவதென்ருல் இவ்வளவு சீக்கிரத்தில் கற்றுக் கொள்ள முடியுமா'' என்ருர் ஒருவர்.

கிட்டுவின் பாட்டு முடிந்தது. "உங்கள் ஆசீர்வாதத்தால் அவன் வித்தையைக் கிரகித்து முன்னுக்குவந்தது பெரிய காரியம்தான்'' என்று சபேசய்யரைப் பார்த்து உபசாரம் சொன்ஞர் ஒரு பெரியவர். ''எல்லாம் பகவானனுக்ரஹம். நான் என்ன அதில் செய்வதற்கிருந்தது! அவன் மேலும் மேலும் வித்தையில் பாண்டித்தியம்பெற்று, இந்தப் பரம் பரைக்கு ஓர் ஒப்பற்ற சிரோமணியாக இருக்கும்படி பெரிய வர்கள் எல்லோரும் அவனை நன்ருக ஆசீர்வதியுங்கள்'' என்ருர்.

கிட்டு, கீழே இறங்கிவந்து தன் குருவை அடிபணிந்து மனப்பூர்வமாக வணங்கி நின்ருன். ஒரு தட்டில் வெற்றிலே யும் பழங்களையும் வைத்து சம்பாவனை செய்யும் தோரணை யில், அவன் கையில் கொடுத்து, ''உனக்கு ராமன் அனுக் ரஹகம் என்றும் கிடைக்கட்டும்'' என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் நின்ருர்.

கிட்டு அவரையே பார்த்துக் கொண்டு நின்ருன். ''சங்கீதம் என்பது ஒரு மகத்தான யோகம். நாதோ பாஸனையும், ராமபக்தியும் ஒன்று என்று ஸ்ரீ ஸத்குரு தியாகப்ரம்மம் நன்கு காட்டியிருக்கிருர். உன் ஹ்ருதயத்தில்

பக்தியும் நாதத்தில் ஈடுபாடும் இருக்கும் வரையில் உனக்குச் சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்'' என்று சொல்லி முடித்தார் ஸ்ரீராமன் படத்திற்கு தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. அந்த ஜோதி கிட்டுவின் கண்ணிலும், உள்ளத்திலும் பிரதி பலித்தது. அவன் குரு சொன்ன வார்த்தைகள் தாரக மந்திரம் போல இதயத்துள் ஒலித்துக் கொண்டிருந்தது. ராமன் படத்திற்கு முன்னால் ஒரு தரம் நமஸ்கரித்துவிட்டு, எல்லாவற்றையும் மறந்தவனாய், சொப்பனத்தில் நடப்பவன் போல நடந்து உள்ளே சென்றான்.

# 10

சபேசய்யரின் உடம்பு சரியாகவே இல்லை. வரவர உடலில் தளர்ச்சியும் பலவீனமும் அதிகரித்துக் கொண்டே வந்தன. அவருக்கு ஜாதக ரீதியாக அந்த வருஷத்தில் ஒரு பெரிய கண்டம் இருக்கிறது என்பதை அறிவார். அவருக்கு ஜாதகத்தில் அபாரமான நம்பிக்கை. அவருக்கே ஓரளவு நன்றாக ஜாதகத்தைப் பரிசீலனை செய்யும் திறனும் இருந்தது.

ஆகவே, எந்த நிமிஷம் 'அழைப்பு' வருகிறதோ அந்த நிமிஷம் புறப்படத் தயாராயிருக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது அவருக்கு. அதற்கு அதிகமாகத் தயார் செய்து கொள்ள அவசியம் ஒன்றும் இல்லை. ஏற்கனவே துறவு மனப் பான்மை கொண்ட உள்ளத்திற்கு அது சிரமமாக இல்லை.

ஒரு காரியத்தை அவர் செய்யவேண்டுமென்று யாராவது நண்பர்கள் வந்து சொன்னால், "நான் என்ன செய்வதற்கு இருக்கிறது? ஆத்திலே ஒரு கால் சேத்திலே ஒரு கால் என்று சொல்வது போல் இருக்கிறேன்; வேறு யாரையாவது செய்யச் சொல்லுங்கள்" என்று சொல்லி விடுவார். ஆனால் பொதுவாக இவர் சொல்வதையெல்லாம் சம்பிரதாயமான வார்த்தைகள் என்றே எல்லோரும் நினைத்திருந்தார்கள். அது வெறும் பேச்சல்ல. நடக்கப்போகும் சம்பவத்தின் அறிகுறி என்பது போகப் போகத்தான் தெரிந்தது.

ஒரு நாள் அவர் கொல்லைப் பக்கம் போய்விட்டு வரும் பொழுது காலில் ஏதோ ஒன்று நன்றாகக் குத்தி விட்டது. என்ன வென்று பார்க்கும் பொழுது அது ஒரு கண்ணாடித் துண்டு. அவர் உள்ளே வந்து, ஊஞ்சலில் உட்கார்ந்தவுடனே, "சரி, எனக்கு 'அழைப்பு' வந்து விட்டது" என்றார் நிதான மாக. அவர் சொன்ன வார்த்தைகள், தருமாம்பாளுக்குச் சுருக்கென்று தைத்தன. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. சுமார் நாற்பது வருஷத்திற்கு மேலாகப் போகிறது அந்த அம்மாள் இவர் வீட்டிற்கு வந்து. சுமார் அரை நூற்றாண்டு அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்க்கையைக் கழித்தவர்கள். ஒருவருக் கொருவர் இணையாத

வர்களாகி விட்டார்கள். இருவரும் வெகு நாள் பழக்கத்தினுலும், குண ஒற்றுமையாலும் ஒரு மனப்பட்டுப் போயிருப்பவர்கள். இவ்வளவு நாள் சேர்ந்து பழகி இருந்தவர்களுக்குத் தள்ளாத வயது காலத்தில், பிரிவு ஏற்படுவதென்ருல் அது சிரமமானதுதான். ஆனுல் அது என்ருவது வந்து தீர வேண்டியதுதானே. இருவரில் யாராவது ஒருவர் முந்திக் கொள்ள வேண்டியதுதானே! ஆனுல், அப்படி முந்திக் கொள்வதில் நான்தான் முந்திக் கொள்ள வேண்டும் என்ற ஒருவித 'போட்டி' இருவர் மனத்திலும் இருந்து வந்தது.

தருமாம்பாள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "நீங்கள் எதற்கு அதைச் சொல்லுகிறீர்கள்? பகவான் இருக்கார். அவர் ஆணை எப்படியோ! நாம் எதற்கு இப்படி அச்சானியமாகப் பேசவேண்டும்?" என்ருள்.

"அச்சானியம் என்ன? இது எனக்கு ஒரு விணையாகத் தான் வந்திருக்கிறது. ஏதோ நான் வந்த காரியம் ஆய் விட்டது போலிருக்கிறது" என்ருர்.

"நீங்கள் திரும்பத் திரும்ப அதை எதற்குச் சொல்ல வேண்டும்? நான் ஏதோ மஞ்சள் குங்குமத்துடன் இருந்துட்டேன். நான் இப்படியே போகணும்னு இந்த தருமாம்பாளேயும் பஞ்சநதீசனேயும் தினம் பிரார்த்தனை பண்ணிண்டு வரேன். அந்த யமன் வந்து என்னைக் கூட்டிண்டு போகமாட்டேங்கிருனே" என்ருள்.

"சித்ர குப்தன் கணக்கிலே பலேகெட்டிக்காரனடி! அவனை ஏமாற்ற முடியாது. யார் யாரை எவ்வெப் பொழுது கூட்டிக் கொண்டு போக வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும். நம்மைக் கேட்டுவிட்டா அவன் செய்கிருன்?"

"சரி, எதற்கு இந்த விவகாரமெல்லாம்? நான் வைத்தியனைக் கூட்டிண்டு வரச் சொல்றேன். கிட்டு, வைத்தியம் கண்ணப்பனைக் கூட்டிண்டு வா. காலிலே அவருக்கு கண்ணுடி பொத்திருக்குன்னு சொல்லி, அதற்குக் கட்ட பச்சிலை எல்லாம் வாங்கிண்டு வரச்சொல்" என்று சொல்லி அனுப்பி விட்டு உள்ளே போனுள். இருந்தாலும் அவள் மனதில் சமாதானம் ஏற்படவில்லை. இது தன் புருஷன் உயிரை வாங்குவதற்காக வந்த விபத்துத்தானே என்ற எண்ணம் மாத்திரம் இருந்து கொண்டேயிருந்தது. இருந்தாலும், எல்லாவற்றிலிருந்தும் மீளுவதற்கு இடம் உண்டு என்று எப்பொழுதும்

அபயம் கொடுத்து ஆறுதல் அளிக்கும் நம்பிக்கையும் இருந்தது. ஆனால் சபேசய்யருக்கு மாத்திரம் கொஞ்சமேனும் சந்தேகமே இல்லை.

வைத்தியன் வந்து மருந்து தடவினான். பச்சிலை இடித்து வைத்துக் கட்டினான். எல்லா வைத்தியங்களும் தான் செய்து பார்த்தான். ஆனால் சபேசய்யர் உள்ளுணர்வினால் கண்டு கொண்டபடி, அது சாதாரணமாக வந்த வியாதியாக இருந்தால் தானே குணமாவதற்கு?

அது குணமாகவில்லை. அது விபரீதமாக அதிகமாகி வந்தது. அந்தக் காலில் அது புரையோடி விட்டது. அதனால் ஜுரமும் இருந்து வந்தது. அந்தக் காலத்தில் இங்கிலீஷ் வைத்தியம் அவ்வளவு பிராபல்யத்திற்கு வரவில்லை. அதுவும் திருவையாற்றில் ஏது? ஆபரேஷன் ஒன்றும் கிடையாது. எல்லா ஆபரேஷன்களும் பரியாரி வைத்தியன் கண்ணப்பன் தான் செய்தாக வேண்டும். ரண வைத்தியத்தில் அவன் மிகவும் கியாதியுள்ளவனாயிருந்தாலும், எந்த வைத்தியன் எமனுக்கு எதிர் நின்று போர் புரிய முடியும்? ஆகவே அவன் சாமர்த்தியம் இப்பொழுது பலிக்கவில்லை. வரவர ஜுர வேகம் கடுமையாகி, அவர் நிலைமையை ஆபத்தானதாக்கிக் கொண்டிருந்தது.

அவருடைய காலின் ரணம் சித்திரவதை செய்து கொண்டிருந்தாலும், உடம்பில் கடுமையான ஜுரம் கொதித்துக் கொண்டிருந்தாலும் புத்தி நிதானத்தை இழக்க வில்லை. தம் உயிர் இந்த உடலில் தங்கி இருப்பதற்கு இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது என்பதைக் கண்டு கொண்டார். மூடியிருக்கும் கண்களை சிரமப்பட்டுத் திறந்து கொண்டு பார்த்தார். எதிரே, கவலையும் துக்கமும் நிரம்பிய கண்களோடு பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் கிட்டு. ''அவளைக் கூப்பிடு'' என்று சமிக்ஞை செய்தார்.

பதைபதைக்கும் நெஞ்சோடு ஓடோடியும் வந்தாள் அவர் மனைவி. பக்கத்திலே உட்காரச் சொல்லி சமிக்ஞை செய்தார். உட்கார்ந்தாள். "இன்று சாயந்திரத்திற்கு மேல் தாங்காது, இந்த உடலிலேயும் வீட்டிலேயும் உலகத்திலேயும் இருந்த கடன் தீர்ந்தது'' என்றார். அவளுடைய புண்பட்ட நெஞ்சிலே இது ஈட்டியினால் குத்துவது போல் இருந்தது. ''இந்த வயதிலே, என்னை இந்த எழுத்திற்கு உள்ளாக்க வேண்டு மென்று என் தலையிலே எழுதியிருக்கோ?'' என்று சொல்ல வரும்பொழுதே நெஞ்சைத் துககம் வந்து அடைத்துக் கொண்டது. வாயிலிருந்து வார்த்தைகள்

வரவில்லை. ''உலகத்திலே, எத்தனையோ சிறுசுகளைப் பார்த்திருக்கிறாயே, அதைவிட உன் துக்கம் பெரிதா? மனத்தைச் சமாதானம் செய்து கொண்டு பகவந் நாமத்தைச் சொல்லிக் கொண்டு காலத்தைத் தள்ளிவிடு. ஆன காலம் ஆய் விட்டது. ஏதோ இன்னும் கொஞ்ச காலம்தானே. மரணத்திற்குப் பயந்து என்ன செய்வது?'' என்று சொல்லிக் கொண்டே திரும்பினார். கிட்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். அவனைப் பக்கத்திலே கூப்பிட்டார். அவன் சமீபத்தில் வந்தான். அவனைத் தடவிக் கொடுத்தார். கண்களில் அன்பு வழிந்தது. ''நாதத்தை பக்தியோடு உபாசனை செய். பக்குவம் ஏற்படும். மங்களம் உண்டாகும்'' என்றார். கிட்டு பதில் பேசாமல் தரையைப் பார்த்துக் கொண்டே நின்றான். அப்பொழுது அவர் தம் குருவிடமிருந்து தமக்குக் கிடைத்த வீணையைப் பார்த்து அதைச் சுட்டிக் காட்டி, ''அது உன்னுடையதுதான்; நீ தான் இந்தப் பரம்பரைக்கு வாரிசு. அதற்குப் புகழ் உண்டாகும் படி நடந்துகொள்'' என்றார்.

''சுவாமி படத்திற்கு தீபம் ஏற்றிவைத்து விட்டு, ஊது வத்தி கொளுத்தி வைத்துவிட்டு வா'' என்றார். கிட்டுவும், ராமன் படத்திற்கும் தியாகப் பிரம்மத்தின் படத்திற்கும் மாலையைப் போட்டு ஊதுவத்தி கொளுத்திச் சொருகி வைத்து, தீபத்தையும் ஏற்றி வைத்துவிட்டு வந்தான். ''பஞ்ச ரத்தினக் கீர்த்தனத்தில் இரண்டு சொல்லிவிட்டு, ராமாயணம் கொஞ்சம் வாசி'' என்றார்.

கிட்டுவிற்கு இருந்த நிலையில் பாடும்படியாக மனசு இடங் கொடுக்கவில்லை. ஆனால் குரு கட்டளையிடும் போது, அதுவும் இது அவருடைய கடைசி ஆசையோ என்று சொல்லும்படியான இடத்தில், அவனுக்குச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? ஆகவே, மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு பாட ஆரம்பித்தான். பாட்டிற்குள் புகுந்து கொண்டு சங்கீதத்தில் ஈடுபாடு அதிகமானவுடன், இந்த மனக்கொந்தளிப்புச் சிறிது தணிந்து நின்றது. ஆவேசத்துடன் பாடிக்கொண்டிருந்தான். ''சுநாதத்தைக் கேட்கும் பொழுது என்ன சாந்தி ஏற்படுகிறது ஆத்மாவிற்கு!'' என்று முணுமுணுத்தார் சபேசய்யர். அவர் சொன்னது கிட்டுவின் காதில் விழுந்ததோ இல்லையோ! அவன் மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தான். அவன் பாடி முடிந்தவுடன், ''ராமாயணத்தை எடுத்து சுலோகங்களை வாசி'' என்றார். ராமாயணத்தில் அவர் திரும்பத் திரும்ப அலுக்காமல் ரசித்துப்

படிக்கும் சில கட்டங்கள் உண்டு. அவற்றில் ஒன்றை எடுத்து கிட்டு வாசித்தான். சபேசய்யர், தம் உடல் நிலை சுற்றுப்புறம் எல்லாவற்றையும் மறந்து ராமனிடம் ஈடுபட்டு நின்றார். ராமாயணம் காதில் விழுந்து கொண்டிருக்கும் பொழுதே, அவருடைய சுவாசம் நெஞ்சிற்கு வந்துவிட்டது. தன் பிராணன் இழுத்துக் கொண்டிருக்கும் நிலையில், 'ராம ராம' என்று இரண்டு தரம் கதறினார். அவர் பிரக்ஞை தவறியது. கண்கள் மூடின. ராம நாமம் காதில் விழுந்து கொண்டிருக்கும் பொழுதே, ராமனுடைய பாதாரவிந்தங்களை நோக்கிச் சென்றுவிட்டார். அவர் சுவாசம் நின்றது கூடத் தெரியாமல் வாசித்துக் கொண்டிருந்தான் கிட்டு. பக்கத்து வீட்டுப் பாட்டி பதை பதைக்கும் நெஞ்சுடன், சபேசய்யரைச் சுட்டிக்காட்டினாள். அவருடைய கடைசி மூச்சு நின்றது. கிட்டு தான் வாசிப்பதை நிறுத்திக்கொண்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவனுக்குச் சங்கீத ஞானத்தையும், உள்ளத் தெளிவையும், போதித்து, தந்தையாகவே இருந்துவந்த ஞானாசாரியனின் பூத உடல் தான் தங்கி இருந்தது. அந்த உடலுக்குக் கியாதியையும், புகழையும் தந்து கொண்டிருந்த ஜீவன் போய் விட்டதை அறிந்தவுடன், கிட்டுவுக்குப் பகீரென்றது. ஒரு பயமும், துக்கமும் பிடித்துக்கொண்டன. அவனுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஒரே விபத்து இதுதான். அது நேர்ந்து விட்டது. இனி யார் அவனுக்கு, அவரைப்போல், ஆதரவுடனும் அன்புடனும் நடந்து கொள்வார்கள். அவன் மனத்திலே ஒருசூன்யம் உண்டாயிற்று. ''அவர் என்ன, மகான்! அதுபோலவே, மரணத்தை வென்றவர் என்பதை நிரூபித்துக் காட்டித்தான் சென்றிருக்கிறார். அவர் மனப்பக்குவம் என்ன! வைராக்யம் என்ன! பக்தி என்ன! இப்படிப்பட்ட மரணம் எல்லோருக்கும் கிடைக்குமா?' என்று புகழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டார்கள் வந்தவர்கள். அது எல்லாம், கிட்டுவின் காதில் விழுந்ததும் விழாததுமாக இருந்தன. அவன் பிரமை பிடித்தவன்போல் இருந்தான். சபேசய்யர் மரணத்தை அறிந்து பக்கத்து வீடுகளிலிருந்தும் வேண்டியவர்கள் வீடுகளிலிருந்தும் ஜனங்கள் வந்துகொண்டிருந்தார்கள். ஜனசந்தடி அதிகமாகிக்கொண்டு வந்தது. ஆனால், கிட்டுவோ உணர்வற்று ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

இறந்த வீட்டில் நடக்கவேண்டிய அங்கங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக ஆரம்பித்தன. வாசலில் வரட்டியில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. மற்ற அம்சங்களும் தயாராகிக்

கொண்டு வந்தன. இதற்குள்ளாக யார் தகனக்கிரியைகள் செய்யவேண்டியது என்ற கேள்வி வந்தது. சபேசய்யருக்கு அவருடைய பேரன் மகாதேவன்தான் கிரியைகள் செய்ய வேண்டியவன். ஆனால், அவனை அழைத்துவர ஆள் போயிருக்கிறது. அவன் வருவதற்கு இரண்டு நாள் பிடிக்கும். ஆகவே, தருமாம்பாள் தான் செய்ய வேண்டியிருந்தது. அவள் 'கைப் புல்' வாங்கி வேறு யாராவது செய்யவேண்டும். அதற்கு யாரைக்கொண்டு செய்யச் சொல்லலாம் என்று சாஸ்திரிகள் தருமாம்பாளைக் கேட்டார். தருமாம்பாள் யோசிக்கவே யில்லை. "கிட்டுதான் எங்காத்திலே பிள்ளையாகவே வளர்ந்திருக்கான், அவன் பண்ணட்டுமே'' என்று சொல்லி விட்டாள். அதன்படி, கிட்டு அந்த விசேஷங்களுக்கு யஜமானன் ஆகிக் காரியங்களை நடத்தத் தொடங்கினான்.

முதன் முதலாக 'சாவை' இப்பொழுது தான் நேருக்கு நேராகப் பார்க்கிறான். மரணம் வாழ்க்கையில் ஒரு நிச்சயமான அம்சமாக இருந்த போதிலும், அது எவ்வளவு தூரம் மனிதனுடைய உள்ளுணர்விலே தைத்து அவனுக்கு வாழ்க்கையின் தத்துவத்தைப் போதிக்கிறது? தரும புத்திரர் நச்சுப் பொய்கையில் ஆச்சரியப்பட்டதுபோல், வாழ்க்கையிலே. மனிதன் ஏன் மரணத்தைப்பற்றிய சிந்தனையே யின்றி வாழ்க்கையைச் சதமென்று எண்ணி ஈடுபட்டு நிற்கிறான் என்பது ஆச்சரியப்பட வேண்டிய விஷயமாகத்தானிருக்கிறது.

பூணூலை இடமாகப் போட்டுக்கொண்டு, சொட்டச் சொட்ட ஈரமாக விருக்கும், வஸ்திரத்துடன் வைதீக காரியங்களை முறையாகச் செய்ய ஆரம்பித்தான் கிட்டு. அந்த மந்திரங்களும், அவனைச் செய்துகொள்ளச் செய்யும் வேஷங்களும், சடங்குக்குத் தயார் செய்யப்பட்டிருந்த சாதனங்களும், எல்லாம் ஏதோ வாழ்க்கைக்குப் புறம்பான ஒரு விஷயத்தையே அறிவுறுத்துவதாயிருந்தன.

வருவதற்கு வேறு பந்துக்கள் விசேஷமாக ஒருவரும் இல்லை. மகாதேவன் ஒருவன்தான் அவசியம் வரவேண்டியவன். அவன் இரண்டு நாள் கழித்துத்தான் வரமுடியும். அது அக்கிரகாரமானபடியாலும், பக்கத்திலிருக்கும் கோவில் காரியங்கள் தடைபடாமலிருப்பதற்காகவும், சபேசய்யரின் தகனத்தை உடனே செய்யுமாறு அவசரப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அதன்படியே சபேசய்யரின் சடலத்தை எடுத்துக்கொண்டு மயானத்திற்குப் புறப்பட்டு விட்டார்கள்

முன்னதாக நெருப்புச்சட்டியைத் தூக்கிக்கொண்டு, கிட்டு போய்க் கொண்டிருந்தான்.

மனது பக்குவமடைய, மயானம் ஒரு பெரிய பயிற்சியைக் கொடுக்கிறது. வாழ்க்கையின் உண்மையே மயானத்திலேதான் ஆரம்பமாகிறது. அதனால்தான், எந்தப் பரம புருஷனின் உடுக்கையிலிருந்து உலகமும், வேதங்களும், சிருஷ்டியும் பிறந்தனவோ, அந்தப் பரமபுருஷன் மரணத்தை வெல்லும் தன் தாண்டவத்தைச் சுடலையில் ஆடிக்கொண்டிருக்கிறான் போலும்! எப்படியும், மரணமும் மயானமும் உள்ளத்தை வெகுதூரம் பாதித்திருந்தன கிட்டுவின் மனத்தில். அவனுக்கு எந்த அனுபவத்தையும் நன்கு வாங்கிப் பதியவைத்துக் கொள்ளும் பாலிய வயது. ஆகவே எதிர்பாராதபடி—ஏனென்றால் இந்த மரணத்தையும். இந்த வைபவங்களையும் அவன் எதிர்பார்க்கவில்லை—அன்று நேர்ந்த இந்தச் சம்பவம் அவனை உலுக்கியிருந்தது.

வாய் மந்திரங்களை வாங்கிக் கொள்வதும் கொள்ளாததுமாக முணுமுணுத்தது. சிதையில் விரட்டிகளின் மேலே சபேசய்யரின் சடலம் கிடந்தது. அவன் சிதையைச் சுற்றி வந்தான். தனக்கு வித்தையையும் ஞானத்தையும் கொடுத்து, உலகத்திலே-எண்ணற்ற ஜீவராசிகள் தோன்றி மறையும் இந்த உலகத்திலே-ஒரு மனிதனாக ஆக்கிவைத்த தன் ஞானாசாரியனுக்கு, தனக்கு அன்பையும், ஆதரவையும் காட்டித் தந்தையான பெரியவருக்கு திரும்பத்தான் செய்வது என்ன? இதுதான் அவருக்குச் செய்ய நேர்ந்தது. அவர் உடலை எரிப்பதற்கு ஒரு சட்டியில் உள்ள நெருப்பைத் தானா நான் அவருக்குக் கொடுக்க வேண்டும்? மார்பின் பக்கத்திலுள்ள வரட்டியை நகர்த்தி வைத்துவிட்டு, நெருப்புச் சட்டியிலிருந்த தணலைக் கவிழ்த்தான். சட்டியை உடைத்துவிட்டு எல்லோரும் வீடு திரும்பினார்கள். உடைந்து போன சட்டியும், உயிர்போன சரீரமும் ஒன்றுதான் போலும்.

வீடு வந்து சேர்ந்தான். உயிரைப் பறிகொடுத்த உடலைப் போலத்தான் வீடு இருந்தது. அந்த வீட்டிற்கு ஒரு ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்த சிறந்த ஞானதீபம் அணைந்து விட்டது. உயிரற்ற வெறும் கல்லாலும் மண்ணாலும் ஆன வீடு மாத்திரம் இருந்தது. அங்கே அவர் உடல் எரிந்து கொண்டிருக்கிறது. ராமநாமத்தையும் பக்தியையும் ஜனங்களுக்கு அலுக்காமல் போதித்த மகானுடைய சரீரம் அங்கே

கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. கிட்டுவிற்கு இதையெல்லாம் நினைக்க நினைக்க, தாங்க முடியாத வேதனையைக் கொடுத்தது. இனி அவருடைய குரலை எங்கே கேட்க முடியும். சங்கீதத்திற்கே ஒரு தூண்போல இருந்து தாங்கி வந்த சரீரம் அல்லவா இன்று விழுந்துவிட்டது என்று மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளும் காதில் விழும்பொழுது அவனுக்கு மேலும் மேலும் ஒரு பிரமை உண்டாகிக் கொண்டிருந்தது.

''இன்னும் கொஞ்ச நாள் இருந்திருக்கலாகாதா! தனக்கு உலகத்திலே ஒரு ஸ்தானம் கிடைக்கும் வரையில் இருந்திருக்கக்கூடாதா! தன் குரு பக்தியைக் காரியத்தில் அவருக்குச் செய்து காட்டும்படியான சமயம்வரையில் இருந்திருக்கக் கூடாதா! அதற்குப் பிராப்தியில்லை. தனக்கு இதுவரையில் ஓர் ஆறுதலைக் கொடுத்துக்கொண்டிருந்த ஜீவன் போய் விட்டது. தான் பழயபடி ஒரு அநாதை. இனி தன்னைத் தேடுவதற்கு யார் இருக்கிறார்கள்?'' என்றெல்லாம் நினைத்துப் புண்பட்டுக் கொண்டிருந்தான் கிட்டு.

மறுநாள் காலையில் தோண்டி, மண்வெட்டி சகிதம் மயானத்திற்குப் புறப்பட்டார்கள். முதல் நாள் வாழ்வின் பயங்கரத்தின் ஓர் அம்சத்தைக் கண்டான். மறுநாள் அதை விடப் பயங்கரமானதைப்பார்க்க அவன் போய்க் கொண்டிருந்தான். உயிருக்கு உயிரானவர்களின் தேகம் எரிந்து சாம்பலாகிக்கிடக்கும் காட்சி அவனுக்காகக் காத்துக் கிடந்தது. புண்ணிய புருஷனான அந்த மகானின் தேகம் எரிந்து சாம்பலாகக் கிடந்தது. அஸ்திகள் சாம்பலுக்கு நடுவே ஆங்காங்கு சிதறிக் கிடந்தன. பொதுமக்களின் வாழ்க்கையையே, தம்முடைய ஹரிகதைகளினால் தூய்மைப்படுத்த முயன்றுகொண்டிருந்த அந்தப் புண்ய புருஷனின் தேகத்திலிருந்து மிஞ்சியது இதுதானா? கிட்டுவினால் பார்க்கச் சகிக்கவில்லை. மனிதன் நடமாட்டமெல்லாம் பிடி சாம்பலுக்குள் அடங்க வேண்டியது தானா? மனிதன் ஆசாபாசங்கள் எல்லாம் எரிந்து இப்படியே சாம்பலாக வேண்டியதுதானா? மனிதனுடைய இறந்த பிரேதத்தை எரித்துப் புடம் போடுவதுபோல, மனத்தை எரித்துப் புடம் போட ஒன்றும் வழியில்லையா? என்ன உலகம்! என்ன வாழ்க்கை! வாழ்க்கை ஒரு சாம்பல்தான் என்பதை நினைவூட்டிக் கொள்ளத்தான் விபூதியை தினம் குழைத்து இட்டுக்கொள்கிறோம் போலும்.

கிட்டு இப்படிப்பலவிதமாகநினைத்தான். ஸஞ்சயனத்தை முடித்துவிட்டு வீடு வருவதற்குள் அவனுக்குப் பலவித மான பயங்கர எண்ணங்களும் தோற்றங்களும் தோன்றின. இயற்கையிலே, மிருதுத் தன்மையும் ஸாத்விகத் தன்மை யும்கொண்ட அவன் முதன் முதலாக நேரடியாகவும் நெருக்க மாகவும் கண்ட மயான அனுபவங்கள் அவன் இதயத்தில் அழியாத முத்திரைகளை வைத்துவிட்டுச் சென்றன. அவன் மனம் வரண்டு இருந்தது.

# 11

கிரியைகள் எல்லாம் கிரமப்படி முடிவடைந்தன. எப்பொழுது முடியும் என்று காத்துக்கொண்டிருந்தான் கிட்டு. அவனுக்கு சபேசய்யரில்லாமல் அங்கு இருப்பது மனதில் அளவில்லாத ஒரு கசப்பையும் அமைதியின்மையையும் கொடுத்தது. இனித் தனக்கு என்ன ஜோலி! தருமாம்பாளின் துக்கத்தைப் பார்க்கும்பொழுது அவனுக்குக் கஷ்டமாகத்தானிருந்தது. இந்த வயோதிக வயதில், அவள்மட்டில் தனியாக எப்படி இருக்கப் போகிறுளோ என்ற ஒரு கவலையும் இருந்தது. இருந்தாலும் அவனுக்குக் கொஞ்சகாலம் வேறு எங்காவது போய்விட்டு வரவேண்டியதுதான் என்ற ஏண்ணம் உண்டாகி விட்டது.

தனக்கு அன்னையும் பிதாவுமாக இருந்துவந்த அந்த மகான் காலம் ஆனவுடன், அவனுக்கு முதல் தடவையாக இப்பொழுதுதான் தன் ஊரைப்பற்றியும் தாயைப்பற்றியும் தீவிரமான எண்ணம் உண்டாயிற்று. தன்னைப் பெற்றவள் என்பதற்காவது அவளைப்பற்றிக் கொஞ்சம் நினைக்கவேண்டாமா? இவ்வளவு நாள்தான் அவளைப்பற்றி நினையாமலேயே காலத்தைக் கடத்தியாகிவிட்டது. இனித்தான் உலகத்திலே எப்படியும் ஜீவித்திருக்க முடியும் என்ற தைரியம் அவனுக்கிருக்கும் பொழுதாவது தாயைப்போய்ப் பார்க்கவேண்டாமா? இவ்வளவுநாள் கழித்துத் தன்னைத் திரும்பப் பார்க்கும்பொழுது அளவிறந்த சந்தோஷத்தை அடைய மாட்டாளா? இந்த உலகத்திலே, தன்னைப் பற்றி ஒரு பொருட்டாக நினைத்து வருத்தப்படவோ, சந்தோஷப்படவோ இருக்கக்கூடிய ஜீவன் அவள் ஒருத்திதானே! ஆகவேதான் அவசியம் போய்ப் பார்க்கவேண்டும். தன் மகன் சிறந்த வித்வத்தை அடைந்து வருகிறுன் என்பதில் சந்தோஷமடைய மாட்டாளா? அவளுக்குச் சங்கீதம் பிடிக்காது ஆதலால் தன்னை வெறுப்பாளோ? இருந்தாலும் இவ்வளவு நாள் கழித்துத் தன் பிள்ளையைத் திரும்ப அடைவதில் அவளுக்குச் சந்தோஷம் ஏற்படாதா? தனக்கு ஒரு அன்பைக் காட்டும் ஜீவன் வேண்டாமா? என்றெல்லாம் யோசனை

செய்துகொண்டிருந்தான். யோசனை செய்யச்செய்ய அவனுக்கு ஊருக்குப் போகவேண்டுமென்ற எண்ணம் தலைதூக்க ஆரம்பித்தது.

கிரியைகள் எல்லாம் முடிந்து சில நாட்கள் கழித்து, ஒரு நாள் தருமாம்பாள் சாவகாசமாக உட்கார்ந்திருக்கும் பொழுது தான், அவன் முடிவாகத் தன் தீர்மானத்தைச் சொல்லிவிடுவது என்று முடிவு கட்டினான். "அம்மா, நான் ஒன்று கேட்கப் போகிறேன், நீங்கள் அதற்கு எனக்கு அனுமதி தரவேண்டும்'' என்றான். அவன் என்ன கேட்கப் போகிறான் என்பதை தருமாம்பாளால் ஊகிக்க முடியவில்லை.

''என்னடா கேட்கப் போறே? பிரமாதமாக அடி போடறியே!'' என்றாள்.

''இல்லை என்னை விடை கொடுத்து அனுப்பவேண்டும்'' என்றான்.

அதைக் கேட்கும்பொழுதே அவனுக்கு நெஞ்சை வந்து அடைத்தது இவ்வளவு நாள் பழகிய இவர்களைவிட்டு எப்படிப் போகிறேன் என்று சொல்வது என்பதே அவனுக்கு அளவிறந்த துக்கத்தைக் கொடுத்தது.

அவன் கேட்டது தருமாம்பாளைத் திடுக்கிடச்செய்தது. இது என்ன விபரீதம்! ஆச்சரியமா யிருக்கிறதே! இவனும் விட்டு விட்டுப் போகப் போகிறானா? என்று நினைத்தாள். ''ஏண்டா, எங்கேடா போகப் போகிறாய்? உன்னை யார் வரவில்லையென்று அழைக்கப் போகிறார்கள்?'' என்றாள்.

கிட்டுவிற்குத் தாயார் இருக்கும் விஷயம் அவளுக்குத் தெரியாது. ''அம்மா—என்னைப் பெற்றெடுத்த தாய் ஒருத்தி இருக்கிறாள்'' என்றான்.

''தாயார் இருக்காளா? அடேடே! அதைச் சொல்லவே யில்லையே! இத்தனை நாளாகச் சொல்லாமல் தானே இருந்திருக்கிறாய்?'' என்றாள்.

கிட்டு அதற்குப் பதில் சொல்லவில்லை. பழைய வரலாற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் விவரிக்கப் பிரியப்படவில்லை "எனக்கு அவர் போனது முதல் மனது சரியாகவேயில்லை. கொஞ்சநாள் எங்காவது சுற்றிவிட்டு வந்தால்தான் மனது நிம்மதியடையும் போலிருக்கிறது'' என்றான்.

"நான் மாத்திரம் தனியாயிருப்பேனுடா இந்த வீட்டிலே? இங்கேயே இருக்க எனக்கும்தான் பிடிக்கவில்லை" என்ருள்.

"உங்கள் தங்கையை இன்னும் கொஞ்ச நாள் இங்கேயே இருக்கச் சொல்லுங்கள். மகாதேவனும் இங்கேயே இருக்கட்டும். உறவினர் இருந்தால் கொஞ்சம் கவலையை மறக்கலாமல்லவா?" என்ருன், உலகத்தில் மிகவும் அனுபவப்பட்டுப் பழக்கமடைந்த வனைப்போல.

"ஒரு நிபந்தனையின் பேரில் போகலாம். கொஞ்சநாள் இருந்துவிட்டு, இங்கே திரும்பி வந்துவிடு. அப்படின்னுத்தான் போகலாம்" என்ருள்,

"எனக்கு அங்கே என்ன வைத்திருக்கிறது? என்னுடையது என்று சொல்லிக்கொள்வது எல்லாம் இந்த மண்ணிலேதான் இருக்கிறது. என் மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ளத்தான் நான் போகிறேன். சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்ருன்.

அவன் போய்விட்டு வருவதற்குச் செலவுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளச் சொன்னுள். ஆனுல், அதை வாங்கிக் கொள்ளவில்லை கிட்டு. வேறு ஒரு பெரிய மனிதரிடம் இருபது ரூபாய் கடன் வாங்கியிருந்தான். ஆகையால் இந்தத் தொகையை வாங்கிக் கொள்ளவில்லை.

அவன் அந்த வீட்டை விட்டுப் புறப்படும்பொழுது அவன் தலை சுற்றியது. இனி அந்த வீட்டிற்குத் திரும்பும் சந்தர்ப்பம் வருமோ என்னமோ என்ற சந்தேகம் கிட்டுவின் மனத்திலும், தருமாம்பாள் மனத்திலும் இருந்துகொண்டு, அந்தப் பிரிவை மிகவும் துன்பகரமாகச் செய்துகொண்டிருந்தது. தருமாம்பாள் கண்களில் நீர்பொங்கி வழிந்தது.

இதற்கு முன்பு எத்தனையோ மாணவர்கள் தங்கள் வித்யாப்பியாசம் முடிந்து போயிருக்கிருர்கள். ஆனுல் அவர்களைப் போல அல்ல இவன். கிட்டு அந்தக் குடும்பத்தின் அபிமான புத்திரனுக அல்லவா வந்து வளர்ந்துவிட்டான். ஆகவே புருஷனை இழந்த உடனேயே இவனையும் அனுப்புவது என்பது தருமாம்பாளுக்கு மிகவும் சங்கடத்தை உண்டு பண்ணிற்று.

"நான் சீக்கிரம் வருகிறேன்" என்ருன் கிட்டு, தழு தழுத்த குரலில். இதைச் சொல்லிவிட்டு வேகமாக நடந்

தான். அவனுடைய இதயத்திலுள்ள துக்கமே அவனைத் தள்ளிக்கொண்டு போவது போலிருந்தது.

கிட்டு குதிரை வண்டியிலும், மாட்டு வண்டியிலும், சிற்சில இடங்களில் நடையுமாகப் பிரயாணம் செய்து ஊர் வந்து சேர்ந்தான். பத்து வருஷங்களுக்குப் பிறகு தான் பிறந்த ஊருக்குத் திரும்பும்பொழுது அவனுக்கு மனத்தில் ஏதோ வேதனைசெய்து கொண்டிருந்தது. பத்து வருஷங்களுக்கு முன்பு சொல்லிக் கொள்ளாமல் ஊரை விட்டுச் சென்றபோது இருந்ததற்கும் இப்பொழுதுள்ளதற்கும் அவன் மனோபாவத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருந்தது. அன்று அவனுக்குப் பெருமை தரக் கூடிய பொருள் ஒன்றும் அவனிடம் இல்லை. ஆனால் இன்றோ. பத்து வருஷங்களாகத் தேடிச்சேர்த்த சொத்து இருக்கிறது. ''அம்மா, அன்று என்னை மிகவும் கேவலமாக நினைத்தாயே! இதோ பார், நான் ஒரு மகா வித்வானிடம் வித்தை கற்றுக் கொண்டிருக்கிறேன். உலகத்தில் நானும் ஒரு மனிதன் என்று சொல்லிக்கொள்ள என்னிடம் யோக்யதை இருக்கிறது'' என்று அவன் தாயை நமஸ்கரித்து அவள் பெருமைப்படுவதைக் கண்டு ஆனந்தமடைய வேண்டுமென்ற ஆசை இருந்தது. அவள் சங்கீதத்தைக் கண்டு அருவருப்படையக்கூடும். இருந்தாலும் தன்னிடம் உள்ள பாண்டித்யத்தையும், யோக்கியதையும் கண்டு நிச்சயம் அவள் பிரியத்துடன் தன்னை வரவேற்பாள். தன்னைக் கண்டு பெருமைகொள்வாள் என்ற திடமான அபிப்பிராயமும் பின்னோடு வந்தது. ''அம்மா, நான் வெறும் சுதையைத் தூக்கும் சுமைதாங்கியாக இருக்க விரும்பவில்லை. நம் குலத்தின் மணிவிளக்காக இருக்க விரும்பித்தான் இந்தக் குடும்பச் சொத்தான சங்கீதத்தைச் சம்பாதித்து வந்திருக்கிறேன்'' என்று சொல்லி அவள் ஆசியை அடைய விரும்பினான். ''அம்மா, பத்து வருஷங்களாக, என்னை நினைத்து மிகவும் துக்கப்பட்டிருப்பாய். ஆனால், இன்று நான் திரும்பி வந்து விட்டேன். உன்னுடைய பத்து வருஷகால துக்கத்தையும், பட்ட அவஸ்தைகளையும் நீக்கி உன் அந்திய கால வாழ்க்கையை, இன்பமும் அமைதியுமுள்ளதாகச் செய்ய நான் வந்து விட்டேன்!'' என்று சொல்ல வேண்டும் என்றும் நினைத்தான் தன் தகப்பனாரையும், தன் தகப்பனாரால், தன் தாயாருக்கு ஏற்பட்ட அவஸ்தைகளையும் நினைக்கும்பொழுது, ''அம்மா, நான் அப்பாவைப்போல் இருக்கப்போதில்லை. என்னைப்பற்றி எல்லோரும் பெருமையாகவும், மரியாதையாகவும் பேசும்படியாக வாழ்க்கை நடத்திக் காட்ட நான் திரும்பி வந்திருக்கிறேன்'' என்று சொல்ல விரும்பினான்.

போக்கு வண்டி அவன் கிராமத்துக்கு ஒன்றரை மைல் தூரத்திற்கப்பாலுள்ள ரஸ்தாவில் அவனை இறக்கிவிட்டது. அந்த இடத்திலிருந்து அவன் கிராமத்திற்கு, வயல் வரப்பிலும் கம்மாய்க் கரையோரமுமாகத்தான் போக வேண்டும். வேறு ரஸ்தாக் கிடையாது. அந்த இடத்திற்கு வந்தவுடன் அவனை அறியாமலே, அந்த வரப்புப் பாதையைக் கால் நாடிற்று. அந்த மண்ணில் காலை வைத்தவுடனேயே தன்னையறியாமல் அவன் தேகத்திற்கும் இந்த மண்ணுக்கும் ஏதோ சம்பந்தம் உண்டு என்று அவன் உணர்ந்தான். பத்து வருஷங்களுக்கு முன்பு அவன் இந்தக் கிராமத்தைவிட்டு வெளியேறிய காலத்தில் அவன் ஒரு குழந்தைதான். அதற்குப் பிறகு இப்பொழுது பார்க்கும்பொழுது எல்லாம் புதிதாகத் தோன்றியிருந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை. பத்து வருஷத்தில் அவனிடம்தான் மாறுதல் ஏற்பட்டிருந்தது. மற்றப்படி கிராமத்திலோ, பூமியிலோ, உலகத்திலோ அதிக மான மாறுதல் ஏற்பட அவசியமில்லை. ஆகவே கிராமத்தின் காட்சிகளெல்லாம் முன்பு இருந்தபடியே இருந்தன. அவன் பால்யமான பக்குவமடையாத மனத்தில் பதிந்தும் பதியாமலு மிருந்த காட்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக ஞாபகத் திற்கு வந்தன.

கம்மாய்க் கரையில் ஏறினான். கம்மாய்க்கரையில், ஒரு பனைமரம் உண்டு. அந்தப் பனைமரத்தின் கீழ் அவனும் அவன் நண்பர்களும் விளையாடுவது வழக்கம். கரையேறியதும் அந்தப் பனைமரத்தைதான் அவன் கண்கள் தேடின, அந்த மரம் இல்லை. அது அவனைத் திடுக்கிடச் செய்தது. கரை யோரத்தில் சில குடியானவர்கள் உட்கார்ந்து கொண்டு கொடிக் காலைப்பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். புதிதாகப் பிரவேசிக்கும் கிட்டுவை வெறிக்க வெறிக்கப் பார்த்தார்கள்: அவனை ஒருவரும் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. கிட்டுவிற்கும் அவர்களில் ஒருவரும் தெரிந்த முகமாகத் தோன்றவில்லை.

அக்ரகாரத்தின் மூலை திரும்பினான். தெருவின் தலைப்பில் அவ்வூர்ப் பிள்ளையார் கோவில் இருந்தது. அதைத் தாண்டித் தான் அக்ரகாரத்திற்குள் நுழையவேண்டும். பிள்ளையார் கோவில் வாசற்படியில் இருவர் உட்கார்ந்து கொண்டிருந் தனர். ஒருவர் வயதானவர். மற்றவன் ஒரு வாலிபன். அந்தப் பெரியவர் கிட்டுவை ஏற இறங்கப் பார்த்தார். அவர் முகத்தில் ஆச்சரியமும் திகைப்பும் தோன்றின. பக்கத்திலிருந்த வாலிபன் தோளில் தட்டி, கிட்டுவைக்

கவனிக்கும்படி சமிக்ஞை செய்தார். அவன் ஒரு நிமிஷம் கிட்டுவை ஏறிட்டுப்பார்த்தான். கிட்டுவும் அவனைக் கவனித்துப் பார்த்தான். மறுநிமிஷம் ''கிட்டு'' என்று பதறி அடித்துக்கொண்டு வந்து கிட்டுவின் கைகளைப் பிடித்துக் கட்டிக்கொண்டான். "ராமு, ராமு'' என்றான் கிட்டு. அவன் குரல் தழதழத்தது.

பக்கத்திலிருந்த பெரியவரைப் பார்த்து ''என்ன சேஷு மாமா, என்னைத் தெரியவில்லையா?'' என்றான்.

அவர்தான் அந்தப் பிள்ளையார் கோவில் அர்ச்சகர்.

"தெரியாமல் என்னடா! பத்து வருஷத்திற்கு முன்பு பார்த்ததோல்லியோ? சட்டுனு புரியவில்லே. அதற்குத்தான் ராமுவைத் தட்டிக் காண்பித்தேன்'' என்றார்.

''கிட்டு, நீ உயிரோடே திரும்பி வந்து, உன்னைப் பார்க்கும் படியாக ஆயிற்றே, அது நம்பமுடியாத விஷய மாகத்தான் இருக்கு.''

''என்னப்பா கிட்டு, இத்தனை நாள் எங்கே போயிருந்தே. என்ன பண்ணிக் கொண்டிருந்தே'' என்று கேட்டார் சேஷு சாஸ்திரிகள்.

ஆனால் இவர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சாவதான மாகப்பதில் சொல்லிக் கொண்டிருக்கும் படியான பொறுமை கிட்டுவுக்கு இல்லே. தன் தாயின் சாலில் விழுந்து நமஸ்கரித்து நிற்கவேண்டும் என்று பொறுமிக்கொண்டிருக்கும் அவன் மனத்திற்கு இந்தக் காலதாமதம் பொறுமையை மிகவும் சோதனை செய்து கொண்டிருந்தது. அவர்கள்சொல்வதையும் கேட்பதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் அவன் அக்ர காரத்தின் வீடுகளைத் துழாவிக் கொண்டே தன் வீடு இருக் கும் இடத்தைப் பார்த்தான். அந்தக் கோவில் வாசலிலிருந்து அவன் வீடு நன்றாய்த் தெரியும். ஒரு நிமிஷம் அவன் மனசு திடுக்கிட்டு ஸ்தம்பித்து நின்றது. மறு நிமிஷம் அவன் கண் களிலிருந்து கண்ணீர் பெருகியது. அவன் ஆகாசக் கோட்டை இடிந்து நொறுங்கி விழுந்ததுபோல, அவன் வீடு இருந்த இடத்தில் ஒரு பாழ்தான் இருந்தது. அந்தப் பாழில் எருக்கஞ் செடியும், ஊமத்தஞ் செடியும் தான் முளைத் திருந்தன. இரண்டு ஆட்டுக் குட்டிகள் அங்குள்ள புல்பூண்டு களை மேய்ந்துகொண்டிருந்தன. அந்தக் காட்சி அவனை ஒரு உலுக்கு உலுக்கிற்று. அவன் வீடு இப்படிப் பாழாய்ப்போய்,

இருந்த இடம் தெரியாமல் புல் முளைத்துப் போகவேண்டுமா என்பது அவனுக்குப் பொறுக்க முடியாத வேதனையைக் கொடுத்தது.

இவன் படும் அவஸ்தையைக் கண்டு அதற்குக் காரணத்தை விவரமாகத் தெரிந்துகொள்ள முடியாமல், சேஷு சாஸ்திரிகள், "என்னப்பா கிட்டு, எதை நினைத்து இப்படி வருத்தப்படுகிறாய்? உன் வீடு இருக்கும் நிலைமையைப் பார்த்தாயா? எப்படியிருந்த வீடு! எத்தனை வித்வத் சிரோ மணிகள் வளர்ந்த வீடு! மண்ணோடு மண்ணாகிப் பாழடைந்து கிடக்கிறது பார்த்தாயா? நீ தான் வந்து அதைப் புதுப்பிக்க வேண்டியவன். ஏதோ இவ்வளவு நாள் கழித்தாவது வந்தது மேல் தான்" என்றார்.

கிட்டுவிற்கு ஒன்றும் பேசவே தோன்றவில்லை. "என் தயார், இப்பொழுது இங்கே இல்லையா? எப்பொழுது இந்த ஊரை விட்டுப் போனாள்?" என்று கேட்டான். ஆனால், அவன் மனம் மாத்திரம், எந்த அவச்செய்தியைக் கேட்க வேண்டி வருமோ என்று நடுங்கிக்கொண்டிருந்தது. சேஷு சாஸ்திரிகள் முகத்தில் தயக்கமும் இரக்கமும் பெருகி வழிந்தன.

"பாவம், உனக்கு ஒன்றுமே தெரியாதா? அதெப்படி ஒரு தகவலும் தெரியாமல் போய்விட்டது உனக்கு? உன் தாயார் காலமாகி ஆறு வருஷத்திற்குமேல் இருக்குமே! உனக்கு எல்லாம் தெரிந்திருக்கும்னுன்னு நினைத்து நான் பேசிக் கொண்டிருக்கிறேன்!" என்றார்.

கிட்டுவின் தலை சுற்றியது, அவன் நரம்புகளை ஒருவெட்டு வெட்டியதுபோல் இருந்தது. அப்படியே பிள்ளையார் கோவில் படியில் உட்கார்ந்தான். அவன் கண்களிலிருந்து மறுபடியும் கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

அவன் வருத்தப்படுவதைக் கண்டு ஆறுதலாக சேஷு சாஸ்திரிகள், "ஏதோ, போனதைப்பற்றி வருத்தப்படுவதில் பிரயோசனம் என்ன? நீ நல்ல ஸ்திதிக்கு வந்து நன்றாக இருப்பதைப் பார்த்து விட்டுச் சென்றிருந்தால் அவளுக்கு சாந்தி ஏற்பட்டிருக்கும். ஏதோ பகவத் சங்கல்பம் இல்லாமல் போய்விட்டது. வருத்தப்படாதே. வா, ஆத்துக்குப்போக லாம்" என்று எழுந்துகொண்டே அவனைத் தம் வீட்டிற்கு அழைத்தார். ஆசையெல்லாம் நொறுங்கியிருந்த கிட்டுவுக்கு அந்த அழைப்பு ஒரு உற்சாகத்தையும் கொடுக்கவில்லை.

'எனக்கு என்று ஒரு வீடும், எனக்கு என்று ஒரு தாயும் உண்டு என்று இவ்வளவு தூரம் ஓடிவந்தேன். அதுகூட

பகவனுக்குப் பொறுக்கவில்லே. இனிநான் எங்கு இருந்தால் என்ன? என்று எழுந்திருந்தான். ''இந்த மண்தான் எனக்குச் சரீரத்தைக் கொடுத்தது. அதனுடன் வாழ்வு இவ்வளவு தான். நான் வித்தையையும் ஞானத்தையும் எங்கே அடைந்தேனே அங்கேயே போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவர்கள் இருவரிடமும் மரியாதைக்குச் சொல்லிக்கொள்ள வேண்டியதைக் கூடச் சொல்லாமல் வேகமாகத் திரும்பிச் சென்றுன். பரந்த உலகத்தில் தன்னே அநாதையாக விட்டுவிட்ட பகவானிடம் அவனுக்குக் கோபம் தான் வந்தது. முதல் முதலாக உலகமே பெரியதாகி ஏதோ புதிதாகப்பட்டது. இந்தப் பரந்த உலகத்தில் தன்னந் தனியனுக இருந்து உலகத்தைப் போராடி ஜயித்து முன்னுக்கு வந்தாக வேண்டுமேயென்ற எண்ணம் அவனே மிகவும் பலவீனமடையச் செய்தது. இதே கவலேயுடன் மெதுவாக ரஸ்தாவை நோக்கித் திரும்பி வந்துகொண் டிருந்தான்.

கிட்டு கிராமத்திலிருந்து புறப்பட்டவன் சாரைப் பாம்பைப் போல நேரே தஞ்சாவூர் வந்து சேர்ந்தான். தஞ்சாவூரில் சபேசய்யரின் அத்தியந்த நண்பரான பொன்னேயா பிள்ளே என்ற தனவந்தர் இருந்தார். அவரிடம் போய்க் கலந்துகொண்டு அவர் யோசனேயின்படி தன் வாழ்க் கையை நடத்துவது என்று தீர்மானித்தான். பொன்னேயா பிள்ளே ரசிகர், சபேசய்யரிடம் அளவிறந்த பக்தியும் பிரியமும் கொண்டவர். சபேசய்யருக்குத் தேவையானபடி பலவிதத் திலும் சௌகரியங்கள் செய்து கொடுத்தவர். சபேசய்யரிடம் அநேகர் வித்தை பயின்று முன்னுக்கு வந்திருந்த போதிலும் சபேசய்யரைப் போன்று வித்தையிலும் ஒழுக்கத்திலும் முழுமையான யோக்கியதை உடையவராக ஒருவரும் ஆக வில்லே என்பது அவர் அபிப்பிராயம். ஆனுல், கிட்டுவை சபேசய்யருடன் சந்தித்திருந்த சந்தர்ப்பங்களில், கிட்டு மற்றவர்களேப்போல அல்ல என்ற எண்ணம் அவருக்குத் தோன்றி இருந்தது. அதற்கு ஏற்றவாறு, மற்றவர்களும் அத்தகைய அபிப்பிராயத்தையே சொல்லி வந்தனர். சபேசய்யரும் கிட்டுவின் யோக்கியதையையும் குண விசேஷத் தையும் சிலாகித்தே பேசி வந்திருந்தபடியால் பிள்ளேயின் மனத்தில் கிட்டுவைப்பற்றி உயர்ந்த அபிப்பிராயம் பதிந்திருந்தது. கர்நாடக சங்கீதத்திற்கே ஒரு தூண் போல இருந்து கொண்டிருந்த சபேசய்யர் காலமானதும், பொன்னேயா பிள்ளேக்கு மிகவும் மனக்கவலே ஏற்பட் டிருந்தது. ஆகவே, கிட்டு அவரிடம் போய்த் தன் தற்கால

வாழ்க்கையைப்பற்றி யோசனை கேட்ட பொழுது, அவருக்கு யோசனை சொல்ல நெடு நேரம் ஆகவில்லை. சபேசய்யர் ஞாப கார்த்தமாகவும், கிட்டுவின் யோக்கியதையை உத்தேசித்தும் அவன் முன்னுக்குவர உதவும்படியான சந்தர்ப்பம் கிடைத்ததே என்று ஆனந்தம் கொண்டார்.

''கிருஷ்ணய்யா''—அவர் கிட்டுவை அப்படித்தான் கூப்பிடுவது வழக்கம்—''நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். தஞ்சாவூர்தான் சங்கீதத்திற்கு தாயகமாக இருந்திருக்கிறது. நீங்கள் இங்கேயே என்னுடனேயே இருங்கள். உங்கள் புகழ் மேன்மேலும் வளருவதற்கு இந்த ஊர்தான் சிறந்த இடம்'' என்றார்.

கிட்டுவிற்கு என்ன சொல்வது என்று தோன்றவில்லை. இருந்தாலும் கேவலம் ஒருவர் தயவில் இருந்து வயிறு வளர்க்கவும் விரும்பவில்லை.

''எனக்கு யோசனை சொல்லி முன்னுக்குக் கொண்டு வருவதற்குத் தங்களைத் தவிர வேறு ஒருவருமில்லை. என் குருவையும் அவர் பரம்பரையும் உத்தேசித்து எனக்கு எது யுக்தமென்று சொல்லுகிறீர்களோ அப்படியே செய்யச் சித்தமாயிருக்கிறேன்'' என்றான் கிட்டு. அவனுடைய உள் அந்தரங்கம் பொன்னையா பிள்ளைக்கு விளங்காமலில்லை.

''நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். வடக்கு வீதியில் என் வீடு ஒன்று காலியா யிருக்கிறது. அதில் ஜாகை யாக இருங்கள். உங்களுக்கு வேண்டிய நெல் முதலிய பொருள்களையும் அனுப்பிவைக்கிறேன். உங்கள் பாட்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். என் பையனுக்கும் உங்கள் பாட்டைக் கேட்கும் சந்தர்ப்பம் ஏற்படட்டும். அவனுக்கும் கொஞ்சம் சங்கீத ஞானம் வரவேண்டும் என்பதற்காகவே தான் இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். சபேசய்யரை முன்னிட்டு நீங்கள் இங்கே இருந்து கொண்டிருங்கள். தங்களை முன்னுக்குக் கொண்டுவரும் முயற்சியில் சபேசய்யர் வாளுக்கு எவ்வளவு அக்கறை இருந்ததோ அவ்வளவு எனக்கும் உண்டு என்றார்.

கிட்டுவிற்கு பொன்னையா பிள்ளையின் பரிவு மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது. ஒரு வழியும் தெரியாமல் திரும்பி வந்த அவனுக்கு எதிர்பார்த்தபடியே பொன்னையா பிள்ளை புகலிடம் கொடுக்க வந்தார். ஒருவருடைய ஆதரவில் அவன் இருக்க விரும்பவில்லையானாலும், தான் கை ஊன்றும் வரையிலாவது அதை ஏற்றுக்கொள்வது என்று தீர்மானித்தான். ஆகவே தன் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தைத் தஞ்சாவூரில் துவக்கினான்.

# 12

தஞ்சாவூரில் வசிக்க ஆரம்பித்த ஒரு வாரம் கழித்து திருவையாற்றுக்குப் போனுன். தருமாம்பாள் கிட்டுவைப் பார்த்தவுடன் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தாள். கிட்டுவிடமிருந்து க்ஷேமலாபங்களை அறிந்ததும் அவனிடம் அனுதாபம் அதிகமாயிற்று. தாயார் இருப்பதைச் சொல்லாமலே இருந்துவிட்டு, வித்தை யெல்லாம் முடிந்து அவளைக் காணப்போகும் பொழுது அவள் இறந்ததைக் கேட்க நேர்ந்தது என்ற செய்தி அந்த அம்மாள் மனத்தை இளகச் செய்தது. இருந்தாலும் எப்படியும் திரும்பி வந்துவிட்டானே என்பதில் ஒரு மகிழ்ச்சியும் இல்லாமல் இல்லை.

''எண்டா தஞ்சாவூரிலா ஜாகை அமர்த்தியிருக்கே?'' என்ருள். குழந்தையைப் போல வளர்ந்த கிட்டு திருவையாற்றுக்கு வரவேண்டியதுதானே. அவன் தன்னை விடுவித்துக் கொள்ளப் பார்க்கிருனு? என்று சந்தேகப்பட்டுக் கேட்டது போல் இருந்தது அந்த வார்த்தை.

''நான் எவ்வளவு நாள் அம்மா சிறு பிள்ளையாகவே இருப்பது? இவ்வளவு நாள் பெரியவர் ஆதரவிலேயே இருந்தாகி விட்டது. இனி நான் வயது வந்த பருவத்தில் வாழ்க்கையில் முண்டிக்கொண்டு வரவேண்டியவன்தானே?'' என்ருன்.

எத்தனையோ வித்யார்த்திகள் சபேசய்யரிடம் வித்தை கற்றுக்கொண்டு போயிருக்கிருர்கள். அவர்கள் வித்தை முடிந்ததும், வேற்று மனிதர்களாகப் போய் விட்டார்கள். ஆனுல் கிட்டுவிடம் தருமாம்பாளுக்கு ஓர் அலாதியான வாஞ்சை இருந்தது. ஆகவே, தங்கள் குடும்பத்துடன் அவன் தொடர்பு அறுந்து போகாதபடிச் செய்ய அவள் ஒரு திட்டமும் போட்டிருந்தாள். அதைச் சொல்லாமலேயே, ''சரி, உனக்கு வித்தை முடிந்தது. நீ பெரியவனுகிவிட்டாய். பெரிய மனிதனுகப் போகிருய். தனியாக இருக்கப் போகிருய். நான்தான் அவரையும் இழந்து, உன்னையும் போக விட்டு

விட்டுத் தனியாக இருக்கிறேன்'' என்று சொல்லும் பொழுது அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

''அம்மா, நான் தனியாகப் போகவில்லை. நான் தஞ்சாவூர் வந்ததற்குக் காரணமே, உங்கள் அருகாமையில் இருப்பதற்காகத்தான். உங்களைத் தவிர வேறு யார் கதி எனக்கு?'' என்றான்.

அவன் சொன்னதில் உள்ள அந்தரங்க சுத்தி அந்த அம்மாளுக்கு ஆறுதலையும் திருப்தியையும் அளித்தது. ''நீலா, நீலா'' என்று கூப்பிட்டாள். கிட்டு திகைத்து நின்றான். கிட்டு ஊருக்குப்போன பிறகு தருமாம்பாளின் தங்கையும், தங்கை பெண்ணும் திருவையாற்றுக்கு வந்திருந் தார்கள். கிட்டு யோசிப்பதைப் பார்த்து, அவர்கள் வந்திருப்பதைத் தெரிவித்தாள்.

நீலா வந்தாள். கதவோரம் நின்றுகொண்டிருந்தாள். ''நீலா, கிட்டுவுக்கு நமஸ்காரம் பண்ணு!'' என்றாள் தருமாம்பாள்.

தான் ஒரு பெரிய மனிதன் போலத் தன்னை நமஸ்கரிக்கச் சொல்லுகிறாளே என்று-அந்தப் பெண்ணைச் சங்கோசத்துடன் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு, சற்று கூச்சப் பட்டுக் கொண்டான் கிட்டு. நீலா நமஸ்கரித்து . விட்டு, ஓரக் கண்ணால் அவனைப் பார்த்து விட்டு, வேகமாக உள்ளே போய் விட்டாள். அவளுக்கு வயது பன்னிரண்டு தானிருக்கும். நிறம் சற்றுக் கருப்பு. ஆனால் முகத்தில் மிளிர்ந்த களையும், புத்திசாலித்தனமும், ஒரு விசேஷ அழகைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

"அவள்தான் அப்பா, உன் ஆம்படையாள்" என்றாள் தருமாம்பாள்.

இதற்கு முன்பே, சபேசய்யர் இருக்கும் பொழுதே, தங்கை பெண்ணைக் கிட்டுவிற்கு மணம் செய்து வைப்பதைப் பற்றி பேச்செடுத்திருக்கிறாள், சபேசய்யர் ஆக்ஷேபிக்க வில்லை. ''கிட்டு சிறு பையன்தானே? போகட்டும்'' என்று சொல்லி வைத்தார். தருமாம்பாள் மனத்தில் மட்டும் அந்த எண்ணம் வேரூன்றி விட்டது. குணசாலியும், புத்திசாலியு மான கிட்டுவிற்குப் பிற்காலம் நன்றாக இருக்கும் என்பதை ஊகித்து அவனுடன் நீலா, இன்பமாக வாழக்கூடும் என்று தீர்மானித்திருந்தாள்.

கிட்டு, பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, ''என்னடா பேசாமல் இருக்கே, இஷ்டமில்லையோ?'' என்ருள்.

அந்தக் காலத்தில், இல்லறம் என்பது வாழ்க்கையின் தருமமாக நினைக்கப்பட்டு வந்தது. ஆண் பெண் உறவில், சிற்றின்பம் என்னும் அஸ்திவாரம் பாதாளத்தில் மறைந்து தான் இருக்கும். மணவாழ்க்கை காம விகாரத்தையே அடிப்படையாகக் கொள்ளவில்லை. இல்லறம் என்பதே தருமமாகக் கருதப்பட்டு வந்தபடியால், விருப்பு வெறுப்புகளுக்கு மீறியே அது இருந்தது. இல்லறத்தில், மனது ஒருமைப் பட்டுவிட்டால், எந்தப் பெண்ணும் எந்த ஆணும் இன்பமாக வாழ முடியும் என்பதை அவர்கள் அனுபவத்தில் கண்டிருந்தார்கள் கிட்டுவுக்கு விருப்பு வெறுப்புகள், ஒன்றும் குறுக்கே நிற்க வில்லை. இவ்வளவு சீக்கிரத்தில் இதை அவன் எதிர் பார்க்க வில்லை. அதுதான் பிரமித்து நின்ருன்.

''என்னடா பேசாமல் இருக்கே, கருப்பாயிருக்குன்னு பார்க்கிறே?'' என்ருள் கிண்டலாக.

கிட்டு பிறகுயோசிக்கவில்லை. ''அம்மா நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது? நீங்கள் தான் எனக்குத்தாயார் தந்தை குரு எல்லாம். உலகத்திலே நீங்கள்தான் எனக்கு ஒரு பந்து. நீங்கள் எனக்குப் பார்த்துச் செய்வது எனக்கு நன்மையாக இல்லாமலா போகும். நீங்கள் காலால் சொன்னதை நான் தலையால் செய்யக் கடமைப்பட்டவன். என்னுடைய சுகதுக்கத்தில் அக்கறைகாட்ட வேறுயார் இருக்கிருர்கள்?'' என்று சொல்லிக்கொண்டே நமஸ்கரித்தான்.

அவன் சொன்ன வார்த்தைகள் அந்த அம்மாளின் இளகிய மனத்தை மேலும் குழையச் செய்தது.

''உன்னுடைய குணத்துக்கும், புத்திசாலித் தனத்துக்கும் ஏற்றது போல் நீ முன்னுக்குவந்து பார்க்கணுங்கிறது என் ஆசை. குழந்தை நீலாவுக்கும் வேறு ஆதரவு இல்லை. உன் கையில் ஒப்படைத்தால்தான் பிற்காலத்தில், சௌகரியமாயிருப்பாள் என்று எண்ணிச் சொன்னேன். நீ கல்யாணம் செய்து கொண்டால், எனக்கு மிகவும் நிம்மதியாக இருக்கும்'' என்ருள்.

''உங்கள் ஆசீர்வாதம் எனக்கு நிரம்பவேண்டும்!''

''க்ஷேமமாயிருங்கள். உங்களுக்கு ஒன்றும் குறைவு வராது'' என்றாள் தருமாம்பாள்.

சீக்கிரத்திலேயே, கிட்டுவிற்கும் நீலாம்பாளுக்கும் கலியாணம் ஆயிற்று. இந்தக் கல்யாணத்தைப் பார்க்க சபேசய்யர் இல்லையே என்ற எண்ணம் அந்த சந்தோஷத்திற்கு நடுவிலும் அவர்களுக்கு இருந்தது.

# 13

தஞ்சாவூரில் கந்தசுவாமி பாகவதர் என்று ஒருவர் இருந்தார். அவர் ஒரு சுப்ரமண்ய ஸ்வாமி பக்தர். வருஷந்தோறும் கந்த சஷ்டி உற்சவம் வெகு விமரிசையாக நடத்துவார். அதற்குப் பல ஊர்களிலிருந்தும் பிரபல வித்வான்கள் வந்திருந்து கச்சேரிகள் செய்து இரண்டு மூன்று நாள் தங்கியிருந்து விட்டுப் போவது வழக்கம். பாகவதர் பழுத்த ஞானஸ்தர். அவரிடம் எல்லா வித்வான்களுக்கும் அளவிறந்த மரியாதை உண்டு. எந்தச் சிறந்த வித்வானும் அங்குவந்து பாடிவிட்டுப் போகத் தட்டிச் சொன்னதில்லை.

கிட்டு தஞ்சாவூரில் பொன்னையா பிள்ளையின் ஆதரவில் குடியேறிய வருஷத்திலும் பாகவதர் கந்தசஷ்டி விழாவை வழக்கம் போல் நடத்தினர். உற்சவத்தில் காலையில் ஆரம்பிக்கும் கச்சேரிகள் இரவு இரண்டு மணிவரையில் மாறி மாறி நடந்து கொண்டேயிருக்கும். இரவு ஒன்பது மணிக்குத்தான் சிறந்த வித்வான்களின் கச்சேரி தக்க பக்க வாத்தியங்களுடன் நடக்கும். பூஜை சாப்பாடு, எல்லாவற்றையும் முடித்து விட்டு, அந்தக் குளிர்ந்த வேளையில் பனியையும் பொருட்படுத்தாமல் ஜனங்கள் சலிக்காமல் சங்கீதம் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

அந்த வருஷம் இரண்டாவது நாள் உற்சவத்திற்கு ஒரு சிறந்த வித்வானின் கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. அவர் வருவார் என்று மாலைவரையில் எல்லோரும் நிச்சயமாக நம்பியிருந்தார்கள். ஆனல் இரவு ஏழுமணிக்கு, அவர் குடும்பத்தில் ஏற்பட்ட ஏதோ அசௌகரியத்தினல் அவருக்கு வர இயலாது என்று ஆள்மூலம் சொல்லி அனுப்பிவிட்டார். அதற்குப் பதிலாக வேறு யாரையாவது பாடச் சொல்ல வேண்டும். கந்தசுவாமி பாகவதர் அதற்காக வருந்தவில்லை. எவ்வளவோ வித்வான்கள் வந்திருக்கிருர்கள். வேறுயாரையாவது பாடச் சொல்லலாம் என்று இருந்துவிட்டார். ஆனல், பொன்னையாபிள்ளைக்கு இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட விருப்பமில்லை. கந்தசுவாமி பாகவதரிடம்

நெருங்கி, "நம் கிருஷ்ணய்யாவைப் பாடச் சொன்னால் என்ன" என்றார்.

கந்தசுவாமி பாகவதர் சற்றே மௌனமாக இருந்தார். அவர் அதை ஆமோதிக்க மாட்டாரோ என்று எண்ணிய பொன்னையா பிள்ளை "இளம் வித்வானுக்கும் சந்தர்ப்பம் கொடுத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியந் தானே!" என்றார்.

கந்தசுவாமி பாகவதர் திருவையாற்றுக்கு ஸ்ரீராம நவமி யின் போது வந்திருந்தார். கிட்டு பாடியதைக் கேட்டிருந் தார். இருந்தாலும் பிரபல பக்கவாத்திய வித்வான்களுடன் சமாளித்துப்பாட முடியுமா? அந்தப் பெரிய வித்வான்கள் இந்தச் சிறுபையனுக்கு வாசிக்க ஒப்புக்கொள்வார்களா? என்பதைத்தான் யோசித்தார். பொன்னையா பிள்ளையைப் பார்த்து "பக்கவாத்தியக்காரர்கள் முரட்டு ஜாம்பவான் களாயிற்றே, அவர்கள் ஆமோதிப்பார்களோ என்னவோ?" என்றார்.

பொன்னையா பிள்ளை சொன்னார்; "நீங்கள் பார்த்துச் சொல்லும் பொழுது அவர்கள் மீறிப் பேசுவார்களா என்ன? நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்.

எதற்கும் ஒரு வார்த்தை கேட்டுவிடலாம் என்று, பிடில் வாத்தியக்காரரையும் மிருதங்கக்காரரையும் கூப்பிட்டுக் கேட்டார் பாகவதர். பிடில்காரர், அந்த வாத்தியத்தை இப்படித்தான் கையாளவேண்டும் என்று சொல்லி நிர்த்தாரணம் செய்யும் சக்தி வாய்ந்தவர். அவர், "யாரா யிருந்தால் என்ன? யோக்கியதை யிருந்தால் அரங்கத்திற்கு வரவேண்டியதுதானே, நன்றாகப்போடுங்கள். எனக்கு ஆக்ஷேபணை யில்லை" என்று சொல்லிவிட்டார். மிருதங்கக் காரரும் அந்தக் காலத்தில் பிரதான ஸ்தானம் வகித்தவர் தான். இருந்தாலும் அவருக்கு அகங்காரம் உண்டு. ஆகவே அவரை எல்லோரும் கர்வி என்று சொல்லி வந்தார்கள். கொஞ்சமேனும் தாட்சண்யமின்றி எடுத்தெறிவது போலப் பேசும் குணம் படைத்தவர். அவர் என்ன சொல்வாரோ என்ற சந்தேகம்மட்டும் பாகவதருக்கு உண்டு. இருந்தும் சொல்லிவைத்தார். இதைக் கேட்டதும், மிருதங்கவித்வான் மிகுந்த ஆச்சரிய மடைபவர்போல, முகத்தைச் சுளித்துக் கொண்டார். "அவனுக்கு மேடையிலே உட்காரத் தெரியுமா?" என்றார்.

பாகவதருக்கு அவரைச் சரியானபடி மட்டந்தட்ட வேண்டுமென்று தோன்றியது. "அவனுக்கு உட்காரவும் தெரியும். பக்கவாத்தியக்காரர்களைத் தக்கபடி நடத்தவும் தெரியும்" என்று சொல்லிவைத்தார்.

"அடே அவ்வளவு பெரியவனா அவன்? சரி பார்ப்போம். பாடச்சொல்லுங்கள்" என்றார். அப்படியே கச்சேரி ஏற்பாடாகி விட்டது.

இதற்குள் சபேசய்யருடைய சிஷ்யன் ஒருவன் பெரிய பக்க வாத்தியங்களுடன் பாடப்போவதாக எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. சபேசய்யருக்கு சிறு பையனான ஒரு சிஷ்யன் இருப்பதாகவும், அவனிடம் சாதாரணமாகக் காண முடியாத வித்வத்இருப்பதாகவும் பராபரியாக அனேகருக்குத் தெரிந்திருந்தது. அந்தப் பையன்தான் இன்று பெரிய பக்க வாத்தியங்களுடன் பாடப் போகிறான் என்பதை அறிந்ததும் ஜனங்கள் ஆவலுடன் வந்து கூடினார்கள்.

கிட்டு வந்து மேடை நடுவில் உட்கார்ந்தான். பகவானையும் குருவையும் தியானித்தான். பக்கவாத்தியக்காரர்கள் பெரியவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளும்படி நடந்து கொண்டான். ஆனால், மிருதங்க வித்வான், "இவன் என்ன ஒரு சுண்டைக் காய்ப் பயல். இவன் மறுபடியும் மேடையில் ஏறாதபடி செய்கிறேன் பார்!" என்று சொல்லும் தோரணையில். வெகு அலட்சியமாக, அவனை மதிக்காத தோரணையில் நடந்துகொண்டார். பிடில் வாத்தியக்காரர், 'வித்தைக்கு வயது முக்கியமல்ல' என்று நினைப்பதுபோல், மரியாதையாகவும் வித்தியாசமின்றியும் நடந்துகொண்டார். மிருதங்க வித்வானின் ஒரு அலட்சியம் எல்லோர் கவனத்தையும் இழுக்கும்படியாக வெட்ட வெளிச்சமாக இருந்தது. கிட்டு, "இருக்கட்டும்; பகவான் என்னைக் கைவிடமாட்டார்" என்று நினைத்துக்கொண்டே, 'வாதபி கணபதிம்' என்று ஆரம்பித்தான்.

கூட்டத்திலிருந்த கசமுசப்புச் சப்தம் ஓய்ந்தது. கணீரென்று வந்தது கிட்டுவின் குரல். குளுமையும், மௌனமும் நிறைந்த அந்த இரவிலே, அமிருத தாரையைப்போல பெருகி வந்தது, கிட்டுவின் பாட்டு. இது மனிதன் பாடும் பாட்டா! அல்லது கந்தர்வ கானமா என்று வியப்புறும்படி, கீர்த்தனம், ராகம், நிரவல் ஸ்வரம் எல்லாவற்றிலும் தன் கைவரிசையைக் காட்டிக்கொண்டே வந்தான், பிடில் வித்வான் மெய்மறந்து "பலே, பலே" என்று சொல்லிக்

கொண்டே பிரம்மானந்தத்துடன் வாசித்து வந்தார். பொன்னையா பிள்ளை ஆனந்தக் கண்ணீர் பெருக்கி வந்தார். கந்தசுவாமி பாகவதருக்கு ஒன்றுமே புரியவில்லை. சங்கீத வெள்ளத்தில் மூழ்கித் தத்தளித்தார். மிருதங்க வித்வான் கச்சேரி போகும் தோரணையில் பாடகனுடைய யோக்கியதை யைத் தெரிந்து கொண்டார். "ஏதோ பையன் சாதகம் பண்ணியிருக்கான்" என்ற எண்ணம் உண்டாயிற்று. தாம் லேசாகவும் அலட்சியமாகவும் நினைத்த இடத்தில், போற்றும் படியாக வித்தையிருப்பதில் ஒரு அசூயையும் உண்டாயிற்று. "கொஞ்சம் பதம் பார்க்காவிட்டால் பையன் மிஞ்சினாலும் மிஞ்சி விடுவான்" என்ற எண்ணம் உண்டாயிற்று.

கிட்டு ஒரு கீர்த்தனத்திற்கு ஸ்வரம் பாடிக்கொண்டிருந் தான். அவன் எடுத்துக்கொண்டிருந்த காலப் ப்ரமாணம் எக்கச்சக்கமாகவும் இடைஞ்சலாயுமுள்ளது. மிருதங்க வித் வான் இதுதான் சமயம் என்று யோசித்தார். கிட்டுவை நோக்கி "அம்பி, அதைத் திரிகாலப்படுத்திவிடேன்!" என்றார். அதாவது எடுத்துக்கொண்ட காலத்திற்கு மேல் காலமும் கீழ்க் காலமும் ஸ்வரத்தில் பாடச் சொன்னார்; பிடில்காரர் கந்தசுவாமி பாகவதரைப் பார்த்தார். மிருதங்க வித்வானின் நோக்கம் இருவருக்கும் புரிந்துவிட்டது. இதில் வெற்றிகாண முடியுமா? என்று பயந்ததே அவர்கள் பார்த் துக்கொண்டதற்குக் காரணம். ஆனால் கிட்டு தயங்கவில்லை. கொஞ்சமும் கவலையைக் காட்டிக்கொள்ளாமல், "அதற் கென்ன, பேஷாப் பாடுகிறேன். நீங்களே கேட்கிறபொழுது பாடவேண்டாமா?" என்று சொல்லிவிட்டு, அவர் கேட்டுக் கொண்டபடியே, மேலும், கீழும் லயம் ஒரு துளிக்கூடப் பிசகாமல், ராகச்சாயை பரிபூரணமாக இருக்கும்படியான ஸ்வரக் கோர்வைகளினால் பாடிக்காண்பித்தான். அவன் பாடி முடிந்ததும் பிடில்காரர் அவன் கைகளை அப்படியே கட்டிக் கொண்டார். அவருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஜனங்களின் உற்சாகமும் அப்படியே பொங்கிக்கொண்டு வந்தது. ஆனால், மிருதங்க வித்வான் முகத்தில் மாத்திரம் உற்சாகம் இல்லை. அவர் முகம் 'கடு கடு' வென்றிருந்தது.

கிட்டுவிற்கு ஒரு யோசனை தோன்றியது. "அவர் என் னைப் பரீட்சை பார்த்துவிட்டார். நான் அவரைப் பரீட்சிக் கிறேன்" என்ற எண்ணத்துடன், பல்லவி வரும் பொழுது, காலத்தை மாற்றி அனுலோமம் பிரதிலோமம் செய்து, நடை யின் போக்கில் காலப்ரமாணத்தைக் காட்டாதபடி, ஸ்வரங் களைப்பாடி, மிருதங்கக்காரரைப் பார்த்து "நடக்கட்டுமே" என்றான். கிட்டு கையினால் தாளம் போடாமல் மனதிற்

குள்ளேயே போட்டுக் கொண்டிருந்தான். திடீரென்று சொல்லவும் வித்வான் ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, ஒரு நிமிஷம் சந்தேகத்துடன் தயங்கிவிட்டு, பிறகு சமாளித்துக் கொண்டு வாசிக்க ஆரப்பித்தார். ஒரு திருப்புத் திருப்பித் தாளத்தைப் புரட்டும் பொழுது தாளம் தவறிவிட்டது. வந்து சேரவேண்டிய இடத்துக்கு வரவில்லை. யானைக்கும் அடி சருக்கும் அல்லவா? அதைக் கவனித்து ''பலே'' என்றான் கிட்டு. வித்வானின் சப்த நாடியும் விழுந்துவிட்டது. பிடில் வித்வானும் பாகவதரும் உள்ளூர ரசித்தார்கள். ஆனால் ஒன்றையும் வெளிச்சுக் காட்டிக் கொள்ளவில்லை.

கச்சேரி முடியப்போகும் சமயம். கந்தசுவாமி பாகவதர் எழுந்திருந்தார். மோகனாஸ்திரத்தினால் கட்டுப்பட்டவர் போலத்தான் தோன்றினார் அவர். ''இவன் சாதாரணப் பாடகன் அல்ல. சங்கீத உலகிற்கே புகழைத் தேடிக் கொடுக்கப்போகும் சிரோமணி'' என்ற எண்ணம் திண்ண மாக அவர் மனத்தில் விழுந்துவிட்டது. எழுந்திருந்து பேசினார். ''நீங்கள் இப்பொழுது கேட்ட சங்கீதத்திற்கு நான் உபசாரம் சொல்லப் போனால் அது வெறும் அசம்பா விதமாகும். சங்கீதம் அனுக்ரஹவித்தை. பகவத் அனுக்ர ஹத்தால் இந்தப் பையனுக்கு இப்படிப்பட்ட வித்வத் ஏற்பட்டிருக்கிறது, என்றுதான் சொல்லவேண்டும். என் னிடம் பணம் இருந்தால் கனகாபிஷேகம் செய்திருப்பேன். ஆனால், இப்படிப்பட்ட சங்கீதத்திற்குப் பணத்தை வாரிக் கொட்டிவிட்டால் மாத்திரம் ஈடாகிவிடுமா? முடியாது. உலகத்திலே எல்லாவற்றையும்விட நான் போற்றும் வஸ்து ஒன்று இருக்கிறது. அதை நான் யாருக்குக் கொடுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குப் பாத்தி யதைப்பட்டவனை இன்றுதான் கண்டுபிடித்தேன். அது ஒரு தம்புரா. அதை எனக்கு ஒரு வட தேசத்து சங்கீத வித்வான் கொடுத்தார். அவர் ஒரு சங்கீத யோகி. சங்கீதத்திற் காகவே வாழ்நாளைக் கடத்தியவர். அவர் பாடும்பொழுது, உலகமே அசைவதை நிறுத்திவிட்டு நின்று கேட்கும். அப்படிப்பட்ட பாட்டு. அவர் பாடியதைக் கேட்டுவிட்டு நான் மெய்மறந்து, ''நீங்கள் மகான், பெரியவர்கள். உங்கள் பாட்டுக்கு உலகில் ஈடு ஒன்றுமேயில்லை. சாக்ஷாத் சரஸ் வதியே உங்கள் உள்ளத்திலிருந்து பாடுவது போலிருக்கிறது'' என்று கண்ணீர் விட்டுக் கொண்டே சொன்னேன்.

அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்: ''அப்பனே என்னை அளவுக்குமேல் புகழ்ந்து விடாதே. நம்முடையது

என்று சொல்லிக் கொள்வதற்கு என்ன இருக்கிறது? வித்தையும் நம்முடையது இல்லை. நீ புகழ்ச்சிக்காகச் சொன்னது தான் உண்மை. வாஸ்தவத்தில் நான் பாடவில்லை. சாக்ஷாத் சரஸ்வதி தேவிதான் என் இதயத்தில் புகுந்து கொண்டு பாடுகிறுள்'' என்ருர். அதைக் கேட்டு, அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தேன். அவருடன் கொஞ்சகாலம் இருந்துவிட்டுப் பிரியும் பொழுது, அவர் ஞாபகார்த்தமாக எனக்கு இதைக் கொடுத்தார். நான் எதற்கு இதைச் சொல்லவந்தேன் என்ருல், வித்தைக்கு விநயம் வேண்டும். வித்தை விநயத்தை உண்டு பண்ணுவிட்டால், அது நஷ்டம் தான். நாம் கொண்டாடும் குமரக் கடவுள், பிரும்மாவின் அகந்தையை எப்படிக் குட்டுக் குட்டி அடக்கிஞர் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தப் பையனுக்கு மேலும் மேலும் வித்தையும், விநயமும் வளர்ந்து சிரேயசை அடைந்து, தியாகய்யர் பரம்பரைக்கும், சபேசய்யருக்கும் அழியாத புகழைத் தேடிக்கொடுத்து வரவேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அந்த வடதேசத்துத் தம்புராவை ஆசீர்வாதத்துடன் கிட்டுவுக்கு அளித்தார்.

அகங்காரத்தையும், வித்தையையும், விநயத்தையும் பற்றிச் சொன்னது, தனக்கோ அல்லது மிருதங்க வித்வானுக்கா என்று அவன் விசாரணையில் இறங்கவில்லை. அவன் இயற்கையிலேயே அடக்கமான சுபாவத்தைப் பெற்றவன். இருந்தாலும் வித்தையினுலோ, அல்லது வெற்றியினுலோ, சிறிதேனும் அகங்காரம் பெருதபடி, கந்த சுவாமி பாகவதரின் வார்த்தைகள் அவன் உள்ளத்திலே படிந்தன. பாகவதரை நமஸ்கரித்துவிட்டு, தம்புராவை வாங்கிக்கொண்டான். அவன் கண்கள், உள்ளே யிருக்கும் வித்தையையும் விநயத்தையும் காட்டுவது போல் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

## 14

கிட்டுவின் புகழ் வெகு சீக்கிரத்தில் நாடெங்கும் பரவ ஆரம்பித்தது. சிலர் அவனுடைய சாரீரத்தைப் புகழ்ந்தார்கள். அவனுடைய அபாரமான மனோதர்மத்தைப் புகழ்ந்தார்கள். சுருதி சுத்தத்தைப் புகழ்ந்தார்கள். துல்யமான லயஞானத்தைப் புகழ்ந்தார்கள். ஆனால், எல்லாம் சேர்ந்துதான் கிட்டுவின் சங்கீதத்தை உயர்ந்ததாகச் செய்து கொண்டிருந்தது. சங்கீத உலகிலே ஜாஜ்வல்யமான ஒரு புதிய நட்சத்திரம் உதயமாகி விட்டதாகவே யாவரும் எண்ணினார்கள். சங்கீதத்திற்குப் புதுமையான ஒரு வழியை வகுத்துக் கொடுக்க வந்திருக்கும் புருஷனாகவே எண்ணினார்கள். எங்கு பார்த்தாலும் இவனுடைய கச்சேரியைக் கேட்க, அழைப்புகளை அனுப்பினார்கள். பெரிய சமஸ்தானாதிபதிகள் அவனுடைய சங்கீதத்தைக் கேட்டார்கள்; ஆஸ்தான வித்வானாக்கினார்கள். பெரிய மடாதிபதிகள் தங்கள் மடங்களில் அவனுக்கு ஒரு ஸ்தானம் செய்து கொடுத்தார்கள். பெயரும், புகழும், எல்லாம் தேடிவந்தன கிட்டுவிடம். பிரளயம் போல வந்த கீர்த்தியின் வெள்ளத்தில், அவன் மூழ்கி அமுங்கிவிடவில்லை. அவன் கலையை இழந்து விடவில்லை.

ஒரு சமயம், ஒரு பெரிய மிராசுதார் வீட்டுக் கல்யாணத்தில் கிட்டு பாடுவதாக ஏற்பாடாகி இருந்தது. அந்த மிராசுதார் பீரபலஸ்தர். மிகவும் செல்வாக்குள்ளவர். பதினாயிரக் கணக்கில் செலவு செய்து கல்யாணத்தை நடத்தினார். மற்ற விமரிசைகளைப்போல கிட்டுவின் கச்சேரியும் ஏற்பாடாகியிருந்தது. கிட்டுவின் பாட்டிற்கு அந்தக் காலத்தில் அசாத்திய மவுசு இருந்ததால், அவன் கச்சேரி இல்லாத கல்யாணம் 'பெரிய' கல்யாணம் இல்லை என்ற நிலைமையில் இருந்தது. பெரிய மனிதர் 'பெரிய' கல்யாணம் செய்யும் தோரணையில்தான் கச்சேரி ஏற்பாடு செய்திருந்தார். மற்றபடி அவருக்குச் சங்கீதத்தில் அதிகமான ருசி கிடையாது.

தவிர மனிதரிடம் கெடுபடி அதிகம். பெரிய மனிதத் தாரணையில் 'ஜபர்தஸ்து'க்காரர். 'சிடுசிடு' வென்று

வேலைக்காரர்களிடம் எரிந்து விழுபவர். முன் கோபக்காரருங் கூட. கச்சேரியை மாலை ஆறு மணிக்கு ஏற்பாடு செய்திருந் தார். கச்சேரி முடிந்து சாப்பிட்டு விட்டு, ஊர்வலம் செய்ய வேண்டும் என்பது அவருடைய திட்டம். ஊர்வலத்திற்கு, வாணவேடிக்கைகள் ஆயிரக்கணக்காகச் செலவழித்து ஏற் பாடு செய்திருந்தபடியால், அவருக்கு ஊர்வலத்தைக் குறித்த காலத்தில் விமரிசையாக நடத்தவேண்டும், ஊர் ஜனங்கள் பார்த்துப் பிரமிக்க வேண்டும் என்பது ஆசை. கச்சேரியில் அவருக்கு அதிக நாட்டமில்லை. தன்னைப் போலத்தானே பிறரும் ரசிப்பார்கள் என்று எண்ணி அதில் அதிக சிரத்தை காட்டாது இருந்தார்.

ஆனால் பொதுஜனங்கள் அவரைப்போல இல்லை. பக்கத்துக் கிராமங்களிலிருந்தும், சுற்று வட்டாரங்களிலிருந் தும், ஜனங்கள்வந்து கிட்டுவின் கச்சேரியைக்கேட்கக் குவிந்து கொண்டிருந்தனர். சாயந்திரம் ஆரம்பிக்கப் போகும் கச்சேரிக்கு, மத்தியான முதற்கொண்டே கூட்டம் காத்துக் கிடந்தது. நேரம் ஆக ஆக, ஜனங்களின் உத்வேகம் பெருகிக் கொண்டே வந்தது. பிரதி க்ஷணமும் கிட்டுவின் வருகையை யாவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லோருக்கும் மேல், மிராசுதார் தவித்துக்கொண்டிருந்தார். கச்சேரி குறித்த நேரத்தில் ஆரம்பித்து குறித்த நேரத்தில் முடிந்தால் தானே மற்ற திட்டங்கள் மாறிப்போகாமல் இருக்கும்? மணி ஐந்து ஆயிற்று, ஐந்தேகால் ஆயிற்று, ஐந்தரை, ஆறும் ஆயிற்று. வித்வானைக் காணோம். ஆறரையும் ஆயிற்று. அப்பொழுதும் வரவில்லை. ஜனங்கள் பொறுமை இழப்பது தெரிந்தது. அதற்குமேல், தனவந்தரும் பொறுமையிழந் தார். அவர்முகம் கடுகடு என்று எள்ளும் கொள்ளும்வெடிப்ப தாக இருந்தது. வித்வான் தங்கியிருக்கும் ஜாகைக்கு ஆளனுப்பினார், அங்கு அவர் இல்லை. எங்கே போய்விட்டார் திடீரென்று? மிராசுதாருக்கு அந்த வித்வான்மேல் அள விறந்த ஆத்திரம் உண்டாயிற்று. "என்ன திமிரய்யா இந்தப் பேர்வழிக்கு! இவ்வளவு பேர் காத்துக்கொண்டிருக் கோம் அவன் பாட்டுக்கு எங்கோ போய்விட்டானே! யோக்கி யதை நன்றாயிருக்கு!" என்று வைதுகொண்டிருந்தார். இதற் குள் ஒருவன் வந்து, கிட்டு ஆற்றங்கரையில் சந்தியா வந்தனம் செய்துகொண்டிருப்பதாகச் சொன்னான். பிரபு சொன்னார்: "பாக்கி சந்தியா வந்தனத்தை நாளைக்குச் செய்துகொள்ளலாம். சீக்கிரம் வரச்சொல்லு" என்று ஆளை அனுப்பினார்.

கிட்டு, இந்தச் சமாசாரங்கள் ஒன்றும் தெரியாமல் அவன் பாட்டில் சத்தியா வந்தனம் செய்து கொண்டிருந் தான். சபேசய்யருடைய உபதேசத்தால், அவன் நியமங்கள் ஒன்றையும் தவற விடுவதில்லே. எது எக்கேடு கெட்டாலும் அவனுடைய நியமங்கள் ஒன்றையும் தவற விடுவதில்லே. முக்கால் வாசி முடிந்து கொண்டிருக்கும் சமயம். ஒருவன் ஓடிவந்து, ''எஜமான் உங்களேச் சீக்கிரம் கூட்டிக்கொண்டு வரச்சொல்ருங்க. நேரமாயிடுத்தாம்'' என்று விண்ணப் பித்துக் கொண்டான். கிட்டு பதில் சொல்லாமல். கையை ஆட்டி சமிக்ஞை செய்து இருக்கச் சொன்ஞன். வித்வானேக் கூடக் கூட்டிக்கொண்டு வராவிட்டால், எஜமானன் தலையை வாங்கிவிடுவார் என்ற பயத்தில், வந்தவனும் ஜபம் முடியு மட்டும் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஜபம் முடிந்தது; கச்சேரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த கிட்டு, வந்த ஆளேப்பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்ஞன்: ''ஏனப்பா, ரூபாயைக் கொடுக்கும் எஜமானனுக்குச் சிறிது நேரமாகும் பொழுது, இவ்வளவு கோபம் வருகிறதே, எனக்கு உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் கொடுத் திருக்கும் பகவானுக்கு நேரப்படி கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் போனுல் அவருக்குக் கோபம் வராதா?'' என்ருன். ஆனுல் அந்தப் பிரபுவின் ஆளுக்கு இதை வாங்கிப் புரிந்துகொள்ளும் சக்தி இல்லே. வித்வானே எவ்வளவு சீக்கி ரத்தில் எஜமானிடம் சேர்க்க முடியும் என்பதே யோசனையா யிருந்தது அவனுக்கு.

மணிக்கணக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஜனங்கள் பொறுமை இழந்து கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் ஒருவர், வித்வான் வரவில்லே என்ருர். வேறு ஒருவர் அவருக் குத் திடீரென்று உடம்புக்கு வந்துவிட்டது என்ருர். இப்படிப் பலவிதமாகப் பேசிக்கொண்டு கச்சேரி ஆரம் பிக்காததன் காரணத்தை அறிய முயன்று கொண்டிருந் தார்கள்.

தனவந்தர் எள்ளுருண்டை மாதிரி குதித்துக்கொண் டிருந்தார். இரண்டு ஜில்லா அதிகாரிகள் வேறு கச்சேரிக் காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். வித்வானே அப்படியே நரசிம்மமூர்த்தியைப் போலக் கிழித்து எறிந்து விடலாமா என்று தோன்றியது அவருக்கு. வழிமேல் வழிவைத்துத் தத்தளித்துக் கொண்டிருதார்.

கிட்டு வாசல்பக்கம் வந்ததுதான் தாமதம். அவர் உள் ளடக்கி வைத்துக்கொண்டிருந்த கோபமெல்லாம் பொங்கி

எழுந்து வந்தது. முகமெல்லாம் கோவைழப்பழம் போலச் சிவந்தது. ஓடோடியும் வந்தார். கிட்டுவிற்கு முன்னால் நின்று கொண்டார் "ஏன் ஐயா, நீர் என்ன சங்கீதக் கச்சேரிக்கு வந்தீரா? அல்லது சந்தர்ப்பணம் பண்ணிவைக்க வந்தீரா? பெரிய மனிதர்கள், அதிகாரிகள் எல்லாரும் மணிக்கணக் காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீர் சாவகாசமாக சந்தியா வந்தனம் செய்து கொண்டிருக்கிறீரே! நீர் கேட்ட ரூபாயை நான் கொடுத்திருக்கிறேன் இல்லையா? நான் சொல்லும் நேரத்தில் நீர் பாடவேண்டாமா? வேறு யாராவ தாயிருந்தால் அவன் தோலை உரித்திருப்பேன்!'' என்று மளமளவென்று பேசிவிட்டார்.

கிட்டுவின் தலை சுற்றியது. இது என்ன கனவா நினைவா? தன்னையா இப்படிக் கேட்கிறான் ஒரு மனிதன்! சங்கீதத்தின் அரியாசனத்தில் அமர்ந்துகொண்டிருந்த தன்னையா ஒரு மூர்க் கன் இப்படிக் கேட்கிறான்! உலகம் போற்றும் உத்தமர் பரம் பரையில்வந்த தன்னையா இப்பணம் பிடித்த வெறியன் இப்படிப் பேசுகிறான்! பகவானுக்குத் தன் கடமையைச் செய்துவிட்டு வரும் தன்னையா இப்படி இந்த அற்பன் கேட் கிறான்! அவன் உடல் எல்லாம் வெடவெடத்தது. அங்கம் பதறியது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ஒரு வாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு பேச ஆரம்பித்தான். நாக்கில் வார்த்தை புரளவில்லை. "ஐயா, நீர் ஒரு தூர்த்தன். உமக்குத் தராதரம் தெரியாது. நீர் ரூபாய் கொடுத்து என்னையே வாங்கிவிடவில்லை. நான் பணத்தைத் திருப்பித் தந்துவிடுகிறேன் நான் பாடமுடியாது. உன்னைப் போன்ற வர்கள் முன்னிலையில் பாடுவதே மகாபாவம்!'' என்று சொல்லிவிட்டு விருட்டென்று ஜாகையை நோக்கி நடையைக் கட்டிவிட்டான்.

பிரபு இதை எதிர்பார்க்கவில்லை. அவருக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. அவரை எதிர்த்து நின்றவர் ஒருவருமில்லை. கிட்டு செய்தது அவருக்கு ஒரு அதிர்ச்சியை உண்டு பண்ணியது. வந்திருக்கும் பெரிய மனிதர்கள் என்ன நினைப்பார்கள்? கூட்டத்தை எப்படிச் சமாளிப்பது? அதிகாரிகளுக்கு என்ன பதில் சொல்வது? இந்த சமயத்தில் ஒருவர் வந்தார். அவர்தான் கந்தசாமி பாகவதர். அவரும் கல்யாணத்துக்கு வந்தவர்தான். விஷயத்தை அறிந்துகொண்டு, கிட்டுவின் ஜாகைக்குப் போனார்.

கிட்டு, சுற்றிவைத்திருந்த படுக்கையில் தலையை வைத்து மறைத்துக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தான். உலகத்தைக் கண்டு அருவருப்புக் கொள்வதுபோல் முகத்தை மறைத்துக் கொண்டிருந்தான். கந்தசாமி பாகவதர் அவன் பக்கத்தில் போய் அவன் கையைத் தொட்டார். அவன் திரும்பாமலேயே, "என்னைத் தொந்தரவு செய்யாதேயுங்கள்!" என்ருன்.

"நான்தாண்டா" என்ருர்.

அவர் குரலைக் கேட்டுவிட்டு, மரியாதையைக் காட்டும் தோரணையில் எழுந்திருந்தான் கிட்டு.

"அப்பா, நீ சிறுபிள்ளை; அனுபவம் போதவில்லை. கோபம் வருகிறது. நாலுபேரோடு பழகுகிறவர்கள் நாம். ஒருவர் மாதிரி ஒருவர் இருப்பார்களா? எல்லாவற்றையும் தான் அனுசரித்துப் போகவேணும். நீ வருத்தப்படாதே. வந்து பாடு. உலகம் பல தினுசல்லவா!" என்ருர்.

"இந்த 'மிருக'த்திற்காக நான் பாடப்போவதில்லை மாமா. என்னைத் தயவு செய்து வற்புறுத்தாதேயுங்கள்" என்ருன்.

"அப்பா, நீ பால்யம். உணர்ச்சி வேகத்தில் பேசுகிருய். பணம்தான் அவனுடையது. நீ பாடும் பாட்டு அவனுக்கு அல்ல. எங்கெங்கிருந்தோ ஏராளமான ஜனங்கள் உன் பாட்டைக் கேட்க வந்திருக்கிருர்கள். அவர்களுக்குத்தான் நீ பாடப் போகிருய்" என்ருர்.

கிட்டு ஒரு நிமிஷம் யோசனையில் ஆழ்ந்தான்.

"எங்கேயாவது ஒரு மூலையில், அழுக்கு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு ஒரு பரம ரஸிகன் உட்கார்ந்திருப்பான். நீ பாடும் பாட்டைக் கேட்டுவிட்டு, ஆத்மானந்தத்திஞல் உன்னை மனப்பூர்வமாக ஆசீர்வதிப்பான். அதுதான் நீ கற்ற வித்தையின் பலன். கோபத்திஞல் அதைக் கெடுத்துக் கொள்ளாதே. ஒருவருடைய கோபத்திற்காக ஆயிரக் கணக்கான ஜனங்களை ஏமாற்றி வருத்தக்கூடாது" என்ருர்.

"நீங்கள், நான் பாடுவதுதான் நியாயம் என்கிறீர்களா?" என்று கேட்டான்.

"சந்தேகமில்லாமல்" என்ருர் கந்தசாமி பாகவதர்.

"சரி கிளம்புங்கள்" என்று அவரையும் கூட்டிக் கொண்டு, கிட்டு வந்துவிட்டான் கல்யாண வீட்டிற்கு.

அன்று கச்சேரி அமோகமாக நடந்தது. ஜனங்கள் எல்லாரும் ஆரவாரித்தனர். ஜனங்களின் உற்சாகத்தையும் கிட்டுவின் பாட்டையும் கண்டு பிரபுவுக்கு ஆனந்தம் தாங்க வில்லை. அவர் முன்கோபக்காரர். அவரிடம் வேறு தோஷம் ஒன்றும் கிடையாது. சூது வாதும் தெரியாது. கச்சேரி முடிந்ததும் கிட்டுவைப் பார்த்து அவர் சொன்னார்: "என்னை மன்னித்துவிடுங்கள். எனக்கு முன்கோபம் அதிகம். கோபத் திலே தாறுமாருகப் பேசிவிடுவேன். என் குணம் என்னைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும்" என்ருர்.

"நானும் தெரிந்து கொண்டேன். எனக்கு ஒரு பாடம் நன்ருகக் கற்பித்தீர்கள்" என்று சொல்லிவிட்டு ஜாகைக்கு வந்தான் கந்தசாமி பாகவதருடன். வரும்பொழுது அவரிடம் சொன்ஞன்: "நான் ஒப்புக்குச் சொல்லவில்லை. வாஸ்தவத் திலேயே எனக்கு நல்ல பாடம் கற்பித்தார் அந்தப் புண்ணிய வான். பணம் மனிதனுடைய தன்மையையே அடிமை கொண்டு விடுகிறது. நான் என் கை நீட்டிப் பணம் வாங்கிய தால்தானே அவன் என்னை அப்படிக் கேட்டான்? அதற்கு வேண்டியதுதான் இந்தத் தண்டனை. சங்கீதம் விலைக்கு வாங்கக்கூடிய பொருள் இல்லை என்பதை ஜனங்கள் அறிய வேண்டும். சங்கீதத்தைப் பக்தியுடன் கேட்கவேண்டும். அப்படிப்பட்ட இடத்தில்தான் நான் இனிப் பாடப் போகிறேன். பணத்திற்குப் பாடும் வழக்கம் இன்ருேடு தொலைந்தது" என்ருன்.

கந்தசாமி பாகவதர் ஆச்சரியத்தால் திடுக்கிட்டார்: "அது சரிதான் அப்பா, நீ சொல்வது சரி, நியாயம். ஆனுல், நடை முறைக்குத் தகுந்தவாறு நடந்துகொள்ள வேண்டும். லட்சியத்தையும் வாழ்க்கையையும் ஒன்ருகுமாறு வகுத்துக் கொள்ள வேண்டும். அதுதான் அழகு" என்ருர்.

"என்னமோ? எது எப்படியாஞலும் சரி, இனி இப்படித் தான். எனக்குச் சமஸ்தானங்களிலிருந்தும், மடங்களிலிருந் தும் சன்மானம் வருகிறது. அதுபோதும். எப்படியோ சமாளித்துக்கொண்டால் போகிறது" என்ருன்.

கந்தசாமி பாகவதர் பதில் சொல்லவில்லை. அவன் சொன்னதைச் செய்வானே என்ற பயத்திலே, அவன் வாழ்க்கையைப் பற்றிக் கவலை கொண்டபடியே நடந்து வந்து கொண்டிருந்தார்.

# 15

கிட்டுவின் புகழ் காலத்துடன் வளர்ந்து கொண்டிருந்தது. காலம் ஒரு மாயாவி. தான் இருப்பதைக் காட்டிக் கொள்ளாமல் எல்லாவற்றிலும் புகுந்துகொண்டு தன் வேலையைக் கிரமம் தப்பாமல் செய்யும் சக்திதான் காலம். பார்க்கப் போனுல் காலம் என்ற சக்திக்குள்தான் பிரபஞ்சம் முழுவதும் அடங்கிக் கிடக்கிறது. நேற்று மொக்காகயிருந்ததை இன்று மலர வைக்கிறது காலம். இன்று பிஞ்சாக இருப்பதை நாளை காயாகமாற்றுவது காலம். அழித்தல் சக்தியாக இருக்கும் காலதேவனின் ஓர் உருவத்தைத்தான் யாவரும் அறிவார்கள். ஆனுல், அதே காலதேவன் எப்படிப் பிரபஞ்சத்தையே உருவாக்கினுன் என்பதை உணர முடிவதில்லை. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் மூன்றையும் செய்கிறுன் காலதேவன். ஆக்கலும் காத்தலும் அழித்தலும் அவனுடைய அலகிலா விளையாட்டு.

இந்த விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் காலதேவன் சோம்பேறியில்லை. அவனைப்போலத் தன் கடமையை நிறைவேற்றும் தொழிலாளியும் கிடையாது. மனிதன் தூங்குகிறுன் என்பதற்காகச் சூரியன் நின்றுவிடுகிறுனு? சங்கீத வித்வான் தாளம் தவறியதற்காகக் காலப் பிரமாணம் நின்று போய்விடுகிறதா? ஆற்று வெள்ளத்தைப்போல வாழ்க்கைக்கு வளர்ச்சியையும், விருத்தியையும் ஓயாமல் கொடுத்து வளர்த்துக்கொண்டேவரும் அற்புத சக்தியே காலம்.

ஆனுலும், ஆதியும் அந்தமுமில்லாது, ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கும் காலத்தைக் கைக்குள் அடக்க மனிதன் செய்யும் முயற்சிதான் தாளம். எல்லையற்ற காலத்தையும் செவிக்கு உட்படாத நாதத்தையும் கட்டுப்படுத்தி அந்தச் சேர்க்கையில் ஜனித்தது தான் சங்கீதம். காலமும் வெளியும் விளையாடும் விளையாட்டில் விளைவதுதான் இப்பிரபஞ்சம். ஆகவே, காலம் என்ற ஒரு மகா சக்திதான், வாழ்க்கை, பிரபஞ்சம், சங்கீதம் முதலிய எல்லாவற்றிலும் கலந்து பிரும்மத்தின் தோற்றமாக நிற்கிறது.

எல்லாவற்றையும் மாற்றிக் கொண்டே போகும் சக்தி வாய்ந்த காலம், நீலாம்பாளையும் ஒரு யுவதியாக்கி விட்டது. சிறு பெண்ணாக, விவரம் தெரியாமல் இருந்த நீலாம்பாள் இப்பொழுது நன்றாகப் புஷ்பித்து நிற்கும் மலர்க் கொடியைப் போல இளமை ததும்ப நின்றாள். அது போலவே சிறுவனாக இருந்த கிட்டுவும் ஆண் மகனாக நின்றான்.

நீலாம்பாள் பெரியவளாகி விட்டபடியால், தருமாம்பாள் கிட்டுவிடம் அவளை ஒப்புவிக்க ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்து விட்டாள். அதன்படி, ஒரு நல்ல நாள் பார்த்து, செய்ய வேண்டிய முறைப்படி, இயன்ற சீர் வரிசைகளுடன் நீலாவைக் கிட்டுவிடம் கொண்டு வந்து ஒப்புவித்தாள்.

வித்தையிலேயே குறியாயிருந்த கிட்டுவிற்கு இதுவரையில் வேறு விஷயங்களில் புத்தி செல்லவேயில்லை. கருத்து முழுவதும் சங்கீதத்திற்குள் புகுந்து நாத மயமான சாகரத்தில் முழுகி விளையாடிக்கொண்டு இருந்தபடியால் அவனுக்கு வேறு சிந்தனைகள் எழவில்லை. ஆனால், காலம் சரீரத்தை மாற்றும் பொழுது மனிதனின் சித்தப்போக்கையும் மாற்றத் தானே செய்கிறது. சிறு பையனாக விருந்த கிட்டு, எப்பொழுது வாலிபம் மிகுந்த யுவனாக ஆனானோ, அப்பொழுதே காலம் அவன் பார்வையில் ஒரு மாய மையைத் தீட்டிவிட்டது போலும். அன்று அவன் கண்ட நீலாம்பாள் அதற்கு முன்பு அவன் பார்த்த நீலாம்பாளாக இருக்கவில்லை. அவனுடைய நெஞ்சிலே புகுந்து கொண்டு ஆட்சி புரியப் போகும் நீலாவாகத் தோன்றினாள்.

சிற்சில சமயங்களில் அவன் வேதனைப்பட்டதுண்டு: "நான் வித்தையைத் தேடிக் கொண்டேன். புகழும் பகவான் அனுக்ரகத்தால் என்னைத் தேடி வந்துகொண்டிருக்கிறது. இருந்தும், என்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் பங்கெடுத்துக்கொள்ள ஒருவரும் இல்லையே! நான் அனாதை. நான் அனாதை" என்று சொல்லிக்கொள்வான். தான் மணந்து கொண்டிருக்கும் நீலா தன்னுடைய சுக துக்கங்களையும்தான் மணந்து கொண்டிருக்கிறாள் என்பது அவன் சிந்தனைக்குள் வரவேயில்லை.

ஆனால் அன்று, "நீ அனாதையில்லை. உன்னுடைய இதயத்தை நிரப்புவதற்கு ஒருத்தி இருக்கிறாள்; அவளை இதோ பார்!" என்று காலதேவன் நீலாவை அவனிடம் கொண்டு வந்து நிறுத்தியது போலத்தான் தோன்றினாள் அவள்.

தான் பிறர் இதயத்தில் வீற்றிருப்பதைப்பற்றி ஒருவரும் அக்கறை கொள்வதில்லை. தன் இதயத்தை நிரப்புவதற்கு மனிதன் வஸ்துவைத் தேடுகிருன். ஆணுக்குப் பெண்ணுக வும், பக்தனுக்குக் கடவுளாகவும், விஞ்ஞானிக்கு உண்மை யாகவும் அது எத்தனையோ உருவத்தில் தோன்றலாம். அதைப்போலவேதான், அன்று கிட்டு, பிரேமை ததும்பும் கண்களுடன் நீலாவைப் பார்த்தபொழுது, ''எத்தனை நாட் களாக நான் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லுவதுபோல இருந்தது. அவளுக்கும் அவனுக் கும் நடுவேயிருந்த காலத்தை உறிஞ்சி வற்ற அடிப்பதுபோல இருந்தது.

எத்தனை நாட்கள் என்று அவன் நினைத்தற்கு எத்தனை யுகங்கள் என்றும் அர்த்தம் செய்துகொள்ளலாம். ஏனென் ருல், காலதேவனின் கணக்கிலடங்காத கர்ப்பத்தில் ஒருவன் எத்தனை தரம் பிறக்கிருன். எத்தனைதரம் மணம்செய்து கொள்கிருன், எத்தனை தரம் மடிகிருன் என்பது ஒரு கணக்கி லும் சிக்காதது. வாழ்வின் சகல வைபோகங்களையும் ஜீவன் அனுபவித்தே மறைந்து மறுபடியும் பிறக்கிறது. ஆகவே கிட்டு எத்தனை நாட்களாகப் பிரிந்திருந்தேனே என்று நினைத்த கேள்வி, ஜன்மாந்தரங்களில் பிரிந்திருக்கும் ஒரு வேதனையையும் குறிக்கலாம். அற்பமான ஞாபகத்தையும், சுவல்பமான ஞானத்தையுங் கொண்ட மனிதன், ஜன்மாந் தரங்களுக்கு மீறிய உண்மையை அறிய முடியாது. ஆனல் தன்னுடைய சாயலில் சகலத்தையும் சிருஷ்டித்து விளையாடிக் கொண்டிருக்கும் காலதேவன் அதை அறிவான். மனிதன் அன்ருடம் அனுபவிக்கும் சிறு அனுபவங்களும், காலத்தை யும் வெளியையும் மீறி நிற்கும் அனுபவங்களுக்குச் சாட்சி யாகும் முத்திரைகளாக நிற்கின்றன என்பதையும் அறிவான்.

# 16

ஆனால் நீலாவுடன் வாழ்க்கைச் சகடத்தை ஓட்ட ஆரம்பித்த கிட்டு, வாழ்க்கையை இன்பக்கனவாகவோ, ஒரு காவிய உலகமாகவோ காணவில்லை. வாழ்க்கையைக் கனவு உலகமாக்க, வாழ்க்கையின் சூழ் நிலையிலிருந்து விடுவிக்கும் ஓர் இந்திர ஜால வித்தை இல்லாமலில்லை. ஆனால், அந்த வித்தையை யாவரும் அறிந்து கொள்வதில்லை. வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களும் கிட்டுவிற்கு அந்த ஜால வித்தையைப் போதிக்க ஆரம்பித்தன. வாழ்க்கையில் அவனுடன் பிணைக்கப்பட்ட நீலாவின் தன்மையோ வேறு தினுசாயிருந்தது. தனக்கும், தனக்கு மனைவியாக வந்திருக்கும் நீலாவிற்கும் உள்ள வேற்றுமைகளை நாளுக்கு நாள் புதுப்புது உருவத்தில் கிட்டு கண்டு கொள்ள ஆரம்பித்தான்.

கிட்டு வறுமையில் பிறந்து வளர்ந்தவன். 'தான்,' 'தனது' என்று ஒன்றையும் சொல்லிக் கொள்ள வசதியில்லாமலே வாழ்க்கையைக் கடத்தியவன். வறுமையின் பல உருவங்களைப் பார்த்து அனுபவித்தவன். அகங்காரத்தின் அழல் தன்னைப் பிடிக்காமல் காப்பாற்றிக் கொண்டவன். அடக்கமான சுபாவத்தைக்கொண்டவன். தன்னலம் என்பதை அறியாத மனப் பண்பைப் போற்றி வளர்த்தவன்.

ஆனால் நீலாவோ விருப்பு வெறுப்புகளைக் கொண்ட சாதாரணப் பெண். அவளும் வறுமையில் வளர்ந்தவள் தான். அந்த அனுபவமே, செல்வத்தை அடைய வேண்டும் என்ற ஆசையை அவள் மனத்தில் விதைத்திருந்தது. லோக விஷயமான வாழ்வில் எல்லா அம்சங்களையும் அடைய வேண்டுமென்ற ஆசை அவள் உள்ளத்தில் புதைந்து கிடந்தது.

கிட்டுவின் மனத்தை நிரப்புவதற்கு நாத வித்தை இருந்தது. நீலாவிற்கு வாழ்க்கையை இன்பமயமாக்க வேண்டும் என்ற கனவுகள் இருந்தன. பாரமார்த்திகமான நாத

யோகத்தில் ஈடுபட்ட கிட்டுவிற்கு, ஒரு விதத்தில் உள்ளத் துறவிற்கு வேண்டிய மனப்பக்குவம் அஸ்திவாரத்தில் இருந்தது. நீலாவின் இதயத்தில் வாழ்வின் மாயமான மோகனக் கனவுகளை இழுத்துப் போட்டுப் பிடிக்கும் ஒரு தூண்டில் இருந்தது. இந்த குணவேற்றுமைகள் நாளுக்கு நாள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரிதாகி விழுதுவிட்டு வேரூன்றிப் பரவ ஆரம்பித்து விட்டது.

முதன் முதலாக, ஒரு சிறு விஷயத்தில் அது ஆரம்பமாயிற்று. நீலாவின் அம்மான் பிள்ளை, அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தான். குடித்தனம் ஆரம்பித்த புதிது. தன் பிறந்த வீட்டிலிருந்து வந்ததை உத்தேசித்து, விருந்து வைக்க விரும்பினாள். பாயசம் வைத்து, வடை தட்டி, சமையல் எல்லாம் விமரிசையாகச் செய்து முடித்தாள். அம்மான் பிள்ளை குளிப்பதற்காகக் கொல்லைப் பக்கம் போயிருந்தாள். அப்பொழுதுதான் நீலாவிற்கு வாழை இலை இல்லை என்பது ஞாபகம் வந்தது. கிட்டுவும், நீலாவும் பூவரசு இலையைத் தைத்துப் போட்டுக் கொள்வது வழக்கம். கொல்லையில் ஒரு பெரிய அரசமரம் இருந்தது. தினம் கிட்டு இலையைப் பறித்துத்தைத்துக்கொடுத்து விடுவான். அதைத்தான் உபயோகப்படுத்துவது வழக்கம். ஆனால் இன்று விருந்துக்கு வாழை இலை இல்லாது போனால் விருந்து பூர்த்தியில்லை என்று நினைத்தாள் நீலா.

கூடத்தில் உட்கார்ந்திருக்கும் கிட்டுவை ஜாடையாகக் கூப்பிட்டாள். கிட்டு வந்தான்.

"இலை இல்லையே" என்றாள்.

"இதோ இன்னும் இரண்டு தைத்து விடுகிறேன்" என்று அரசமரத்தை நோக்கினான் கிட்டு.

"இல்லை. தையல் இலை வேண்டாம். வாழை இலை வாங்கி வாருங்கள்" என்றாள்.

தலையைத் தடவிக்கொண்டு யோசனை செய்தான் கிட்டு. "ஏன், தையல் இலை போதாதோ?" என்றான்.

"நன்றாயிருக்கு! முதல் தடவை வந்திருக்கார். வடை, பாயசம் வைத்து விருந்துபண்ணி யிருக்கேன். வாழை இலை இல்லாமே போட்டால் நன்றாயிருக்குமா?"

"நாம் அதிலேதானே தினமும் சாப்பிடுகிறோம்?"

"நாம் சாப்பிடலாம், ஆனால், என்னிக்கோ வரவாளுக்கு மரியாதை செய்தால்தானே நம்மை மதிப்பா?"

''அப்போ நம்மைவிட வாழை இலைக்குத்தான் மதிப்பு என்று சொல்லு.''

''நமக்கு மதிப்பு உண்டு. ஆனாலும் வந்தவாளை உபசரிக்க அது மரியாதை இல்லை. ஒரு வேளைச் சாப்பாட்டிற்கு வாழை இலை இல்லை என்று சொல்ல மாட்டார்களா?''

''அப்படிச் சொல்லுகிறவர்களா யிருந்தால், அவர்களுக்கு மரியாதை செய்வதே தப்பு.''

''இந்த விதண்டா வாதமெல்லாம் எனக்குத் தெரியாது. வாழை இலை வேண்டும்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள் நீலா.

கிட்டுவிற்கு வந்த அதிதியை அவமரியாதை செய்ய வேண்டுமென்ற நோக்கமில்லை. ஆனாலும் வெளிப்பகட்டுக்காகவும் ஜம்பத்திற்காகவும் காரியங்களைச் செய்து போலி கௌரவத்தை அடைய அவன் விரும்பவில்லை. வாழை இலையைக் கொடுத்துத்தான் கௌரவத்தை விலைக்கு வாங்க வேண்டும் என்றால் அதற்கு அவன் தயாராயில்லை. வாழை இலை வாங்கப் போகாமலேயே பேசாமல் இருந்து விட்டான். அம்மாஞ்சி குளித்துவிட்டு வந்தவுடன் கிட்டுவும் குளிக்கப் போனான். குளித்துவிட்டு அனுஷ்டானாதிகளை முடித்து வருவதற்கும், சாப்பிடும் நேரம் நெருங்குவதற்கும் சரியாயிருந்தது. இலையைப் போடச் சொல்லிவிட்டு, அம்மாஞ்சியை அழைத்துவர வாசற் பக்கம் போனான்.

உள்ளே வந்து பார்க்கும் போது இலை போட்டுப் பரிமாறியிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவனுக்குத் திகைப்பும், ஆத்திரமும்தான் ஏற்பட்டது. இரண்டு தலை வாழை இலை போட்டு தம்ளரில் ஜலம் எடுத்து வைத்திருந்தாள் நீலா. அவள் முகத்தில் ஒரு குறும்பான வெற்றிப் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

கிட்டுவின் முகத்தில் அதிருப்தி தோன்றியது. பேசாமல் உட்கார்ந்தான். பக்கத்தில் விருந்தாளியும் உட்கார்ந்தார். இருவரும் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கிட்டுவிற்கு விருந்து ருசிக்கவேயில்லை. ஏதோ சிரத்தையில்லாமல் சாப்பிட்டான். அவள் பிடிவாதத்தை நிறைவேற்றி விட்டாளே என்ற ஆத்திரம் வேறு பொருமிக்கொண்டு வந்தது. வந்த அதிதியின்முன் கோபத்தைக் காட்டிக்

கொள்ளவும் முடியவில்லை. ஒரு தினுசாக சாப்பிட்டுவிட்டு எழுந்திருந்தனர். இதைப்பற்றி உடனுக்குடனேயே அவளுடன் பேசி அவளைக் கண்டிக்க வேண்டுமென்று அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

விருந்தாளி, வெற்றிலை போட்டுக் கொண்டு வாசற் பக்கம் போய்த் திண்ணையில் சாய்ந்து கொண்டார். இது தான் சமயம் என்று உள்ளே வந்தான் கிட்டு. தன் கோபத்தைக் காட்டும் தோரணையிலும், இருந்தாலும் வாசற் பக்கம் இருக்கும் விருந்தாளியின் காதில் விழாத படியும் ''நீலா இங்கே வா'' என்று கூப்பிட்டான். எதற்கும் தயார் செய்து கொண்டு நீலா வந்தாள்.

''வாழை இலை ஏது?''

''எதிராளாத்தில் கடன் வாங்கி வந்தேன்.''

''ஏன் கடன் வாங்கினுய்?''

''நீங்கள் வாங்கி வரும் வழியைக்காணேம், அதனுல் தான்!''

''சரி. வீட்டிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் கடன் வாங்கக் கூடாது என்று நான்தான் கண்டிப்பாகச் சொல்லி யிருக்கேனே; ஏன் வாங்கி வந்தாய்?''

''அதெல்லாம் நித்தியப்படிக்கி சரி; ஆனு விசேஷ நாட்களிலே அதையெல்லாம் பார்த்தால் நடக்குமா? உலகத்திற்குத் தகுந்தாப்போல் நடந்துதானே ஆகவேண்டும்! நாலு பேர் செய்கிறபடி செய்துதானே ஆகவேண்டும்?''

''அப்பொழுது எனக்கில்லாத குடும்ப கௌரவம்உனக்கு எங்கிருந்து வந்தது?''

''உங்களுக்கென்ன! எல்லோரும் என்னைத்தானே ஏசுவார்கள்?'' என்ருள். கிட்டுவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தனக்கு முன்னுல் நின்றுகொண்டிருக்கும் நீலா ஒரு வலுத்த பேர்வழி என்பதைமாத்திரம் தெரிந்து கொண்டான். இருந்தாலும் அவள் சொல்வதிலும் ஓர் அளவு நியாயம் இருக்கிறது போலவும் தோன்றியது. ஆனுல், அவளுடைய பிடிவாதத்தையும் வீம்பையும் வளரவிடாமல் செய்யவேண்டு மென்ற எண்ணமும் கூடவே எழுந்தது.

"இதோபார் நீலா, இனிமேல் என்னைக் கேட்காமல் இது மாதிரிக் காரியங்கள் செய்யக்கூடாது. செய்தால்..." என்று கோபத்தைக் காட்டும் முகத்துடன் ஏதோ சொல்லவந்தான். ஆனால், அவளுக்கு என்ன தண்டனை விதிப்பது என்றுதான் அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆகவே, 'செய்தால் என்ன தண்டனை விதித்திடுவேன் தெரியுமா!' என்று பய முறுத்தும் தோரணையில், தண்டனையைப்பற்றி யோசித்துக் கொண்டே வாசற்பக்கம் சென்றான்.

# 17

உலகத்தில், பார்க்கப்போனல், மனிதனுடைய தன்மை அவன் கையிலிருக்கும் பணத்தைப் பொறுத்ததாகத்தான் இருக்கிறது. ஏழையின் சொல் மாத்திரம் அம்பலம் ஏற முடியாமல் இருப்பதில்லை; ஏழையே அம்பலத்திற்கு வர முடிகிறதில்லை. உலகின் செலாவணியில் இருப்பது ஒன்றுதான்! அதுவே பணம்.

கிட்டு, அந்தச் சபதத்தை மேற்கொண்டதிலிருந்து, வரும்படி வரும் கச்சேரிகளுக்குப் போவது கிடையாது. நாதத்தையும் பொருளையும் எடைபோட்டுப் பேரம் செய்வதில்லை. அவன் தீர்மானித்ததன் பலனுக, அவனிடம் நாதம் என்னவோ தங்கி நின்றது. ஆனல், பொருளையும் அதனல் அடையக்கூடிய சௌகரியங்களையும் அவன் தியாகம் செய்யத்தான் வேண்டியிருந்தது. இளமையிலும், குடும்பத்தின் முதற் படியிலுமிருக்கும் கிட்டுவையும் அவன் மனைவியையும், இதன் விளைவுகள் பலத்த சோதனைகளுக்குள்ளாக்கின. ஆனல், ஆசையைப் படரவிடும் இளமனைவியும், ஆசையை அடக்கி ஆளமுயலும் திடசித்தம் கொண்ட புருஷனும், வறுமை உண்டு பண்ணிக்கொண்டே யிருக்கும் சோதனைகளில் வெற்றி பெற முயல்வது ஓர் அரிய சாதனைதான்.

இந்தப் பரீட்சைகளினல், வர வர, ஏதாவதொரு காரணத்தை முன்னிட்டு, இருவரும் வாக்குவாதம் செய்வது என்பது சகஜமாகிக் கொண்டு வந்தது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக் கொள்ளவும் முயலவில்லை; ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும் முயலவில்லை. அப்படி முயன்ருலும் சமரசத்திற்கு வருவது என்பதும் நடவாத காரியமாயிருந்தது.

கிட்டுவின் தம்பூராவின் சுரைக்காய் உடைந்துபோயிருந்தது. அதற்கு வேறு சுரைக்காய் போடுவதற்கும், வேறு சில சில்லறை வேலைகள் செய்வதற்கும் பத்து ரூபாய் தயார் செய்து வைத்திருந்தான். அது நீலாவுக்குத் தெரியும் ஆனல் அதற்கு அவள் வேறு ஒரு செலவு வைத்திருந்தாள்.

அவளுடைய மூக்குத்தி கீழே விழுந்து உடைந்து போயிருந்தது. அதைச் சீர்படுத்துவதற்குப் பணம்வேண்டும். தவிர, அவளைப் பிறந்த வீட்டிற்கு வரச்சொல்லி அழைத் திருந்தார்கள். அதற்கும் பணம் வேண்டும். இந்த இரண் டையும் உடனே செய்துகொள்ளவேண்டும். என்பது அவள் விருப்பம். ஆகவே அந்தப் பத்து ரூபாயைப் புருஷன் தம்புராவின் சுரைக்காய்க்கு உபயோகப்படுத்துவதா அல்லது தன்னுடைய மூக்குத்திக்கு உபயோகப் படுத்துவதா என்பது தான் பிரச்னையாக வந்தது.

கிட்டு ரூபாயை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண் டான். இதுதான் சந்தர்ப்பம் என்பதைக் கவனித்து, நீலா வேகமாக அவன் பக்கம் வந்தாள். கிட்டு அவள் பக்கம் திரும்பிப்பார்த்துக் கொண்டு, அவள் சொல்லப் போவதை எதிர்பார்த்து நின்றான். ''ஆசாரியிடம் எப்பொழுது போகப் போகிறீர்கள்?'' என்றாள்.

''ஆசாரியிடமா! எதற்கு?''

''எதற்கா? நான்தான் பதினைந்து நாளாகச் சொல்லிக் கொண்டு வருகிறேனே ஞாபகமில்லையா, என் மூக்குப் பொட்டுக்கு வேறு கல்போட்டு, சரிப்படுத்த வேண்டு மென்று?''

''ஆமாம், அதற்கு இப்பொழுது என்ன அவசரம்?''

''அவசரமா! நான் கலியாணத்திற்குப் போகவேண் டாமா? போகும்பொழுது மூக்கிலில்லாமல் மூளியாகவா போய் நிற்பது?''

''இப்பொழுது பணவசதியில்லை. நீ போகமுடியாது.''

''பணம் இன்னிக்கி இருக்கும், நாளைப்போகும். அதற் காகக் காரியாகாரியங்களை விட்டுவிட முடியுமா? நீங்கள்தான் பத்து ரூபாய் வாங்கி வைத்திருக்கிறீர்களே, அது போதும் என் செலவுக்கு.''

''அது வேறு ஒரு காரியத்திற்காக சிரமப்பட்டு வாங்கி வைத்திருக்கிறேன்.''

''அது என்ன அப்படி முக்கியமான காரியமோ?''

''இதோ பார் நீலா, தம்புராவிற்கு சுரைக்காய் வேறு மாற்றணும். பிரடையெல்லாம் மாற்றணும். அதற்காகத் தான் வாங்கி வைத்திருக்கிறேன். உடனுக்குடனே செய்யா

விட்டால், அப்படியே கிடந்துபோயிடும். வாத்யம் சரியாகாமலே இருந்து விடும்.''

''நான் மூக்கிலே மூக்குத்தியில்லாமே மூளியா நிற்கிறேன். அதற்கு ஒன்றும்செய்யக் காணோம். தம்புராவிற்குச் சுரைக்காய் போடணுங்கிறியளே!''

''அதுதான் முக்கியம் நீலா! தம்புரா பின்னமாகக் கிடந்தால் சரஸ்வதி தேவியே, வியாதியாகக் கிடக்கிறாப் போலத்தான். நான் சங்கீதக்காரன். சரஸ்வதிதேவியை உபாசிப்பவன். சாக்ஷாத் தேவியின் உருவான வாத்யத்தை உதவாக்கரையாகச் செய்து உதறித்தள்ளிவிட்டு, உன்னை அலங்கரிக்க வேண்டிய காரியத்தைச் செய்யச் சொல்லுகிறாய். இது சரிதானா?''

''மலைபோல நிற்கும் மனைவியின் மூக்குக்கு மங்களகரமான மூக்குத்தியை வாங்கிப் போட மாட்டீர்கள்; மரத்தினால் செய்த வாத்யத்திற்கு மராமத்து செய்வதுதான் முக்கியமென்று சொல்கிறீர்கள். நாலு பேரை வேண்டுமானாலும் கேளுங்கள். நன்றாயிருக்கிறது!''

''யாரைக் கேட்க வேண்டும் இதற்கு? உனக்கு மூக்குப் பொட்டு அவசியமாயிருக்கு; எனக்குத் தம்புராதானே மூச்சு!''

''இந்தாருங்கள், எனக்கு நகைகள் ஏராளமாக நீங்கள் வாங்கிப் போட்டு விடவில்லை மூக்கிலேயும், காதிலேயும், கழுத்திலேயும் வைரமா ஜொலிக்கவில்லை. மூக்கும் மூளியாத்தான் நிக்கணும். நின்று விட்டுப்போகிறேன். நீங்கள் தாராளமாக, குஷாலாக மனம் தோன்றியபடி செய்து கொள்ளுங்கள். என் சவரணைக்கு மூக்குத்தியில்லை யென்று தான் குறைச்சலாப் போயிடுத்து!'' என்று சொல்லிவிட்டு வேதனையுடன் வேகமாக உள்ளே சென்றாள்.

கிட்டுவின் பாடு மகா தருமசங்கடமாயிருந்தது. அவனுக்குத் தான் சொன்னதுதான் சரியென்று தீர்மானமாக இருந்தாலும், அவள் வருத்தப்பட்டுக் கொண்டதில் சிறிது இரக்கமும் பிறந்தது. ஆனாலும், அவள் தன்னோடு இவ்வளவு தூரம் வாக்கு வாதம் புரிய வந்தது ஒரு புறத்தில் கோபத்தையும் உண்டு பண்ணியது. 'அவள் என்ன கிழவியாகப் போய் விட்டாளா? அவர்கள் வாழ்க்கை ஆரம்பித்துப் பல வருஷங்கள் ஆகிவிட்டனவா? ஏன் தன்னை அவள் புரிந்து கொள்ள முயலக் கூடாது? ஏன் இப்படித் தன்னுடன்

விவகாரம் செய்துகொண்டிருக்கிருள்? அதுதான் கிட்டுவிற்கு மிகவும் சங்கடத்தை உண்டுபண்ணியது.

நீலா என்ன நினைத்தாள்! 'நான் முக்கியமான செலவிற்குத்தானே பணம் கேட்டேன்? இவர் ஏன் தர மறுக்கிருர்? அவர் செலவுதான் அவருக்குப் பெரிசு. பிறத்தியாருடைய விஷயங்களைப்பற்றி அக்கறையேயில்லை. அவர் சிறிது விட்டுக்கொடுத்து நடந்துகொண்டுவிட்டால், நான் ஏன் அவருடன் சண்டை போடப்போகிறேன்? தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று ஏன் பிடிவாதம் பிடிக்க வேண்டும்? நான் சண்டித்தனமா செய்கிறேன்? ஏன் தாராள புத்தியுடன் அவர் நடந்து கொள்ளக்கூடாது?' என்று அவள் பொருமிக் கொண்டிருந்தாள்.

கிட்டு உள்ளே வந்தான். "இந்தா, பத்து ரூபாய் இருக்கிறது. உனக்கு எது வேண்டுமோ அதைச் செய்து கொள். என்னை ஒன்றுக்கும் கேட்கவேண்டாம்" என்று பணத்தை நீட்டினன். ஆனல், அது நீலாவிற்கு "இந்தா, பணத்திற்காக வம்பு பண்ணினயே, தொலைத்துக்கொள்" என்று தன் முகத்தில் விட்டெறிவதுபோலத் தோன்றியது. மனதில்லாமல் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொள்ளத் தயாராயில்லை அவள். "உங்களுக்குத்தான் அந்த ரூபாய் தேவை. தம்புராவைச் சரிப்படுத்தணும். நான் வீட்டுக்குள் கிடப்பவள் தானே. எக்கேடுகெட்டால் என்ன? நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், 'எனக்குத் தேவையில்லை'' என்ருள். அவன் ஓர் அளவு பச்சாதாபப்பட்டு விட்டுக் கொடுக்கும் நிலையில் இருக்கும்பொழுது, அவள் காட்டும் அசிரத்தையும் அகம்பாவமும் அவனுடைய ஆணவத்தைத்தான் அதிகப்படுத்தின.

"இதோ பார். உன்னுடன் வாக்கு வாதம் செய்ய நான் தயாராயில்லை. ஏதோ பாவம், அதுவும் நியாயமான செலவு தானே என்று கொடுக்க வந்தால், மிகவும் அலட்சியமாகப் பேசுகிருய். தராவிட்டாலும் வம்பு, தந்தாலும் வம்பாயிருக்கிறது. அது எனக்குச் சரிப்பட்டுவராது. இஷ்டமிருந்தால் வைத்துக் கொள்; இல்லாவிட்டால் தலையைச் சுற்றித் தூக்கி எறி!" என்று அந்த ரூபாயை அவள் முன்னே விசிறி எறிந்தான். நாணயங்களெல்லாம் நாலா பக்கமும் சிதறி ஓடின. ரூபாயைப் போட்டு விட்டுக் கிட்டு துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே போய்விட்டான்.

நீலா, கீழேவிழுந்து உருண்டு ஓடிய ரூபாய்களையெல்லாம் பொறுக்கினள் அத்துடன், அவளுடைய சிதறிய உணர்ச்சித் துண்டுகளையும் சேர்க்க முயன்ருள்.

# 18

ஒரு நாள் மத்தியானம் சாப்பிட்டு விட்டு உட்கார்ந்து கொண்டிருந்தாள் நீலா. கிட்டு வாயினுல் ஸ்வரங்களை முணு முணுத்தபடி எதையோ நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந் தான். அன்று மாலை கிருஷ்ணன் கோவிலில் கிட்டுவின் கச்சேரி. அது 'தேங்காய்மூடிக் கச்சேரி.' கிட்டு இப்பொழு தெல்லாம் பணத்திற்காகப் பாடுவதில்லை என்பது பிரசித்த மாகி விட்டபடியால், ரஸிகர்கள், மிகவும் பழகினவர்கள், தேவாலய உற்சவங்கள் நடத்துவோர்தாம் கிட்டுவைக் கச் சேரிக்கு அழைப்பது என்பது வழக்கமாகிவிட்டது. கிட்டு தாட்சண்யம் தட்ட முடியாமல் அங்கு போய்ப் பாடுவது வழக்கம். கிட்டு இஷ்டப் பட்டால் தான் கச்சேரியில் பாடு வான். ஆகவே இந்தக் கச்சேரிகளுக்கு இரட்டிப்புக் கௌர வத்தைக் கொடுத்தார்கள் ரஸிகர்கள். தான் கையில் வாங்கக்கூடிய பொருளுக்காகப் பாடவில்லை, தன்னுடைய கச்சேரி விலையில்லாதது என்ற எண்ணத்தில், கிட்டுவிற்கும் இந்தக் கச்சேரிகள், மிகவும் பெருமை தரக்கூடியவையாகத் தானிருந்தன.

ஆனுல், நீலாவிற்கு இந்தக் கச்சேரிகளின் பெருமை யையோ அல்லது கிட்டுவின் கொள்கையின் உயர்வையோ புரிந்து கொள்ள முடியவில்லை. அன்ருட வாழ்க்கையோடு ஒட்டி வராத கொள்கைகளினுல் யாருக்கு என்ன பயன்? அன்றையக் கச்சேரியைப்பற்றி அவளும்யோசித்துக் கொண்டு தானிருந்தாள்.

அவள் பிரச்னை அந்தக் கச்சேரியோடு மிகவும் ஒட்டிய பிரச்னைதான். கிட்டு, அன்றுமாலை கச்சேரிக்குக் கட்டிக் கொண்டு போவதற்கு நல்ல வேஷ்டியும் துப்பட்டாவும் இருக்கிறதா என்பதை நீலா பார்க்கத் தொடங்கினுள். ஏனென்ருல், கச்சேரிக்குப்போட்டுக் கொள்வதற்காக ஜதை ஜதையாக ஜரிகை வேஷ்டிகளும் அங்கவஸ்திரங்களும் இல்லை. இரண்டே இரண்டு ஜோடிகள்தான் கிட்டுவிடம் உண்டு. அதிலே ஒன்று, ஒரு மகாராஜா கிட்டுவிற்கு சன்மானம்

செய்த பட்டுவஸ்திரம். பாக்கியுள்ள அங்க வஸ்திரத்தையும், வேஷ்டியையும் தான் கச்சேரிகளுக்குப் போட்டுக்கொண்டு போவது வழக்கம். நீலா அதை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கிட்டுவின் அநேக வேஷ்டிகள் ஜீரண மாய்ப் போயிருக்கும். அதைக் கவனியாமலேயே கிட்டு அவைகளைப் போட்டுக் கொண்டுபோய் விடுவது வழக்கம். நீலா, 'இன்று கச்சேரியாயிருக்கிறதே அவசரத்தில் கிழிசலைப் போட்டுக் கொண்டுபோய் விடுவாரே' என்ற எண்ணத்தில், வழக்கமாகப் போட்டுக்கொள்ளும் கச்சேரி அங்கவஸ்திரத்தை எடுத்துப் பார்த்தாள்; பிரித்தாள். அவள் எதிர்பார்த்தபடியே விசிறிமடிப்புக்கு நேராகக் கிழிந் திருந்தது. அதை எடுத்துவந்தாள்.

"இதைப் பாத்தியளா? இதுவும் கிழிந்துவிட்டது" என்றாள்.

"சரி, போய்விட்டுப் போகிறது" என்றான் கிட்டு.

"மகாராஜா கொடுத்த பட்டு அங்கவஸ்திரம்தான் இருக்கிறது. அதை எடுத்துவைக்கட்டுமா?" என்றாள்.

"வேண்டாம். வேண்டாம் உள்ளூர் கச்சேரிதானே? அது இருக்கட்டும். வேறு ஏதாவது சமயத்திற்கு உபயோகப் படும்."

"வேறு எதைப் போட்டுக்கொள்ளப் போகிறீர்கள்?"

"வேறு ஏதாவது சாதாரண வேஷ்டியைப் போட்டுக் கொண்டால் போகிறது."

"ரொம்ப நன்றாயிருக்கும் சதசிலே! சபைக்கு முன்னாலே பாடறபோது அதுககுத் தகுந்த அந்தஸ்து வேண்டாமா? சாதாரணத் துண்டைப் போட்டுக்கொண்டு உட்காருவதா?"

"ரொம்ப சரி. வேறு அங்கஸ்திரம் இல்லையே!"

"நான் சொன்னால் உங்களுக்குக் கோபம் வருகிறது. எத்தனையோ, சங்கீத வித்வான்கள் பணத்திலே கொழிக்கிறார் களே. நீங்கள் ஏன் கட்டிக்கொள்ள வேஷ்டிகூட இல்லாமல் திண்டாடவேண்டும்? இது நீங்களாகச் செய்து கொள்வது. வருகிற லக்ஷ்மியை வேண்டாமென்று தள்ளாமல் நீங்கள் இருக்கக் கூடாதா?"

"நீலா, நான் சொன்னால் உனக்குப் புரியாது. எனக்கும் உனக்கும் முக்கியமான அடிப்படை விஷயத்தில் வித்தியாசம்

இருக்கிறது. நான் சங்கீதத்தைக் ஜீவனோபாயமாகக் கைக் கொள்ள விரும்பவில்லை. அதை ஒரு யோகமாகவும், அந்த வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாகவும் உபாசிக்கிறேன். நீ அதை ஒரு வியாபார முறையில் பார்க்கிறாய். பணம்தான் வேண்டுமென்றால், இந்த சங்கீத உபாசனையே தேவையில்லை. சம்பாதிப்பதற்கு உலகில் எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. அந்த வழியிலே போனால் போதும். பணத்தை எவ்வளவோ பேர் சம்பாதிக்கலாம். ஆனால் வித்தையைச் சம்பாதிப்பது சிலருக்குத்தான் கிட்டும். அந்த வித்தையைச்சரியான வழியில் உபயோகப் படுத்துவது என்பது இன்னும் சிலருக்குத்தான் கிடைக்கும்'' என்றான்.

ஆனால் கிட்டுவின் இந்தத் தத்துவம் நீலாவிற்கு விளங்க வில்லை. 'வித்தையினால் அவர் அடைய வேண்டியதை அடை யட்டும். ஆனால் அதற்காக வாழ்க்கையில் அத்தியாவசிய மான தேவைகளைக் கூடத் தியாகம் செய்யச் சொல்லியிருக் கிறதா என்ன?...' என்று சிந்தித்தாள்.

கிழிந்து போயிருந்த அங்கவஸ்திரத்தை அப்படியே உள்ளே வைத்துவிட்டு, மகாராஜா சன்மானம் செய்த பட்டு வஸ்திரத்தைக் கச்சேரிக்கு எடுத்துவைத்தாள்.

சிறிது நேரம் சென்றது. வாசற்பக்கம் ஏதோ சப்தம் கேட்டது. ஒரு சாயபு, ஒரு வாத்யத்தைத் தூக்கிக்கொண்டு வந்தான். அவனுடன் சிறியவர்களும் பெரியவர்களுமாக ஒரு சிறு கூட்டம் சுற்றியிருந்தது. ''என்ன சமாசாரம்?'' என்று கேட்டான் கிட்டு.

''இந்த வடநாட்டான் அற்புதமாக சாரங்கி வாசிக் கிறான். நீங்கள் அவசியம் கேட்கவேண்டும்!'' என்றார் ஒருவர்.

''அப்படியா! கேட்கலாமே'' என்று உட்கார்ந்தான்கிட்டு. கூடவந்தவர்களும் ஓரமாக உட்கார்ந்து கொண்டார்கள். வட நாட்டுசாயபு, கிட்டுவுக்குப் பணிவாக சலாம் செய்துவிட்டு வாசிக்கத் தொடங்கினான். ஒரு இழுப்பு இழுத்தான். தந்திகள் பதறின. வில்லும் விரலும் தந்தியை நெருடின. ஸ்வரஜாலங் கள் மத்தாப்புப் பொறிகள் போல உதிர்ந்தன. வடநாட்டு தேசாந்திரி, ஸ்தாயிகள் கணக்கில்லாமல் மேலும் கீழும், அந்த ரத்திற்கும் பாதாளத்திற்கும் பாலம் அமைப்பதுபோல் மூன்று ஸ்தாயிகளிலும் நான்குகாலங்களிலும் அற்புதமாக வாசித்துக் காட்டினான். விரல்கள் கண்ணுக்கெட்டாத வேகத்தில் பறந்

தாடிக்கொண்டிருந்தன. வாத்யத்திலிருந்து, பாவமும் ஞானமும் கலந்த அற்புதமான ராக ஸ்வரூபம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஓர் அருமையான 'துருபத்'கீதத்தை வாசித்துக் காட்டிவிட்டு நிறுத்தினன் வடநாட்டு வித்வான்.

அவன் வாசிக்க ஆரம்பித்ததிலிருந்து கிட்டு, கண்மூடி மௌனியாகி அப்படியே அந்த நாதத்தில் லயித்துவிட்டான். அந்த ஏழை நாடோடியின் சாரங்கியிலிருந்து வந்த சங்கீதம் அப்படியே கிட்டுவை மெய்மறக்கச் செய்தது. அந்த வாத்யத்தின் சுநாதமும், அந்தப் பாடகனின், எல்லையற்ற கற்பனையும், அவனுடைய நிர்ணயமான சாதகமும்,லயத்தில் அவனுக்கேற்பட்ட ஒரு நிச்சயமும், கிட்டுவை இன்பசாகரத்தில் ஆழ்த்தியது. அந்தத் துல்யமான நாதத்தில் ஈடுபட்டிருந்தான். அந்தப் பாடகன் நிறுத்திய பிறகுதான் கிட்டுவிற்கு பிரக்ஞை வந்தது. கண்களைத் திறந்தான். கிட்டுவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. அந்த வடநாட்டுப் பிச்சைக்கார சாயபுவின் அழுக்குப்படிந்த கைகளைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டான்: ''இதுதான் சாக்ஷாத் சரஸ்வதிதேவி இருக்கும் கோயில்!'' என்று மதிப்பு பொங்கச் சொன்னன்.

அந்த வடநாட்டானுக்குத் தமிழ் தெரியாது. ''எனக்கு ஒரு சட்டைவேண்டும்'' என்று ஜாடையாகச் சொன்னன். கிட்டு எழுந்திருந்தான். உள்ளே போனன். அன்றையக் கச்சேரிக்காக மகாராஜா சன்மானம் செய்த பட்டு வஸ்திரத்தை எடுத்து வைத்திருந்தாள் நீலா. அதை எடுத்துக் கொண்டு வந்து அந்த சாரங்கி வாசித்த சாயபுவின்மேல் போர்த்தினன். ''நீ ஒரு மகாராஜன்! நன்ருயிருக்க வேண்டும்'' என்று ஹிந்துஸ்தானியில் ஆசீர்வாதம் செய்துவிட்டு, சந்தோஷத்துடன் அந்த வடநாட்டு வித்வான் வெளியேறினன்.

''ஆஹா! எந்த எந்த இடங்களில் அபூர்வமான வித்தைகள் எல்லாம் பதுங்கிக்கிடக்கின்றன!'' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான் கிட்டு.

நீலா இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு, அந்த வடநாட்டான் வாசித்ததெல்லாம் காதில் ஏறவில்லை. கடைசியாக வைத்திருந்த ஒரே பட்டு வஸ்திரத்தையும் கிட்டு ஒரு பிச்சைக்காரனுக்குத் தானம் செய்துவிட்டு நிற்பதுதான் அதிக ஆத்திரத்தை உண்டு பண்ணியது. ''தனக்குக் கட்டிக்கொள்வதற்கு நல்ல துணியில்லை. பிச்சைக்

காரனுக்குத் தூக்கி வீசியெறிய என்ன தாராளம்?'' என்று பொருமிக் கொண்டிருந்தாள்.

நாதத்திலேயே மெய்மறந்து நிற்கும் கிட்டுவிடம் வந்தாள். ''ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு வைத்திருந்த அந்த ஒரு பட்டையும் அந்தப் பிச்சைக்காரனுக்குத் தானம் கொடுத்து விட்டீர்களே; என்ன தாராளம்!'' என்றாள்.

உலகத்திற்குப் புறம்பான ஓர் அனுபவத்திலே இருந்த கிட்டுவிற்கு இந்த வார்த்தைகள் நாராசம்போல் விழுந்தன. அந்தப் பாட்டிற்கு எதைத்தான் கொடுக்கக் கூடாது! கேவலம் ஒரு பட்டுத்தானு அந்த சங்கீதத்திற்குச் சன்மானமாகச் செய்ய முடியும் என்று நினைத்துக்கொண்டு ஒரு வறண்ட சிரிப்புடன் "எனக்கு ஒருவன் அதைக் கொடுத்தான். அதையே இன்னொருவனுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டேன். இதில் நமக்கு என்ன நஷ்டம்?'' என்றான் சாவதானமாக.

"நீங்களும் அவனும் ஒன்றுதானே?'' என்றாள் எகத்தாளமாக.

''இல்லையில்லை. எனக்கும் மேம்பட்டவன் அந்த வித்வான். அவனிடம் உள்ள சரக்கு மிகவும் உயர்ந்தது'' என்றான்.

''அப்படியென்றால், உங்களைக் கூப்பிட்டு சன்மானம் செய்வதற்குப் பதிலாக, அந்தப் பிச்சைக்காரனைக் கூப்பிட்டு, மகாராஜா சன்மானம் செய்திருக்கலாமே?'' என்றாள்.

''ஆகா! ஆனால், மகாராஜாவிற்கு அது கொடுத்து வைக்கவில்லை. எனக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைத்தது!'' என்றான்.

அதற்குமேல் என்னசெய்வதென்று தெரியவில்லை. ''இந்த தரித்திரம் பிடித்த பிச்சைக்காரன் வந்து சாயந்திரம் உங்களுக்குக் கச்சேரிக்கு அங்கவஸ்திரம் இல்லாமல்செய்துவிட்டுப் போய்விட்டானே. அவன் நாசமாய்ப்போக!'' என்று வயிற்றெரிச்சலுடன் வைதாள் நீலா.

''இந்தா! அவனை ஒன்றும் சொல்லாதே. அந்தப் பட்டு எங்கே போய்ச்சேரணுமோ, அங்கேபோய்ச்சேர்ந்துவிட்டது. இப்பொழுதுதான் எனக்கு மனசு நிம்மதியாயிருக்கிறது.

நான் எதையாவது போட்டுக்கொண்டு போகிறேன்” என்று சொன்னான். ஆனாலும் எதையாவது போட்டுக்கொண்டு போகவிட நீலாவிற்குச் சம்மதமில்லை. கிழிந்து போயிருந்த அங்கவஸ்திரத்தை எடுத்துத் தைத்தாள். தைத்து, கிழிசல் தெரியாமல்மடித்துவைத்தாள். இந்தக் கிழிசல்வஸ்திரத்தைத் தன் புருஷன் போடும்படி, கிட்டுவிடமிருந்து பட்டை 'ஏமாற்றி' அபகரித்துக் கொண்டுபோன, அந்த வித்து வானிடமும் உலக அறிவில்லாத புருஷனிடமும் அவளுக்கு அளவிறந்த ஆத்திரம் பெருகி வந்தது.

# 19

சூரியன் உதித்து அஸ்தமிக்கும் வரையில் மனிதன் இதயத்தில் எத்தனையோ போராட்டங்கள்! ஆனால் பொழுது விடிவதே, நீலாவிற்கும் கிட்டுவிற்கும் போராட்டத்தை உண்டு பண்ணுவதற்குத்தான் போல் இருந்தது!

ஒரு நாள் காலை கிட்டு கையில் ஒரு பையைத் தூக்கிக் கொண்டு கடைத் தெருப்பக்கம் கிளம்பிக்கொண்டிருந்தான். முகத்தில் குதூகலம் தாண்டவமாடியது. என்ன விசேஷம் என்று நீலா ஜாடையாகப்பார்த்தாள். ''நீலா, கடைவீதிக்குப் போய் சாமான் வாங்கி வருகிறேன். இன்று ஒரு பெரிய விருந்து வரப்போகிறது'' என்றான்.

''யாரது?'' என்றாள் அலட்சியமாக.

''யார் தெரியுமா? கேசவநல்லூர் சுப்பையா பாகவதர்!'' என்றான் பெருமையாக. நீலாவிற்கு ஒரு வியப்பும் ஏற்படவில்லை. ''உங்களுக்கு வேலை என்ன! எவனையாவது கூட்டிக் கொண்டு வரவேண்டியது. என் கழுத்தை அறுக்க வேண்டியது!'' என்றாள்.

''அட கர்மமே! அவரை யாரென்று நினைத்துக் கொண்டாய்? சங்கீத உலகிலே அவர் ஒரு சக்கரவர்த்தி!''

''உங்களுக்கு ஒவ்வொரு பண்டாரமும், ஆண்டியும் சக்கரவர்த்திதான்!'' என்றாள்.

''சீ, மூடு வாயை! அவர் போன்றவர் இந்தத் தரித்திரம் பிடித்த வீட்டுக்கு வரக்கூடியவரே இல்லை. ஏதோ என்னுடைய சிநேகத்தை உத்தேசித்து வரப்போகிறார். அவரை என்ன வென்று நினைத்துக் கொண்டாய்?'' என்றான்.

''இந்தத் தரித்திரம் பிடித்த வீட்டிற்கு விருந்து ஒன்று தான் குறைச்சலாகக் கிடந்ததோ?'' என்றாள் நீலா.

''உன் அழுகையை நிறுத்திக்கொள். நம்ம கதை எப்பொழுதும் உள்ளதுதான். அவர் வேறு போக்கிடம் இல்லா

மலா இங்கு வருகிறுர்? எவ்வளவோ பெரிய மனிதர்கள் 'இங்கு வரவேண்டும், அங்கு வரவேண்டும்' என்று உபசரிக்கப் போகிறுர்கள். அவர் தன்மையை உத்தேசித்து இங்கு வருகிறுர். அவருக்கேற்றபடி கௌரவிக்க வேண்டாமா? விருந்து ஜமாய்த்துவிடு!" என்று சொல்லிவிட்டு வெளியே போய் விட்டான். ஆனுல் நீலா, அவர் யாராயிருந்தா லென்ன, எதையாவது போட்டுத் தட்டிக்கழித்து விட வேண்டு மென்றுதான் தீர்மானித்தாள். இது ஒரு பிடுங்கல் தானே!

கேசவ நல்லூர் சுப்பையா பாகவதர் என்ருல் எல்லோ ருக்கும் பிரசித்தியான பெயர். அவர் மைசூரில் பிரதம ஆஸ்தான வித்வான். சங்கீத சாஹித்ய கர்த்தா. லக்ஷண கிரந்தங்களைக் கரைத்துக் குடித்தவர். பல வித்வான்களைத் தேடிப்பிடித்து மகாராஜாவிற்கு அறிமுகம் செய்துவைத்து சன்மானம் வாங்கிக் கொடுத்தவர். கிட்டுவை மஹாராஜா விற்கு அறிமுகப்படுத்தி சன்மானங்கள் செய்வித்து கௌரவித் திருக்கிறுர். கிட்டுவின் யோக்யதையில் அவருக்கு அளவிறந்த மதிப்பு உண்டு. அதனுல் கிட்டுவிடம் அலாதியான அபிமானமும் உண்டு. அந்த அபிமானத்தைக் காட்டுவதற் காகவே கிட்டுவின் வீட்டில் வந்து தங்குவதாகத் திட்டமிட் டிருந்தார்.

கிட்டு சாமான்களை வாங்கிக்கொண்டு வந்தான். நீலா கூடத்தில் படுத்துக்கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கவும் ஆத்திரமாக வந்தது. "ஏ சனியனே! என்ன நிதான மாகப் படுத்துக்கொண்டிருக்கே? இன்னும் ஒருநாழிகையில் வரப்போகிறுரே அவர்" என்ருன் கிட்டு.

"எனக்கு உடம்பு சரியாயில்லை. நான் என்ன பண்றது? என்னுல் சமையல் செய்ய முடியாது போலிருக்கு" என்ருள்.

"என்ன வந்துடுத்து உனக்கு? அழிம்பு பண்ணுகிறுயா? இன்று சமையல் தயாரா யில்லாமலிருக்கட்டும் பார்க்க லாம்!" என்று சொல்லிவிட்டு வாசற்பக்கம் போனுன்.

கிட்டுவிற்கு ஒரு யோசனை தோன்றியது. நீலா வேண்டு மென்றே படுத்துக்கொண்டு அழிம்பு செய்யலாம். இதற் காகக் காரியத்தை நிறுத்தக்கூடாது. பஜனைமடத்திற்குச் சென்று, சமையற்காரனை வரச் சொல்லி சமையல் செய்யச் சொன்னுல் போகிறது என்று எண்ணிக் கொண்டே போனுன்.

கிட்டு திரும்பி வரவில்லை. ஆனால், அதற்குள் ஒரு பெரிய வில்வண்டி வந்து நின்றது. வண்டியிலிருந்து ஒரு சிஷ்யன், வெள்ளிக் கூஜாவைத் தூக்கிக்கொண்டு இறங்கி வந்தான். மற்றொரு சிஷ்யன் வெள்ளி வெற்றிலைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தான். மற்றொருவன் பெட்டிகளை இறக்கிக் கொண்டிருந்தான். கடைசியாக இறங்கினார் பாகவதர். அவர் இடுப்பிலும் மேலும், ஒண்ணரைச்சாண் அகலம் சரிகை உள்ள வேஷ்டியும் அங்கவஸ்திரமும் பளபளத்தன. நெற்றியிலே ஒரு முரட்டு ஜவ்வாதுப் பொட்டு. சிஷ்யன் வந்து பவ்யமாக "கிருஷ்ணபாகவதர் இருக்கிறாரா?" என்று கேட்டான்.

நீலா, "அவர் வெளியே போயிருக்கிறார்; வந்து விடுவார். உள்ளே வரச்சொல்லுங்கள்!" என்று சொல்லி விட்டு, வரவேற்கும் தோரணையில் கூடத்தில், பரபரவென்று ரத்ன கம்பளத்தை விரித்தாள்.

சுப்பையா பாகவதர் வந்தார். உள்ளே பெட்டி படுக்கைகளுடன், கூடைகளும் வந்தன. ஒரு கூடை நிறைய தேங்காய் பருமனுள்ள மல்கோவா மாம்பழங்கள். ஒரு கூடை நிறைய காபூல் மாதுளம் பழங்கள். ஒரு வெற்றிலை முட்டி. ஒரு கூடை நிறைய வாழைப்பழம் எல்லாம் உள்ளே வந்தன. சிஷ்யன் அவைகளை உள்ளே எடுத்து வந்து, நீலா பக்கம் கொண்டுபோய் வைத்தான்.

பாகவதருடைய தோற்றம், அவருடைய படாடோபம், பெருந்தன்மை, அவருடைய கம்பீரம் இவையெல்லாம் நீலாவின் மனத்தில் இவர் ஒரு பெரிய மனிதர் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தன. ஒரு கூஜாவில் ஜலம் கொண்டு வைத்தாள். வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தைக் கொண்டு வந்து வைத்தாள். விசிறியை எடுத்து வைத்தாள். பேச்சினலன்றி மற்றபடி அவரை வரவேற்று உபசரிக்க வேண்டியவைகளைச் செய்தாள். சமையல் உள்ளே போய், பேஷான விருந்து சமைக்கவும் ஆரம்பித்து விட்டாள்.

கிட்டு திரும்பி வந்தான். சமையற்காரன் வேறு ஏதோ ஒரு கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டு விட்டான். அவன் வர முடியவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பி வந்து கொண்டிருந்தான். நீலா மாத்திரம் சமையல் செய்து வைக்காமலிருக்கட்டும் அவளைப் பழி வாங்கி விடுவது என்ற எண்ணத்துடன் திருபபி வந்தான்.

வீட்டிற்குவந்துபார்த்தால், வீடு அமர்க்களமா யிருந்தது. பாகவதர் வந்துவிட்டார். சிஷ்யகோடிகள் நடமாடிக் கொண்டிருந்தனர். உள்ளே நுழைந்ததும் பாகவதர் அருமையாக "வா, கிட்டப்பா. எங்கே போயிருந்தே?" என்று அவனை வரவேற்றார்.

கிட்டு, சந்தோஷத்துடனும், வியப்புடனும், "வாருங் கள், வாருங்கள்; எப்பொழுது வந்தீர்கள்?" என்று சொல்லிக் கொண்டே அவர் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"உன்னைக் காணவில்லை. உன் சம்சாரம் எங்களை அபார மாக உபசரித்து விட்டாள்" என்று பாகவதர் சொன்னார். கிட்டுவிற்குத் தூக்கி வாரிப்போட்டது. அவர் ஏதாவது தன்னைக் கேலி செய்கிறாரோ, தன் மனைவி அவரை ஏதாவது அவமானம் செய்து விட்டாளோ என்ற சந்தேகம் வந்து விட்டது. ஆனால் அவர் சொல்லும் தோரணையைப் பார்த் தால் அப்படித் தோன்றவுமில்லை.

"சரி, உங்களுக்கு ஸ்நானத்திற்கு ஏற்பாடு செய் யட்டுமா?" என்றான்.

"அதற்கெல்லாம் அவசரமில்லை; உட்காரு" என்றார் பாகவதர்.

ஆனால் கிட்டுவிற்கு, சாப்பாட்டிற்கு நீலா என்ன செய்யப் போகிறாளோ என்பதுபற்றியே கவலையாயிருந்த படியால் "இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனான்.

சமையல் உள்ளே நுழைந்தவுடன் அவன் பிரமித்து நின்று விட்டான். நீலா பம்பரம்போல் சுற்றிச் சுற்றிக் காரியங்கள் செய்து கொண்டிருந்தாள். வந்தவர்களுக்கு பஞ்ச பக்ஷ்ய பரமான்னங்களுடன், பெரிய விருந்து செய்து கொண்டிருந்தாள். கிட்டுவைப் பார்த்தவுடன் "வாழை இலை இல்லை, வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றாள். கிட்டுவிற்கு ஆச்சரியமாயிருந்தது. சிறிது நேரத்திற்கு முன் "உடம்பு சரியில்லை, சமைக்கமாட்டேன்" என்று சொன்ன நீலாவா இப்பொழுது விழுந்து விழுந்து சமையல் செய்கிறாள்!

"உடம்பு சரியில்லை, என்று சொன்னாயே?" என்றான்.

"ஆமாம், உடம்பு சரியாகத்தான் இல்லை. ஆனால், வராதவர்கள் வந்திருக்கும் பொழுது, விழுந்து படுத்துக் கொண்டிருந்தால் நன்றாயிருக்குமா?" என்றாள்.

"முடியவில்லையென்றால், ஏதோ, சாதாரணமாகச் சமைத்து முடித்து விடுகிறதுதானே?" என்றான், அவள் வாயிலிருந்து வார்த்தையைப் பிடுங்குவதற்காக.

"நன்றாயிருக்கு! பெரிய மனிதர் வந்திருக்கிறார். அவாள் யோக்கியதைக்குத் தகுந்தாப்போல் செய்ய முடியா விட்டாலும் நம்மால் முடிந்த வரையில் கௌரவமாக விருந்தளிக்க வேண்டாமா?"

"அவருடைய பெரிய மனிதத் தன்மை உனக்கு எப்படித் திடீரென்று தெரிந்தது? நான் அப்பொழுது சொன்ன பொழுது கேட்கவில்லையே. எப்படி அவரை உனக்கு உபசரிக்கத் தோன்றியது?"

"அவர் நம்மிடம் நடந்து கொள்வதை உத்தேசித்தாவது நாம் அவரிடம் அதைப் போல நடந்துகொள்ள வேண்டாமா? அவருக்கு என்ன தாராள புத்தி, என்ன பெருந்தன்மை. என்ன பெரிய மனுஷ தோரணை!" என்று சொல்லிவிட்டு, விருந்தாளி கொண்டு வந்திருந்த பழக்கூடைகளைக் காட்டிய படியே, "இவை எல்லாம் உங்களுக்கு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார். இதற்காகவாவது அவரைக் கௌரவிக்க வேண்டாமா?" என்றாள்.

கிட்டுவிற்குப் புரிந்தது. "ஓகோ, அவர் கொண்டு வந்த சீர்வரிசைகளுக்காகத்தான் அவருக்குச் சாப்பாடா? பேஷ்! அட கர்மமே! அவருடைய வித்வத்துக்கும், சிநேகத்துக்கும் இல்லையே!" என்றான்.

"அது எனக்குத் தெரியாது. ஆனால் இதுதான் எனக்குப் புரிகிறது!"

"அவரிடம் உள்ள சரஸ்வதி விலாசத்திற்கு உபசாரம் இல்லை. லக்ஷ்மீ கடாக்ஷத்திற்குத்தான் இந்த உபசாரம் போலிருக்கிறது!"

"ஆமாம்; அப்படியே இருக்கட்டும். நம் வீட்டிற்கு வேண்டியது லக்ஷ்மி கடாக்ஷம்தான். அதற்குத்தான் இந்த உபசரணையெல்லாம்" என்றாள்.

கிட்டு, தலையிலடித்துக் கொண்டு கூடத்துப் பக்கம் போனான். தனக்கும் தன் மனைவிக்கும் மனப்பான்மையில் சேரமுடியாத ஒரு பாவம் இருப்பதை அவன் இன்றுதான் அறிந்து கொண்டான் என்பதல்ல; ஆனால் இன்று அது அவனுக்கு வெட்ட வெளிச்சமாக விளங்கியது. எப்படியோ வந்தவருக்கு மரியாதை செய்யச் சம்மதித்து விட்டாளே என்ற திருப்தியுடன் பாகவதருடன் பேசுவதற்குக் கூடத்தின் பக்கம் போனான்.

இது மற்ெருரு நாள் நடந்தது. மாலை நேரம். நீலா கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கவலையெல்லாம் இரவில் சமையல் செய்வதற்கு அரிசிக்கு என்ன செய்வது என்பதுதான். கிட்டு ஒரு கச்சேரிக்குப் போயிருந்தான். கடைசியாக, எதிர் வீட்டு அம்மாளிடம் அரிசி கடன் வாங்கலாமென்று கிளம்பினுள். எதிர் வீட்டு அம்மாமிக்கு நீலாவிடம் ஒரு தனி அபிமானம்.

''அம்மாமி, பழையபடி கடனுக்குத்தான் வந்துவிட்டேன்'' என்று ஆரம்பித்தாள் நீலா. கடனுக்குப் போவதிலும் சிறுமை இருக்கத்தானே யிருக்கிறது.

''என்னம்மா வேணும்?'' என்ருள் அந்த எதிர்வீட்டு அம்மாமி.

''அரிசிதான் வேண்டும். இராத்திரி சமையலுக்கு அரிசி ஒரு மணிகூட இல்லை. அவர் பஜனை மடத்துக் கச்சேரிக்குப் போய்விட்டார்.''

''அரிசி கூடவா தட்டிப் போகும் படியாயிருப்பா? நன்னு யிருக்கு!'' என்ருள் அந்த அம்மாள்.

''அரிசிக்குத் தட்டு இல்லை அம்மாமி, பணத்திற்குத்தான் தட்டு'' என்ருள் நீலா.

''என்னவோ அம்மா, உன் புருஷனிடம் யோக்யதைக் குறைவு இல்லை. வித்தைக் குறைவு இல்லை. கௌரவத்தில் குறைவு இல்லை. ஆனுல் என்ன பிரயோசனம்? எவ்வளவோ மேன்மையாக இருக்கலாம். அதற்கு நீதான் தகுந்தபடி அவரைத் திருப்பணும்'' என்று புத்திமதி சொன்னுள் அந்த அம்மாள்.

''நான் என்ன செய்யட்டும் அம்மாமி? அவருக்குக் குடும்பக் கவலையே கிடையாது. அவருண்டு, அவருடைய சங்கீத

முண்டு. வேறு ஒன்றும் கவலையில்லை. அகமுடையாள் இருக்காளா செத்தாளா, என்ற கவலையில்லை; சாப்பாடு உண்டா, கிடைக்குமா என்பதில் கூடக் கவலையில்லை'' என்ருள்.

''நீலா, அவர் குசேல ஸ்வாமி மாதிரி பொறுப்பில்லாமல் இருக்கலாம். இருந்தாலும் நீதான் அவர் தலையிலே பொறுப்பைக் கட்டணும்'' என்று முடித்தாள் அந்த அம்மாள்.

அரிசியை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தாள். அவளுக்கு மிகவும் துக்கமாயிருந்தது. அவளுடைய குடும்பத் தேர் சுகமாக ஓடிக்கொண்டிருக்கக் கூடாதா? இந்தச் சிறு வயதில் வறுமை யென்னும் குட்டையில் விழுந்து உழல வேண்டி யிருக்கிறதே. வித்தையிருந்து என்ன பயன்? புகழ் இருந்து என்ன பயன்? ஒரு வேளைச் சோற்றுக்கு உதவவில்லை! புகழேணியில் ஏறிக்கொண்டிருக்கும் அவள் புருஷன், அதை விட்டு இறங்கி வந்து, சுகம் இருக்கும் பாதையில் அவளை அழைத்துக்கொண்டு போகமாட்டாஞ என்று அவள் எண்ண மிட்டுக்கொண்டிருந்தாள்.

''அம்மா'' என்று ஒரு குரல் வாசற்பக்க மிருந்து வந்தது.

''யாரது?'' என்ருள் நீலா.

''பூ வேணுமா?'' என்று ஒரு மல்லிகைச் சரத்தை வைத்துக் கொண்டு நின்ருள் ஒரு பூக்காரி. நீலாவிற்கிருந்த மனவேதனையில். அவளுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. ''சாப்பாட்டுக்கு அரிசிக்கு வழியைக் காணோம். பூ இல்லாததுதான் குறைச்சலாகக்கிடந்தது'' என்று எண்ணிக் கொண்டே வேண்டாமென்று சொல்லி அனுப்பிவிட்டாள். இருந்தாலும் பூத்துக்குலுங்கும் தன் உடலுக்கு பூ வாங்குவதற்குக்கூடத் தன்னிடம் பணம் இல்லையே என்ற மனவேதனை மாத்திரம் அவளைத் துன்புறுத்திக்கொண்டிருந்தது.

சமையலை முடித்துவிட்டு புருஷன் வரவுக்குக் காத்துக் கொண்டிருந்தாள். கச்சேரியை முடித்துவிட்டு கிட்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். ரஸிகர்கள் கூட்டம் ஒன்று பின் தொடர்ந்து வந்தது. கிட்டுவின் கையிலே, பஜனை மடத்தில் கொடுத்த தேங்காய் மூடியும், வெற்றிலை பாக்கும் இருந்தன. அதுதான் அவர்கள் கொடுத்த சன்மானம். சிஷ்யன் தோரணையில் ஒரு பையன் கிட்டுவிற்குப் போட்ட ரோஜாப்பூ மாலையைக் கையிலே ஏந்திக்கொண்டு மரியாதையாக நின்ருன். எல்லோரும் கச்சேரியை ரஸித்துவிட்டு வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

"பன்னிரண்டு வருஷத்திற்கு முன் பெரிய வைத்தி கச்சேரி இதுமாதிரி ஒன்று கேட்டேன். அதற்கப்புறம், இன்று தான் இவ்வளவு உயர்ந்த கச்சேரி கேட்டேன்" என்று ஒரு பெரியவர் உபசாரமாகச் சொன்னார்.

"இது கந்தர்வ கானம். மனுஷ்ய கானம் இல்லை!" என்றான் ஒருவன்.

"பஜனை மடத்துத் தூணிலே காதை வைத்துக் கேட்டால், இன்னும் அந்தச் சங்கதிகளை அவைகள் பேசிக் கொண்டிருக்கும்" என்றார் ஒருவர், தன் கற்பனையைக் காட்டிக்கொண்டு.

"இனிமேல், வேறு ஒருவர் பாட்டு காதிலே விழாதபடி செய்துவிட்டாரே கிருஷ்ண பாகவதர்" என்று பாகவதர் பட்டம் போட்டு, சமத்காரமாகப் பேசினான் ஒருவன். தங்களுக்குக் கிட்டு கொடுத்த இன்பத்திற்காக தங்கள் நன்றியை முகஸ்துதி மூலம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனாலும், அவர்கள் சொன்னதில் உண்மையில்லாமலுமில்லை. அவர்கள் உண்மையிலேயே கச்சேரியை ரஸித்ததனால்தான் கிட்டுவைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

கிட்டுவிற்கு மனம், காற்றாடியைப்போல ஆடிக்கொண்டிருந்தது. அவனுக்கு அன்று, தான் செய்த கச்சேரியில் பரம திருப்தி. ஆகவே அவர்கள் சொன்ன புகழுரைகள் அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தைத்தான் கொடுத்தன. தானும் உலகத்திலேயே, ஓர் ஒப்பற்ற மனிதனாக ஆகி வருகிறோம் என்ற எண்ணம் அவன் மனத்தில் ஒரு பெருமிதத்தைக் கொடுத்தது. எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு, அனுப்பிவிட்டு உள்ளே நுழைந்தான். தன்னுடைய பெருமையில் பங்கு எடுத்துக்கொள்ள உரிமையுள்ள மனைவியை நெருங்கினான். கையிலிருந்த ரோஜாப்பூ மாலையைப் பெருமையுடன், நீலாவிடம் நீட்டினான். ஆனால் அவள் அதை வாங்கிக் கொள்ளவில்லை. சிறிது நேரத்திற்கு முன், பூ வாங்குவதற்குப் பணம் இல்லையே என்று வருத்தப்பட்ட நீலா, அந்தப் பூமாலையைக் கண்டவுடன் பாம்பைக் கண்டதுபோல் வெறுப்படைந்தாள்.

வாசலில் கிட்டு வந்ததையும், அவனுடைய நண்பர்கள் அவனை இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்ததையும் கேட்டுக் கொண்டுதானிருந்தாள். அவர்கள் எல்லோர்மேலும் அவளுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. "ஆகா, ஊஹூ" என்று இவர்களெல்லாம், நன்றாக இவரைத் தூபம் போட்டு

விடுகிறதும், இவர் அதை நிஜமென்று நம்பிக் கூத்தாடறதும், இந்தப் புகழ்ச்சி யாருக்கு வேண்டும்! இந்த மலையளவு முகஸ்துதி ஒரு வேளைச் சாப்பாட்டிற்காவது உதவுமா? என்று பொருமிக் கொண்டிருந்தாள்.

பெருமையுடன் நீட்டிய ரோஜா மாலையை வாங்கிக் கொள்ளாமல், "உங்களுக்குத் தேங்காமூடிக் கச்சேரி பண்ணி விட்டோமென்று பெருமை தாங்கலை. இந்த மாலையைப் போட்டுக்கொண்டு வந்ததற்குப் பதிலாக, செம்பை மாலையாப் போட்டுக்கொண்டு தெருவில் பஜனை பண்ணி உஞ்ச விருத்தி செய்து வந்தால் இரண்டு வேளையும் வயிறாரவாவது சாப்பிடலாம்" என்று விஷத்தைக் கக்குவதுபோல் வார்த்தைகளைக் கக்கினாள்.

கிட்டு அப்படியேஅதிர்ந்துபோய் நின்றான். 'இது என்ன நனவா அல்லது கனவா என்ற மயக்கம்கூட அவனுக்கு உண்டாகிவிட்டது. மனிதர்களுக்குள்ளேயே சிறந்தவன் என்று மாலையிட்டு அழைத்து வந்திருக்கும் தன்னுடைய பெருமையை அறிந்து கொள்ளவில்லையே இந்தப் பேதை. ஆயிரக் கணக்கான ஜனங்களை, இந்த உலகத்தையே மறக்கச் செய்யும் மந்திர சக்தி இருக்கிறது என்பதற்காகப் போட்ட மாலை அது. அவளுக்கு அது பெரிதாகத் தோன்றவில்லை. அந்தராத்மாவின் பசியைத் தணிக்கும் இன்னிசையை வாரி இறைத்துவிட்டு வந்திருக்கும் தன்னிடம், வயிற்றுப் பசியை அடக்கும் அரிசியைக் கேட்கிறாள் இவள்! இத்தனை பேருடைய உள்ளம் என்னுடன் ஒன்றியிருக்கிறது. ஆனால் யாருடைய உள்ளம் என் உள்ளத்தில் உறைய வேண்டுமோ, அதுதான் சேரவில்லை. அட கர்மமே! இந்த அற்பமான புத்தியுடைய வள்தானா எனக்கு வாழ்க்கைத் துணைவியாக வந்து சேர வேண்டும்!' என்று அங்கலாய்த்துக் கொண்டான்.

"வீட்டிலே, சாப்பாட்டிற்கு அரிசி இல்லை, மாப்பிள்ளை மாதிரி மாலையைப் போட்டுக் கொண்டு வந்தால் சாதம் இலையில் தானாக வந்துவிடாது" என்று மேலும் ஊசியினால் குத்தினாள்.

"வீட்டிலேயிருக்கும் பாத்திரங்களில் அரிசியையும் உப்பையும் நிரப்பிவிட்டு, அதற்கப்புறம் உங்கள் சிநேகிதாள் காதுகள் ரொம்ப சங்கீதத்தை நிரப்புங்கள்" என்று சொன்னாள்.

கிட்டுவிற்குச் சகிக்கவேயில்லை. வாயும் உதடும் ஆத்திரத்தால் நடுங்கின. "நீ ஒரு சங்கீதக்காரனுக்கு மனைவியாகப் பிறக்க வேண்டியவள் அல்ல. புத்திகெட்ட மடையன் அந்த பிரும்மா தவறிப்போய் எனக்கு மனைவியாகக் கொண்டு சேர்த்து விட்டான். நீ ஒரு பலசரக்குக்கடைப் பெருச்சாளியாகப் பிறந்திருந்தால், அரிசி உப்புப் புளி எல்லாம் முடையில்லாமல் உன்னிடம் இருந்துகொண்டே யிருக்கும். ஜடமே!" என்று ஆத்திரத்துடன் வாசற்பக்கம் போய் திண்ணையில், துண்டை விரித்துப் படுத்துக்கொண்டான். கச்சேரி செய்த சிரமத்தாலும் நேரமானதாலும் பசி வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்தது. அந்தப் பசியைப் பொறுத்துக்கொண்டு சாப்பிடுவதில்லை என்ற தீர்மானத்துடன் படுத்துக்கொண்டான்.

நீலாவிற்குக் கிட்டு கோபமாகப்போய்படுத்துக்கொண்டு விட்டான் என்பது தெரியும். தான்போய் சமாதானம் செய்ய அவள் விரும்பவில்லை. ஒரு நாள் பட்டினியாகத்தான் கிடக்கட்டுமே என்று பேசாமல் இருந்து விட்டாள். அவளுக்கும் ஆத்திரமாகத்தானிருந்தது. ஆகவே, தானும் சாப்பிடாமல் ஒரு மூலையில் படுத்துக்கொண்டாள். வெகு நேரம் வரையில் இருவரும் தூங்கவேயில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டேயிருந்தனர்.

ஆனுல், கடன்வாங்கி வடித்திருந்த சாதம்மாத்திரம் அடுப்பங்கரையில் வெண்கலப் பானையில் தூங்கிக்கொண்டிருந்தது.

# 21

கிட்டுவின் வாழ்வில் நடக்கும் தினசரி நாடகங்களில் இது ஒருநாள் நடந்தது.

நீலா கூடத்தில் படுத்துக்கொண்டிருந்தாள். கந்தசாமி பாகவதர் கிட்டுவைத் தேடிக்கொண்டு வந்தார். ''கிட்டு!'' என்று கூப்பிட்டார். நீலா அவசரமாக எழுந்திருந்து ''வாருங்கள் மாமா!'' ஏன்று கூப்பிட்டாள். கந்தசாமி பாகவதர் குடும்பத்தின் அத்யந்த நண்பரான படியால், நீலா சகஜமாக அவருடன் பேசுவாள்.

''எங்கே கிட்டுவைக் காணோம்?'' என்று உள்ளே வந்தார்.

''கல்யாண வீட்டிற்குச் சாப்பிடப் போயிருக்கிறார்'' என்றாள் நீலா.

''சரி, நான் வருகிறேன்'' என்று திரும்பினார் கந்தசாமி பாகவதர்.

''உட்காருங்கள். அவர் வரும் நேரமாகிவிட்டது'' என்று இருக்கச் சொன்னாள்.

''என்ன, சாவகாசமாகப் படுத்துக்கொண்டு விட்டாய்?'' என்று கேட்டுக்கொண்டபடியே உட்கார்ந்தார் பாகவதர்.

''எனக்கு எப்பொழுதும் சாவகாசம்தான்'' என்றாள்.

''சமையல் ஆயிடுத்தோ?'' என்றார்.

''சமையலும் ஆயிடுத்து, சாப்பாடும் ஆயிடுத்து'' என்றாள் நீலா.

ஆனால் சமையல் ஆனதற்கான சின்னம் ஒன்றையும் காணோமே என்று ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்த பாகவதர் ''விசிறி கொண்டுவா!'' என்றார்.

விசிறியைக் கொண்டு வந்து கொடுத்தாள் நீலா.

வாசலில் யாரோ "நீலா!" என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தாள். நீலா வந்தவளைப் பார்க்கப் போனாள். அடுத்த வீட்டுப்பெண் ஒரு கிண்ணத்தைத் தூக்கிக்கொண்டு வந்தாள். "நீலா! குழந்தை ரொம்பக் கத்தறான். ஆத்திலே சாதம்தான் ஆயிருக்கு. குழம்பு, ரசம் ஏதாவது வைத்திருந்தால் கொடு, சமையல் பண்ண விடமாட்டேங்கிறான்" என்றாள்.

நீலாவிற்கு மிகவும் கஷ்டமாகிவிட்டது. அன்று அவள் சமைக்கவேயில்லை. அதை வெளியே சொல்லவும் அவளுக்கு அகௌரவமா யிருந்தது. ஆகவே, அவள் "அவருக்கு வெளி யிலே சாப்பாடு. எனக்குக் காலையிலிருந்து உடம்பு சரியா யில்லை. ஆகையினால், நான்சமைக்கவில்லை. குழந்தைக்கென்று நீ வந்து கேட்கும்பொழுது என்னிடம் கொடுப்பதற்கு இல்லையே அம்மா!" என்று மெதுவாக, கந்தசாமி பாகவதர் காதில் விழாதபடி சொன்னாள்.

அடுத்தவீட்டுப் பெண்ணோ "அதனாலென்ன நீலா. சமைக்கலேன்னா என்ன பண்ணுவே?" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அவள் பதிலுக்குச் சொன்னது கந்தசாமி பாகவதர் காதில் விழுந்தது. அவர் ஓர் அளவு விஷயத்தை ஊகித்துக்கொண்டார்.

"ஏன் அம்மா, சமையல் செய்யவில்லையா? என்னிடம் உண்மையைச் சொல்லக்கூடாதா?" என்றார்.

"இல்லை மாமா. உங்களிடம் சொன்னால் என்ன? அவருக்கு வெளியே சாப்பாடு. எனக்கு மாத்திரம் என்ன சமையல் என்று சமைக்கவில்லை. பழையது கொஞ்சம் இருந்தது. அதைச் சாப்பிட்டுவிட்டுச் 'சிவ'னேன்னு படுத்து விட்டேன்."

"நீ பலே கெட்டிக்காரின்னா!"

"கெட்டிக்காரியாவது மாமா! நான்தான் என் வயத்தை யும் வாயையும் கட்டிக்கொண்டு காலத்தைத் தள்ளவேண்டி யிருக்கு. அவருக்கு ஒரு கவலையும் இல்லை. எல்லாக் கஷ்டமும் என் தலையில்தான் விழறது" என்று சொல்லும்பொழுதே கோபமும் துக்கமும் அவளைப் பேசவிடாமல் வாயை அடைத்தன.

"என்னம்மா மனசு நொந்துகொள்ளுகிறாய்! உலகத்திலே இது சகஜம்தானே! ஒரு காலத்திலே கஷ்டம் இருக்கும்; ஒரு காலத்தில் சுகம் வரும். இது எல்லோருக்கும் ஏற்படும் அனு பவம் தானே?" என்றார் பொதுப்படையாக.

"இல்லை மாமா. அவருக்குக் குடும்பக் கவலையே கிடையாது. வித்வானயிருந்துவிட்டால் போதுமா? குடும்பத்தை நடத்தணுமே என்ற கவலையிருந்தால் அவர் இப்படி விட்டேற்றியா, சங்கீதமுண்டு தானுண்டு, வேறு உலகமேயில்லை என்று இருக்கமுடியுமா?'' என்றாள்.

"அப்படிச் சொல்லாதே அம்மா! கிட்டு சாதாரண மனிதனயிருந்தால், உலகத்தாரைப் போலவே, லௌகிக வாழ்விலே ஈடுபட்டு இருப்பான். அவன்நநாதயோகி நாதோபாசனையில் ஈடுபட்டு இருப்பவன். அவனைக் குறை சொல்வதில் பயன் இல்லை'' என்று கிட்டு சார்பில் பேசினார்.

"என்ன மாமா, நீங்களும் அவர் பக்கம் பரிந்துகொண்டு பேசுகிறீர்கள்? நம் சரீரமெல்லாம் சதையாலும் ரத்தத்தாலும் தானே பண்ணியிருக்கிறது? வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ளாமல் என்ன நாதோபாசனை வேண்டியிருக்கிறது?'' என்றாள்.

அவள் சொல்லுவதில் உண்மை இல்லாமலில்லை என்பது கந்தசாமி பாகவதருக்குத் தெரியும். அவரே எவ்வளவோ தரம் கிட்டுவிற்கு நடைமுறையில் லௌகிகத்தைப் போதிக்க முயன்றிருக்கிறார். ஆனால் அது ஒன்றும் பயனளிக்கவில்லை.

"முன் காலத்தில் பெரியோர்கள், உலகத்திலே தாமரையிலைத் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கிட்டு உலகத்திலே படவே மாட்டேனென்கிறான். அது அவன் வகுத்துக் கொண்ட வழி. அவனை எப்படித் திருப்புவது?''

"என்னவோ மாமா. அவரிடம் திறமையில்லாமல் இல்லை. வித்தையை வைத்துக்கொண்டு எதற்காகக் கஷ்ட ஜீவனம் நடத்த வேண்டும்?'' என்றாள்.

"நானும் எவ்வளவோ சொல்லியிருக்கிறேன். அவன் கேட்டால்தானே? உத்தமபாளையம் ஜமீன்தார் வேண்டிய மட்டும் சொல்லியனுப்பினார். அவரிடம் போயிருந்தால், எவ்வளவோ சௌகரியமாயிருந்திருக்கலாம். கிட்டு கண்டிப்பாய் முடியாது என்று சொல்லிவிட்டான். 'அந்த மூர்க்கனிடமா போயிருக்கிறது? அதற்குப் பதிலாகப் பட்டினி கிடக்கலாம்' என்று சொல்லிவிட்டான்.''

"பட்டினி கிடக்கலாம்; அவர் எங்கே கிடக்கிறார்? நான் தான் கிடந்து சாக வேண்டியிருக்கிறது.''

"அது மட்டுமா? இவன் வாயைத் திறந்தால் பொன்னும் மணியும் வந்து குவியும். இவன்தான் அதை வரவிடவே மாட்டேன் என்கிறனே!"

"அவர் ஏன் வாயைத் திறப்பார்? அவர் வாயடைத்துக் கிடக்கும், என் வயிறு அடைத்துக்கிடக்கும். நன்னு அவருக்குச் சொல்லுங்கள் மாமா!" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே கிட்டு வந்துவிட்டான்.

"என்ன கிட்டு, விருந்து பலமோ?" என்று கேட்டார் கந்தசாமி பாகவதர்.

"பலந்தான்" என்றுன் கிட்டு.

"நீ நல்ல விருந்து சாப்பிட்டு வந்து விட்டாய். பாவம், நீலாதான் பட்டினி" என்று ஆரம்பித்தார் பாகவதர்.

"ஏன், அவளும் விருந்து பண்ணிக் கொள்ளுகிறது தானே? யார் வேண்டாமென்றுர்கள்?" என்றுன் கிட்டு.

"ஆம். நான் இருக்கும் சவரணைக்கு, எனக்கு பஞ்ச பக்ஷ்ய பரமான்னத்தோடே விருந்து இல்லேன்னுதான் அழறது" என்று போர் தொடுக்க ஆரம்பித்தாள் நீலா.

"இதோ பார் கிட்டு......" என்று கந்தசாமி பாகவதர் ஆரம்பித்தார்.

கிட்டுவிற்கு, நீலா சண்டைக்குக் கங்கணம் கட்டிக் கொண்டு பாகவதரையும் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டு விட்டாள் என்பது நன்கு விளங்கிவிட்டது. "என்ன மாமா, உங்களிடம் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாளோ?" என்றுன்.

"கிட்டு, அவள் சொல்வதில் குற்றம் என்னப்பா? நீ விவேகி. உனக்குத் தெரியாதது இல்லே. கொஞ்சம் யோசித்துப்பார். சந்நியாசிகள் கூட, பிக்ஷை ஒரு வீட்டில் கேட்டு, கிடைக்காவிட்டால் தான் பட்டினிகிடக்க வேண்டுமென்று பெரியவர்கள் வகுத்திருக்கிறுர்கள். செல்வம் உன்னிடம் வரத் தயாராயிருந்தாலும், நீ அதை வரவிட மாட்டேனென்கிறுய்."

"நீங்கள் என்னே என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்னுன் கிட்டு நிதானமாக.

"பணம் உன்னிடம் வருவதாயிருந்தால் அதை வெறுத்து உதறித் தள்ளாதே."

"மாமா, உங்களுக்கு ஒட்டகத்தின் கதை தெரியுமா? அது ஒண்டுவதற்குத் துளி இடம்தான் கேட்டது. ஆனால் அந்தத் துளி இடம் கொடுக்கவும், அது கூடாரம் முழுவதிலும் புகுந்து கொண்டு உள்ளேயிருந்தவனை விரட்டி விட்டது. பணமும் அத்தன்மையதுதான். நாம் மனத்தில் அதற்குக் கொஞ்சம் இடங்கொடுத்துவிட்டால், அது மற்ற எல்லாவற்றையும் துரத்திவிட்டுத் தானே தனி அரசு செய்யும். அதனால்தான் அதற்கு இடங்கொடுக்க மறுத்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் பெரியவர்கள். தியாகப்பிரும்மத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். அந்தப் பரம்பரையில் வந்தவன் நான். அந்த மகாபுருஷனின் நாமத்தை ஞாபகப் படுத்திக் கொண்டு வாழ முயல்கிறேன். நீங்கள் என்னை லோக வாழ்வில் ஈடுபடுத்த முயல்கிறீர்கள்!" என்றான்.

"அது சரிதானப்பா. தியாகப் பிரும்மத்திற்கு முன்னும் பின்னும் கோடிக்கணக்கான மக்கள் இருந்துதான் இருக்கிறார்கள். ஆனால், தியாகப் பிரும்மம் ஒருவர்தான் உலகத்துக்குக் கிடைத்தார். அந்த மகானின் வாழ்க்கை எல்லாருக்கும் கிடைப்பது சாத்தியமா?"

"நான் சொல்லுகிறேன் கேளுங்கள். மனித சமூகம் புற்றீசல் மாதிரி, கோடிக்கணக்காகப் பிறந்து வாழ்ந்து மடிந்திருக்கிறது. ஆனால், மனிதனைப் புற்றீசலைப் போன்ற ஜீவ ராசியிலிருந்து பிரித்து, அவனுக்கு மனிதத் தன்மையை ஊட்டியது யார்? தியாகப் பிரும்மம் போன்ற மகாத்மாக்கள் தான் அவரைப்பின்பற்றி நடப்பது உலக வாழ்விற்கு முற்றிலும் நடைமுறைக் குதவாத வகையில் கஷ்டமாயிருக்கலாம். இருந்தாலும், அப்படி வாழ்ந்ததனால்தான் ஜனசமூகத்தின் மதிப்பை அவர்களால் உயர்த்த முடிந்தது" என்றான்.

"ஜனக மஹாராஜன் சக்ரவர்த்தியாக இருந்து கொண்டே பிரும்ம ஞானியாக இருக்கவில்லையா? நம் மனது தானே காரணம் பந்தத்துக்கும் மோக்ஷத்திற்கும்! அதைக் கட்டுப் படுத்திவிட்டால் பணமும், மற்றவையும் என்ன செய்ய முடியும்?"

'மாமா நான் என்ன ஜனக மஹாராஜாவா? ஜனக சக்ரவர்த்திக்கிருந்த, மனப்பக்குவம் இருந்துவிட்டால் நான் ஏன் இப்படி விவகாரம் செய்து கொண்டிருக்கிறேன்? அந்தப்

பக்குவம் வருவதற்குத்தான், எல்லாவற்றையும் ஒடுக்கி நாதோபாசனையில் ஈடுபட்டு வருகிறேன்.''

''கிட்டு, நீ சொல்லுவதெல்லாம் ரொம்பவும் சரியாகத் தானிக்கிறது. நான் அதையெல்லாம் ஆட்சேபிக்கவில்லை; ஒப்புக்கொள்ளுகிறேன். இருந்தாலும் நான் சொல்வதையும் கேட்டுக்கொள். நம்முடைய கண்ணும் தலையும் ஆகாசத்தைப் பார்த்தாலும் நம் கால்கள் என்னவோ பூமியிலேதான் பதிந்திருக்கின்றன. ஆத்மாவின் பசியைத் தீர்ப்பதற்கு முன்னால், வயிற்றுப் பசியைத் தீர்க்கவேண்டி இருக்கிறது. எனக்கென்னவோ, நீ உத்தம பாளையம் ஜமீன்தாரிடம் இருப்பதாக ஒப்புக் கொண்டாயானால், உன் லட்சியத்திற்கும் பங்கம் வராமல், வாழ்க்கைக்கும் சங்கடம் இல்லாமல் இருக்கலாமென்று தோன்றுகிறது. இன்றும் உன்னை அழைத்து உபசரிக்க அவர் தயார்.''

''மாமா, இதைப்பற்றி முன்பே பேசியிருக்கிறோம். அந்த ஜமீன்தார் இருக்கிறாரே ரஸிகர்தான் இருந்தாலும் அகம்பாவக்காரர். நானோ, என் வித்தை சம்பந்தப்பட்ட வரையிலும் ஒருவருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டேன். ஒருவருக்கும் அடங்கி நடக்க மாட்டேன். அது எப்படி இரண்டும் சரிப்பட்டு வரும்? தவிரவும், உங்களுக்கு ஹரிதாஸ் சுவாமியின் கதை தெரியுமா?

''தான்சேன் ஒரு சமயம் அக்பர் சக்ரவர்த்திக்கு முன்னால் பாடிக்கொண்டிருந்தான். அற்புதமாகப் பாடிவிட்டான். 'தான்சேன், உலகத்திலே உனக்கு மிஞ்சியவன் ஒருவரும் கிடையாது' என்று புகழ்ந்தாராம் சக்கரவர்த்தி. 'இல்லை ஒருவர் இருக்கிறார். அவர் என் குருநாதர் ஹரிதாஸ் ஸ்வாமி' என்றான் தான்சேன். சக்கரவர்த்திக்கு அப்படிப் பட்டவருடைய சங்கீதத்தைக் கேட்க வேண்டுமென்ற ஆசை துடி துடித்தது. ஆனால், ஹரிதாஸ் சுவாமி சக்ரவர்த்தியிடம் வர மாட்டாராகையால், அக்பர் சக்ரவர்த்தி, தான்சேனுடைய சிஷ்யன் போல வேஷம் போட்டுக்கொண்டு பிருந்தாவனத்திற்குச் சென்றார். தான்சேன், குருவிற்கு முன்னால் ஏதோ பாட்டை ஆரம்பித்து, அதை வேண்டுமென்றே தப்பாகப் பாடினான். குருதேவர் அதைத் திருத்துவதற்குப் பாடிக் காட்டினார். அப்படியே தொடர்ந்து பாட ஆரம்பித்து விட்டார். பாட்டிலே லயித்து மெய்மறந்து மூர்ச்சையாகி விட்டார். அக்பர் தான்சேனைப் பார்த்து, 'இது என்ன

தேவகானம்! இவர் பாட்டிலே மாத்திரம் இந்தத் தெய்விக சக்தி எப்படி வந்தது?' என்று கேட்டார். அதற்குத் தான் சேன் சொன்னான். "அவர் என்னைப்போல் அரசர்களுக்காகப் பாடுவதில்லையே! அந்தர்யாமிக்காகத்தானே பாடுகிறார்!" என்றான். அக்பரும் ஒப்புக்கொண்டு பேசாமல் இருந்தார்.

"இதை எதற்காகச் சொல்ல வந்தேனென்றால், பொழுது போகாதவர்களை உல்லாசப்படுத்துவதற்கான பொழுது போக்கல்ல சங்கீத வித்தை. அற்பமான மனிதன் ஆனந்த மயமான தேவனின் பிரதிநிதி என்பதை ஞாபகப்படுத்தும் அற்புத சக்திதான் சங்கீதம். அதை நான் அரியாசனத்திலிருந்து கீழே இறக்கி, பூமி மண்ணில் சூரையிட்டு மிதிக்க மாட்டேன்" என்றான்.

"உன் கட்சிப்படி நீ சொல்வது முற்றிலும் சரிதான். ஆனால், நீலா சொல்வதிலும் உண்மை இல்லாமலில்லை. அதையும் அனுசரித்துப் போவதுதான் உனக்கு அழகு" என்றார்.

"அது எப்படி சாத்தியம்? என் வழி கிழக்கே போய்க் கொண்டிருக்கிறது; அவள் வழி மேற்கே பார்த்து இருக்கிறது அது எப்படி ஒன்றுசேரும். யாராவது ஒருவர்தான் தன்னைத் திருப்பிக்கொள்ள வேண்டும். நான் என்னை மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை" என்று சொல்லிவிட்டான் கிட்டு.

"எனக்கு ஒன்றும் வழி தெரியவில்லை. உங்கள் விவகாரத்தைத் தீர்ப்பதற்கு" என்று சொல்லிவிட்டு எழுந்திருந்தார் கந்தசாமி பாகவதர். கிட்டு தலையைக் குனிந்தபடி எழுந்திருந்த அவரை வெளியே அனுப்ப் வாசற் பக்கம் போனான். நீலா முகத்தைக் கடுகடுப்பாக்கிக் கொண்டு, பல்லைக்கடித்துக் கொண்டு உள்ளே போனாள்.

சபேசய்யரின் பேரன் மகாதேவன் திடீரென்று ஒரு நாள் வந்து சேர்ந்தான். கிட்டுவை அவன் இரண்டு மூன்று தரம் சந்தித்திருந்த போதிலும், அவன் வீட்டிற்கு வந்து இதற்கு முன் தங்கியிருக்கவில்லை. கிட்டுவின் யோக க்ஷேமங்களைப் பற்றி அவனுடைய பாட்டி தருமாம்பாள் மூலம் கேட்டிருக்கிறபடியால், நீலாவும் கிட்டுவும் எப்படிக் குடித்தனம் செய்கிறார்கள் என்பதை அறியவும் நினைத்திருந்தான்.

மகாதேவன், கிட்டுவுடன் ஆரம்பத்தில் சபேசய்யரிடம் சங்கீதத்தை அப்பியசித்தாலும் இப்பொழுது அதை அறவே விட்டொழித்து விட்டான். பண விஷயத்தில் ஆள் மிகவும் கெட்டி. ஒரு மளிகைக்கடையில் கணக்கு எழுதச் சேர்ந்து, இப்பொழுது அந்தக் கடை கூட்டாளியாகி, நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டு நல்ல நிலையில் இருந்துவந்தான். ஆரம்பத்திலிருந்தே கிட்டுவைக் கண்டால் அவனுக்கு ஆகாது. தனக்கு சங்கீதம் வரவில்லை; கிட்டுவிற்கு நன்றாக வருகிறது என்பது ஒரு காரணம். எங்கிருந்தோ வந்த ஒரு அநாதைப் பையன், தன் பாட்டனாரின் பிரியத்தைச் சம்பாதித்துக் கொண்டானே என்பது ஒரு காரணம். இந்த இரண்டு காரணங்களினாலும், அவனுக்குக் கிட்டுவிடம் எப்பொழுதும் அசூயை உண்டு. இப்பொழுது கிட்டு உலகம் போற்றும் உயர்ந்த சங்கீத வித்வானாக ஆகிவிட்டான் என்பதிலும் ஒரு அசூயை இல்லாமலில்லை. இருந்தாலும் தான் அவனைவிட நல்ல ஸ்திதியில் இருக்கிறோம் என்று சமாதானம் செய்து கொண்டு திருப்திகொண்டிருந்தான்.

மகாதேவன் வந்த சமயத்தில் கிட்டு வெளியே போயிருந்தான். நீலா, மகாதேவனை வரவேற்று உபசரித்தாள். தன்னுடைய நெருங்கிய பந்து என்ற முறையில் அவன் வந்தது அவளுக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. யோக க்ஷேமங்களைப்பற்றி இருவரும் பேசிக்கொண்டிருந்தபின், மெதுவாகக்கிட்டுவின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றிக்கேட்க ஆரம்பித்தான்.

''என்ன, இப்போ கிட்டு பெரிய ஆளாப் போயிட்டான்'' என்று ஆரம்பித்தான் மகாதேவன்.

''என்ன பெரிய ஆள் வேண்டிக்கிடக்கு'' என்று சலிப்புடன் பதிலளித்தாள் நீலா.

அதன் தாத்பரியத்தைப் புரிந்துகொண்ட மகாதேவன், ''ஏன் நீலா, சிரமமில்லாமல் ஜீவனம் நடத்த முடியற தோல்வியோ?'' என்று கேட்டான்.

''இதோ பாரேன். வீட்டைப் பார்த்தாலே தெரியல்லே?'' என்று வீட்டைக் காண்பித்தாள்.

கொடியிலே உலர்த்தியிருந்த கிழிசல் வேஷ்டி, ஓட்டைச் சொம்பு, ஜீரணமான பாய் எல்லாம் வறுமையைப் பிரகடனம் செய்வதாயிருந்தன. அதைப் பார்த்துவிட்டு, அதிருப்தியைக் காட்டும் முகத்துடன், ''இந்தக் காலத்திலே, வித்தையை வைத்துக் கொண்டிருந்தால் போதாது. வித்தையைப் பணமாக்கும் வித்தைதான் அதைவிடப் பெரிய வித்தை. அது தெரியாதவன் பிழைக்கத் தெரியாதவன் தான்'' என்று தன்னுடைய தத்துவத்தை விளக்கிக் காட்டினான்.

நீலாவிற்கு மகாதேவன் அப்படிச் சொன்னது மிகவும் உற்சாகத்தைக் கொடுத்தது. தான் நினைப்பது போலவே மகாதேவன் நினைப்பது அவளுக்கு ஒரு தெம்பைக் கொடுத்தது.

''மகாதேவா, நீ சொல்வது நூற்றிலே ஒருவார்த்தை. உன் வாய்க்குச் சர்க்கரை போடணும். வித்தை, யோக்யதை என்று சொல்லிக்கொண்டிருந்தால் காலட்சேபம் எப்படி நடக்கும்?''

''நான் சொல்லுகிறேன் கேள் நீலா! வித்தை, யோக்கியதையெல்லாம் கவைக்குதவாத விஷயங்கள். நான் வியாபாரத்தில் தானே இருக்கிறேன்? எனக்குத் தெரியும் பணத்தின் பெருமை. வித்தைக்கும் யோக்யதைக்கும் ஒரு தம்பிடி சாமான் கடன் கொடுக்கமாட்டேன். எந்த மனிதனிடமும் கடன் கொடுத்தால் பணத்தைத் திருப்பிக்கொடுக்க நாணயமும், வசதியும் இருக்கிறதா என்றுதான் பார்ப்பேன். அது இல்லாத போனல், ஒன்றுக்கும் பிரயோசனமில்லை'' என்று சொன்னான்.

நீலாவிற்கு அவன் சொன்னது மேலும் தைரியத்தைக் கொடுத்தது. ''மகாதேவா, வந்தது வந்தே. அவருக்கு இது

எல்லாம் புரியும்படியாகச் சொல்லி, அவரைத் திருத்தி விட்டுப்போ உனக்கு மிகப் புண்ணியம் உண்டு. எனக்கு வரவரக் கொஞ்சம்கூட இந்தத் தொல்லைகள் எல்லாம் சமாளிக்க முடியவேயில்லை'' என்ருள்.

''நன்ருயிருக்கு நீலா, நான் சொல்றேன். இருந்தாலும் அவன் லட்சியம் பண்ணிக் கேட்பான?''

''நீ என்ன அவருக்கு நல்லதைத்தானே சொல்லப் போறே? நல்லகால மிருந்தால் கேட்கிருர். இல்லாவிட்டால் எக்கேடாவது கெட்டுப் போகட்டும்'' என்று சொன்ஞள்.

''எனக்கென்ன அம்மா, நன்ருகச் சொல்கிறேன். நீ கஷ்டப்படறதைப் பார்த்தாக் கஷ்டமாகத்தானிருக்கு. நான் சொல்றதைக் கேட்கணும்னுதான் பிரார்த்தனை'' என்று சொன்ஞன்.

நீலா சமையல் காரியங்களைக் கவனிக்கப் போய் விட்டாள். சிறிது நேரம் கழித்து கிட்டுவும் வந்துவிட்டான். மகாதேவனைப் பார்த்ததும், கிட்டுவிற்கு மிகவும் சந்தோஷ மாக இருந்தது. மிகவும் கலகலப்புடன் ''வாப்பா, மகா தேவா, வா, வா. ஏது இப்படி வழி தெரியாமல் வந்து விட்டாய்?'' என்று உபசரித்துக் கொண்டே அருகில் வந்தான்.

''வழி தெரிந்து, உன்னையும் நீலாவையும் பார்க்கவேண்டு மென்றுதான் வந்தேன்'' என்ருன்.

''நீ என்ன பண்ணிக்கொண்டிருக்கே?'' என்ருன்.

''என்ன பண்ணுவது? சங்கீதத்திற்கு முழுக்குப் போட்டு விட்டு தொழில் செய்து கொண்டிருக்கிறேன். ஏதோ கொஞ்சம் சௌக்கியமாகத்தானிருக்கிறேன்'' என்ருன்.

''ஏதோ, சௌகரியமா யிருந்தால் சரி'' என்ருன் கிட்டு.

''நீதான் இப்பொழுது சங்கீத சக்ரவர்த்தியாயிருக்கே! எங்கே பார்த்தாலும் உன்னுடைய பெயர் பிரபலமாகத் தானிருக்கு'' என்ருன் மகாதேவன். அந்தச் சமயத்தில் உள்ளிருந்து வந்த நீலா, ''இந்தச் சக்ரவர்த்தியின் ராஜ்யத் தில், தரித்திரதேவிதான் ராஜ்யபாரம் பண்ணுகிருள்'' என்று சொன்ஞள்.

சரி, இவள் மறுபடியும் ஒரு யுத்தத்திற்குத்தான் அடி கோலுகிருள் என்று அறிந்துகொண்டு கிட்டு, பேசாமலிருந்

தான். மகாதேவனிடம் சந்தோஷமாகப் பேசவேண்டும், பால்ய நினைவுகளை மறுபடியும் நினைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமெல்லாம் தவிடுபொடியாகி விட்டன. தான் ஒரு குற்றவாளியாகி அவளுடன் எதிர்க்கட்சி ஆடவேண்டுமே என்ற கவலைதான் அவனை அப்பொழுது ஆட்கொண்டிருந்தது.

மஹாதேவனுடன் கிட்டு சாப்பிட உட்கார்ந்தான். இருவருக்கும் பரிமாறிக் கொண்டிருந்தாள் நீலா.

"ஏதோ அப்பா, என் கையாலானதைச் செய்திருக்கேன். உனக்கு நன்னு வயணமா வேணும். என்னைக் கோவிச்சுக் காதேப்பா'' என்றாள்.

''மகாதேவன் என்ன ஆத்துப் பேர்வழிதானே. சம்பந்தியா?'' என்று தானும் சேர்ந்துகொண்டான் கிட்டு.

''அதெல்லாம் சரிதானப்பா. நான் என்ன அந்நியனா?'' என்று சொல்லிக்கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ''சமீபத்திலே ஏதாவது கச்சேரியிருக்கோ?'' என்று கேட்டான் மஹாதேவன்.

அதற்குக் கிட்டு பதில் சொல்லுமுன், "கச்சேரி இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன மஹாதேவா? பிரயோசனமில்லாத கச்சேரிகள். ஒரு கச்சேரி பண்ணிவிட்டு வந்து கை நிறைய ரூபாய் அள்ளிக்கொண்டு வந்தோம் என்ற பேச்சில்லை. என்ன கச்சேரி வேண்டியிருக்கு!'' என்றாள் நீலா.

''நான் சொன்னால் உனக்குக் கோபம் வருமோ என்னவோ கிட்டு. உன் அளவு வித்தையில் யோக்யதை எனக்கு இருந்தால் இந்த உலகத்தையே ஜயித்துக்கொண்டு வந்து விடுவேன்'' என்றான் மகாதேவன்.

''நீ செய்வாய் அப்பா, அதில் சந்தேகமில்லை. ஆனால் நான் உலகத்தை ஜயித்து என்ன காணப்போகிறேன்? என்னையே நான் ஜயித்துக்கொண்டால் அது போதும் எனக்கு'' என்றான் கிட்டு.

''உன்னை ஜயித்து என்ன சுவர்க்கத்தைக் காணப் போகிறாய்?''

'' நம்முடைய பெரியவர்கள் அடைந்ததைத்தான் அடைய விரும்புகிறேன்.''

''அடுத்த ஜன்மாவிலும், நம் பிற்காலத்திலும் சுகம் அடைவதற்காக இந்த ஜன்மாவைப் பாழ்படுத்தவும் கஷ்டத்தை வரவேற்றுத் திண்டாடவும் வேணுமா? இது புத்திசாலித்தனமான காரியமாய்த் தெரியவில்லை அப்பா.''

''புத்திசாலித்தனமான காரியமாகஇல்லாமலிருக்கலாம். எறும்புகூட மழைகாலத்திற்குத் தேடிவைத்துக் கொள்கிறது. இந்த நிமிஷம் தான் சதம் என்று நினைக்கிறவர்களுக்குச் சிரமமேயில்லை. ஜன்மாந்தரங்களுக்கு நல்லது தேடவேண்டும் என்று நினைப்பவனுக்குத்தான் சங்கடம்.''

''கிட்டு, இந்த வாய்வீச்சு வேதாந்தம் யாருக்கு வேண்டும்? கொண்ட பெண்டாட்டிக்குப் பொங்கிப்போட அரிசிக்கு உதவுமா? அதைக் கொண்டு வருவதைவிட்டு இந்த ஆகாசப்பந்தல் போடுவது கொஞ்சமேனும் சரியான காரிய மாகாது'' என்றான்.

இதைச் சொன்னதும் கிட்டுவுக்குச் சுருக்கென்று தைத்தது. தன்னுடைய வறுமையைத்தான் அவன் குத்திக் காட்டுகிறான் என்பதனால் அவன் மனம் புண்பட்டு இருந்தது. நீலாவிற்கு இந்த வார்த்தைகள் மிகுந்த திருப்தியைக் கொடுத்தன. இந்த மட்டிலும், மகாதேவன் தன் புருஷன் நெஞ்சில் உறுத்தும்படி சொல்லி விட்டானே என்று உள்ளூற மகிழ்ந்து கொண்டிருந்தாள். மகாதேவனுக்கும் தான் சொன்னதில் திருப்திதான். நீலா வெற்றியுடன் மகா தேவனைப் பார்த்தாள். மகாதேவனுக்கு மேலும் மட்டம் தட்டிவிட வேண்டுமென்று தோன்றியது.

''ஏன் அப்பா, நீ ஒரு மகாவித்வான்தான். அதற்காக உன் மனைவி பட்டினிகிடக்க வேண்டுமென்று சொல்லு கிறாயா? உன் வித்வத்திற்கும் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டதற்கும் அதுதானா அவள் காணும் பலன்?'' என்றான்.

நீலாவின் மனோவேகம், கொந்தளித்துக்கொண்டு குமிழி யிட்டு வந்தது.

''வேறு என்ன பலனைக் கண்டேன் மகாதேவா? அவர் பாடும்போதெல்லாம், 'நீசா, நீசா' என்று என்னை சாகச் சொல்லிப்பாடுகிறார். ஆனால் 'சிற்றுணி சிற்றுணி செத் தாயோ. நான் ஏன் சாவேன் சேவுகனே,ன்னு நான்தான் சாகவில்லை. அவர் பாட்டுப்பாடிக் கொல்லணும்னுதான் பார்க்கிறார்'' என்றாள் நீலா.

கிட்டுவிற்குத் தலை சுழன்றது. இது என்ன அபசாரம்! தன்னையா இவர்கள் அவமதிக்கிறார்கள்? சங்கீதத்தை அவதூறு செய்கிறார்கள். சரஸ்வதி தேவிக்கே அபசாரம் செய்கிறார்கள். சரஸ்வதி தேவியை உபாசித்த சங்கீத உபாசகர்களை அவமதிக்கிறார்கள் என்று அவன் மனம் துடிதுடித்து நின்றது. கையில் எடுத்த கவளம் நழுவி இலையில் விழுந்தது. "ராம, ராம! இனிமேல் என்னால் கேட்க முடியாது. மகாதேவா, நீயும் சரி, அவளும் சரி, பெரிய சங்கீத பரம்பரையில் பிறந்தவர்கள்; என் குருநாதன், அந்த மகானுடன் ரத்த சம்பந்தம் கொண்டவர்கள். இப்படிக் கன்னாப்பின்னாவென்று பிதற்றவேண்டாம். அவருடைய ஆத்மாவிற்கு இந்த வார்த்தைகள் சாந்தியைக் கொடுக்காது'' என்றான்.

''நாங்கள் வெறும் இரத்த சம்பந்தம் கொண்டவர்கள் தான். ஆனால், நீயோ, அந்த மகானின் சாட்சாத் சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவன். அவருடைய ஆத்மாவின் வாரிசு நீதான். கட்டின மனைவியைத் திண்டாட விட்டுக் கொண்டு நாதோபாசனை செய்கிறாய் என்பதை அந்த ஆத்மா அறிந்தால், மிகவும் சாந்தியைத்தான் அடையும்!'' என்றாள்.

கிட்டுவின் நெஞ்சில் ஈயத்தை உருக்கி வார்த்ததுபோல் வந்து விழுந்தன அந்த வார்த்தைகள். நீலாவைப் பார்க்கும் பொழுது அவளை அப்படியே வெட்டி எறிந்துவிடலாம் போலத் தோன்றியது.

''நான் செய்த தீவினையெல்லாம் எனக்கு உன் ரூபத்தில் தானா வந்து தொலையவேண்டும்!'' என்று சொல்லிக் கொண்டே, பாதி சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் எழுந்திருந்து கையை அலம்பிக் கொண்டு வேகமாக வெளியே சென்றுவிட்டான்.

எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்ற நினைவு இல்லாமல் கால் இழுத்துச் செல்லும் பக்கம் போய்க் கொண்டிருந்தான் கிட்டு. ஆனால் அவனை அறியாமல், அவன் பஜனை மடத்துப் பக்கம் போனான். அவன் பஜனை மடத்து வாசலுக்குப் போவதற்கும், கந்தசாமி பாகவதர், உள்ளிருந்து வெளியே வருவதற்கும் சரியாயிருந்தது. அவன் தோற்றத்திலிருந்து, ஏதோ விசேஷம் என்பதை அறிந்து கொண்டார் அவர். "கிட்டு" என்று கூப்பிட்டார். கிட்டு அதைக் கவனிக்காமலேயே போய்க்கொண்டிருந்தான். பாகவதரும் பின் தொடர்ந்து சென்று, உரத்த குரலில் "கிட்டு, எங்கே போறே?" என்று கேட்டார். அதைக்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் முகம் கோபத் தாலும் துக்கத்தாலும் அறுந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவன் நெஞ்சின் படபடப்பு நிற்கவில்லை. கண்ணிலிருந்து ரத்தம் தெறிப்பதுபோல், தாபம் தெறித்துக் கொண் டிருந்தது.

"என்னப்பா விசேஷம், ஒரு மாதிரியாய் இருக்கிறாயே?" என்று கேட்டார்.

கிட்டு பதில் சொல்லவில்லை.

அவன் இருந்த நிலையைக் கண்டுகொண்டு, 'இங்கே வா, இப்படி உட்காரலாம்' என்று மண்டபத்தின் மூலையில் உட் கார்ந்தார். இயந்திரம்போல் கிட்டுவும்கூட உட்கார்ந்தான். "என்ன சமாசாரம் கிட்டு?" என்று கேட்டார்.

"என்னை ஒன்றும் கேட்காதீர்கள்" என்று சிள்ளென்று விழுந்தான் கிட்டு.

"கோபப்படாதே. கோபப்பட்டு ஆகக்கூடிய காரியம் என்ன? என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

"நான் பிராணனை விடணும். சந்நியாசி யாகணும். இல்லாத போனால் எங்கேயாவது தொலையணும். இதைத் தவிர வேறு வழி ஒன்றும் எனக்குத் தெரியவில்லை."

''இதில் எது ஒன்றையும் செய்வதற்கு உனக்கு அதிகாரம் இல்லை. இவ்வளவு கசப்பு எதனுலோ?''

''என்ன மாமா! பொழுதுவிடிந்தால் இதே அலைக்குடுப் பாய்ப் போய்விட்டது. இந்த வீட்டின் தொண தொணப்பு எனக்குப் பொறுக்கவேயில்லை. எலியும் தவளையும் கயிற்றைக் கட்டிக்கொண்ட கதையாக எங்கள் மண வாழ்க்கை இருக்கிறது. என்னுல் பொறுக்கவே முடியவில்லை. அவளுக் காக நான் என்வாழ்க்கையை மாற்றிக்கொள்ளப் போவ தில்லை; அவளும் என்னை அனுசரித்து நடந்துகொள்ளப்போவ தில்லை. ஆகவே நான் எங்கேயாவது கண்காணுத இடத் திற்குத் தொலைகிறேன்.''

''எங்கே தொலையமுடியும்?''

''எங்கே வேண்டுமானுலும் போக! நான் சிறுவனுயிருந்த பொழுது என் தாயாரிடமிருந்து ஓடிப்போனேன். இப் பொழுது மனைவியிடமிருந்து ஓடிப்போகிறேன். சிறு வயதில் என் தாயாரும் என்னை அறிந்துகொள்ளவில்லை. என் யௌ வன வயதில் என் மனைவியும் என்னைப் புரிந்துகொள்ளவில்லை. அன்றும் தனித்து நின்றேன்; இன்றும் தனித்து நிற்கிறேன். உலகத்திலே அநாதையாகவே இருக்க வேண்டுமென்று ஈசன் என் தலையில் எழுதிவிட்டார் போலும்!''

''அப்படிச் சொல்லாதே கிட்டு. மனிதர்களுடைய இரத்த சம்பந்தத்துடன் மாத்திரம் உறவு நின்றுவிடவில்லை. உன்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் அனுதாபப்படும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இல்லாமலில்லை.''

''அதில் என்ன பிரயோசனம் மாமா? என் வித்தையை யார் யாரோ பாராட்டலாம். ஆனுல் என் வீட்டு வாழ்க் கையை நரகமாக்கும் மனைவியை வைத்துக்கொண்டு, நான் எப்படி நிம்மதியாக வாழ்வது? அது என்ன வாழ்க்கை!''

''சரி கிட்டு, நான் சொல்வதற்குப் பதில் சொல்லு பார்ப்போம்!''

''என்ன?''

''உனக்கு ஏன் இவ்வளவு கோபமும், வருத்தமும் உண்டாகிறது, சொல் பார்ப்போம்?''

''என் மனைவியால்தான்.''

''மனைவி, என்ன பண்ணுகிருள்?''

''வித்தையை வியாபாரச் சரக்காக்கச் சொல்லுகிறாள்.''

''சரி, அதனால் உனக்குக் கோபம் வருவானேன்?''

''தேவாராதனைக் கேற்ற நாத வித்தையை பணத்திற்காக உபயோகப் படுத்தும்படி தொந்தரவு செய்வதால் தான்.'' என்றான்.

''சரி, இதில் நீ கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது?'' என்றார்.

கிட்டு, அவர் புரிந்து கொள்ள வில்லையோ அல்லது வேண்டுமென்றே புரளி செய்கிறாரா என்று சந்தேகத்துடன், ''என்ன நீங்கள்...'' என்று ஆரம்பித்தான்.

''இல்லை; நாதோபாசனை செய்ய வேண்டாமென்று அவள் சொல்கிறாள். குடும்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டு உபாசனை செய்யச் சொல்கிறாள். அதில் தவறென்ன?''

''சரி அப்பொழுது, நான் நினைப்பது, சொல்லுவது, செய்வது எல்லாம் அபத்தம் என்று சொல்லி விடுங்கள்.''

''நான் அப்படிச் சொல்வேனா? சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்றுமட்டும் சொல்வேன். கோபம், தாபம், வருத்தம் எல்லாம் ஒன்றிலிருந்துதான் பிறக்கும். அதுதான் அகங்காரம். நீ நாதோபாசனை செய்தாலும் சரி, அல்லது நிறுத்தி விட்டாலும் மனதில் ஆணவம் என்பது கிஞ்சித்தாவது இருக்கும் வரையில், நாம் நியாயத்தைச் செய்தாலும் சரி, தவறுதலைச் செய்தாலும் சரி, அது துன்பத்தைத்தான் தரும். அதனாலேதான், பற்றின்றி கர்மாவைச் செய் என்று பகவான் போதித்திருக்கிறார். இந்தத் துன்பங்களுக் கெல்லாம் நீயும் ஓரளவு பொறுப்பாளியா இல்லையா என்பதைப் பரிசோதித்துப் பார். அகங்காரம் என்பதில் இம்மியாவது உன்னிடம் இருக்கிறதா என்பதைத் துருவிப்பார். அப்பொழுது தெரியும் இதற்குக் காரணம் எது என்பது'' என்றார்.

கிட்டு அப்படியே பிரமித்து நின்றான். அவர் சொன்ன வார்த்தைகள் அவனுடைய இதயத்தைச் சம்மட்டி எடுத்து அடிப்பதுபோலத் தாக்கின. அவனுடைய அந்தராத்மாவையே துருவிப் பார்த்துச் சொன்னதுபோல் அவர் வார்த்தைகள் வெகு ஆழத்தில் பதிந்தன. எதிர்க் கட்சியில் நின்றுகொண்டு தன் மேலே ஒரு பெரிய குற்றச் சாட்டை எறிவதுபோல் அவன் மனதில் அவ் வார்த்தைகள் ஒரு பெரிய

பரபரப்பை உண்டு பண்ணின. அவருக்கு முன்னுல் நிற்பதே அவமானம்போல் தோன்றியது அவனுக்கு.

''வாஸ்தவம் தான். என் தவறை ஒப்புக்கொள்கிறேன். அகங்காரம் இல்லை என்று நான் சொல்லிவிடமுடியாது. 'என்னை மன்னியுங்கள் நான் ஏதோ பிதற்றிவிட்டேன்'' என்று கையைக் கும்பிட்டுக்கொண்டு வணங்கி நின்முன் கிட்டு.

கந்தசாமி பாகவதர் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டார். ''கிட்டு, வருத்தப்படாதே. உன்னிடம் அற்புதமான வித்தை இருக்கிறது. அத்துடன் அருமையான குணமும் இருக்கிறது. இந்த இரண்டும் சேர்ந்திருந்தும், துளி அகங்காரமும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன்'' என்முர்.

''நீங்கள்தான் அனுக்ரஹகம் செய்யவேண்டும்!'' என்முன் கிட்டு.

''சரி வா போவோம்'' என்று கிட்டுவை அழைத்தார். பதில் பேசாமல் கிட்டு அவரைப் பின் தொடர்ந்து போனுன். நேரே, காமாக்ஷி அம்மன் கோவிலுக்கு அழைத்துச்சென்முர். கோவில் உள்ளே ஏகக்கூட்டம். அந்தக் கூட்டத்தைத் தாண்டிக்கொண்டு கர்ப்பக் கிருகத்தண்டை சென்முர்.

தேவி தேஜோமயமாகத் திகழ்ந்துகொண்டிருந்தாள். அவள் திருமுகத்திலிருந்து ஒரு காந்த சக்தி வீசிக்கொண்டிருந்தது. குருக்கள் மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்துகொண்டிருந்தார். வெளியே நாதஸ்வரக்காரன் வாத்யம் வாசித்துக்கொண்டிருந்தான். அர்ச்சனை முடிந்ததும், கற்பூரம் ஏற்றிக்காட்டினுர் அர்ச்சகர். ஜனங்கள் எல்லோரும் ஒன்முக, ''தேவி, பராசக்தி, அம்பிகே!'' என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு தேவியை வணங்கி நின்முர்கள்.

''என் கர்மாவை நீக்கடி தாயே!'' என்று சொல்லிக்கொண்டிருந்தாள் ஒரு பாட்டி.

''என் பவ பயங்களை நீக்கு ஜகதீச்வரி!'' என்று வேண்டிக்கொண்டிருந்தார் ஒரு கிழவர்.

அவர்கள் எல்லோரும் சம்பிரதாயப்படி தோத்திரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனுலும் கிட்டுவிற்கு அன்று, அவை புதுத் தாத்பரியத்துடன் தோன்றின. அன்று அர்ச்சகர் காட்டிய தீப ஒளி, அந்த அம்பிகையின் திரு ஒளியையும் தன் உள் ஒளியையும் பிரதிபலித்து நிற்பதுபோல் அவனுக்குத்

தோன்றியது. மெய்ம்மறந்து நின்றபடியே அம்பிகையைத் தோத்திரம் செய்து முணுமுணுத்துக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு ஆவேசம் வந்ததுபோல், அவனுக்கு உணர்ச்சி வெள்ளமாகப் பெருகி வந்தது. அவனை அறியாமல் நெஞ்சிலிருந்து பாட்டு வர ஆரம்பித்தது. சியாமா சாஸ்திரிகளின் பாட்டை ஒவ்வொன்ருகப் பாட ஆரம்பித்தான். ஏதோ பக்தி வெறி வந்தது போல அவன் பாடும் பாட்டில் ஒரு பயங்கரமான காம்பீர்யம் இருந்துகொண்டிருந்தது. அந்த அம்பிகையின் உருவத்திலும், கிட்டுவின் பாட்டிலும் உள்ள தெய்வத்தன்மையிலீடுபட்டு அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஸ்தம்பித்து நின்ருர்கள்.

கிட்டு வெகுநேரம் பாடிக்கொண்டிருந்தான். நேரம் ஆகிவிட்டதை உத்தேசித்து, கந்தசாமி பாகவதர், கிட்டுவின் தோளைத் தட்டி எழுப்பி அவனுக்குப் பிரக்ஞையை உண்டு பண்ணினர். கர்ப்பக்கிருகத்திற்குள்ளேயே நின்றுகொண்டு பாடிக்கொண்டிருந்ததால், வியர்வை, கொட்டிக்கொண்டிருந்தது. தன் சுய நினைவு வந்தவுடன், அவனுக்கு மிகுந்த ஆயாசம் ஏற்பட்டது. வியர்வையைத் துடைத்துக்கொண்டு கோவிலுக்கு வெளியே வந்தான். கந்தசாமி பாகவதரும் கூடவே வந்தார். ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. இருவர் மனத்திலும் பேச்சுக்கு வராத ஓர் அனுபவம் ஏற்பட்டிருந்தது போலிருந்தது. அந்த அனுபவத்திலேயே லயித்தபடி பஜனை மடம்வரையில் வந்துவிட்டார்கள். பஜனை மடத்தின் வாசலுக்கு வந்ததும், இருவரும் அங்கே ஒரு நிமிஷம் நின்ருர்கள். விடைபெற்றுக் கொள்ளும் தோரணையில், கந்தசாமி பாகவதர் கிட்டுவைப் பார்த்தார்.

அதுவரையில் பேசாமலிருந்த கிட்டு, கந்தசாமி பாகவதரைப் பார்த்து, "கடவுள் என்ற தத்துவம் எத்தனை மகத்தானது!" என்ருன். அதை ஆமோதிப்பதுபோல் கந்தசாமி பாகவதர் தலையசைத்தார்.

கிட்டு மறுபடியும் பாகவதரைப் பார்த்து, "மனிதன் எவ்வளவு சிறியவன்!" என்று வியந்தபடி சொன்னுன். அதற்கும் கந்தசாமி பாகவதர் பதில் பேசாமலேயே ஆமோதிப்பது போல் தலையசைத்தார். வேறு ஒன்றும் பேசாமல், கிட்டு வீட்டை நோக்கித் திரும்பினுன்.

வீட்டு வாசலில் அடையும்பொழுது இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. ஜன நடமாட்டம் அடங்கியிருந்தது. வீட்டு வாசல் திண்ணையில், கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு

உட்கார்ந்திருந்தாள் நீலா. கிட்டுப்போன தினுசிலிருந்து அவளுக்கு, விபரீதமாக ஆகிவிடப்போகிறதே என்ற பயம் உதைத்துக் கொண்டிருந்தது. தான் ஏன் அவ்வளவு தூரம் கடுமையாகப் பேசிவிட்டோம் என்ற பச்சாதாபமும் அவள் நெஞ்சில் பெருகிக்கொண்டிருந்தது. 'ஏன் இப்படி மனஸ்தா பப்பட்டுக் கொள்ளவேண்டும்? அவருக்கில்லாத பொறுப்பு எனக்கென்ன வந்தது? எக்கேடுங் கெட்டுத் தொலையட்டும்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். மகா தேவனோ, இந்தத் தாம்பத்யத் தகராறில் நாம் ஏன் தலையிட வேண்டுமென்று, அன்று இரவு வண்டிக்கே ஊருக்குக் கிளம்பி விட்டான். நாழியாக ஆக, நீலாவின் திகில் அதிகமாகிக் கொண்டே வந்தது. ஒவ்வொரு விநாடியிலும் அவளுடைய மனமே அவளுக்குச் சவுக்கடி கொடுத்துக் கொண்டிருந்தது. கடைசியாக இருட்டில், கிட்டுவைப் பார்த்ததும் அவளுக்கு அளவிறந்த ஆறுதல் உண்டாயிற்று. ''நல்ல வேளை! ஒன்றும் விபரீதம் நடந்துவிடவில்லை'' என்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

கிட்டு வீட்டிற்குள் நுழைந்ததும், கோவிலுக்குப்போனால், காலை அலம்புமுன் வீட்டுத் திண்ணையில் உட்காரவேண்டும் என்ற சம்பிரதாயத்தை அநுசரித்து ஒரு விநாடி திண்ணையில் உட்கார்ந்தான். காலை அலம்புவதற்கு ஜலம் கொண்டுவந்து திண்ணையில் வைத்துவிட்டுப் பேசாமல் நின்றாள் நீலா. காலை அலம்பிவிட்டு, நீலாவைப் பார்த்தான் கிட்டு. அந்த மங்கிய இருட்டில், அவள் முகமும் சோகத்தின் வெப்பத்தைக் காட்டி நின்றதைக் கண்டான். தன் இடுப்பிலிருந்த பொட்டலத்தை எடுத்து, ''இந்தா, இந்தக் குங்குமத்தை வாங்கிக்கொள்'' என்று நீட்டினான். அவள் கையை நீட்டி வாங்கி நெற்றியில் இட்டுக்கொண்டாள். நீலாவை மறுபடியும் பார்த்துக் கொண்டே நின்றான் கிட்டு. இருவரும் பேசவில்லை. ''இதோ பார் நீலா, விதி செய்யும் கொடுமை போதும். நீயும் நானும் ஒருவருக்கொருவர் கொடுமை செய்துகொள்ள வேண்டாம்'' என்றான்.

நீலா வாயைத் திறக்கவில்லை.

''வாழ்க்கையிலே இருக்கும் துன்பம் போதாது என்று நாம் வேறு உண்டு பண்ணிக் கொள்ளவேண்டுமா?'' என்றான்.

நீலாவினால் பதில் பேசாமல் இருக்க முடியவில்லை. ''ஆமாம் நான்தான் உங்களைக் கொடுமைப்படுத்துகிறேன்,

இல்லையா? எனக்கு நீங்கள் உபதேசம் செய்ய வேண்டியது தான்!'' என்றாள்.

''யார் யாரைக் கொடுமைப் படுத்தினாலும்சரி: அக்கறை யில்லை! அதை இனிக் குறைத்துக் கொள்ளலாம்; குடும்பத்தின் பொறுப்பு உனக்கு மாத்திரம் இல்லை. எனக்கும் உண்டு. வறுமையை விரும்பி நான் வரவேற்கவில்லை. அதற்காக நான் என்னுடைய மனிதத்தன்மையை இழக்கப் போவது மில்லை. ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். இனிமேல், இந்த விவகாரம் தலையெடுக்கக் கூடாது'' என்றான். அவன் சொன்ன குரலில் தீர்மானம் தொனித்தது.

'அப்பொழுதே சாப்பிடவில்லை. சாப்பிட வருகிறீர் களா?'' என்றாள் நீலா.

''எனக்குப் பசியில்லை'' என்றான்.

''பசியெல்லாம் எனக்குத்தான் போலிருக்கிறது! நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்.''

''உனக்கு ஒரே பசிதான். எனக்கு எத்தனையோ பசிகள்.''

நீலா அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. "தீர்த்த மாவது வேண்டுமா?'' என்றாள்.

''சரி கொண்டுவா'' என்றான் கிட்டு. அதை வாங்கிக் குடித்தான். நாக்கின் தாகம் தணிந்ததுபோலவே, இதயத் தின் கோபமும் அவனுக்கு மிகவும் தணிந்திருந்தது.

படுக்கையை உதறிப் போட்டுக்கொண்டு படுத்துத் தூங்கினான். அன்று அவன் இதயத்தில், என்றுமே இல்லாத ஓர் அமைதி குடிகொண்டிருந்தது. ஆகவே வழக்கத்தைவிட அன்று மெய்மறந்து அமைதியாகத் தூங்கினான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, இருவருடைய உறவிலும் அன்றிலிருந்து பெருத்த மாறுதலேற்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் உறவிலே, ஒரு மெருகு ஏற்படுவதுபோல, ஒருவிதப் பக்குவம் ஏற்பட்டுக்கொண் டிருந்தது. துன்பம் மனித இதயத்தைப் புடம் செய்கிற தல்லவா? கிட்டுவின் வாழ்க்கையிலும் அந்த அனுபவம் உண்மையாகிக் கொண்டு வந்தது. மனிதனுடைய அனுப வங்கள் அவன் மனத்தைத் தெரிந்தோ தெரியாமலோ பக்கு வப்படுத்தத்தானே செய்கின்றன? அப்படியே, கிட்டுவின்

வாழ்க்கையிலும் அதற்குவேண்டிய பயிற்சிகள் நடந்து கொண்டுதானிருந்தன.

கிட்டுவின் புகழ், அவனுடைய வித்தையினுலும், குணத்தினுலும், ஒழுக்கத்தினுலும் மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டிருந்தது. வேறு எவருக்கும் கிட்டாத ஒரு நிலையை அவன் அடைந்திருந்தான். கிட்டுவைப் பெயர் சொல்லி அழைப்பவர், கந்தசாமி பாகவதரைப்போன்று ஓரிருவர்தான். மற்றவர்கள் எல்லோரும் "கிருஷ்ண பாகவதர்" என்று மிகவும் வணக்கத்துடன் மரியாதையாகப் பேசுவார்கள், தென்னுட்டு வழக்கத்தை அனுசரித்து.

சங்கீத உலகில், 'கிருஷ்ண பாகவதர்' என்ற பெயர், மிகுந்த உயர்ந்த சங்கீதத்திற்கும், சங்கீதத்தின் அளவிட முடியாத உயர்ந்த தன்மைக்கும் சின்னமாக விளங்க ஆரம்பித்தது. ஆனுல், கிட்டு வெளி உலகிற்கு 'கிருஷ்ண பாகவதர்' ஆனுலும், தான் சம்பந்தப்பட்டவரையில், அன்றும் இன்றும் கிட்டுவாகவேதானிருந்தான். ஆனுல் உலகம் எவருக்கும் அளிக்காத ஒரு மதிப்பையும் புகழையும் கிருஷ்ண பாகவதருக்கு உவந்து அளித்துப் மோற்றி நின்றது.

அந்தக் காலத்தில் கும்பகோணத்தில் பாலாம்பாள் என்ற ஒரு தாசி இருந்தாள். அவளுக்கு அருமையான சாரீரம். அந்த சாரீரத்தில் காந்த சக்தியைப்போல் ஒரு கவர்ச்சி இருந்தது. ஜனங்களுக்கு அவளுடைய சாரீரத்திலே அசாத்திய பிரமை. அவள் கச்சேரியென்றால், ஒரு திருவிழா வைப்போன்று இருக்கும். பாமர ரஞ்சகமான பாட்டான படியால், குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எல்லோ ரும் அவளுடைய குளுமையான சாரீரத்தைக் கேட்பதற்கே கூடுவது வழக்கம்.

அவளுடைய சாரீரத்தைப் போலவே, சரீரத்திலும் ஓர் இனிமை இருந்தது. அத்துடன் அவளுக்கு சங்கீத வித்தையில் அளவிறந்த ஆசை இருந்தது. அவளிடம் செல்வமும் கொழித்துக்கொண்டிருந்தது. இதெல்லாம் சேர்ந்துகொண்டு பாலாம்பாள் என்றால், ஜனங்கள் மனத்தில் அபாரமான பிரமையை உண்டுபண்ணக் கூடியதா யிருந்தது. ஆனால் அவளுக்குக் கிருஷ்ண பாகவதரின் பாட்டில் அசாத்திய பைத் தியம். அவருடைய பாணி அவளுக்கு மிகவும் பிடித்து இருந்தது அவள் பாடும் தோரணையே, கிருஷ்ண பாகவதரின் பாணியைப் பின்பற்றியதாகத் தானிருந்தது,

அவள், சங்கீதத்தைச் சிறந்த வித்வான்களிடம் முறை யாகப் பயிலவில்லை. ஏதோ சாதாரணமானவர்களிடம் கற்றும், கேள்வி ஞானத்தாலும் அவளுக்கு சங்கீதம் வந்தது. இயற்கையாக அமைந்த சாரீரத்தின் வசதி யாலும், சங்கீதத்தில் ஏற்பட்ட ஒரு சூட்சும புத்தியாலும் அவள் படிப்படியாக முன்னேறி, ஒரு பெரிய பெயரை அடைந்துவிட்டாள். இருந்தாலும் அவளுக்குத் தன் சங்கீதத் திற்கு அஸ்திவாரம் போதாது, அதற்குச் சரியான அடிப் படை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் உள்ளூர இருந்து கொண்டிருந்தது. அதிலும், கிருஷ்ண பாகவதரிடமே கற்றுக்கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் இருந்து வந்தது. ஏனென்றால், அப்பொழுது கிருஷ்ண பாக

வதருக்கு நிகரான யோக்கியதாம்சம் வாய்ந்த சங்கீத வித்வான் உலகத்திலே ஒருவரும் இல்லை அத்துடன் அவளுக்குப் பிடித்தமான ஒரு பாணியைக் கையாளும் சிறந்த வித்வானும் வேறு ஒருவரும் இல்லை.

ஆனால், அவள் கிருஷ்ண பாகவதரின் தன்மையைப்பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறாள். யோக்யதையிலும், குணத்திலும் சிறந்து விளங்கிய அவரிடம் ஒருவரும் சிஷ்யனாக அமரவேயில்லை. அவரை அணுகவே எல்லோரும் பயந்து கொண்டிருந்தார்கள். சிலர், சிலபேர்களைச் சிஷ்யர்களாகச் சேர்த்துக்கொள்ளும்படி கிருஷ்ண பாகவதரிடம் சொன்னபொழுது, அவர், "நானே இன்னும் வித்தையைக் கற்றுக்கொண்டுதானிருக்கிறேன் நான் எதைச் சொல்லிக் கொடுக்கப் போகிறேன்?" என்று சொல்லியிருக்கிறார். இது தட்டிக் கழிப்பதற்காகச் சொன்ன வெறும் மழுப்பல் வார்த்தைகள் அல்ல. கிருஷ்ண பாகவதருக்கு, நாதத்தில் ஈடுபட்டிருப்பதே பெரிதாகத் தோன்றியதே தவிர, தமக்குப் பின்னால், அந்த வித்தையைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணமே வந்ததில்லை. அப்படிப்பட்டவர் எங்கே, தாசியாகிய தான் எங்கே என்று பாலாம்பாள் நினைத்தாள். இருந்தாலும் ஆசைக்கு அளவில்லை. எப்படியாவது அதற்கு ஏற்பாடு செய்து அவரிடம் வித்தை கற்கவேண்டும் என்ற எண்ணம் அவள் மனத்தில் வேரூன்றியிருந்தது.

அதற்கு அனுசரணையாக இருந்தார் மாரிமுத்தா பிள்ளை. அவர் மிருதங்க வித்வான்களுக்குள் முடிசூடா மன்னனாயிருந்தவர். லயப்பிரும்மம் என்றுதான் அவரைச் சொல்ல வேண்டும். சங்கீத கோஷ்டிகளுக்குள்ளே அவருக்கு அலாதி மதிப்பு. அவருக்கு முன்னால் உட்கார்ந்து துணிந்து பாடக் கூடியவர்கள் வெகு சிலர்தான். பாலாம்பாளின் அபிமானத் தந்தை, மாரிமுத்தா பிள்ளைக்கு மிகவும் அத்யந்த நண்பர். அந்த முறையில் பாலாம்பாளை சிறு வயது முதற்கொண்டு அவருக்குத் தெரியும். சாரீரமும், ஞானமும் இருந்தும் சரியான சிக்ஷையில்லாமல் அவளுடைய வித்தை வீணாகிறதே என்று அவர் வருத்தப்பட்டதும் உண்டு. ஆனால், அவள் விபரம் தெரிந்து தன் வித்தையை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்க ஆரம்பித்த பொழுது அதைப் பூர்த்தி செய்யத் தம்மாலானதைச் செய்ய கங்கணம் கட்டிக்கொண்டு விட்டார். ஆனாலும், அவள் கிருஷ்ண பாகவதரிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பிடிவாதமாயிருந்ததுதான் சங்கடமாயிருந்தது. வேறு

யார்ராயிருந்தாலும்உடனே ஏற்பாடு செய்துமுடித்திருப்பார். கிருஷ்ண பாகவதர் ஒரு நெருப்பாயிற்றே! அவரிடம் எப்படி நெருங்குவது என்று தயங்கிக்கொண்டிருந்தார். இருந்தாலும், எப்படியாவது இதைப்பற்றி முயற்சி செய்து பார்த்து விடுவது என்ற தீர்மானத்துடன் தானிருந்தார்.

மாரிமுத்தா பிள்ளை தஞ்சாவூர்ப் பக்கம் வரும்போதெல்லாம் கிருஷ்ணபாகவதர் வீட்டில் வந்து தங்கி விட்டுப் போகாமல் இருப்பதில்லை. மாரிமுத்தா பிள்ளையிடம், கிருஷ்ண பாகவதருக்குத்தனி மதிப்பு. அத்துடன் அளவிறந்த வாஞ்சையும் கூட. ஒருவருடைய வித்தையின் ஆழத்தை மற்றவர் அறிந்து கொண்டிருந்ததால், பரஸ்பரம் சொல்ல முடியாத ஓர் உறவு இருந்தது. எங்காவது கச்சேரிக்குப் போய்விட்டு வந்தால், ''ஆண்டவனே, நேற்று ஒரு வித்வான் என் காதைத் தொளைத்துவிட்டான். அதை மறப்பதற்குக் கொஞ்சம் பாடுங்கள், காதுக்கு இதமாக ஏதாவது கேட்டுவிட்டுப் போகிறேன்'' என்ற வாத்யத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விடுவார்.

''பிள்ளைவாள் முன்னால் வந்து உட்கார்ந்து விட்டால், எனக்குப் பாட்டு ஓடுவதேயில்லை. பிள்ளைவாள் கையைத்தான் பார்க்கத் தோணுகிறது'' என்பார் கிருஷ்ணபாகவதர். ஒருவருக்கொருவர் நாசூக்காக முகஸ்துதி செய்துகொண்டாலும், ஒருவர் வித்தையில் மற்றவருக்கு பரிபூரண மதிப்பு உண்டு. கிருஷ்ண பாகவதர் நிரவல் செய்யும் பொழுதும், அல்லது ஸ்வரம் பாடும் பொழுதும், வாசித்துக்கொண்டிருக்கும் பொழுதே, மெய்மறந்து ''ஆஹா, ஆஹா!'' என்று கூச்சலிடுவார் பிள்ளை. அதுபோலவே, பிள்ளைவாள் வாசிக்கும் பொழுது, அந்த சுநாதத்திலும், வாய்ப்பாட்டை அனுசரித்து வாசிக்கும் தீர்மானத்திலும் பிரமித்துப் போய்விடுவார் பாகவதர். அந்த அன்யோன்யத்தை வைத்துத்தான் பிள்ளை, கிருஷ்ண பாகவதரிடம் இதைப்பற்றி பிரஸ்தாபிக்கத் துணிச்சல் கொண்டார். வேறு யாரா யிருந்தாலும் இதைப் பிரஸ்தாபித்திருக்கவே முடியாது.

வழக்கம்போல் ஒரு சமயம் தஞ்சாவூருக்கு வந்திருந்தார். எப்பொழுதும் போலவே, கிருஷ்ண பாகவதர் பாட்டும் பிள்ளையின் பக்கவாத்யமும் சேர்ந்து கச்சேரி நடந்தது. இருவர் மனமும் சங்கீத வெள்ளத்தால் பூரித்துக்கொண்டிருந்தது. வாசலுக்கு வந்து பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். வெற்றிலைப் பெட்டியில், வெற்றிலை, சுண்ணும்பு, புகையிலை எல்லாம் நிறைந்து இருந்தன. விசிறிக்

கொண்டிருந்த பிள்ளை, விசிறியைக் கீழே வைத்துவிட்டு, வாயில் பாக்கைப் போட்டுக்கொண்டு வெற்றிலையை எடுக்கப் போனார்.

''பிள்ளைவாள் நீங்கள் விச்ராந்தியாக விசிறிக்கொள் ளுங்கள். நான் வெற்றிலை மடித்துக் கொடுக்கிறேன்!'' என்றார்.

பிள்ளை திடுக்கிட்டு, ''அபசாரம், அபசாரம். நல்ல வார்த்தை சொன்னீர்கள்'' என்று காதைப் பொத்திக் கொண்டார்.

''அதனாலென்ன? நந்திகேச்வரருக்குச் செய்ய எனக்கு அந்த பாக்கியம் கிடைக்கணுமே!'' என்றார் பாகவதர்.

''நான் உங்களுக்கு மடித்துக் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறீர்கள் போலிருக்கிறது'' என்று இவர் எடுத்துக் கொடுக்கப் போனார். இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். பாலாம்பாளின் விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்க இதுதான் சமயம் என்று மாரிமுத்தா பிள்ளைக் குத் தோன்றியது.

''ஆண்டவனுக்கு ஒரு விண்ணப்பம்!'' என்றார் பிள்ளை.

''என்ன பிள்ளைவாள், என்னிடம் என்ன விண்ணப்பம் செய்யப் போகிறீர்கள்?''

''இல்லை, நீங்கள் என்மேல் வருத்தப்படக் கூடாது''

''சொல்லுங்களேன். நீங்கள் சொல்லும் காரியம் வருத் தப்படக்கூடிய காரியமாகவா இருக்கப்போகிறது!''

''இல்லை. நான் ஏதோ தெரியாத்தனமாய்க் கேட்டு விட்டாலும் நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும்.''

''இதென்ன பிள்ளைவாள், பீடிகை பிரமாதமாகப் போடு கிறீர்களே? சொல்லுங்களேன். என்னதான் எனக்கு அதிருப்தியான காரியத்தைச் செய்யச் சொல்லப் போகிறீர்கள்?''

''ஒன்றும் இல்லை. கும்பகோணம் பாலாம்பாளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களோ இல்லையோ?''

''நன்றாச் சொன்னியள் பிள்ளைவாள்! கேள்விப்படாமல் இருப்பதாவது! ஜகமெங்கும் அவள் புகழாகத்தானே இருக் கிறது. அப்படியே ஜனங்கள் வசியப்பட்டுப் போயிருக்கும்

பெயராயிற்றே! கேள்விப்படாமல் இருப்பேனு? ஆனல் அவள் பாட்டைத்தான் கேட்டதில்லே. சரி, அவளேப்பற்றி என்ன?''

"இல்லே அந்தக் குழந்தைக்கு இவ்விடத்திலே கொஞ்சம் சாதகம் பண்ண வேண்டுமென்று விருப்பம்! ரொம்ப ஆசைப் படுது.''

கிருஷ்ண பாகவதருக்கு இதைக் கேட்டதும் சிரிப்புத் தான் வந்தது. ''பிள்ளேவாள், என்னே என்ன கேலி செய்யருப் போலிருக்கு, அவளிருக்கிற நிலேமை யென்ன! அவள் என்னிடம் வந்து சிக்ஷை சொல்லிக்கவாவது!'' என்ருர். பிள்ளேக்கு அந்த மட்டில் அவர் கோபத்தைக் காட்டாமல் விளேயாட்டாக நினேத்தாரே என்று ஒரு பக்கத் தில் திருப்திதான்.

''இல்லே, ஆண்டவனே! நீங்கள் நினேப்பதுபோல் இல்லே. அவளுக்கு எப்படியும் இங்கே சொல்லிக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் தீர்மானமாக இருக்கிறது.''

"ஏன், அவளுக்குக் கச்சேரி வரது நின்று போகணுமா என்ன? என் பெயரைச் சொன்ஞலே அவளுக்கு வர கச்சேரி யும் வராது. ஏதுக்கு அவளுக்கு இந்த யோசனே?"

''அப்படியில்லே. அவளுக்கு சங்கீதத்தை முறையாகப் பயிலவேண்டும், ஞானத்தை விருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கு. அந்தப் பெண்ணின் ஆசையின் எல்லே எனக்குத் தெரியும். உங்களுடைய பாணியிலிருக்கும் விருப்பமும் எனக்குத் தெரியும். அதனுல்தான் துணிந்து உங்களேக் கேட்டேன்.''

கிருஷ்ண பாகவதருக்கு ஒரு நிமிஷம் என்ன சொல்வ தென்று தோன்றவில்லே. முகம் கொஞ்சம் வருத்தத்தைக் காட்டுவதுபோல் இருண்டது.

''பிள்ளேவாள், எனக்கு அது ஒன்றுதான் பாக்கியிருந்தது போலும்'' என்ருர். அவர் சொன்ன தோரணே, பிள்ளேயின் நெஞ்சில் ஈட்டியை முன் பக்கம் குத்திப் பின் பக்கம் இழுப்பது போல் இருந்தது. ஏன் அவர் அப்படிச் சொன்ஞர் என்பதும் அவருக்கு விளங்கியது.

''ஆண்டவனே! என்னே மன்னிக்கணும். அது குலத்தில் தாசிதான்; ஆனல், குலம் பால், செல்வம் இதையெல்லாம் மீறியது வித்தையென்று நான் நினேத்தேன். அந்தப்

பெண்ணின் உற்சாகம் என்னைத் தங்களிடம் இதைக் கேட்கத் தூண்டியது. வித்தையை யாசிப்பவருக்கும் வித்தையை போதிப்பவருக்கும் வித்தைதான் பெரிது என்ற எண்ண மிருக்குமாகில், இந்த வித்தியாசமெல்லாம் வந்து குறுக்கே நிற்கப் போகிறதா என்ன?'' என்று சொல்லிவிட்டுப் பேசாமல் கீழே பார்த்துக்கொண்டு நின்றார். அவர் சொன்ன வார்த்தைகள் கிருஷ்ண பாகவதர் மனத்தில் சிந்தனையைத் தூண்டின. அவரும் சிறிதும் நேரம் பேசாமல் இருந்தார்.

''சரி பார்ப்போம். பகவத் சங்கல்ப மிருக்குமாகில், அது நடக்கட்டும். அதைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம்'' என்று சொல்லி முடித்தார்.

சரி, இந்த மட்டில் இன்று நிற்கட்டும் என்று பிள்ளையும் அத்துடன் நிறுத்திக்கொண்டார்.

# 25

திருவையாற்றில் தியாகய்யர் உத்ஸவம் சில வருஷங்களாக நடந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த உத்ஸவத்தை நடத்துவதில். சங்கீத வித்வான்களுக்குள்ளே, அபிப்பிராய பேதம் ஏற்பட்டு இரண்டு கட்சிகளாகப் பிரிந்து அதை நடத்தி வந்தார்கள். கிருஷ்ண பாகவதருக்கு, தியாகப் பிரும்மத்தின் உத்ஸவத்தை நடத்துவதில் வித்வான்களிடம் ஒற்றுமையில்லாமல், பிளவு ஏற்பட்டிருப்பது மனதிற்குக் கஷ்டமாக இருந்தது. ஒன்று சேர்ந்து செய்யவேண்டிய மகத்தான காரியத்தில் வித்தியாசமா? சங்கீதத்திற்கு உயிர் கொடுத்த உத்தமரின் விழாவைக் கொண்டாடுவதில் கட்சி பேதமா? இதில் கலந்து கொள்ளக் கூடாது என்றுகூட எண்ணினர். ஆனால் வித்வான்களுடைய சிறுமையான புத்திக்காக, தம் கடமையை நிறுத்தக் கூடாது என்று நினைத்ததன் பேரில் ஒப்புக்கொண்டார்.

கிருஷ்ண பாகவதரின் கச்சேரியை ஏற்படுத்தியிருந்த கட்சிக்காரர்களுக்கு மிகவும் பெருமை. சங்கீத உலகின் சக்ரவர்த்தியான கிருஷ்ண பாகவதரைத் தங்கள் சார்பில் பாட ஒப்புக்கொள்ளச் செய்து விட்டோமென்று அவர்கள் மார் தட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், கச்சேரியன்று அவர்களுக்குக் கிடைத்த செய்தி அவர்களைத் திடுக்கிடச் செய்தது. அதாவது கிருஷ்ண பாகவதர் பாடப் போகும் அதே நேரத்தில் எதிர்க் கட்சியில், பாலாம்பாள் பாடப் போகிறாள் என்பதுதான் அந்தச் செய்தி. அவர்களுக்கு ஒரு பயம் வந்து விட்டது. நிச்சயமாகக் கூட்டமெல்லாம் பாலாம்பாள் கச்சேரிக்குத்தான் போகும் என்று எதிர்பார்த்தார்கள். கிருஷ்ண பாகவதர் பாட்டு எவ்வளவோ வித்வத்து நிரம்பியதாக இருந்தாலும் பாலாம்பாள் பாட்டுக்கு விசேஷமான மதிப்பு இருந்து கொண்டிருந்தபடியாலும், காதுக்கு ரம்யமான பாட்டானபடியாலும், கூட்டம் அங்கேயே பெரும்பாலும் போய்விடுமே என்று முடிவு கட்டினர்கள். தங்களுக்கு நேரும் அவமானத்தைப் பார்க்கிலும் கிருஷ்ண பாகவதரையே அவமதிப்பதுபோல் கூட்டமே யில்லாது போய்

விட்டால் என்ன செய்வது என்ற பயம்தான் அவர்களைப் பெரிய தருமசங்கடத்தில் ஆழ்த்தியது. அவரை அதிலிருந்து காப்பாற்ற வேண்டுமே என்று அதற்கு உபாயத்தைத் தேட ஆரம்பித்தார்கள். இவர் பாடவேண்டிய நேரத்தில் ஏதாவது மூன்ரும்தர இளவித்வானைப் போட்டுவிட்டால் இந்த பிரச்னையெல்லாம் தீர்ந்துவிடும் என்று நினைத்தார்கள். ஆனல், இதை எப்படி அவரிடம் பிரஸ்தாபிப்பது? அவர் மனது கோணுமல் எப்படிப் பக்குவமாக நடந்து கொள்வது, என்பது மிகவும் பெரிய பிரச்னையாயிருந்தது.

காரியதரிசி மெதுவாகக் கிருஷ்ண பாகவதரிடம் வந்தார். "ஒரு பிரார்த்தனை. கச்சேரியை நாளை வைத்துக்கொண்டால் என்ன?" என்ருர். கிருஷ்ண பாகவதருக்கு சந்தர்ப்பத்தின் சூழ்நிலை ஒருவாறு தெரியும். பாலாம்பாள் பாடுகிருள் என்பதற்காகத்தான் தம் கச்சேரியை ஒத்திப் போடச் சொல்கிருர்கள் என்பதைத் தெரிந்து கொண்டார். ஒரு பக்கத்தில் சிறிது கோபம் வந்தாலும் ஒரு பக்கம் அவருக்கு வேடிக்கையாக இருந்தது, தம்மிடம் வித்தையை யாசிக்கும் பெண்மணி தமக்குப் போட்டியாகப் பாடப் போகிருள். அதனல் அவமானம் ஏற்படுமென்று இவர்கள் நினைக்கிருர்கள். அவர்களைக் கண்டிப்பதா அல்லது சமாதானம் சொல்வதா என்று அவருக்குப் புரியவில்லை. இருந்தாலும் அவர்கள் வாயிலிருந்து வார்த்தையைப் பிடுங்குவதற்காகவே, "என்ன, இன்னிக்கு என்ன இடைஞ்சல்?" என்ருர்,

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்தக் கட்சியிலே ஒரே அமர்க்களமாயிருக்கு. பாலாம்பாள் அங்கே பாடுகிருள். இந்தக் கூத்திலே, உங்கள் கச்சேரியை வைத்துக் கொள்ளுவானேன். நாளை பகுள பஞ்சமி. விச்ராந்தியாகப் பாடலாமென்றுதான் நினைக்கிருேம்" என்ருர்.

"ஐயர்வாள், நான் சொல்லுகிறேன் கேளுங்கள்; இன்றைய தினம் பாடுவதென்று நிச்சயித்தாய் விட்டது. நானும் தயாராயிருக்கிறேன். அப்படியிருக்க எதற்கு மாத்தவேணும்? கூட்டம் வராமல், எல்லோரும் அங்கு போய்விட்டால் என்ன செய்வதென்று பயப்படுகிறீர்கள் போலிருக்கிறது. கூட்டம் வராது போனல் என்ன குடி முழுகிப் போய்விட்டது. ஏதோ ஞானஸ்தாள் ஓரிருவர் இருந்து கேட்டால் போதாதா?" என்ருர்.

அதற்குக் காரியதரிசி, "ஞானஸ்தர்கள் கேட்கத்தான் போகிருர்கள். ஆனல் சகல ஜனங்களும் உங்கள் கச்சேரியை

நன்ருகக் கேட்டு அனுபவிக்க வேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை'' என்று விட்டுக் கொடுக்காமல் பேசினுர்.

''சுவாமி, நான் பாடறது ரசிகர்களுக்காகவுமில்லே. ஜனங்களுக்காகவுமில்லே. எங்கள் குருநாதன் தியாகப் பிரும் மத்திற்கு என்னுடைய கைங்கரியத்தைச் செய்வதற்காகத் தான் நான் பாடுவதாக ஒப்புக்கொண்டேன். அது ஈச்வர சங்கல்பம். யாரோ தாசி போட்டியாகப் பாடப் போகிருள் என்பதற்காக நான் நிறுத்திக் கொள்ளத் தயாராயில்லே. நீங்கள் என்னே மறுநாள் பாடச் சொல்கிறீர்கள்; அதுதான் என்னே வாஸ்தவத்தில் அவமதிப்பதாகும்'' என்று அழுத்த மாகச் சொல்லிவிட்டார்.

''எங்கள் மனதிலுள்ளதை நாங்கள் சொன்னேம், பிறகு உங்கள் இஷ்டம்'' என்று சொல்லிவிட்டுக் காரியதரிசி போய் விட்டார். திட்டப்படியே, அன்று கச்சேரிக்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. கிருஷ்ணபாகவதருக்கு இந்தக் கச் சேரியில் எதிர்பாராதவிதமாக ஒரு உத்ஸாகம் இருந்தது. கச் சேரி குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பமாயிற்று. காரியதரிசி எதிர்பார்த்தபடி கச்சேரிக்குக் கூட்டம் வராமல் போய் விடவில்லே. ஞானஸ்தர்கள், சங்கீத அபிமானிகள், ரசிகர்கள் எல்லோரும் கிருஷ்ண பாகவதர் கச்சேரிக்குத் திரளாக வந்திருந்தார்கள். ஆனுல், பாமர ஜனங்கள், சாரீர சுகத் தையே பெரிதும் பாராட்டுபவர்கள், நல்ல சங்கீதம் கேட்டுக் கேட்டுக் காதும் உள்ளமும் பக்குவமடையாதவர்கள், இத்தகையவர்கள்தான் பெரும்பாலும் பாலாம்பாள் கச்சே ரிக்குப் போயிருந்தவர்கள். கிருஷ்ண பாகவதர், வழக்கம் போல சிம்மம்போல் மேடையில் உட்கார்ந்து கொண்டு பாட ஆரம்பித்தார். 'வாதாபி கணபதிம் பஜே' பாடி முடித்து விட்டு, ஒரு ராகத்தை ஆரம்பித்து ஆலாபனே செய்து கொண் டிருந்தார். நிசப்தமாக எல்லோரும் அப்படியே மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஏதோ பெரிய ஆரவாரம் கேட்டது. திமுதிமுவென்று ஜனங்கள் வெளியி லிருந்து வந்து உட்கார ஆரம்பித்தார்கள். இது ஜனக் கூட்டமா? அல்லது படை எடுத்துவரும் சைன்னியமா? கூச்சலும் இரைச்சலும் அமர்க்களமாயிருந்தபடியால் அமளி நிற்கும் வரையில் பாட்டை நிறுத்திவிட்டு உட்கார்ந்து கொண்டிருந்தார் பாகவதர். சங்கீதம் கேட்டுக்கொண் டிருந்த ஜனங்களுக்கும் ஒன்றும் புரியவில்லே? 'குசு குசு வென்று' வந்தவர்களே உட்கார்ந்திருந்தவர்கள் கேட்டதி லிருந்து ஒருவாறு விஷயம் தெரிந்தது.

விஷயம் இதுதான். எதிர்க்கட்சியில் பாலாம்பாள் கச்சேரி நடக்கவில்லை. அது தெரிந்தவுடன் கூட்டம் இங்கு வந்து குவிய ஆரம்பித்தது. அமளி அடங்குவதற்கு ஒரு கால் மணி நேரம் ஆயிற்று. மறுபடியும் கூட்டத்தில் ஒரு பரபரப்பு. கூட்டத்தைப் பிளந்துகொண்டு, காரியதரிசி ஒரு பெண் மணியை மரியாதையுடன் அழைத்து வந்தார். கூட்டம் முழுவதும் அப்படியே கலகலத்து நின்றது. ''பாலம்பாள், பாலாம்பாள்'' என்று ஒவ்வொருவரும் முணுமுணுத்துக் கொண்டார்கள். பாலாம்பாள் மரியாதையாக பெண்கள் இருக்கும் பக்கம் போய் உட்கார்ந்து கொண்டாள். பக்க வாத்தியக்காரரர்கள் அவளுக்குப் பரிச்சய மானவர்களானபடி யால் வணக்கம் செலுத்தினர்கள். பாலாம்பாளே கச்சேரி கேட்க வந்து உட்கார்ந்து விட்டபடியால், கேட்கும் ஜனங் களுக்கு உற்சாகம் அதிகமாகிவிட்டது.

கிருஷ்ண பாகவதருக்கு வந்திருப்பது பாலாம்பாள்தான் என்பது புரிந்துவிட்டது. ஏன் அங்கு கச்சேரி நின்று போய் விட்டது? அவள் ஏன் இங்கு கேட்க வந்து விட்டாள், என்பது புரியவில்லை.

அவருக்கு அளவிறந்த உற்சாகம் இருந்தபடியால் கச்சேரி மிக சம்பிரமமாக நடந்து கொண்டிருந்தது. ஜனங்கள் மெய் மறந்து சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த உத்சவத்திலேயே அதுதான் மகத்தான கச்சேரி என்று சொல்லும்படிப் பாடினுர் கிருஷ்ண பாகவதர்.

கச்சேரி முடிந்தது. மேடையிலே உட்கார்ந்தபடி நண்பர் கள் உபசாரங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார் பாகவதர். ''ஒரு வார்த்தை'' என்று நெருங்கிக்கொண்டு வந்தார் ஒரு வித்வான். பின்னோடு வந்தாள் பாலாம்பாள். ''இது யாரென்று தெரியுமா? இதுதான் பாலாம்பாள் பிரசித்தி பெற்ற நட்சத்திரப் பாடகி. உங்கள் பாட்டு என்ருல் உயிர்'' என்று அறிமுகப்படுத்தினுர் நண்பர். பாலாம்பாள் நமஸ் கரித்து விட்டுப் பணிவுடன் நின்ருள்.

''கேள்விப்பட்டிருக்கிறேன். மாரிமுத்தா பிள்ளை மிகவும் சொல்லியிருக்கிருர். ஏன், இன்று அங்கே கச்சேரியில்லையோ?'' என்று கேட்டார்,

பாலாம்பாள் பதில் பேசாமல் கீழே பார்த்துக்கொண் டிருந்தாள். நண்பர்தான் அதற்குப் பதில் சொன்னுர். ''அடேயப்பா! சமாச்சாரம் எப்படியாயிற்று தெரியுமா? நீங்கள் பாடப்போவது இவர்களுக்குத் தெரியாதாம். நீங்கள் பாடுவது, உங்களுக்குப் போட்டியாகத் தானும் பாடுவதா

என்று எண்ணி சதசிலேயே, 'பாகவதர்வாள் அங்கே பாடு கிருர்கள்; நான் அங்கேபோய்க் கேட்கப் போகிறேன்; எல் லோரும் அங்கே போங்கள்' என்று சொல்லிவிட்டு இறங்கி விட்டார்கள். அந்த உற்சவக்காரர்களுக்குத் தான் முகத்தி லடித்தது போலாகிவிட்டது'' என்ருர்.

கிருஷ்ண பாகவதருக்கு ஒன்றும் புரியவில்லை. இவ்வளவு பெயரும் செல்வாக்கும் உள்ள ஒரு பெண்மணி இவ்வளவு தன்னடக்கத்துடனும், தன்னைச் சிலாகித்துப் பேசுவாளா? அதற்குக் காரணம் அவளிடம் உள்ள விநயம்தானு? அல்லது இது ஒரு சூழ்ச்சியா? தம்மிடம் பாடம் கேட்கவேண்டுமென் பதற்காக நடிப்பா? அப்படியிருந்தால்தான் என்ன? இவ்வளவு பிரபலத்வமடைந்த பாடகி, சதசிலேயே இந்த விதம் சொல்லிவிட்டு வருவதென்ருல், அவளுக்கு வித்தையி லுள்ள ஆர்வத்தைத்தானே காட்டுகிறது!'' என்றெல்லாம் அவர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

''பாவம், அனேக ஜனங்கள் ஏமாந்து போயிருக்குமே!'' என்ருர் பாகவதர்.

''ஆமாம், ரொம்ப ஜனங்கள் ஏமாந்து போயிருக்கலாம். ஆனுல், நான் என்ன செய்வது? எனக்கு உங்கள் பாட்டைக் கேட்பதே பாக்கியமென்றுதான் கேட்க வந்துவிட்டேன். மற்றவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை'' என்று மிக விநயமாகச் சொன்னுள் பாலாம்பாள்.

''நான் என்னத்தையம்மா பாடுகிறேன்! ஏதோ பெரிய வர்களை ஞாபகப் படுத்திக்கொண்டு பகவந்நாமத்தைத்தான் சொல்கிறேன்'' என்ருர்.

''அதெப்படியோ, உங்கள் பாட்டைக் கேட்பதற்குக்கூட நான் அருகதையற்றவள். மயில் ஆடுவதைப் பார்த்து வான் கோழி ஆடுவதுபோலத்தான் நானும் பாடுகிறேன். உங்கள் அனுக்ரகம் ஏற்பட்டு எனக்கு ஞானம் வளரவேண்டும்'' என்ருள்.

''வித்தையை அடையவேண்டும் என்பதில் தீவிரமான எண்ணமே, வித்தை வருவதற்கு அறிகுறி. வித்தையைப் பெறுவது ஒரு பெரிய தபஸ்; அதை நன்கு செய்தால்தானே சித்தியடையலாம்'' என்று பொதுப்படையாகச் சொல்லி விட்டார். பாலாம்பாள் விடைபெற்றுச் சென்ருள். கிருஷ்ண பாகவதரும் ஜாகைக்குக் கிளம்பினுர்.

மறுநாள் காலையில், ஸ்நானம் செய்துவிட்டு, கிருஷ்ண பாகவதர் பூஜையை முடித்துக் கொண்டிருந்தார். தீபாராதனையை முடித்துவிட்டு, வழக்கம் போல் ஒரு கீர்த்தனையைப் பாடிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், பாலாம்பாளும், மற்ருெரு சங்கீதவித்வானும் அங்கே வந்தார்கள். உட்காரும்படி சமிக்ஞை செய்துவிட்டு பாட்டை முடித்தார் பாகவதர். இருவரும் உட்கார்ந்தார்கள். பாட்டை முடித்து விட்டு, பூஜைக்கு நைவேத்தியமாக வைத்திருந்த வாழைப் பழத்தில் ஆளுக்கு ஒன்ருகக் கொடுத்தார்.

''இது ஈச்வர பிரசாதம்'' என்ருள் பாலாம்பாள்.

''அதுதான் நிறைய எல்லோருக்கும் வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே, ''பூஜை முடிந்தவுடன் பாடுவது வழக்கம். நான் பாடிவிட்டேன். நீயும் பாடலாம். உன் பாட்டைக் கேட்கும் சந்தர்ப்பம் இதுவரையில் கிடைக்கவில்லை'' என்ருர்.

''நான் பாடுவதில் ஆக்ஷேபணையில்லை. அதை ஒரு அபசாரமாக நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது'' என்று சொல்லிவிட்டு, பாடத் தொடங்கினுள் பாலாம்பாள்.

கிருஷ்ண பாகவதர் அவள் பாட ஆரம்பித்தவுடன் ஒரு நிமிஷம் திடுக்கிட்டார். அந்தச் சாரீரத்தில் இருந்த அற்புதக் கவர்ச்சி அவருக்கு மயிர்க் கூச்சலுண்டாக்கியது. இது எப்படிப்பட்ட சாரீரம்! கந்தர்வர்களுக்கும் இப்படி 'இருந்திருக்குமோ என்னவோ' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார் கிருஷ்ணபாகவதர். எங்கெல்லாம் அழகும் இனிமையும் இருக்கிறதோ, அங்கெல்லாம் தெய்வ சாந்நித்யம் இருக்க வேண்டும் என்பது உண்மையானுல், அவள் குரலும் அத்தன்மையதுதான் என்பது அவருக்கு நிச்சயமாயிற்று. ஜனங்கள் திரள் திரளாக, அவளுடைய கச்சேரியைக் கேட்கத் திரண்டு வருவதன் காரணத்தை அவர் அறிந்து கொண்டார். இவ்வளவு உயர்ந்த குரலை உடையவளிடம்

சங்கீதஞானமும் பூரணமாக இருக்குமானுல், அது எவ்வளவு உயர்ந்ததாக இருக்கும்! என்று தமக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டார்.

பாலாம்பாள் பாட்டை முடித்துவிட்டு கிருஷ்ண பாகவதரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கிருஷ்ண பாகவதர் தூங்கி எழுந்திருப்பவர்போல் விழித்துக்கொண்டு, ''ஆகா, என்ன அற்புதமான சாரீரம்! ஈச்வரனுக்குத்தான் அர்ப்பணம்'' என்ருர்.

''சாரீரம் இருக்கிறது. ஆனுல், வித்வத்து இல்லையே!'' என்ருள் பாலாம்பாள்.

''வித்வத்தாவது சாதகத்தால் அடையக்கூடிய வஸ்து; ஆனுல், சாரீர சம்பத்திற்கு முந்தின ஜன்மத்தின் பூஜா பலன் வேண்டுமே!'' என்ருர்.

''வித்தை மாத்திரம் லேசில் அடைக் கூடியதா? சங்கீதமே அனுக்ரக வித்தை. அதை அடையவதற்கும், பூர்வ ஜன்ம சுகிர்தம் வேண்டும்'' என்ருள்.

''வாஸ்தவம்தான். எதற்கும் ஈச்வர கடாட்சம் வேண்டும்'' என்ருர்.

''ஈச்வரன் அனுக்ரகம் செய்துவிட்டார். எனக்கு இனி குருநாதர்தான் கண்ணைத் திறக்கவேண்டும்.''

''என்ன?'' என்ருர் பாகவதர்.

''இல்லை, நான் வெகு நாட்களாக, ஏகலைவனைப்போலத் தங்களைத்தான் குருவாக—எண்ணி வந்திருக்கிறேன். ஏதோ, ஈச்வர சங்கல்பம், இவ்வளவுதூரம் இங்கே என்னைக் கொண்டு வந்திருக்கிறது நீங்கள்தான் இனிமேல் எனக்குக் கிருபை கூர்ந்து, வித்தையை அனுக்ரகம் செய்யவேண்டும்'' என்ருள்.

கிருஷ்ணபாகவதர் ஒரு நிமிஷம் மௌனத்தில் ஆழ்ந் தார். தான் அந்தச்சமயம் மறுத்துப்பேசினுல், அவளுக்கு நியாயமாகச் சேரவேண்டிய சொத்தைத்தான் கொடுக்க மறுப்பதுபோல் ஆகும் என்று அவருக்குத் தோன்றியது. வித்தையைச் சேகரிப்பதற்கு ஆர்வமும் அதற்குத் தகுதியான ஒரு குணமும் இருக்குமானுல், அதைக் கொடுக்காமல் இருப்ப

தற்குத் தான் யார் என்ற எண்ணம், வலுவாக அவருக்கு ஏற்பட்டது. ஒருதரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''நான் சொல்லிக் கொடுப்பதும், நீ சொல்லிக்கொள் வதும் சரிதான். ஆனால், என்னிடம் நீ சிக்ஷை பயிலவேண்டு மென்றால், இது வரையில் கற்று வந்ததையெல்லாம் மறக்க வேண்டுமே!'' என்றார்.

பாலாம்பாள், சிறிதும் தயங்கவில்லை. சற்றும் யோசிக் கவுமில்லை ''எனக்கு என்ன தெரியும், மறப்பதற்கு? நான் ஸரளியிலிருந்து ஆரம்பிக்கப் போகிறேன். அதுதான் எனக்கு வேண்டியது'' என்றாள்.

''நீயோ, பிரபலமான பாடகியாகி விட்டாய். லக்ஷக் கணக்கான ஜனங்கள்முன் கச்சேரி செய்தும் வந்திருக்கிறாய். ஏதோ உன்னிடம் ஒரு பாணியும் யிருக்கிறது. அதைவிட்டு, அடியிலிருந்து என்னிடம் பாடம் ஆரம்பித்தால், அதுவும் கெட்டு இதுவும் கெட்டு, இரண்டும் கெட்டான் பிழைப்பாக ஆய்விடலாமே? அதையும் யோசித்துப் பார்'' என்றார்.

''வாஸ்தவம். ஆனால், பகவான் இருக்கிறார். அப்படி ஏற்படாது என்று திடமான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனக்கு பகவானிடத்தில் பூர்ணமான நம்பிக்கையிருக்கிறது. அத்துடன் உங்களிடமும் எனக்கு அசாதாரணமான நம்பிக்கையிருக்கிறது. தவிர, என்னிடமே எனக்குக் கொஞ்சம் நம்பிக்கையுமிருக்கிறது. நீங்கள் நினைப்பதுபோல் ஆகவே ஆகாது'' என்றாள்.

அவள் சொன்ன வார்த்தைகள் கிருஷ்ண பாகவதருக்கு ஆனந்தமாகக் காதில் விழுந்தன. சங்கீதத்தில் என்ன ஆர்வம்! அதைக் கற்றுக்கொள்ள என்ன சிரத்தை! அதற்காக என்ன தியாகம் செய்யத் தயாராயிருக்கிறாள்! இதைவிட, வித்தையை ஏற்பதற்குத் தகுதியான ஒரு ஆத்மா இருக்க முடியாது என்று அவருக்குத் திட்டமாகத் தோன்றிற்று.

''பகவத் சங்கல்பம் எப்படியோ, அப்படியே நடக் கட்டும். இந்தா, இந்தப் புஷ்பத்தை வாங்கிக்கொள்! பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு, அதைப் பகவானுக்கு சமர்ப்பித்து விட்டு, இப்படி வந்து உட்கார்'' என்றார்.

பாலாம்பாள் கண்ணிலிருந்து ஆனந்தம் பொங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய இதயத்தில் பக்தி பெருகி வந்தது. புஷ்பங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பகவானை வணங்கினாள். புஷ்பத்தைக் கடவுளுக்கு சமர்ப்பித்தாள். பிறகு கடவுளின் பிரதிநிதிபோல நிற்கும், கிருஷ்ண பாகவதருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு அவருக்கு முன்பு உட்கார்ந்தாள்.

கிருஷ்ண பாகவதர் முதல் ஸரளியைப் பாடினார். பாலாம்பாள், அதைத் திருப்பிப் பாடினாள். விக்ரகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் பகவான் அதை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

பாலாம்பாள் கும்பகோணத்தை விட்டு, தஞ்சாவூரிலேயே ஒரு ஜாகை அமர்த்திக்கொண்டு குடியேறி விட்டாள். சில சமயங்களில் கிருஷ்ண பாகவதர் வீட்டிலேயே வந்து சொல்லிக்கொண்டு போவாள். சில சமயங்களில், அவள் வைத்திருந்த வில்வண்டியை அனுப்புவாள். அதில் கிருஷ்ண பாகவதர் அவள் வீட்டிற்கே போய்ச் சொல்லிக் கொடுத்து விட்டு வருவார். இங்கேயும் பாலாம்பாள் வெகு நேரம் தங்கியிருப்பாள். அவள் வீட்டிலேயும் கிருஷ்ண பாகவதர் தங்கியிருப்பார். இது ஒரு பெரிய பரபரப்பை உண்டு பண்ணி விட்டது. அவதூறான வதந்தியைக் கிளப்பிவிடக் காரணமாயிற்று.

கிருஷ்ண பாகவதரின் வித்தையில் பொறாமைகொண்ட சில பெரிய வித்வான்கள் இருந்தனர். கிருஷ்ண பாகவதருடைய யோக்யதையும், அவருடைய மேன்மையான குணமும், பணத்திலேயே சிறிதும் நாட்டமில்லாத ஒரு போக்கும், அவரிடமிருந்து அவர்களை வெகு தூரத்திற்குப் பிரித்து வைத்தன. தாங்கள் எல்லாம் அவருக்கு அருகில் போவதற்குக்கூட எந்த விதத்திலும் யோக்யதையற்றவர்கள் என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் எழுந்திருந்தது. இது அவர்களுடைய தற்பெருமைக்கும் கௌரவத்திற்கும் மிகவும் இடைஞ்சலாயிருந்தது. அவர்களுக்கெல்லாம், இப்பொழுது கிருஷ்ண பாகவதரைக் குறைவாகப் பேச ஒரு பெரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது போலத் தோன்றியது.

இதற்குச் சில இளம் வித்வான்களும் ஒத்தாசையாக வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொரு சமயங்களில் ஓரிருவர், கிருஷ்ண பாகவதரிடம் சிக்ஷை கற்றுக்கொள்ள விரும்பி அதற்குப் பிரயத்தனப்பட்டதுண்டு. அது கைகூடவில்லை. அவர்களுக்கெல்லாம், பாலாம்பாள் கிருஷ்ண பாகவதரை 'வசிய'ப்படுத்தியது மிகுந்த ஆத்திரத்தை உண்டுபண்ணியது. கிருஷ்ண பாகவதரைப்பற்றியும் தாங்கள் பெரிதாக நினைத்ததெல்லாம் தப்பு என்ற எண்ணமும் அவர்களுக்கு ஏற்பட்டு

விட்டது. தவிரவும், சகஜமாக, ஆணும் பெண்ணும் நடமாடினால் சிருங்காரத்திற்குப் புறம்பான ஓர் உறவு இருக்க முடியும் என்பதை ஒருவரும் எண்ணவுமில்லை. அவர்களால் அதை நினைத்துப் பார்க்க முடியவுமில்லை. ஆகவே, பராபரியாக, கிருஷ்ண பாகவதரைப்பற்றி அவதூறாகப் பேச்சு வரத் தொடங்கிற்று.

கிருஷ்ண பாகவதருக்கு இது தெரியாமல் இல்லை. ஆனால் இதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. கந்தசாமி பாகவதருக்கும் இது நன்றாகத் தெரியும். ஆனால் அவருக்குத் தான் இது மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது. ஜனங்களால் மிகவும் உயர்ந்த குணசீலனாகக் கருதப்பட்ட கிருஷ்ண பாகவதருக்கு அநியாயமாக அபகீர்த்தி வருவதென்பது அவருக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்தது.

''இது எதற்கு இந்த பிராரப்தம். இதை விட்டுத் தொலைத்துத் தலை முழுகக்கூடாதா?'' என்று அவர் எண்ணினார். கிருஷ்ண பாகவதரிடம் சொல்லவும் சொன்னார். ''ஏன் அப்பா, எவ்வளவோ, உயர்ந்த பையன்களுக்கெல்லாம் சிக்ஷை சொல்லிக்கொடுக்க மறுத்துவிட்டாய். ஆனால், இந்த தாசிக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்படி விதித்திருக்கிறது பாத்தியா'' என்று கொஞ்சம் வருத்தத்துடன் சொன்னார்.

''மாமா! அவள் தாசிதான். மற்றவர்களுக்கெல்லாம் மறுப்பானேன், இவளுக்குச் சம்மதிப்பானேன், என்று கேட்கிறீர்கள். இவளுக்கிருந்த ஒரு பக்தியும், அக்கறையும், ஒரு தியாகபுத்தியும் மற்றவர்களிடம் நான் கண்டிருந்தேனானால் மறுத்து இருப்பேனா? அதுவும் தவிர, இதெல்லாம் பிராப்த வசத்தினால் நடக்கும் காரியம். அது யாரைச் சொல்லி என்ன பிரயோசனம்? மாரிமுத்தா பிள்ளை என்னிடம் கேட்ட பொழுது, நீங்கள் நினைத்தபடிதான் நானும் நினைத்து, முடியாது என்று சொன்னேன். ஆனால் இப்பொழுது அது நடந்தேறி விட்டது. இதற்கு என் மனச்சாட்சி, குற்றம் சாட்டவில்லை. உலகம் எதைச் சொன்னால் என்ன? தெய்வத்துக்கும் மனச்சாட்சிக்கும் மீறி நடக்காதவரையில் மனச்சாந்திக்குப் பங்கமில்லை'' என்று சொல்லிவிட்டார் கிருஷ்ண பாகவதர். கந்தசாமி பாகவதர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. இந்த மாதிரி விஷயங்களில் அதிகம் சொல்வதற்கு என்ன இருக்கிறது.

ஒருநாள் கந்தசாமி பாகவதர் கிருஷ்ண பாகவதர் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். இரண்டு வீடுதள்ளி அய்யாசாமி சாஸ்திரிகள், வாசலில் வெற்றிலை போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். கந்தசாமி பாகவதர் கிட்டுவைத்தான் தேடிக்கொண்டு போகிறார் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே, அவர் வாயைக் கிளறி வம்புக்கிழுக்க அவரைக் கூப்பிட்டார். அய்யாசாமி சாஸ்திரிகளுக்கு புரோகிதம் ஜீவனம். ஆனால் பெரிய வாயாடி. ரூபாயில் மகாகெட்டி. ஒரு தம்பிடி சம்பாதிப்ப தற்கு எதையும் கூசாமல் செய்யக்கூடிய மனிதர். ஆனால் வாய் வேதாந்தம் பேசுவதிலும், பிறருடைய குண தோஷங் களைப்பற்றிப் புகார் செய்வதிலும் கூசாத நெஞ்சம் வாய்த் தவர். அவர் வீட்டுத் திண்ணை ஒரு பெரிய வம்பர் மகா சபை. அங்குதான் அடிக்கடி கிருஷ்ண பாகவதரைப்பற்றிய புகார்களும், சர்ச்சைகளும் அமர்க்களமாக நடந்துகொண் டிருக்கும். சாஸ்திரிகள் கூப்பிடுகிறாரே என்று எண்ணி, ஆனால், அவரிடம் வாய்-கொடுக்க இஷ்டமில்லாமல் "அவசர மாகப் போகவேண்டும். ஏதாவது முக்கிய விசேஷமோ?" என்றார் கந்தசாமி பாகவதர்.

"இல்லை. என்ன அவசரம்? உங்கள் சிநேகிதரைத் தானே பார்க்கப் போகிறீர்கள். அவர் வீட்டில் இல்லை. இப்பொழுதெல்லாம் அவரை வீட்டிலே பார்க்க முடியுமா? கானலோலன் காமினிலோலன் ஆய்விட்டாரே" என்றார். இவருடைய பிராசத்தைப் பார்த்து எதிர்த்தாப்போல் இருந்த ஒரு நண்பர் சிரித்தார். கந்தசாமி பாகவதருக்கு வயிற்றெரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. கொஞ்சமேனும் மனிதத் தன்மையில்லாத இந்த மனிதன், கிருஷ்ண பாகவ தரைப்பற்றிக் கேவலமாகப் பேசுகிறானே என்று ஆத்திரம் வந்தது. தன் அபிப்பிராயம் எதுவாயிருந்தாலும் இந்த மனுஷ்யன் முன்பு கிட்டுவை விட்டு விட்டுக்கொடுக்க மனம் வரவில்லை. கந்தசாமி பாகவதர், வேகமாக அய்யாசாமி சாஸ்திரிகள் முன்புவந்து உட்கார்ந்தார். "சுவாமிகளே! நீங்கள் உங்கள் அனுபவங்களை வைத்துக்கொண்டு கிருஷ்ண பாகவதரை எடை போடுகிறீர்கள். நீங்கள் நினைப்பது போல் கிருஷ்ண பாகவதர் போகவில்லை. காமாலைக் கண்ணுக்கு எங்கு பார்த்தாலும் மஞ்சளாகத்தான் தோன்றும். உங்கள் மனத்தில் உள்ள கல்மிஷம்தான் கிருஷ்ண பாகவதரையும் அப்படி நினைக்கத் தூண்டுகிறது" என்றார்.

அய்யாசாமி சாஸ்திரிகளுக்கு நேரடியாகத் தன்னை கந்தசாமி பாகவதர் தாக்க ஆரம்பித்தது திகைப்பை உண்டாக்கி விட்டது. கொஞ்சம் ரோஷத்துடன் "நாங்கள் பெரிய நாத யோகி என்றெல்லாம் சொல்லிக் கொள்ளவில்லை. கேவலம் மனுஷாளுக்குள்ள குணதோஷங்கள் எல்லாம் எங்களிடம் இருக்கின்றன. ஆனால், சங்கீதத்திற்கு வாழ்க்கையையே தியாகம் பண்ணத் தயாராகயிருந்த கிஷ்ணபாகவதர் இந்தப் படுகுழியில் விழுவதுதான் எங்களுக்குச் சகிக்கவில்லை. பெரிய சங்கீத பரம்பரை, தியாகப் பிரும்மத்தின் சங்கீத வாரிசு, இவர் இப்படி தாஸியின் கொடுக்கைப் பிடித்துக்கொண்டு அலைவது அந்தப் பரம்பரைக்கே கேவலம். ஊருக்கே கேவலம். அது உம் கண்ணில் ஏனையா படவில்லை?" என்று கூச்சலிட்டார்.

அந்த சமயத்தில் கிருஷ்ணபாகவதர், வீட்டுக்குப்போய்க் கொண்டிருந்தார். இந்த வார்த்தைகள் கணீரென்று அவர் காதில் விழுந்தன. திரும்பிப் பார்த்தார். கந்தசாமி பாகவதர் முகத்தில் ஈயாடாமல் கடுகடுப்பாக நின்று கொண்டிருந்தார். நிதானமாகக் கிருஷ்ணபாகவதர் அவர்களிடம் வந்தார். அவரை நேரில் கண்டவுடன் அவர்கள் பேசுவதை நிறுத்திவிட்டு, நிசப்தமாக நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் மனமும் ஒரு சங்கடமான நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

"என்னைப் பற்றித்தானே மண்டகப்படி!" என்றார். கந்தசாமி பாகவதர் மனம் புண்பட்டிருந்தது. "போதுமப்பா கிட்டு! நீ அவனுக்குச் சொல்லிக் கொடுப்பதும் போதும், இந்த அதமன்கள் நாக்கில் நரம்பில்லாமல் பேசுவதும் போதும்!" என்றார்.

கிருஷ்ணபாகவதர் அய்யாசாமி சாஸ்திரிகளைப் பார்த்து, "சாஸ்திரிகளே, அதில் என்ன தப்பு என்று சொல்லுங்களேன்!" என்றார்.

அய்யாசாமி சாஸ்திரிகள் ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டார். "உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. உங்கள் பரம்பரை என்ன, உங்கள் யோக்யதை என்ன, இந்த சினேகமானது உங்களுக்கு, உங்கள் பரம்பரைக்கு, உங்கள் வித்தைக்கு, உங்கள் ஊருக்கு, எல்லோருக்கும் ஒரு அபக்கியாதியை உண்டு பண்ணுவதாயிருக்கிறது" என்றார்.

"சாஸ்திரிகளே, நாம் பரம்பரை, ஊர், வித்தையெல்லாம் விட்டு விட்டு, உங்களையும் என்னையும் மாத்திரம் பற்றிப் பேசலாம். அவள் தாசி என்பதுதானே ஆக்ஷேபணை. அவள் குலத்திலேதான் தாசி, குணத்திலில்லை. அவளுக்கு

இப்பொழுது சங்கீதம்தான் ஜீவன். இப்பொழுது குல ஸ்திரீகள்தான் தாசிகளைப்போல் புடவை பணம் நகை முதலியவற்றில் அளவற்ற பிரேமையைக் காட்டுகிறவர்கள். அவளுக்கிருக்கும் மனப் பக்குவம் குலஸ்திரீகளுக்கு இருந்தால் சமூகம் எவ்வளவோ மேன்மையாயிருக்கும். அது போகட்டும் நீங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு சங்கர ஜயந்தி உத்ஸவம் செய்வதற்கு நூறு ரூபாய் அவளிடம் யாசகம் வாங்கிக்கொண்டு வந்தீர்களே. சங்கர பகவத் பாதர்களுக்கு அந்தத் தாஸியின் பணத்தை வைத்து ஆராதித்ததற்கு, அவருக்குத் தோஷமாக ஆகாதோ?'' என்று விருவிருப்புடன் பேசினார்.

அய்யாசாமி சாஸ்திரிகள் இதை எதிர்பார்க்கவில்லை; அப்படியே பிரமித்து நின்றார்.

''சாஸ்திரிகளே! நீங்கள் எங்களைப் போன்றவர்களுக்கு மோக்ஷ வாசலின் சாவியை வைத்துக்கொண்டிருப்பவர்கள். ஆனால், ஒரு காலணா மூக்குப் பொடிக்காக நீங்கள் எந்தப் பாபத்தையும் செய்ய அஞ்சமாட்டீர்கள். பிராமணன் என்பவனுக்கு மறுநாள் சாப்பிட வைத்துக் கொள்வதற்கு உரிமை கிடையாது. நீர் காலணாவிற்கு யாதாயாதமென்று லோலுப்படுகிறீர்! இப்படியெல்லாம் திண்ணையில் உட்கார்ந்தபடி கன்னா பின்னாவென்று பேசாதேயும்'' என்று சொல்லிவிட்டு வேகமாக வீட்டை நோக்கி நடந்தார். கிருஷ்ண பாகவதர் இப்படிப் பேசி ஒருவரும் பார்த்ததில்லை. ஆகவே அப்படியே எல்லோரும் அதிர்ந்துபோய் நின்றார்கள்.

கந்தசாமி பாகவதர் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. அவருக்கு இந்த விஷயத்தில் கிருஷ்ண பாகவதர் சூடாகக் கொடுத்தது திருப்தியாக இருந்தது. ''சாஸ்திரிகளே! நான் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். சாக்ஷாத் ஈச்வரன் ஆலகால விஷத்தை விழுங்கினான். அவனை அந்த விஷம் என்ன செய்தது. அதுபோல எதையும் அது எப்படிப்பட்டதாயிருந்தாலும் ஜீரணிக்கும்படியான சக்தியிருந்தால் அவர்கள் அதைச் செய்யலாம். கிருஷ்ண பாகவதர் நம்மைப்போல் சாதாரணப் பட்டவர் இல்லை. அவர் எதைச் செய்தாலும் ஒன்றும் அவரைப் பாதிக்காது, கெடுதலிலிருந்து தன்னை விலக்கிக் காப்பாற்றிக்கொள்ள அவரிடம் சக்தியிருக்கிறது. நீங்கள் அதைப்பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டு ஒழுங்கீனமாகப் பேச வேண்டாம்.'' என்று சொல்லிவிட்டு அவரும் நகர்ந்தார். அதற்கப்புறம் கிருஷ்ண பாகவதரைப்பற்றி வெளிப்படையாக ஒருவரும் கேவலமாகப் பேசுவதில்லை.

இந்தப் புது உறவைப்பற்றி நீலாம்பாள் என்ன நினைத்தாள். அவள் இரண்டு விதமான உணர்ச்சி வசப் பட்டுத் தயங்கி நின்றாள்? பாலாம்பாளின் பேச்சும் குணமும் விநயமும் நீலாம்பாளின் மனத்தை என்னவோ கவர்ந்து விட்டன. பாலாம்பாளிடம் ஏதோ ஒரு வசிய சக்தி இருக்கத் தான் இருந்தது. அதற்குக் காரணம் அவளுக்கு இயற்கை யிலேயே பாடமான இங்கிதமும் மனித சுபாவத்திற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளக்கூடிய சாமர்த்தியமும்தான். நீலாம்பாளைப் பார்க்கும் போதெல்லாம் அவள் மரியாதை யாகவும் கௌரவித்தும் பேசுவாள். அவளுக்கு வேண்டியது, வேண்டாததுகளைத் தெரிந்து கொண்டு வந்து தருவாள். அதற்கெல்லாம் மேலாக நீலாம்பாளிடம் அபரிமிதமான வாத்ஸல்யத்தைக் கொண்டிருந்தாள் பாலாம்பாள். நீலா தன்னிடம் இவ்வளவு பிரியத்தை ஒருவரும் காட்டியதை அனுபவித்ததில்லை. ஆகவே, தன்னிடம் மிகுந்த வாஞ்சை யைக் காட்டும் இந்தப் பெண்ணிடம் ஒரு தனிப்பட்ட அன்பும் ஒரு அலாதியான பிரியமும் கொண்டிருந்ததில் ஆச்சரியமில்லை. கிருஷ்ண பாகவதரிடம் "அவள் எந்தக் குலமாயிருந்தால் என்ன, தங்கமான பெண்" என்று அடிக்கடி சொல்லுவாள். நீலாம்பாளிடமே அத்தாட்சிப்பத்திரம் வாங்கி விட்டாளே என்று கிருஷ்ண பாகவதர் ஆச்சரியப் படுவதுண்டு

ஆனால், இந்த அபிப்பிராயம் நிமிஷ மாத்திரம் தான். யாராவது நீலாவிடம் "இது எதற்கு நீலா, இந்தப் பிரா மணன் ஒரு தேவடியாளோடு அலையறான்" என்று சொல்லி விட்டால்; பாலாவிடம் அவளுக்குள்ள அன்பெல்லாம் மாயமாய்க் காற்றாய்ப் பறந்து விடும். புருஷனுடைய கௌரவத்திற்கே ஹானியாக முளைத்திருக்கும் இந்தத் தாசிப் பெண்ணிடம் கடுமையான கசப்பு ஏற்படும். ஏனென்றால் புருஷனுடைய வழிகளிலும், அவருடைய தத்துவத்திலும் நம்பிக்கை யில்லாவிட்டாலும், அவர் யோக்யதை நிரம் பியவர், ஜனங்களின் விசேஷமான நன் மதிப்பைப் பெற்றவர்

என்ற எண்ணம் மாத்திரம் அவளிடம் எப்பொழுதும் இருந்து வந்தது. அதற்கும் உலை வைக்க வந்திருக்கும் இந்தப் பெண்ணைப்பற்றிப் பிறர் கேவலமாகப் பேசும்பொழுது அவளுக்கு மிகவும் கஷ்டமாகத் தானிருந்தது. இப்படி ஒரு தரும சங்கடமான நிலைமையில்தான் அவள் தவித்துக்கொண்டிருந்தாள். கிருஷ்ண பாகவதருக்கு அவள் மனோநிலை தெரியும் இதையெல்லாம் மனத்திற்குள் வைத்துக் கொண்டு ஏதோ வேடிக்கை பார்ப்பதுபோல் தனக்குள்ளேயே இந்த மனப் போக்குகளை அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்தார்.

அன்று காலை சுமார் ஒன்பதுமணியிருக்கும். கிருஷ்ண பாகவதர் கூடத்தில் படுத்துக்கொண்டிருந்தார். அவருக்கு நெஞ்சிலே லேசான வலி. இப்பொழுதெல்லாம் அவர் முன் போல் பாட முடியவில்லை. அதிக நேரம் பாடினாலோ, மேல் ஸ்தாயிகளில் அதிகமாகப் பாடி விட்டாலோ நெஞ்சில் வலி வந்துவிடும். ஒரு கச்சேரி பண்ணிவிட்டு வந்தால் மறுநாள் முழுவதும் நெஞ்சு வலி வந்து அவரைக் குத்தி இழுத்துவிடும். கச்சேரி பண்ணாமலிருந்தாலும் சில சமயங்களில் வலி வந்துவிடும். வைத்தியர்கள் அவரை ''அதிகம் பாடக் கூடாது. பாடாமல் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லி வந்தார்கள். ஆனால் கிருஷ்ண பாகவதர் அதை லட்சியம் செய்வதில்லை. அவர் வழக்கப்படி பாடிக் கொண்டு தானிருப்பார். நெஞ்சு வலியும் வந்து கொண்டு தானிருக்கும். இந்த நெஞ்சு வலி வரும்பொழுது ஒரு எண்ணையை மார்பில் தடவி ஒத்தடம் கொடுத்தால், அவருக்கு மிகவும் இதமாக இருக்கும். வலியும் சிறிது குறைய ஆரம்பிக்கும்.

கிருஷ்ண பாகவதர் கயிற்றுக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தார். கூடத்தின் மற்றொரு கோடியில் நீலா ஏந்திரத்தில் அரிசி அரைத்துக்கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் பாலாம்பாள் வந்து சேர்ந்தாள். 'வா' என்றார் கிருஷ்ண பாகவதர் ''வாம்மா பாலம்'' என்று அன்புததும்பக் கூப்பிட்டாள் நீலா. அந்த நிமிஷத்தில் பாலாம்பாளிடம் பிரியம் தானிருந்தது நீலாவிற்கு.

''என்ன மறுபடியும் வலி வந்துவிட்டதா?'' என்று கேட்டாள் பாலாம்பாள். கிருஷ்ண பாகவதர் கட்டிலில் படுத்திருப்பதற்குக் காரணம் அதாகத்தானிருக்க முடியும் என்பது அவளுக்குத் தெரியும்.

"சும்மா லேசாக வலிக்கிறது. அவ்வளவுதான்" என்றார் பாகவதர்.

"மருந்து சாப்பிடச் சொன்னா சாப்பிடுவது கிடையாது. பாட வேண்டாம்னா கேட்கிறது கிடையாது. அது வலிக்காமல் என்ன செய்யும்? தனக்காத் தெரியணும், சொன்னாலாவது கேட்கணும், இரண்டும் கிடையாது. நன்னா அவதிப் படட்டும்" என்றாள் நீலா. கிருஷ்ண பாகவதர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை.

"மருந்தைச் சரியாகச் சாப்பிடுகிறதுதானே" என்றாள் பாலாம்பாள்.

"சாப்பிட்டுக் கொண்டுதான் வருகிறேன்" என்றார் அவர்.

"அது என்ன பிரயோஜனம்? பாட வேண்டாம்னா கேட்கிறாளா இன்னிக்குத்தான் புதிதாக சாதகம் பண்ணுகிறது போலப் பாட ஆரம்பித்து விடுகிறார். அது உடம்பைக் கெடுத்து விடுகிறது" என்றாள் நீலா.

பாலாம்பாள் யோசனையிலாழ்ந்திருந்தாள். இவ்வளவு தலைசிறந்த சங்கீத யோகிக்கு இந்த வலி வருவானேன், என்பதுதான் அவளைச் சிந்தனையிலாழ்த்தியது. சங்கீதமே, இதைத் தனக்குக் காணிக்கையாகக் கேட்பதுபோலத்தான் அவளுக்குத் தோன்றியது.

அவள் சொன்னாள்: "என்ன விசித்திரம்! இந்த சங்கீதம் இருக்கே, இது எதையெல்லாம் கேட்கிறது! முதல்லே சாதகம்; பிறகு திறமை; அதன் பின் பக்தி; அதற்குமேல் அனுக்ரகம்; இதையெல்லாம் மீறி ஒருவன் வித்வானாகிப் பாட ஆரம்பித்துவிட்டால் அவன் தேகத்தையே சாப்பிடுகிறது. ஏதோ லக்ஷக் கணக்கில் ஜனங்கள் சங்கீதத்தை மெய் மறந்து அனுபவிக்கிறார்கள் என்றால், அது லேசான காரியமா? சங்கீதக் கலைஞன் தன் தேகத்தையே பிழிந்து துண்டம் துண்டமாக்கி ஜனங்கள் முன் இரைப்பது போலத்தான் அது இருக்கிறது" என்றாள்.

கிருஷ்ண பாகவதருக்கு அவள் சொன்ன வார்த்தைகள் மயிற் கூச்சலெடுக்கச் செய்தன. "சபாஷ் பாலம்! கற்பனை அப்படின்னா இருக்கணும்! சங்கீதம் ஒரு கலைச் சிருஷ்டி. எந்த சிருஷ்டியும் வேதனையிலிருந்து பிறப்பதுதான். அந்த வேதனைதான் அந்தக் கலைச் சிருஷ்டியில் ஆனந்தமாகப்

பரிமளிக்கிறது" என்று சொல்லிவிட்டு, "சரி நான் மறந்தே போய் விட்டேனே, நேற்றுக் கச்சேரி எப்படியிருந்தது?" என்று கேட்டார்.

முந்திய தினம் மாலையில், ஒரு பிரசித்திபெற்ற வித்வான் கச்சேரி செய்தார். அதற்குக் கிருஷ்ண பாகவதர் போக முடியவில்லை. பாலாம்பாள் மாத்திரம் போயிருந்தாள். பாலாம்பாள் வந்ததும் அவர் எப்படிப் பாடினார், என்ன பாடினார் என்பதையெல்லாம் கேட்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தார். பேச்சு வேறு வழியில் இறங்கவும் அதை அப்பொழுது கேட்க மறந்து விட்டார். சங்கீதத்தைப் பற்றிப் பேச்சு மாறியவுடன், அவருக்கு அந்த ஞாபகம் வந்துவிட்டது. உடனே அதைப்பற்றிக் கேட்டார்.

"என்ன பாட்டு? எல்லாம் சுத்தரிப்பு ஸ்வரங்கள். அர்த்தமில்லாத கமகங்கள். எங்கே வேண்டுமானாலும் நிற்க வேண்டியது. எதையாவது பாட வேண்டியது. அது எப்படி நன்றாயிருக்கும்?" என்றாள்.

"என்ன பண்றது. சங்கீதம் ஒரு பெரிய சாகரம். அதில் நல்லது பொல்லாதது எல்லாம்தான் வந்து சேரும். என்னென்ன விசேஷமாகப் பாடினார்?" என்று கேட்டார்.

"நாட்டை பாடினார்" என்றாள்.

"நாட்டையா?" என்றார் பாகவதர். அவருக்கு விசேஷமாகப் பிடித்த ராகம். நாட்டை ராகத்திற்கு ஒரு மகிமையைக் கொடுத்தவர் என்றே அவரைச் சொல்ல வேண்டும். நாட்டை யென்றால், அவருக்குத் தன் செல்வக் குழந்தை போல. அந்த ராகத்தில் ஒரு அலாதியான பிரியம். ஆகவே எப்படி அதைப் பாடினார் என்பதில் ஒரு விசேஷ ஆர்வம் இருந்தது அவருக்கு.

"அதை ஏன் கேட்கிறியள்! நாட்டையென்று நினைத்துத் தான் பாடினார். அது நாட்டையா அது? ராகஸ்வரூபம் எங்கேயோ இருந்தது. நாட்டையின் ரூபம் வந்தால்தானே! நாட்டை யென்றால் நம்ம நாட்டைதான் அசல்" என்றாள்.

"நம்ம நாட்டை" என்று அவள் சொன்னது கிருஷ்ண பாகவதர் பாடும் நாட்டையைத்தான். அவளுக்கும் அந்த நாட்டையில் ஒரு சுவாதீனம் இருந்தது. "அதுக்கு எப்படிப் பட்ட ரிஷபம்! எப்படிக் கம்பீரமாயிருக்கிறது! யானையைப் போல உள்ள ஸ்வரத்தைப் பூனையைப்போலப் பதுக்கி

வைத்தால் ராகம் வருமா! 'பபநிபபமரீ' என்ற ரிஷபத்தில் வந்து நிற்கும்போது எவ்வளவு அழகாக வந்து நிற்கிறது!'' என்று சொல்லிக்கொண்டே பாட ஆரம்பித்தார்.

''பேச்சோடு நிற்கட்டும். பாட்டு வேண்டாம்'' என்று அபாய அறிவிப்புச் செய்தாள் நீலா. ஆனால் கிருஷ்ண பாகவதர் காதில் போட்டுக்கொள்ளாமல், நாட்டையை மேலும் கீழும் இரண்டு தரம் ஸ்வரங்களை அள்ளி வீசி எறிந்து விட்டு இதுன்னு நாட்டை'' என்றார். பாலாம்பாள் அப்படியே அசைவற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

''இந்த நாட்டை யிருக்கிறதே, அதை எத்தனை தரம் கேட்டாலும் அலுப்பது இல்லை. என்னவோ அதில் ஒரு மாயசக்தி இருக்கிறது!'' என்று அனுபவித்தபடியே சொன்னாள்.

''அதற்கென்ன சந்தேகம் பாலம், அது சாக்ஷாத் பரமேச்வரனுக்குகந்த ராகம். நாட்டையை ஒருவன் அனுபவிக்க அறிந்துவிட்டால், அவன் சங்கீத சாகரத்தின் ஆழத்தை அறிந்துவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும்'' என்று சொல்லிவிட்டு, தம்பூராவை எடுத்து வா என்றார். பாலாம்பாள் தம்பூராவை எடுத்து வைத்தாள். சரி, யதோக்தமாகப் பாட்டுக் கச்சேரி நடக்கப்போகிறது என்று எண்ணிய நீலா ''போதுமே, இந்தப் பாட்டு'' என்றாள்.

''இந்தா, நீ மாவு அரைப்பதைக் கொஞ்சம் நிறுத்திக் கொள். எனக்குத் தம்புரா சுருதி ஒன்று போதும்'' என்று பதிலளித்தார். அவள் அதிருப்தியைக் காட்டும் முகத்துடன், அரைத்துக் கொண்டேயிருந்தாள்.

''சிரமமாயிருக்கும் போலிருந்தால், பாடவேண்டமே'' என்றாள் பாலாம்பாள்.

''ஜலதோஷம் பிடித்துக்கொண்டால், மூச்சு விடாமலா இருந்துவிடுகிறோம். அதுபாட்டிற்கு அது. இது பாட்டிற்கு இது'' என்று சொல்லிக்கொண்டே ''நாட்டையைக் கேள்'' என்று பாட ஆரம்பித்தார்.

அவர் பாடியது என்ன சங்கீதமா? அது ஒரு ராகமா? சாக்ஷாத் பரமேச்வரனது திவ்ய ரூபத்தையே சித்திரித்துக் காட்டும் நாத சித்திரமாகத்தான் திகழ்ந்தது. மேலே, மேலே மெய்மறந்து ஸ்வரங்களையும், நாதத்தையும் வைத்துப் பின்னி வரைந்து தள்ளிக்கொண்டிருந்தார். அதுவோ

சாக்ஷாத் ஈச்வரனைப்போல வளர்ந்து போய்க்கொண்டே யிருந்தது. ஆஹா! இந்த ராகம் எப்படி யெப்படியெல்லாம் போய்க்கொண்டிருக்கிறது. இப்படியும் அதில் ஒரு வளைவு இருக்கிறதா! இப்படியும் ஒரு சுழல் இருக்கிறதா! என்று அனுபவித்துக்கொண்டே பாடினர். பாலாம்பாளும் அந்த சங்கீத வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாள். மேல் பஞ்சமத்தில், சஞ்சாரம் செய்யும் சில சங்கதிகளைப் பாடி விட்டு, ஒரு சங்கதியை பாடப்போனர். அறுந்த தந்தியைப் போல், ஏதோ பளீரென்று அவர் மார்பில் குத்தியது. அப்படியே கட்டிலின்மேல் விழுந்து விட்டார். மார்பின் வலி அதிகமாகிவிட்டது. அப்படியே மார்பை அமுக்கிப் பிடித்துக்கொண்டு, தன் தேகத்தின் வலியைக் காட்டும் முகத்துடன், படுக்கையில் சாய்ந்தார். அவர் சட்டென்று பாட்டை நிறுத்திவிட்டுப் படுக்கையில் விழுந்தவுடன், பாலாம்பாள் அப்படியே நடுங்கிவிட்டாள். தம்பூராவை வைத்துவிட்டு, "என்ன? என்ன?" என்று திகிலுடன் கேட்டாள். "ஒன்றுமில்லை, வலிதான்" என்று வலி பொறுக்க முடியாமல், வாயைக் கடித்துக் கொண்டே மார்பை அமுக்கிக்கொண்டு சொன்னர். அவர் படும் அவஸ்தை பார்ப்பதற்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. பாலாம் பாளுக்கும் அதற்குச் செய்ய வேண்டிய சிகிச்சை முறை தெரியும். நீலாம்பாளைப் பார்த்து, "அவருக்கு வலி அதிக மாகிவிட்டிருக்கிறது, கொஞ்சம் (தணல்) கொண்டுவருகிறீர் களா? ஒத்தடம் கொடுக்கலாம்" என்ருள்.

நீலாம்பாள் சிறிது நேரமாக, சுமுகமாகவேயில்லை. ஏனென்ருல், தான் சொல்லியும் தன் பேச்சைக் கேட்கா மலேயே உடம்பு சரியில்லாத பொழுது பாடினது ஒன்று; தன்னை அலட்சியம் செய்தது போல் நடந்து கொண்டது ஒன்று தனக்கும் அவருக்கும் ஒன்றும் உரிமை இல்லாதது போல் நடந்து கொண்டது ஒன்று; இதெல்லாம் சேர்ந்து கொண்டு அவளுடைய அடத்தை அதிகப்படுத்தியது. பாலாம் பாள் அவளிடம் பரபரப்புடன் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போலவே, எந்திரத்தில் அரிசியை அரைத்துக் கொண்டிருந்தாள்.

நீலாம்பாளுடைய இந்த அசிரத்தையும் அடமும், பாலாம்பாளுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. "உங்களைத் தான் அம்மா, அவர் துடிதுடிக்கிருர். தணல் கொண்டு வாருங்கள்" என்று சொன்ளுள். அதற்கும் நீலா பதில் சொல்லவில்லை. தனக்கும் ரோஷம் இருக்கிறது என்பதைக் காட்டுவது போல ஒருதரம் பாலாம்பாளை விழித்துப் பார்த்

தாள். மறு நிமிஷம், பாலாம்பாள் அவள் முன்னே நிற்க வில்லை. நேரே அலமாரிக்குப் போனுள். அலமாரியைத் திறந்து, தைலத்தை எடுத்தாள். கையில் ஊற்றிக்கொண்டு வந்து கிருஷ்ண பாகவதர் மார்பில் தடவி தன் கையாலேயே, அழுத்தித் தடவிக்கொண்டிருந்தாள். நீலாவின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் இந்தக் காட்சியைக் கண்ட வுடன் வெடித்துக்கொண்டு வெளிப்பட்டது. பாலாம்பா ளிடம் வந்தாள். அவளை அப்படியே எரித்து விடுவதைப் போலப் பார்த்தபடியே, "அம்மா! தொட்டுத் தாலி கட்டின பொம்மனுட்டிக்கு மேலேதான் உனக்கு மனசு பதறுகிறது. இங்கேகொண்டா தைலத்தை" என்று அந்தச் சீசாவை அவள் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டாள். அந்தச் சொல் லம்பு பாலாம்பாள் நெஞ்சில் வெகு ஆழத்தில் சென்று தைத்தது.

"அம்மா, அந்தப் பாக்கியம் செய்தவர்கள் நீங்கள்தான்; ஆனுல் இங்கே தவிக்கும் ஜீவன், உங்களுக்கு மாத்திரம் சொந்தமில்லை" என்று கிருஷ்ண பாகவதரைச் சுட்டிக் காட்டியபடியே தலை குனிந்து நின்ருள். முதன் முதலாக அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் துளிர்த்து நின்றது. அவள் இதுவரையில், பொது மகளாகப் பிறந்ததைப் பற்றி வருத்தப்படவில்லை. பொதுமகளாக ஜனங்களால் கருதப்பட்டதைப் பற்றி வருத்தப்படவில்லை. ஆனுல் இன்று என்னவோ, நீலா சொன்ன வார்த்தைகள் அவள் நெஞ்சைப் புண்படுத்தின. அதற்கு மேல், பேச்சு வார்த்தைகள் விரஸமாகப் போய்விடப் போகிறதே என்ற கவலையால் கிருஷ்ண பாகவதர் அந்த வலியிலும் மனைவியைப் பார்த்து, "எனக்கு ஒரு வேதனை போதும், தணலைக் கொண்டுவா?' என்ருர்"

பதில் பேசாமல், நீலா ஒத்தடத்திற்குத் தணல் கொண்டு வர உள்ளே சென்ருள்.

அந்தச் சம்பவத்திலிருந்து, பாலாம்பாள் கிருஷ்ணபாகவதர் வீட்டிற்கு வருவதில்லை. ஏனோ, நீலாம்பாளுக்கும் பாலாம்பாளுக்கும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளக் கூச்சமாயிருந்தது. மனதில் களங்கம் ஏற்பட்டுக் கள்ளம் புகுந்து விட்டபடியால், முன் போல் மனம் விட்டுப் பழகும் படியான சுதந்தரம் இல்லாமல் போய் விட்டது. ஆனால் கிருஷ்ண பாகவதர், எப்பொழுதும் போலத்தான் இருந்து வந்தார். அவருக்கு மனதில் ஒன்றும் வித்தியாசம் ஏற்படவேயில்லை. இந்த விஷயங்கள் அவர் சிந்தனையின் வட்டத்துக்குள் வரவேயில்லை.

பாலாம்பாள் சிக்ஷையில் மிகவும் சுறுசுறுப்பாக முன்னேறி வந்தாள். தீட்சண்யமான புத்தியும், நல்ல ஞானமும், அபாரமான சாதகமும் சேர்ந்திருந்தபடியால் ஒன்றைச் சொல்வதற்கு முன் அதைப் பிடித்துக் கொண்டு அதற்கு மேல் பாடத் தயாராயிருப்பாள். ஏற்கனவே அவளுக்கிருந்த ஞானத்தை அவள் சீர்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்குத்தானே அவள் இவரிடம் சிக்ஷை பயில ஆசைப்பட்டது, அந்தப் பாதையில் அவள் வெகு தூரம் முன்னேறி இருந்தாள்.

ஒரு நாள் மாலையில், பாலாம்பாள் பாடிக்கொண்டிருந்தாள். கிருஷ்ண பாகவதர், சந்தியாவந்தனத்தை முடித்து விட்டு வந்து கொண்டிருந்தார். அவர் வீட்டில் நுழையும் பொழுது பாலாம்பாள் பாட்டு அவர் காதில் கணீரென்று விழுந்து கொண்டிருந்தது. சியாமா சாஸ்திரிகள் கீர்த்தனமான, 'மரிவே' என்னும் ஆனந்தபைரவி கீர்த்தனையை பிருகாக்களுடன் அழுத்தமாகப் பாடிக்கொண்டிருந்தாள். அந்தப் பாட்டிலுள்ள சுநாதமும், சுஸ்வரமும் கிருஷ்ணபாகவதரை அப்படியே இன்பசாகரத்தில் ஆழ்த்தின. அந்த இன்பமயமான கானத்திலே ஈடுபட்டவராய் உள்ளே நுழையாமல் கேட்டுக் கொண்டபடியே நின்று அனுபவித்துக் கொண்டிருந்தார். தன்னுடைய சிஷ்யை, தான் சொல்லிக் கொடுத்து முன்னேறி வருபவள் என்ற எண்ணமே அவரிடம்

வரவில்லை. அந்த மனோகரமான சங்கீதத்தில் அப்படியே ஆனந்த பரவசராகத்தான் நின்றுகொண்டிருந்தார்,

பாட்டு முடிந்து திரும்பிப்பார்த்தாள். கூடத்தில் நிழல் தட்டியது. ரேழிப்பக்கமாக வந்து பார்த்தாள். கிருஷ்ண பாகவதர் நின்றுகொண்டிருந்தார்.

"ஏன் இங்கேயே நின்றுகொண்டிருக்கிறீர்கள்?"

"இல்லை, உன்பாட்டைத் தான் கேட்டு அனுபவித்துக் கொண்டிருந்தேன்."

"நீங்கள் நின்றுகொண்டு கேட்க வேண்டிய பாட்டா இது?" என்ருள்.

"சுஸ்வரமாகவும், சுநாதமாகவும், சாஸ்திரோக்தமாக வும், இனிமையாகவும் பாட்டு இருந்துவிட்டால் நின்று கொண்டு தாஞ கேட்கலாம்! கைகூப்பிக் கும்பிட்டுக் கூடக் கேட்கலாமே!" என்ருர்.

"நீங்கள் என்னை உத்ஸாகப் படுத்தவேண்டியது அவசியம்தான். இருந்தாலும் நீங்கள் இப்படியெல்லாம் சொல்லக்கூடாது" என்ருள்.

"ஏன் சொல்லக்கூடாது? நான் உத்ஸாகப்படுத்துவதற்காக மாத்திரம் சொல்லவில்லை. உண்மையைத்தான் சொல்லுகிறேன். உண்மையில் உன் தவம் பலித்து விட்டது. உனக்கிருக்கும் சாரீரத்திற்கும், உனக்கிருக்கும் ஞானத்திற்கும் இன்று உன்மாதிரி பாடக்கூடிய பெண்யாரிருக்கிருள் சொல்" என்று சொல்லிவிட்டு அவளைப் பார்த்தார். உடனே தான் சொன்னதைத் திருப்பிக் கொண்டு, "இல்லை, ஆண் பிள்ளைகளிலேதான் யாரிருக்கிருர்கள் சொல்" என்ருர்.

பாலாம்பாள் அதற்குப் பதில் பேசவில்லை. அவளுக்கு என்னசொல்வதென்று புரியவில்லை. தன்னிடம் வித்தையைக் கற்பவர்களிடம் நன்ருயிருக்கிறது என்று சொன்ன குருவைப்பற்றி அவள் கேள்விப்பட்டதேயில்லை. சிஷ்யர்களுக்குத் தலைக் கொழுப்பு ஏறிவிட்டால் என்ன செய்வதென்றே சிஷ்யர்களின் யோக்கியதையை குரு ஒப்புக்கொள்வதேயில்லை. ஆனல், கிருஷ்ணபாகவதர் தன்னை வாயாரப் புகழுவது பாலாம்பாளை மிகவும் சங்கடத்திலாழ்த்தியது.

"நீங்கள் 'தவம் பலித்தது' என்று சொன்னீர்களே, அது நூற்றிலொரு வார்த்தை. எவ்வளவோ தடவைகள் எத்

தனையோ பேர்கள் முன்னிலையில் பாடியிருக்கிறேன்: அவர்கள் என்னைப் புகழ்ந்தும் பேசியிருக்கிறார்கள். ஆனால் உங்கள் ஒருவரிடம் மாத்திரம் ஒரு தடவையாவது நன்றாயிருக்கிறது என்ற வார்த்தையைக் கேட்கும்படியான பாக்கியம் வருமா என்று முன்பெல்லாம் நான் ஏங்கியது உண்டு. அந்த பாக்கியம் இன்று கிடைத்தது. இன்றுதான் என் தவம் பலித்தது. ஆனால் இதில் நான் பெருமைப்படுவதற்கு ஒன்று மில்லை. என்னை நீங்கள் புகழ்ந்தாலும் அதுவும் உங்களையே நீங்கள் புகழ்ந்து கொண்டது போலத்தான் ஆகும். ஏனென்றால் நான் இன்று பாடுவது, உங்கள் நாத வித்தை யின் ஒரு சிறு எதிரொலியே தான். அந்தப் பெருமை உங்க ளுக்குத்தான்' என்றாள்.

அவளுடைய விநயமும், இங்கிதமான பேச்சும் கிருஷ்ண பாகவதரின் மனத்தை மிகவும் கவர்ந்தன, அன்புடன், "வெகு நாழிகையாகப் பாடிக்கொண்டிருக்கிறாய் போலி ருக்கே. கொஞ்சம் சிரமபரிகாரம் செய்துகொள்" என்று பரிவுடன் சொன்னார். பாலாம்பாளின் ஹ்ருதயத்தில் அப்படியே ஆனந்தம் பொங்கி நின்றது.

அவள் சொன்னாள்: "என் சங்கீதத்திற்கு உயிரைக் கொடுத்திருக்கிறீர்கள். என்மேல் கருணையைக் காட்டியிருக் கிறீர்கள். இதற்கெல்லாம் நான் எப்படி என் நன்றியைத் திருப்பிக் காட்டப்போகிறேனோ, அதுதான் எனக்குப்பயமாக இருக்கிறது" என்றாள்.

'எனக்கு நன்றி செலுத்துவதாவது! பகவான் நமக்கு எவ்வளவோ கொடுத்திருக்கிறார். இந்தப் பூமண்டலம் முழு வதையுமே மனுஷ்யனுக்காகத்தானே உண்டுபண்ணியிருக் கிறார் பகவான் மனிதனுடைய நன்றியை எதிர்பார்த்தா இதெல்லாம் செய்கிறார். வித்தையும் பகவானுடையது தான். வித்தையைக் கற்பதும் வித்தையைப் போதிப்பதும் ஒன்றுதான். இரண்டும் ஒரு விதத்தில் ஈஸ்வரனை ஆரா திப்பது போலத்தான். இதில் ஒருவருக்கொருவர் உபசாரம் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. என்னுடைய குருநாதன், எனக்கு வித்தையைப் போதித்தார். என்னை ஆளாக்கி விட்டார். அவருக்கு நான் என்ன செய்தேன்? அவருடைய தேகத்தில் நெருப்பை அள்ளிப்போட்டு, தேகத்தை பஸ்ப மாக்கினேன். இதுதான் அவருக்கு நான் செய்த நன்றி" என்றார்.

பாலாம்பாள் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். 'தன் குருநாதனைப் போலவேதான், தன்னிடமும் இவர் ஒன்றும் எதிர்பார்க்காமல் தனக்கு வித்தையை போதித்திருக்கிறார். தான் அதற்குப் பிரதியாகச் செய்ய என்ன இருக்கிறது? தன் வாழ்க்கையின் போக்கையே மாற்றியிருக்கிறார். தன் சங்கீதத்தின் பாணியையே மாற்றியிருக்கிறார். தன்னுடைய சுபாவத்தையே மாற்றிவிட்டார். இதெல்லாம் ஒரு துளி பிரதி பிரயோஜனத்தை எதிர் பார்க்காமல் தான் செய்திருக்கிறார். சமூகத்தின் பலதரமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் செய்திருக்கிறார். தன் கௌரவத்தையும் பின்னப்படுத்திக் கொண்டு சொல்லிக் கொடுத்திருக்கிறார். இதெல்லாம் எதற்காக? சங்கீதத்திற்காக! இதற்கு நான் எப்படி அவருக்குக் கைம்மாறு செய்யப்போகிறேன்?....' என்று நினைத்தாள்.

எழுந்திருந்து அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தாள். "நான் மிகவும் கேவலமான குலததில் பிறந்தவள். இருந்தாலும் என்னிடம் கிருபை கூர்ந்து வித்தையை அனுக்ரகித்தீர்கள். என்னுடைய சங்கீத பாணியில் மாத்திரம் நீங்கள் இருக்கவில்லை. என்னுடைய இருதயத்திலும் நீங்கள் இருக்கிறீர்கள்" என்று நாத்தழுதழுக்கச் சொன்னாள். அவளுடைய கண்கள் வாய்க்கு எட்டாத பாஷையைப் பேசிக் கொண்டிருந்தன.

ஆனால், அவள் பேசியதன் முழுத்தாத்பர்யத்தை கிருஷ்ண பாகவதர் புரிந்துகொண்டாரோ என்னமோ? அவர் கண்ணை மூடிக்கொண்டு யோசனையில் அல்லவா இருந்தார்.

காலை சுமார் ஒன்பது மணியிருக்கும். கந்தசாமி பாகவதர் ஏதோ காரியமாக வந்திருந்தார். திண்ணையில் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் அய்யாசாமி சாஸ்திரிகள் தெருவிலே போய்க்கொண்டிருந்தார். அன்று அவருக்குச் சூடாகக் கொடுத்ததிலிருந்து ஒருவரை யொருவர் சந்திக்கவுமில்லை. பேசவுமில்லை கந்தசாமி பாகவதருக்கு அவரைக் கூப்பிட்டுப் பேசலாமே என்று தோன்றியது.

''என்ன சாஸ்திரிகள். சாவகாசமாகப் போகிறாப் போலே இருக்கு'' என்றார். அய்யாசாமி சாஸ்திரிகளும் தானும் மனஸ்தாபம் கொள்ளவில்லை என்று காட்டவே விரும்பினார்.

''இப்பொழுதெல்லாம் மிகவும் அவகாசம்தான்'' என்று சொல்லிக் கொண்டே திரும்பினார் சாஸ்திரிகள்.

கிருஷ்ண பாகவதர் ''வாருங்கள்'' என்று அழைத்தார். அய்யாசாமி சாஸ்திரிகள் வந்து உட்கார்ந்தார்.

''இப்பொழுதெல்லாம் பாட்டு சப்தம் அதிகம் காணோமே'' என்று கிருஷ்ண பாகவதரை நோக்கிக் கேட்டார், தானும் ஏதாவது கேட்கவேண்டுமே என்ற எண்ணத்துடன்.

"இப்பொழுது மானஸீக சாதகம்தான் ஜாஸ்தி'' என்றார் கிருஷ்ண பாகவதர். அய்யாசாமி சாஸ்திரிகள் அதைப் புரிந்து கொண்டாரோ என்னவோ?

''ஏது, அய்யாசாமி சாஸ்திரிகளுக்கு சங்கீதத்திலே கவனம் திரும்பியிருக்கிறது!'' என்றார் கந்தசாமி பாகவதர்.

"சும்மாத்தான் கேட்டேன். எனக்குச் சங்கீதத்தைப் பற்றி என்ன தெரியும்!" என்றார் அய்யாசாமி சாஸ்திரிகள்.

இந்தச் சமயத்தில் தாடியும் மீசையுமாக ஓர் ஆசாமி அவர்கள் முன்னே வந்து நின்றான். அவன் கண்கள் 'ஜிவு ஜிவெ'ன்று சிவந்திருந்தன. முகமெல்லாம் வாடித்து வண்டு

கிடந்தது. உடம்பில் அழுக்குப்படிந்த வேஷ்டி. தலைமயிரெல்லாம் பிசுக்கேறிக்கிடந்தது. மனிதன் குளித்தே பல நாட்களானது போலத் தோன்றியது. கந்தசாமி பாகவதரையும் கிருஷ்ணபாகவதரையும் பார்த்துக் கும்பிட்டு நின்றான். கந்தசாமி பாகவதர் அவன் பக்கம் திரும்பாமலேயே முணுமுணுத்துக் கொண்டிருந்தார். ஆனாலும் அவன் அவர் கவனத்தை இழுத்துவிடத் தீர்மானத்துடன் அவர் திரும்பும் போதெல்லாம் கும்பிடுபோட்டுக்கொண்டிருந்தான்.

''இங்கேயும் வந்துட்டியா அப்பா! போயிட்டு வாயேன்'' என்றார். அவர் மனது மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. அய்யாசாமி சாஸ்திரிகள் ''போடா, போடா! இங்கே ஒன்றும் கிடையாது'' என்று விரட்டிக்கொண்டிருந்தார்.

''இரண்டு நாளாகப் பட்டினி'' என்றான் அந்த மனிதன்.

''நான் என்ன பண்ணமுடியும் அப்பா? எத்தனை கொடுத்தாலும் உன் தரித்திரம் தீரும் வழியாயில்லை. அள்ளி அள்ளிக் கொடுக்க நானும் குபேரப்பிரபு இல்லை. வேறு எங்காவது போய்க் கேட்கவும் மாட்டாய். ஒழுங்காய் ஜீவனம் நடத்தவும் மாட்டாய். என் பிராணனை எதற்கு வாங்குகிறாய்?'' என்றார் கந்தசாமி பாகவதர்.

''அப்படிச் சொல்லக்கூடாது. வாஸ்தவமாகவே இரண்டு நாளாகப் பட்டினி'' என்றான் அந்த ஆசாமி.

''ஹரிச்சந்திரன் வாரிசுதான் நீ'' என்று நையாண்டி செய்தார் அய்யாசாமி சாஸ்திரிகள்.

''என்னை என்ன செய்யச் சொல்றே'' என்று அதட்டிய படி கேட்டார் கந்தசாமி பாகவதர். அவனை எப்படியாவது போகச் செய்துவிட்டால் போதுமென்று அவருக்குத் தோன்றியது.

''ஏதாவது கொடுங்கள்'' என்று பரிதாபமாகக் கேட்டான் அந்த ஆசாமி.

கந்தசாமி பாகவதர் சம்புடத்தைத் திறந்தார். அதில் ஒரு எட்டணாக் காசு இருந்தது. அதை அவனிடம் கொடுத்துக் கொண்டே ''இந்தா, இதை வாங்கிக்கொள்; இதற்கும் குடித்துவிட்டு நாளை வந்து என் முன் நிற்காதே'' என்றார். அந்த ஆசாமி இரண்டு கைகளையும் கூப்பித் தொழுதுவிட்டு நகர்ந்தான்.

கிருஷ்ண பாகவதர் இதையெல்லாம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சமாசாரம்?" என்றார். கந்தசாமி பாகவதர் பதில் சொல்வதற்கு இஷ்டமில்லாதவர் போலிருந்தார்.

ஆனால் அய்யாசாமி சாஸ்திரிகள் சும்மா இருக்கவில்லை. "அடேடே! அவனைத் தெரியாதா உங்களுக்கு? ஒரு காலத்தில் நாடக கேஸரி என்று பிரமாதப்பட்ட அகோரமூர்த்தி அவன் தான்" என்றார்.

கிருஷ்ண பாகவதருக்குத் தூக்கி வாரிப்போட்டது நாடககேஸரி அகோர மூர்த்தியைப்பற்றிக் கேள்விப்படாத மனிதனும் உண்டா? ஐந்து கட்டை சுருதியில் மேடைமீது வந்து பாடஆரம்பித்தால் கல்லும் உருகும். சங்கீதம் அறிந்தவர்கள் அறியாதவர்கள் எல்லோரும் பிரமை தட்டிப்போய்க் கேட்டுக் கொண்டிருக்கும் படியான பாட்டு அது. 'அந்த அகோரமூர்த்தியா பிச்சைக்காரனுக்கும் கேடுகெட்டுப் பிச்சைகேட்க வந்துவிட்டான்! ஹரிச்சந்திரனாகவும், ராமனாகவும் வந்து ஜனங்கள் மனத்தைக் கொள்ளை கொண்ட அகோரமூர்த்தியா அரை ரூபாய்க்கு மானத்தை விலை கூறிப் பிழைக்கிறான்! என்ன அநியாயம், என்ன விபரீதம்!' என்று நினைத்து மனத்திற்குள் துக்கப்பட்டார் கிருஷ்ண பாகவதர்.

"எப்படி இவ்வளவு கீழ்த்தரமாக விழுந்து போனான்? எனக்குக் கேட்கவே சகிக்கவில்லையே" என்று பொருமினார் கிருஷ்ணபாகவதர்.

கந்தசாமி பாகவதருக்கும் அதைப்பற்றிப் பேசச் சங்கடமாயிருந்தது.

"வேறு என்ன! குடியும் கூத்தியும்தான் அவனை இந்த ஸ்திதியில் கொண்டுவந்து விட்டன. இந்த எட்டணாவை எடுத்துக்கொண்டு நேராகக் கள்ளுக் கடைக்குத்தான் போயிருப்பான்" என்றார்.

"இது இப்பொழுது ஏற்பட்ட பழக்கமா, முன்பு அவன் செல்வாக்குடன் இருந்த காலத்திலும் உண்டா?" என்றார்.

"அப்பொழுது இல்லாமலா இப்பொழுது வந்துவிட்டது? அப்பொழுதெல்லாம் கழுத்துவரையில் குடித்து விட்டுத் தான் மேடைக்கு வருவான். அப்பொழுது குடித்துவிட்டு அறையில் ஆடினான். இப்பொழுது அம்பலத்தில் ஆடுகிறான்" என்றார் அய்யாசாமி சாஸ்திரிகள்.

"இப்பொழுது எட்டணுவுக்குக் கை நீட்டிப் பிச்சை எடுக்கிறுன். அப்பொழுதெல்லாம் கையை நீட்டுபவர்களுக்கு எண்ணியா கொடுத்திருப்பான்!" என்றுர் கந்தசாமி பாகவதர்.

இதைக்கேட்டதும் கிருஷ்ண பாகவதருக்கு மேலும் மனது இளகிவிட்டது. "அடடா! வித்தை இருந்தென்ன, மேதை இருந்தென்ன, மனிதனுக்கு ஒழுக்கம் என்பது ஒன்று இல்லா விட்டால் எவ்வளவு பாதாளத்தில் வீழ்த்திவிடுகிறது பார்த் தீர்களா?" என்றுர்.

"அது தானே கிடையாது! நான் ஒன்று சொல்லுகிறேன், நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. இந்த சங்கீதமே மனிதனுடைய ஒழுக்கத்தைக் குலேக்கும் ஒரு ஆபத்தான வித்தை. அதனுலேதான், நம்ம பெரியாள்ளாம் நடன், விடன், காயகன் இவர்களையெல்லாம் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறுர்கள். இவர்களுக்கும் ஒழுக்கத்திற்கும் மிகவும் விரோதம். சங்கீதமே கந்தர்வ வித்தைதானே!

"அதில் ஈடுபடுபவர்கள் கந்தர்வர்களைப் போலத்தான் இருக்கப் பிரியப்படுவார்கள். அதனுல்தான் அவர்கள் சீரழிந்து போகிறுர்கள். யாரோ ஒரு ராஜா 'சங்கீதத்தை ஆழமாகப் புதையுங்கள்' என்று சொன்னுனும். அவன் சொன்னது முற்றிலும் ஆமோதிக்கப் படவேண்டிய விஷயம் தான்" என்றுர் அய்யாசாமி சாஸ்திரிகள்.

இந்த வார்த்தைகள், எரிகிற புண்ணில் எண்ணெயை வார்த்ததுபோல், மேலும் கிருஷ்ணபாகவதர் மனத்தைப்புண் படுத்திற்று. 'சங்கீதம் ஒழுக்கத்தைக் குலைக்கும் விஷ பானமா? ஆனுல் அப்படித்தானே எல்லோரும் நினைத்திருக் கிறுர்கள்! நடன், விடன், காயகன் இவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும் என்றுசொன்ன பெரியவரும் அப்படித்தானே நினைத்துச்சொல்லியிருக்கிறுர். தன் தாயாரும் அப்படித்தானே நினைத்தாள். அதற்குக் காரணம் கிருஷ்ணபாகவதருடைய தகப்பனுரா யிருக்கலாம். அவர் தன்னுடைய வித்தையை வைத்துக்கொண்டு மேன்மையா யிருப்பதற்குப் பதிலாக, தன்னுடைய சீர்கேடான நடவடிக்கைகளினுல் இப்படி ஒரு அபக்கியாதியைச் சம்பாதித்துக்கொண்டு இறந்தார். அவர் தாயார் சங்கீதத்தையே வெறுப்பதற்குக் காரணமாக்கிக் கொண்டுதானே அவர் பிராணனை விட்டிருக்கிறுர்! ஆனுல் இதற் கெல்லாம் காரணம் சங்கீதம்தானே? கலை மனிதனை

மேலே மேலே தூக்கிச் செல்லுமா? அதபாதாளத்தில் கொண்டு போய்த் தள்ளிவிடுமா? அப்படி ஒழுக்கத்தைக் கொடுத்து மனிதனைச் சந்தியில் சிரிக்க வைக்குமானால், அது ஒரு தெய்விகக் கலையாகத் திகழ்ந்து கொண்டிருக்குமா? சாக்ஷாத் கலையரசியின் சொரூபமாக இருந்துகொண் டிருக்குமா? ஏன் இப்படி அறிவில்லாமல் பேசுகிறார்கள்?' என்று ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

''சாஸ்திரிகளே, நீங்கள் வெகுசீக்கிரத்திலே வார்த்தைகளை அள்ளி வீசி விட்டீர்கள். நீங்கள் சொன்னதன் முழுத் தாத்பர்யத்தையும் அறிந்து கொண்டிருந்தால் இப்படிப் பேசியிருக்கமாட்டீர்கள். நல்லவர்கள், கெட்டவர்கள் என்பது சங்கீதக்காரர்களிடம் மாத்திரம் இல்லை; எந்தத் துறையிலும் நல்லவர் கெட்டவர் இருப்பார்கள். அதற்காக அவர்கள் கொண்ட தொழிலுக்கோ, கற்ற வித்தைக்கோ இழுக்கு ஏற்பட்டுவிடுமா. வேதத்தையும் உபநிஷத்தையும் பாராயணம் செய்தவர்களில் எத்தனைபேருக்கு மனப்பக்குவம் வந்திருக்கிறது? அதற்காக வேதத்தையும் உபநிஷத்தையும் குறை சொல்ல முடியுமா?'' என்றார்.

அய்யாசாமி சாஸ்திரிகள் சிறிது தயங்கினார். ''இல்லை, அதற்குச் சொல்ல வரவில்லை. சங்கீதவித்தை உணர்ச்சியை மிகவும் பிரதானமாகக் கொண்ட வித்தை உணர்ச்சி வசப்பட்டவர்கள் தங்கள் நிதானத்தை இழப்பது சகஜம். அதனாலேதான் அவர்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து விழுவதற்கு சந்தர்ப்பம் நிரம்ப ஏற்பட்டு விடுகிறது'' என்றார்.

''மனிதனே உணர்ச்சி வசப்பட்டவன்தான். அவன் எவ்வளவோ தடவைகளில் உணர்ச்சி பொங்க நடந்து கொள்ளுகிறான். அதற்காக ஒழுக்கத்தை மீறி நடக்க வேண்டுமென்ற அவசியமென்ன? எதனால் இதெல்லாம் வருவதென்றால், சங்கீதத்தைக் கேவலம் பொழுதுபோக்கிற்காக ஒரு விளையாட்டுக் கருவியாக எண்ணினால், இதில்தான் கொண்டு வந்து விடும். சங்கீதம் கேவலம் நிலையற்ற இன்பத்தைத்தானா கொடுக்கிறது? நாதப்பிரம்மத்தின் ரூபத்தை எடுத்துக் காட்டும் மகத்தான யோகமல்லவா சங்கீதம்! அதற்குத்தான் தியாக பிரும்மம், 'சங்கீத ஞானம் பக்தியில்லாவிட்டால் பிரயோசனமில்லை' யென்று கதறியிருக்கிறார்'' என்றார்.

''வாஸ்தவந்தான். ஆனால் எவ்வளவு பேர், சங்கீதத்தின் உண்மையான மேன்மையை அறிந்து கொண்டிருக்

கிறார்கள்? பெரும்பாலானவர்கள் இந்த அகோர மூர்த்தி போலத்தானே இருக்கிறார்கள். அதனால்தான் இந்த நட-விட -காயகர்கள் என்ற அவச்சொல் வந்தது'' என்றார்.

''தயவு செய்து, அதை மாத்திரம் சொல்லாதீர்கள். தியாகய்யர்வாள் ஒரு காயகர்தான். சாஷாத் நடராஜ மூர்த்தி ஒரு நடன்தான். கலைமகளான சரஸ்வதி தேவியும் ஒரு காயகிதான். இவர்களையெல்லாம் விலக்குவதாயிருந்தால் சங்கீதம் தள்ளுபடியானதுதான்'' என்றார் கிருஷ்ண பாகவதர்.

''பாகவதர்வாள், நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான். ஆனாலும், நீங்கள் சொல்வதைப் பார்த்தால் சங்கீதத்திலே புழங்குகிற ஒவ்வொரு கத்துக் குட்டியையும் தியாகப்பிரம்மத்தைப் போல் நாதப்பிரம்மத்தை அறிந்து விட்டவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் சங்கிதக்காரர்களைக் கொஞ்சம் பாருங்கள். பொடி, புகையிலை, ஜவ்வாது, தாஸி இது இல்லாத சங்கீதக்காரர்கள் எத்தனை பேர்? இதைப் பார்க்கும் பொழுது சங்கீதத்திற்கே இவை எல்லாம் அங்கங்களோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது'' என்றார்.

கிருஷ்ணபாகவதர் பதில் பேசவில்லை. தாஸியைப் பற்றிச் சொன்னபொழுது கிருஷ்ண பாகவதரை மனத்தில் வைத்துக் கொண்டு பேசவில்லை. பொதுப்படையாகத்தான் பேசினார். இருந்தாலும் கிருஷ்ணபாகவதருக்குத் தன்னையும் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்றுதான் தோன்றியது. அவர் மனத்திலே நன்றாக அது தைத்தது.

கந்தசாமி பாகவதர் இதுவரையில் வாயைத்திறக்கவில்லை. இப்பொழுது இந்த இக்கட்டான நிலையைத் தவிர்க்க தாம் ஏதாவது சொல்லித்தான் ஆக வேண்டுமென்று தோன்றியது.

''அகோரமூர்த்தி வந்து அனுவசியமாக வித்வ விவாதத்தைக் கிளப்பிவிட்டுப் போய்விட்டான். அரைரூபாய்ச் செலவுடன் நிற்காமல்'' என்றார்.

''இல்லை பாகவதர்வாள்,அகோரமூர்த்தி ஒரு உதாரணம். அவன் மாதிரி கிட்டத்தட்ட எத்தனைபேர்! அரிச்சந்திரன் வேஷம் போடுகிறவன் குடிகாரனாக இருந்தால், இவன் என்ன நாடகம் ஆடவேண்டிக்கிடக்கிறது!'' என்றார்.

கிஷ்ணபாகவதர், சமாளித்துக் கொண்டு பேசினார்: "சாஸ்திரிகளே, நீங்கள் சொல்வது என்னவோ நியாயம் தான். சங்கீதம் மற்ற எல்லாக் கலைகளுக்கும் சிகரமாயிருக்கிறது. மனத்திலே தூய்மையையும் புனிதத்தன்மையையும் எழுப்பாத சங்கீதம் சங்கீதமே இல்லை. இதயத்தில், அந்தத் தூய்மையும் புனிதத்தன்மையும்இல்லாதவன் சங்கீதக்காரனல்ல. சங்கீதத்தையும் கற்று, அவன் நடத்தையில் அபசாரம் செய்வானானால் அவன் சங்கீதத்திற்கே அபசாரத்தைச் செய்தவனாகத்தான் ஆகிறான்" என்றார்.

"நல்ல வினையைக் கொண்டுவந்து விட்டான் இந்த அகோரமூர்த்தி" என்று எழுந்திருந்தார் கந்தசாமி பாகவதர்.

அய்யாசாமி சாஸ்திரிகளும் இத்துடன் விவாதம் போதுமென்று எழுந்திருந்தார்.

அன்று மாலை வழக்கம்போல் கிருஷ்ணபாகவதர் பாலாம்பாள் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தார். வழியில், சந்தனக் கடை வியாபாரி ஒருவர் கிருஷ்ணபாகவதரைப் பார்த்துவிட்டார். அவர் பழுத்த சங்கீத ரஸிகர். அதுவும் கிருஷ்ணபாகவதர் பாட்டு என்றால் உயிர். கிருஷ்ணபாகவதரை அன்புடன் அழைத்து அவருக்குச் சந்தனத்தைப் பூசி, ஜவ்வாதினால் பொட்டிட்டு. மாப்பிள்ளையைப்போல் ஆக்கி அநேக உபசாரங்கள் சொல்லி அனுப்பினார்.

கிருஷ்ணபாகவதர், அந்த மாப்பிள்ளைக் கோலத்துடன் பாலாம்பாள் வீட்டில் நுழைந்ததும், அவர் இருக்கும் கோலமும் அவர் செய்து கொண்டிருக்கும் அலங்காரமும் அவளுக்கு ஆச்சரியத்தை விளைவித்தன. அவள் அந்த நிமிஷத்தில் கிருஷ்ண பாகவதரைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தாள். அதுவும் அவள் மனத்தில் குரு என்ற முறையில் மாத்திரம் அவர் தோன்றவில்லை. 'இவர் என் வீட்டில் உரிமையுடன் வருவதுபோல் என் உள்ளத்திலும் ஓர் உரிமையுள்ள ஸ்தானத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டார். ஆனால் இவருடைய உள்ளத்தில், எனக்கு ஒரு சிறு இடம் கிடைக்காதா?' என்பது தான் அவள் அப்பொழுது ஏங்கிக்கொண்டிருப்பதற்குக் காரணம். ஆனால் கிருஷ்ணபாகவதர் நெஞ்சமோ ஒன்றையும் புகவிடாத கற்கோட்டையாக இருந்தது. அவருடைய இருதயத்தில் நாதத்தைத் தவிர வேறு ஒன்றுக்கும் துளிக்கூட இடம் இல்லை. 'என் சாரீரத்தின் இனிமையில் இவர் மெய் மறந்து போகிறார். என் பாட்டின் இன்பத்தில் இவர் லயித்து விடுகிறார். ஆனால் என் பாட்டின் இனிமையும், என் சாரீரத்தின் இனிமையும், எந்த வேதனையின் சின்னமாகவும் எதற்கு எதிரொலியாகவும் இருக்கிறதோ, அந்த இருதய கீதத்தை இவர் கேட்கவில்லையே!' என்று துன்பப்படுவாள். அப்படிப்பட்ட ஒரு மன வேதனையுடன் கிருஷ்ண பாகவதரை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணபாகவதர் வந்து உட்கார்ந்தார். தான் கொண்ட கோலமோ, அல்லது பாலாம்பாள் முகம் பேசும் ஒரு பாஷையோ அவர் புத்தியின் வட்டத்திற்குள் செல்லவே இல்லை. எப்பொழுதும் போலவே வந்து உட்கார்ந்தவுடன், ''தம்புராவை எடுத்து வா'' என்றார். தம்புராவை எடுத்துக் கொண்டு வந்து வைத்தாள் பாலாம்பாள். தம்புராவின் பிருடைகளை முடுக்கிச் சுருதி சேர்த்தார். ஆனால், எதிரேயிருக்கும் பாலாம்பாளின் உள்ளம் அதற்கு முன்பே முறுக்கேறிக்கிடந்தது. அவளுடைய மனம் கிருஷ்ண பாகவதரிடம் லயித்திருந்தது. மனிதனுடைய செவிகளுக்கும் புலன்களுக்கும் எட்டாத நாதத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும் கிருஷ்ண பாகவதருக்கு, பாலாம்பாளின் உள்ளக் குரலா காதில் விழப்போகிறது? அவர் மனத்தைச் சுருதியுடன் ஒன்றவிட்டுப் பாட ஆரம்பித்தார்.

சங்கீதம் என்பது என்ன? சப்தஜாலங்களால் ஏற்படும் அற்புத அனுபவம் எதனால் ஏற்படுகிறது? மனிதனுடைய உள்ளத்தில் ஏற்படும் தீராத ஏக்கத்தை வெளியிடும் பாஷை தானே சங்கீதம்? ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து நிற்கும் பிரிவினையின் பாட்டுத்தானே இசையாகப் பரிணமிக்கிறது. அதனாலேதானே, உள்ளத்தைக் கவர்ந்து உயிரைப் பிழிந்து எடுக்கிறது. உலகத்தை மறந்து ஓர் ஒப்பற்ற அனுபவத்தைக் கொடுக்கிறது. கிருஷ்ண பாகவதர் பாட்டிலும் அந்த மகத்தான ஏக்கம் இருந்தது. ஆனால் பாலாம்பாளின் இருதயத்தில் அதன் எதிரொலியானதொரு சிறு ஏக்கம் இல்லையா? ஆனால், அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்! கிருஷ்ண பாகவதர் பாடி முடித்தார். பாலாம்பாள் உணர்விழந்து நின்றாள். அவளது கண்களில் அவளுடைய இதயத்தின் வேதனை துளிர்த்துக் கொண்டிருந்தது. இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் அவர் பாதத்தில் விழுந்தன. அந்தத் திவலைகள் நெருப்பைப்போல் அவர் சரீரத்தைச் சுட்டெரித்தன. கண்களையும் இருதயத்தையும் ஊடுருவிப் பார்ப்பதுபோல் பார்த்தார். சங்கீதம் உணர்ச்சியை வெள்ளமாகப் பெருக்கிக் கண்கள் மூலம் தளும்பச் செய்வதை எத்தனையோ தரம் கண்டும் அனுபவித்தும் இருக்கிறார். ஆனாலும், இன்று பாலாம்பாள் கண்கள் பெருகி நிற்பது சங்கீதத்தால் மாத்திரம் அல்ல என்பதை அறிந்து கொண்டார்.

''என்ன பாலம்?'' என்று மெதுவாகக் கேட்டார்.

சொல்லாமல் அறியவேண்டியதொரு உள்ளப் பாங்கைச் சொல்லியா தெரிவிக்க முடியும்? பின்னும் அவள் நெஞ்சம் வேதனையிலாழ்ந்தது.

''ஒரு காலத்தில் நான் பணத்திற்கு அடிமையாயிருந்தேன். கொஞ்ச காலம் சங்கீதத்திற்கு அடிமையானேன். ஆனால் எப்பொழுதும் உங்கள் அடிமையாகத்தானிருக்கிறேன்'' என்றாள்.

கிருஷ்ண பாகவதருக்குப் பகீரென்றது. 'இது என்ன விபரீதம். இது எதில் கொண்டுவந்து விடும்?' என்று நினைத்தவராய், ''என்ன?'' என்றார்.

''ஒன்றும் இல்லை. நீங்கள் இப்பொழுது பாடிய பாட்டு, என் உணர்வை உருக்கி விட்டது. புத்தியை இழந்து போனேன். என்னிடம் நீங்கள் சங்கீதத்தை சாகரம்போல் பெருக்கி யிருக்கிறீர்கள். ஆனால், உங்கள் அன்பின் ஒரு துளி அதில் சேரவில்லை. அதுதான் என்னைத் துக்கத்தில் ஆழ்த்துகிறது'' என்றாள்.

கிருஷ்ண பாகவதருக்கு சுவாசமே அடங்கி நின்றது போல ஒரு தோற்றம் உண்டாயிற்று. தலை சுழன்றது. இது உண்மைதானா? அல்லது கனவா? இல்லை, மனத்தில் ஏற்பட்ட ஒரு பிரமைதானா? என்றெல்லாம் சந்தேகம் உண்டாயிற்று. அன்று காலையில் அய்யாசாமி சாஸ்திரிகள் சொன்னது அப்படியே காதில் ஒலித்தது. ''சங்கீதம் உணர்வைப் பாதிக்கும் ஒரு கலை. அதில் ஈடுபடுபவர் உணர்ச்சி வசப்பட்டு புத்தி நிதானத்தை இழக்கிறார்கள்'' என்றார். அவர் சொன்னதை நிரூபிப்பதற்காகவே செய்வது போல் இருந்தது, பாலாம்பாள் அன்று நடந்துகொண்ட விதம். 'பக்தியைப் பெருக்கும் சங்கீதம் எங்கே, பாபத்தைத் தூண்டும் சங்கீதம் எங்கே? தூய்மையை வளர்க்கும் சங்கீதம் எங்கே? துன்பத்தைக் கொடுக்கும் சங்கீதம் எங்கே? கேவலம் சிற்றின்ப உணர்ச்சியை ஊட்டக்கூடிய தாகவா தான் பாடும் சங்கீதம் இருக்கிறது? இதற்குத்தானா இவ்வளவு வருஷங்களாக அதை பக்தி சிரத்தையுடன் போற்றி வளர்த்திருக்கிறது?' தலைமேல் வைத்துப் பூஜை செய்ய வேண்டிய தெய்வத்தைத் தரையில் போட்டுக் காலால் மிதிப்பது போலவே தோன்றியது.

தான் சங்கீதத்தை உபாசித்ததன் பலன் இதுதானா? தன்னுடைய சங்கீத பரம்பரைக்கு அழிக்க முடியாத ஒரு

களங்கத்தை ஏற்படுத்துவதற்குத்தானு இவ்வளவு நாள் அவள் சங்கீதத்தை உபாசித்தது? சங்கீதத்திற்காக வித்தையைப் போதித்ததற்கு இதுதான் கண்ட பலனு? என்று அவருடைய உள்ளம் புண்பட்டு நொந்துபோயிருந்தது. பாலாம்பாளின் முகத்தைப் பார்த்துப் பேசவே அவருக்கு மனம் கூசியது. கீழே பார்த்தபடியே மெதுவாகப் பேசினுர்:

"நான் நாதத்தை ஒரு மகத்தான யோகமாகவே உபாசித்து வந்தேன். சங்கீதம் மனத்திலே தூய்மையான எண்ணங்களைத்தான் உண்டுபண்ணும் என்று எண்ணியிருந்தேன். என் பாட்டு கேவலம் மிருக இச்சைகளைத் தூண்டுமானுல், என் சங்கீதம் பொய். என் யோக்யதையும் பொய். நான் பாடுவதற்கே லாயக்கில்லாதவன். நான் இன்றுமுதல் பாடுவதை நிறுத்தி விடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஏனென்ருல், என் பாட்டு மனத்தில் தூய்மையான எண்ணத்தைத் தூண்டாமல் பாபத்தைத் தூண்டுமானுல் அதைத் தடுத்துவிட வேண்டியதுதான்" என்ருர்.

பாலாம்பாள் திடுக்கிட்டாள். இது என்ன! அனர்த்தத்தில் அல்லவா கொண்டுவந்து விட்டது! இதற்குத்தானு அவரிடம் வித்யார்த்தினியாக இருந்து சங்கீதம் அப்யசிக்க ஆரம்பித்தது? ஒரு மகத்தான சங்கீத யோகியைப் பாடாமல் இருக்கச் செய்வதற்குத்தானு அவள் இப்படி வந்து சேர்ந்தாள்! தன்னுடைய இருதய தாபத்தை அடக்கி வெளிவராமல் செய்தது போலவே, அவருடைய குரலையும் அடக்கி சமாதி செய்யவா அவள் காரணமாக வேண்டும்? தனக்கும், சங்கீதத்திற்கும், கிருஷ்ண பாகவதருக்கும் அழியாத அபவாதத்தை ஏற்படுத்தி, உலகத்தின் வசைச்சொல்லை ஏற்று கொள்ளத்தானே இவ்வளவு தூரத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறது அவளுடைய நடத்தை. "என் பாவம் என்னுடன் போகட்டும். இந்த அவச்சொல் என்றென்றும் இருக்க நான் காரணமா யிருக்கவேண்டாம்" என்று தீர்மானித்தவளாய், கிருஷ்ண பாகவதரின் காலில் விழுந்து நமஸ்கரித்து, "வேண்டாம். என்னை நீங்கள் பாடவைத்ததற்கு உங்களை நான் பாடாமல் இருக்கச் செய்தேன் என்ற அபக்யாதி வேண்டாம். சங்கீதத்திற்கு நான் தொண்டு செய்யா விட்டாலும் அபராதமாவது செய்யாமல் இருக்க வேண்டும். என் வினை என்னுடன் போகட்டும். உங்கள் தொண்டு மகத்தானது. அதற்குக் கேடு ஒன்றும் வர வேண்டாம்" என்று சொன்னுள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"இதுவரையில் வித்தையில் நாட்டங்கொண்ட வித்யார்த்தினியா யிருந்தாய். இப்பொழுது உணர்ச்சிவசப் பட்ட பெண்ணுகி விட்டாய். இனிமேல் எனக்கு இங்கு வேலையில்லை. வித்தையை வீணுக்காமல் போற்றி வளர்த்து சௌக்கியமாய் இரு'' என்று சொல்லிவிட்டு, பதிலை எதிர் பார்க்காமல், திரும்பிப் பாராமல் வெளியேறினுர். நன்ருகப் பழகிப் பிரியும் பொழுது ஏற்படும் சோகம் அவர் நெஞ்சைக் கவ்வி இழுத்தது. தயங்கும் கால்களுடனும் தவிக்கும் உள்ளத்துடனும் அவர் மெதுவாக நடந்தார்.

பாலாம்பாள் அவரைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். அவர் சகஜமாக வருவதும் போவதுமாயிருந்த வீட்டிலிருந்து வெளியேறி விட்டார். அவர் உள்ளத்தை விட்டு வெளியேறி விட்டாரா? இல்லை. உள்ளத்தில் தன் ஞாபகத்தையும், வெளியே தன் உடலையும் கொண்டு செல்லும் கிருஷ்ண பாகவதரைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். இனி அவர் வரப் போவதில்லை. அவருடன் சகஜமாகப் பழகிய அந்த இன்ப நாட்கள் இனி சுவப்னம் போன்ற பழங்கதைதான். தன்னுடைய சங்கீதத்தில் அவருடைய அழியாத பாணியை யும், தன் உள்ளத்தில் அவருடைய அழியாத ஞாபகத்தையும் பதிய வைத்துவிட்டு அவர் போய்விட்டார். அசைபோடும் மாட்டைப்போல, அவள் அந்த நினைவுகளையே திரும்பத் திரும்பத் தின்றுகொண்டிருக்க வேண்டியதுதான். படுக்கை யில் வந்து படுத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவளுக்கு உலகமே வறண்டு கிடந்தது.

கிருஷ்ண பாகவதருக்கும் பாலாம்பாளுக்கும் ஏற்பட்ட பிளவு, பலருக்குப் பலவிதமான ஹேஷ்யங்களை உண்டு பண்ணியது. அவரவர்களுக்குத் தோன்றிய கற்பனைகளை வளர விட்டு அதற்குக் காரணங்களை வெவ்வேறு விதமாக வருணிக்கத் தொடங்கினர்கள். கிருஷ்ண பாகவதரை மட்டந் தட்டும் கோஷ்டிக்கு இது ஒரு சரியான உபகரண மாக அமைந்தது. கிருஷ்ண பாகவதரை ஆதரிக்கும் அன்பர்களுக்கு ஒருவிதத்தில் ஆறுதல், ஒருவிதத்தில் அனுதாபம். சுபாவத்தில் ஒரு குற்றமும் அறியாத கிருஷ்ண பாகவதர் அபவாதங்களுக்கு ஆளாகவேண்டியிருக்கிறதே என்று அனுதாபம். எப்படியோ, கிருஷ்ண பாகவதரின் வாழ்க்கையிலே ஒரு களங்கமாக வந்த இந்த உறவு ஒரு விதமாக முறிந்து விட்டதே என்றதில் ஒரு ஆறுதல். இந்தப் பேச்சுகள் எல்லாம் கொஞ்ச நாட்களில் ஓய்ந்துவிடும். பழையபடி சிறிது காலத்தில், தம்முடைய முழுக்கீர்த்தியுடன் சங்கீத உலகில் அவர் விளங்குவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் அல்லவா?

கிருஷ்ண பாகவதரின் மனைவியான நீலாம்பாளின் மனத்திலும் இத்தகைய போராட்டம் எழாமலில்லை. அவளுக்குத் தன் கணவனுக்கும், அந்தத் தாசிக்கும் ஏற்பட்ட உறவு அறுந்து போனதில் ஒருவிதத் திருப்திதான். தன்னுடன் போட்டியிட வந்த ஒருத்தியிடம் எந்தப் பெண்ணுக்குத்தான் அசூயை ஏற்படாது? பாலாம்பாள் இதயத்தில் ஏற்படும் ஆசாபாசங்களை ஊடுருவிப் பார்க்கும் சக்தி நீலாவிடம் இருந்தது. புருஷன் வாழ்விற்கு அது உகந்ததில்லை என்று தீர்மானித்திருந்தாள். அது முறிந்ததில் அவளுக்குப் பரமசந்தோஷம். ஆனல், அதன் காரணத்தை மாத்திரம் அவ்வளவாக ஊகித்துக்கொள்ள முடியவில்லை. இதற்கு யார் காரணமாக இருக்கமுடியும்? இவ்வளவு அன்யோன்யமாக இருந்தவர்களிடம் ஏன் இந்தப் பிரிவு ஏற்பட்டது? உண்மையான காரணம் தெரிந்தால், மேலும் மேலும் கிருஷ்ண பாகவதரைக் குத்திக்காட்டவும் உபயோகப்படுமே என்றும் அவள் நினைக்காமலில்லை.

ஆனால், பலர் பலவிதமாகப் பேசுவதில் உண்மையில் புண்பட்டு வருந்தியவர் கந்தசாமி பாகவதர்தான். அவருக்குக் கிருஷ்ண பாகவதரின் சுபாவம் நன்றாய்த் தெரியும். ஏதோ விபரீதமான காரியம் நடந்திருப்பதனால்தான் கிருஷ்ண பாகவதர் தன்னை விடுவித்துக் கொண்டிருக்கிறார் என்பதை ஊகிக்க முடியாமல் இல்லை. ஆனால், கண்டபடி பேசும் பலரைக் கண்டிப்பதற்காவது உண்மையை அறிந்து கொள்வதுதான் சரி என்று நினைத்தார். ஆனால், பேச்சில் கிருஷ்ண பாகவதரிடமிருந்து உண்மையை அறிந்துவிட முடியுமா?

''ஏது பாகவதர், அந்தப் பக்கம் போவது இல்லையோ?'' என்று கந்தசாமி பாகவதரிடம் சிலர் கேட்கும்பொழுது கந்தசாமி பாகவதருக்கு மனது சிரமப்படும். கிருஷ்ண பாகவதரை விட்டுக்கொடுக்காமல்தான் பேசிக் கொள்வார். இருந்தாலும் நிச்சயமாக அவர்களை எதிர்த்துப் பேச என்ன நடந்தது என்று இவருக்குத்தான் என்ன தெரியும்?

ஒரு தரம், சிலர் பேசுவதைக் கேட்டுவிட்டு கந்தசாமி பாகவதருக்கு மனது பொறுக்கவில்லை. கிருஷ்ண பாகவதரிடம் வந்து ''கிட்டு, தெனாலி இராமன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்பதுபோல், இந்தப் பாலாம்பாள் பழக்கம் ஆன போதும் ஜனங்கள் தூற்ற ஆரம்பித்தார்கள்; பிரிந்தாலும் தூற்றுகிறார்கள். நீயோ, வாயைத் திறக்க மாட்டேனென்கிறாய். எனக்குத்தான் கேட்பதற்குக் கர்ண கடூரமாயிருக்கிறது'' என்றார்.

கிருஷ்ண பாகவதர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்.

கந்தசாமி பாகவதரைப் பார்க்காமலேயே, ''யார் எதை வேண்டுமானாலும் சொல்லட்டும், பேசட்டும், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்றார். கந்தசாமி பாகவதர் இதை எதிர் பார்க்கவேயில்லை. பேசாமல் நின்றார்.

''மதிப்பை இழக்கும்படியான ஈனமான காரியம் ஏதாவது செய்வேன் என்று நீங்கள் நினைப்பீர்களா?'' என்றார்.

கந்தசாமி பாகவதர் உடனேயே "சிவசிவா! அப்படியெல்லாம் எனக்குக் கொஞ்சமேனும் சந்தேகம் கிடையாது'' என்றார்.

''பின்பு, விட்டுத் தள்ளுங்கள். தன்வினை தன்னைச்சுடும். அவரவர் செய்யும் காரியத்தின் பலாபலன்கள் அவரவர்களையே தொடரும். யார் எதை நினைத்தாலென்ன? யார் எதைச் சொன்னாலென்ன? மெய்யைப் பொய்யாக்கவும் முடியாது; பொய்யை மெய்யாக்கவும் முடியாது. பின் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்றார்.

கந்தசாமி பாகவதர் பதில் பேசவில்லை. தான் எதிர் பார்த்தபடியே, கிருஷ்ண பாகவதரிடம் ஒரு தவறும் இல்லை என்பதை மட்டும் அறிந்து கொண்டார். தன்னிடம் கூட ஒரு வார்த்தை வெளிக்கு விடாமல் தனக்குள்ளேயே அந்தரங்கததைப் பதுக்கி வைத்துக்கொள்ளும் கிருஷ்ண பாகவதரின் விநயத்தையும் ஆழத்தையும் வியக்காமலிருக்க அவரால் முடியவில்லை.

காலம் மாறியது. காலம் என்னும் மகா வெள்ளத்தில், தனி மனிதர்களின் உணர்ச்சிகளும் சம்பவங்களும் தனித்து நிற்கின்றனவா என்ன? எல்லாவற்றையும் அது அடித்துக் கொண்டுபோய் விடுகிறது. நாளாக ஆக, கிருஷ்ண பாகவதருக்கும் பாலாம்பாளுக்கும் ஏற்பட்ட ஒரு நட்பைப்பற்றி ஜனங்கள் மறக்க ஆரம்பித்தார்கள். அது ஒரு பழங்கதையாகி, குறிப்பிட்ட தனி மனிதர்களின் இதயத்தைத் தவிர மற்றவர்கள் மனத்தை விட்டு மறைந்துவிட்டது. ஆனால் கிருஷ்ண பாகவதரின் புகழ் மாத்திரம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போயிற்று. அவருடைய சங்கீதத்தில் ஞானம் பழுத்துக்கொண்டு வந்தது. அவருடைய வாழ்க்கையில் சீலம் பழுத்தது. சங்கீதத்தில் யோகியாகி வந்தார். வாழ்க்கையில் ஞானியாக மாறிவந்தார். அவருடைய ஞானமும் குணமும் ஜனங்களிடம் அளவற்ற மரியாதையைப் பெருக்கிவந்தன.

ஒரு நாள் கந்தசாமி பாகவதருடன் பஜனை மடத்தில் பேசிக்கொண்டிருந்தார். இருந்தாற் போல் மழை கொட்ட ஆரம்பித்தது. ஆரம்பித்து சில நாழிகைக் கெல்லாம், கிருஷ்ண பாகவதரின் மேலெல்லாம் ஒழுக ஆரம்பித்தது. கிருஷ்ண பாகவதர் கொஞ்சம் நகர்ந்துபோய் உட்கார்ந்தார். அந்த இடத்திலும் ஒழுக ஆரம்பித்தது.

கந்தசாமி பாகவதர், புன்சிரிப்புடன், ''வருண பகவான் எங்கே போனாலும் உன்னைத் தேடி வருகிறார் பார்த்தியா?'' என்றார். கிருஷ்ண பாகவதர் சிரிக்கவில்லை. ''என்ன, மடம் இவ்வளவு சீர்கேடாக இருக்கிறதே?'' என்றார்.

கந்தசாமி பாகவதர் மனத்திலும் துயரச் சாயை படர்ந்தது. ''என்ன செய்வது கிட்டு? எல்லோருக்கும் அவரவர்கள் காரியம் தான் பெரிதாயிருக்கிறது. பொது விஷயங்களில் யாருக்கு சிரத்தையிருக்கிறது. யாசகம் கேட்கப்போனால், எல்லோருக்கும் ஏளனமாக இருக்கிறது. முன் காலத்தில் ராஜாக்கள் பொது ஸ்தாபனங்களைப்

பரிபாலித்தார்கள். இந்தக் காலத்தில் பொது ஜனங்கள் அதைச் செய்யவேண்டி யிருக்கிறது. ஆனால் அவர்கள்தான் அதைச் செய்வதில்லை. இந்த பஜனை மடத்தை எத்தனையோ சிரமப்பட்டுப் பரிபாலித்து வருகிறேன். ஆனால், அதை மராமத்து செய்து, சில வசதிகள் செய்வதற்கு எனக்குப் பொருளுதவி செய்துகொடுக்க ஆள் இல்லை'' என்றார்.

கந்தசாமி பாகவதர் சொன்னது கிருஷ்ணபாகவதரைச் சிந்தனையிலாழ்த்தியது. கந்தசாமி பாகவதரைப் போல, சங்கீதத்திற்கும் அந்த பஜனை மடத்திற்கும் தன் வாழ்க்கையையே சமர்ப்பிக்கும் ஒரு மனுஷ்யன் வேறு ஒருவரும் இல்லை. அவர் ஒரு காரியம் செய்ய நினைத்து அதற்கு மனிதர்கள் உதவுவதற்கும் உற்சாகம் காட்டவில்லையானால், அது எவ்வளவு வருந்தத்தக்க விஷயம் என்று நினைத்தார். அந்த நிமிஷத்தில் தன்னையும் கந்தசாமி பாகவதரையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டார். தான் சங்கீதக் கலையில் ஈடுபட்டு, அதில் ஒரு சாதனை அடைந்தது வாஸ்தவமே. ஆனால், அதனால் என்ன லாபம்? தன் ஆத்ம வளர்ச்சிக்கு அது ஓர் அளவு உபயோகப்படலாம். அதைத் தவிர வேறு என்ன பிரயோசனம்? கந்தசாமி பாகவதர் எவ்வளவு சங்கீத வித்வான்களைத் தன் பஜனை மடத்தின் மூலம் பிரபலப்படுத்தி யிருக்கிறார்! எவ்வளவு இளம் வித்வான்களுக்கு எத்தனை விதமாக உபகாரம் செய்திருக்கிறார். பலபேருக்கு அவர் மட்டற்ற நன்மைகள் செய்திருக்கிறார். கந்தசாமி பாகவதரைப் பார்த்தபடி சொன்னார்: ''மாமா, நீங்கள் உலகத்துக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கிறீர்கள். நான்தான் உலகத்துக்குச் சுமையாக நிற்கிறேன்'' என்றார்.

கந்தசாமி பாகவதருக்கு எதற்காக இப்படிச் சொல்கிறார் என்று புரியவில்லை. ''கிட்டு, நீ எந்த நோக்கத்தோடு சொல்கிறாயோ, எனக்குப் புரியவில்லை. எப்படியிருந்தாலும் சரி என்னைப் போல லக்ஷக்கணக்கான ஜனங்கள் பிறந்து பிறந்து சாகிறார்கள். ஆனால் எத்தனையோ வருஷத்திற்கு ஒரு தரம் தான் ஒரு தியாகராஜரும், ஒரு கிருஷ்ண பாகவதரும் பிறக்கிறார்கள். நான் செய்யும் அற்ப காரியங்கள் நாளை மடிந்து போய்விடும். ஆனால், உன்னுடைய சங்கீத பாணியும், நீ சங்கீதத்திற்குத் தந்திருக்கும் போஷணையும், சங்கீதத்துடனேயே கலந்து அடுத்த தலைமுறைக்கு நீகொடுத்திருக்கும் மகத்தான சம்பத்தாக விளங்குகிறதே!'' என்றார்.

கிருஷ்ணபாகவதர் இந்த வார்த்தையை ரஸிக்கவில்லை, 'நீங்கள் என்னைப் பெருமைப்படுத்திப் பேசலாம். ஆனாலும்,

நீங்கள் செய்யும் தொண்டை வெளிப்படையாக எல்லோரும் அறிய முடியும். நீங்கள் இந்த பஜனை மடத்தைப் புனருத் தாரணம் செய்ய ஆரம்பியுங்கள். இது வரையில்தான் நான் உங்களுக்கு ஒரு உதவியும் செய்யவில்லை. இந்த மடத்தின் புனருத் தாரணத்திலாவது என் பங்கு கொஞ்சம் இருக் கட்டும். சில கச்சேரிகள் வைத்துப் பணம் வசூலிக்கலாம். அந்தப் பணத்தைக்கொண்டு பஜனை மடத்தைச் சீர்படுத்த லாம்'' என்றார்.

இது கந்தசாமி பாகவதருக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. சங்கீதத்தையும் பணத்தையும் இரு துருவங்களில் வைக்கும் கிருஷ்ண பாகவதர், இரண்டையும் ஒன்று சேர்ப்பதென்றால் யாருக்குத்தான் ஆச்சரியம் ஏற்படாது? அதுவும் இதுவரையில் பணம் என்றால் வாயையே திறக்காத கிருஷ்ண பாகவதர், கச்சேரி செய்து பணம் வசூலிக்கச் சொல்கிறார் என்றால் அது பிரமிப்பைத்தானே உண்டாக்கும்.

கிருஷ்ண பாகவதரைப் பார்த்து ''ஆமாம், இதுவரையில் சங்கீத தேவதையை சந்தைக் கடைக்குக் கொண்டுவராத நீ இந்த வார்த்தை சொல்லுவதுதான் எனக்கு மிகுந்த ஆச்சரி யத்தைக் கொடுக்கிறது, கிட்டு'' என்றார்.

கிருஷ்ணபாகவதர் முகத்தில் சிறிதேனும் மாறுதல் ஏற்படவில்லை. ''பணம் கூடாது என்று நான் சொன்ன தில்லை மாமா! என் சொந்த உபயோகத்திற்குப் பணத்தை வாங்கினால்தான் நான் அதற்கு அடிமையாகிறேன். என் சொந்தத்திற்கு இல்லை யானால் அது என்னை ஒன்றும் செய் யாது. ஒரு வஸ்து நல்லது கெட்டது என்பது அதை நாம் உபயோகிக்கும் தன்மையில் தானிருக்கிறது'' என்றார்.

கந்தசாமி பாகவதர் பதில் பேசவில்லை. என்ன சொல்வ தென்றும் அவருக்குத் தெரியவில்லை.

''என்னமோ, கிட்டு, உன் மூலம் இந்த பஜனை மடத் துக்கு விடிவு காலம் ஏற்படவேண்டும் என்பது பகவத் சங்கல் பம்போலும்; ஏதோ, நடக்கட்டும்'' என்றார்.

''கூடிய சீக்கிரமே அதற்கு வேண்டியதை ஏற்பாடு செய் யுங்கள்'' என்றார் கிருஷ்ண பாகவதர்.

''சரி'' என்று ஆமோதித்தார் கந்தசாமி பாகவதர்.

பஜனை மடக் கட்டிட நிதிக்காக வசூல் கச்சேரிகள் ஏற்பாடாவதற்கு மும்முரமாக வேலைகள் ஆரம்பமாயின. கிருஷ்ணபாகவதர் கையொப்பமிட்ட அழைப்பு இதழ்கள் பெரிய வித்வான்களுக்கு அனுப்பப்பட்டன. கந்தசாமி பாகவதரையும், கிருஷ்ண பாகவதரையும், பஜனை மடத்தின் சரித்திரத்தையும் அறிந்த பிரபல வித்வான்கள் இவர்களுடன் ஒத்துழைத்து, இந்த உற்சவத்தை வெற்றிகரமாக்க முன் வந்தார்கள். பொது ஜனங்கள் யாவரும் தங்களாலான பொருள் உதவி செய்ய மனமுவந்து வந்தார்கள். கச்சேரிகளில் சிகரமாக கிருஷ்ண பாகவதரின் கச்சேரி ஏற்பாடாயிருந்தது. கிருஷ்ண பாகவதரின் கச்சேரிகள் வரவர அரிதாகிக் கொண்டிருந்தபடியால், ஜனங்கள் அவர் கச்சேரியை ஒரு பெரிய விருந்தாகத்தான் எண்ணினார்கள். சங்கீதத்தில் பழுத்திருந்த அவருடைய அற்புத கானத்தை ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்த் திருந்தார்கள். கிருஷ்ண பாகவதருக்கு இந்தக் கச்சேரியில் ஒரு தனி ஆனந்தம். இதுவரையில் எத்தனையோ கச்சேரிகள் செய்தாலும், பொது ஜனங்களுக்கு உபயோகப் படும்படியான ஒரு நல்ல காரியத்தைத் துவக்கி வைக்கிறோம் என்பதில் அவர்களுக்குப் பரமதிருப்தி. மற்றும், பிரபல வித்வான்களுடன் ஒரே மேடையில் பாடி தம்முடைய மங்காத பெருமையை மேலும் பிரகாசிக்க வைக்கலாமல்லவா?

ஆனால், எதிர்பாராதபடி ஒன்று நிகழ்ந்தது. இந்த விழா நடப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்னதாக திடீரென்று கிருஷ்ணபாகவதருக்கு ஜலதோஷம் பிடித்துக்கொண்டது. அதுதான் வியாஜம். ஜலதோஷம் கபத்தைக் கொண்டு வந்தது. கபம் ஜ்வரத்தைக் கொண்டுவந்தது. ஜ்வரத்துடன் அவருக்கு எப்பொழுதும் உள்ள நெஞ்சு வலியும் வந்தது. நெஞ்சுவலியுடன் தொண்டையைப் பாறையாகக் கட்டிக் கொண்டது.

ஜலதோஷம் வந்ததும் கிருஷ்ணபாகவதர் அதைச் சட்டை பண்ணவில்லை. ஆனால், அது முற்றி, பலவிதக் கோளாறுகளைக் கொண்டுவந்து விட்டது. அப்பொழுதும்

அவர் அதைப் பொருட்படுத்தவில்லே. ஆனால் அவர் கவலேப் பட்டது, இந்த பஜனேமட உத்சவக் கச்சேரியில் பங்கு எடுத்துக்கொள்ள முடியாதோ என்பதுதான். ஆனால், கந்தசாமி பாகவதருக்கும், அவர் நண்பர்களுக்கும், கிருஷ்ண பாகவதருக்கு வந்திருக்கும் வியாதி கடுமையானது என்பது புலனாயிற்று. அவர் கச்சேரி இந்த விழாவில் செய்தாலும் செய்யாது போனாலும், அவர் நல்லபடியாகப் பிழைத்து எழுந்தால் போதும் என்பது அவர்கள் உள்ளூரச் செய்து கொண்ட பிரார்த்தனே.

ஆனால், இயற்கை, எவ்வளவோ அற்புதங்களேச் செய் கிறது. எதிர்பாராதபடி சில அதிசயங்களே உண்டு பண்ணு கிறது. வைத்தியர் கொடுத்த மருந்திற்கு மேலாக, தான் அந்த விழாவில் பாடவேண்டும் என்ற தீர்மானம்தானே என்னவோ, கச்சேரிக்கு இரண்டு நாள் முன்னதாகவே கிருஷ்ண பாகவதரின் உடம்பு சுவஸ்தமாகி விட்டது. தலேக்கு ஜலம் விடவில்லே. தொண்டையின் கம்மல் மாத்திரம் நீங்கவில்லே. உடம்பைக் கொஞ்சம் பக்குவமாய்ப் பார்த்து வந்தால் சரியாகப் போய்விடும் என்று எதிர்பார்த்தார்கள்.

குறிப்பிட்ட தினம் வந்தது. கிருஷ்ண பாகவதரின் உடம்பு இன்னும் சரியாகவில்லே. அதை உத்தேசித்து கந்த சாமி பாகவதர், "அப்பா கிட்டு. உனக்கு உடம்பு சரியாக வில்லே, நீ பாடவேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லே இன்று பாடுவதற்குப் பதிலாகக் கடைசி நாளன்று பாடேன். அதற்குள்ளாக உடல் நலம் மேலும் கொஞ்சம் தேறும். உனக்குப் பாடுவதிலும் ஆயாசம் இருக்காது. நீ இன்று பாடிவிட்டு மேற்கொண்டு ஏதாவது கோளாறு செய்து கொள்ளவேண்டாம்" என்றார்,

"மாமா ஏதோ பகவத் சங்கல்பத்தால் உடம்பு குணமா யிருக்கிறது. முன் ஏற்பாட்டின் படியே நான் பாடிவிடு கிறேன். கச்சேரி செய்வதனால் உடல் மலினமாய்ப் போய் விடுமா என்ன?" என்று கிருஷ்ண பாகவதர் சொல்லி விட்டார். கிருஷ்ணபாகவதருடன் அதிகமாக இதைப்பற்றிச் சர்ச்சை செய்ய விரும்பவில்லே. "கடவுள் விட்ட வழி விடட்டும்" என்று கச்சேரி ஏற்பாடுகள் செய்து விட்டார் கந்தசாமி பாகவதர்.

கச்சேரி ஆரம்பிக்கும் நேரம் வந்தது. பஜனே மடத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஜன சமூகம் பொங்கிவழிந்து நின்றது. மற்ற தினங்களில் பாடவேண்டிய இதர பிரபல வித்வான்கள் முன்னணியில் உட்கார்ந்து கொண்டிருந்

தார்கள். தமிழ் நாட்டு சங்கீதப் பிரதிநிதிகளான அந்த வித்வான்களின் மகாநாடு போலத் தோன்றியது அன்று கூடிய ரஸிக சிகாமணிகளின் கூட்டம். கிருஷ்ண பாகவதரின் உடம்பு சரியாயில்லாததால், ஒரு வேளை பாட மாட்டாரோ என்று சந்தேகம் பொது மக்களிடையே இருந்து வந்தது. கடைசியில், கிருஷ்ண பாகவதர் பாடப் போவது நிச்சயம்தான் என்பது தெரிந்ததும், ஜனங்களி டையே ஒரு பெரிய ஆறுதல் ஏற்பட்டிருந்தது. இப்படிப் பட்ட மகத்தான ஸதஸில் அவர் எவ்விதம் பாடுகிறார் என்பதை வெகு ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்கள். பக்க வாத்தியக்காரர்களும் மிகப் பெரிய கைகள். ஆகவே ஜனங்களுடைய உத்ஸாக ஜ்வரம் உச்ச நிலைக்குப் போனதில் ஆச்சரியமில்லை.

கிருஷ்ண பாகவதர் மேடைக்கு வந்தார். அவருக்கு மேடையில் ஏறிக் கச்சேரி செய்வது புதிதல்ல. அவருடைய வாழ்க்கையில் எத்தனையோ தடவைகள் பலதரப்பட்ட சூழ் நிலையில் பலதரப்பட்ட ஜனங்கள் மத்தியில், பலதரப்பட்ட பக்க வாத்தியங்களுடன் கச்சேரி செய்திருக்கிறார். ஆனால், இன்று செய்யப்போகும் தம்முடைய கச்சேரி நன்றாக அமைய வேண்டுமே என்ற கவலை அவருடைய வாழ்க்கையில் முதல் தடவையாக உண்டாயிற்று. இதற்கு முன்பெல்லாம் சபைக்கு முன்னால் பாடுகிறோம் என்ற பிரக்ஞையே இல்லாமல் பாடியிருக்கிறார். கச்சேரிகளும் மிக அற்புதமாக அமைந்துபோகும். ஆனால், இன்று முதல் தடவையாக அவர் உள்ளத்தில் ஒரு பயம் உண்டாயிற்று! ஏன்? சங்கீத உலகின் சிகரத்தில்தான் அவர் இருக்கிறார். சங்கீத வித்தை யின் ஆழத்தில் புதைந்துகிடக்கும் முத்துக்களை வாரி இறைத் திருக்கிறார். அன்று என்னமோ, அவருக்கு மனத்தில் ஓர் அச்சம் உண்டாயிற்று. தான் இந்தப் புகழ் ஏணியின் மேல் வெகுநேரம் இருக்கப் போவதில்லையோ என்ற ஒரு சிறு எண்ணம் உண்டாயிற்று.

அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. இந்த ஜ்வரத் தில் கம்மியிருந்த தொண்டை மாத்திரம் சரியாகவில்லை. ஜ்வரம் தணிந்தது. நெஞ்சுவலி குறைந்தது. கபமும் குறைந்தது. ஆனால் தொண்டை மாத்திரம் சரியாகவில்லை. இரண்டு மூன்று நாட்களாக அவர் தொண்டை சரிப்பட்டு வருவதற்கு அவருக்குத் தெரிந்த சிகிச்சைகளை யெல்லாம் செய்து வந்தார். ஆனால், ஒன்றுக்கும் அது மசியவில்லை. அன்று காலை தம்புராவை சுருதி சேர்த்துவிட்டு பாடிப்

பார்த்தார். அவருக்கு நெஞ்சு திடுக்கிட்டது. இது தன்னுடைய குரல்தானா? என்று சந்தேகிக்கும்படியாக இருந்தது. அப்படியே தம்புராவை வைத்துவிட்டு எழுந்து போய் விட்டார். இந்த நிலையில் அன்று கச்சேரியை ஒத்திப்போடச் சொல்லியிருக்கலாம். கந்தசாமி பாகவதர் சொன்னபடி வழக்கமான பிடிவாதத்துடன் இன்றே பாடி விடுவதாக முடிவு சொல்லிவிட்டார். இன்று நல்ல படியாகப் பாடி முடித்தாக வேண்டுமே என்ற மனக்கலக்கம் பயங்கரமாக விசுவரூபம் எடுத்துத் தோன்றியது.

சபையில் உட்கார்ந்திருக்கும் ஜனங்களைப் பார்த்து ஒரு நமஸ்காரம் செய்தார். கண்ணை மூடிக்கொண்டு வழக்கம் போல் குருவைத் தியானித்தார். சகலகலா வல்லியான அம்பிகையைத் துதித்து வாய்க்குள்ளே ஜபித்துக் கொண்டார். வழக்கத்திற்கு மேலாகவே, மெய்மறந்து தோத்திரத்தில் ஈடுபட்டு சில விநாடிகள் நின்றார். பின்னால் கணீரென்று தம்பூராவின் இன்னிசை சபை பூராவும் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த சுருதியில் செவியையும் மனத்தையும் இதயத்தையும் புகுத்திக்கொண்டு, வாயைத் திறந்து சுருதியுடன் ஒட்டியபடி பாட ஆரம்பித்தார். சுருதிக்காக அவர் கொடுத்த ஆவென்ற சப்தத்திற்குப் பதிலாக, அவர் தொண்டையிலிருந்து வெறும் காற்றுத்தான் கிளம்பியது. ஒரு விநாடி அவர் உடம்பு அப்படியே திடுக்கிட்டு, ஸப்த நாடியும் ஒடுங்கியது போல் அசைவற்று நின்றது. அவர் முகத்திலும் உடம்பிலும் வியர்வை அப்படியே சமுத்திரம் போல் பெருகி வந்தது. சீனுக்கல்கண்டும் மிளகும் சேர்த்த பொடியை வாயில் போட்டுக்கொண்டு மறுபடியும் "சங்கரா" என்று சுருதியுடன் தன் சாரீரத்தை ஒட்டவைத்துப் பாட ஆரம்பித்தார். மறுபடியும் அதே மாதிரி வெறும் காற்றுடன் வந்தது ஒலி! இது அவருடைய சாரீரம்தானா? அவர் குரல் எங்குபோய் ஒளிந்து கொண்டது? அந்த நாதத்துடன் கலந்து கம்பீரமாக ஒலிக்க வேண்டிய அந்த திவ்யமான சாரீரம் எங்கு போயிற்று?

போய்விட்டது! லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு ஆனந்த வெள்ளத்தைக் கொடுத்து இசையமுதத்தைப் பெருக்கிய அந்த இனிய சாரீரம் தொண்டையிலிருந்து போய்விட்டது. அது இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது என்ற எண்ணம் வந்தது. அவருக்குத் தலை சுழன்றது. மயக்கம் வருவதுபோல் ஓர் உணர்ச்சி தோன்றியது.

தூக்கத்தில் எழுந்திருப்பவனைப் போல் எழுந்திருந்தார் கிருஷ்ண பாகவதர். வேகமாக மேடையிலிருந்து இறங்கிப் பின்பக்கமாக நடந்துபோனார். சபையில் உள்ளவர்கள் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றார்கள். விஷயத்தை ஓர் அளவு ஊகித்தறிந்த கந்தசாமி பாகவதர் மாத்திரம், பேசாமல் பின் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தார். பஜனை மடத்தின் பின்பக்க மிருந்த திண்ணையின் மீது தடா லென்று உட்கார்ந்தார்.

பின்னே வந்த கந்தசாமி பாகவதர், "என்னப்பா கிட்டு, என்ன விஷயம்? உடம்பு சௌகரிய மில்லையா?" என்று பரிவு ததும்பக் கேட்டார்.

கிருஷ்ண பாகவதர் கந்தசாமி பாகவதரை நிமிர்ந்து பார்த்தார். அவருடைய கண்களில் இரத்தம் தெரிப்பது போல சோகம் ததும்பி நின்றது. தழுதழுத்த குரலில் "மாமா, என் சாரீரம் போய்விட்டது. சரீரம்தான் நிற்கிறது; என் குரலுக்குப் பதிலாக என் உயிரைக் கடவுள் கொண்டுபோயிருக்கக் கூடாதா?" என்றார்.

கந்தசாமி பாகவதர், "கிட்டு, வருத்தப் படாதே. நீ உடம்பு அசௌக்கியமா யிருந்தபடியால், இந்தக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. தானே எல்லாம் சரியாகப் போய் விடும்" என்று சமாதானம் சொல்லி ஆறுதல் செய்தார். ஆனால் அவர் சொன்ன வார்த்தைகளில் இருவருக்கும் நம்பிக்கையில்லை.

அன்று கிருஷ்ண பாகவதர் கச்சேரிக்குப் பதிலாக வேறு ஒரு பிரபல வித்வானின் கச்சேரி நடந்தது. கிருஷ்ண பாகவதர் வீட்டில் படுத்துக்கொண்டு பரிதவித்துக் கொண்டிருந்தார்.

# 35

கிருஷ்ண பாகவதருக்கு சிகிச்சைகள் மும்முரமாக நடந்தன. தமிழ் நாட்டு வைத்தியர்கள், மேல்நாட்டு வைத்தியர்கள் எல்லோரும் தங்களுக்குத் தெரிந்த முறைகளை அனுஷ்டித்து அவருக்கு ஏற்பட்ட உபாதையைப் போக்க முயற்சித்தார்கள். ஆனால், நாள் ஆக ஆக எல்லோருக்கும் ஒன்று நன்கு புலனாயிற்று. அது கிருஷ்ண பாகவதர் இழந்த சாரீரத்தைத் திரும்ப அடைய முடியாது என்பதுதான். மற்ற எல்லாருக்கும் முன் கிருஷ்ண பாகவதருக்கே அது நன்றாகப் புலனாயிற்று.

மற்ற எல்லா சுகதுக்கங்களையும் எதிர்த்து நிற்கவல்ல அவருக்கு இது ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியது. தாம் இனி சபையிலமர்ந்து, பாட முடியாது. சபையில் என்ன? தமக்காகவே அவர் இனிப் பாடமுடியாது. பாடினால் அந்த சுருதி சுத்தமான நாதம் தம் தொண்டையிலிருந்து வராது. தம் உள்ளத்தில் பொங்கிவரும் சங்கீத வெள்ளத் திற்கு இனி ஓர் ஒலி யுருவம் கொடுக்க முடியாது. தான் இதுவரையில் உபாசித்து வந்த நாதத்தை இனி வழிபட்டு வணங்க முடியாது. அவர் இனி உயிரற்ற பிணத்தைப் போல, தம் குரலை இழந்த சரீரக் கட்டையைத் தூக்கி உலகில் நடமாட வேண்டியதுதான். இந்த மகத்தான சோதனைக்குக் கடவுள் தன்னை உட்படுத்துவானேன்? வழக்கத் திற்கு மாறாக, தான் வசூல் கச்சேரிக்கு இசைந்து நடத்த ஆரம்பித்ததாலா? அல்லது தன்னிடம் ஏதாவது பெரிய குறை இருந்திருப்பதாலா? எப்படியும் இனி அவருக்கு வாழ்க்கையில் ஊன்றுகோல் கிடையாது. வாழ்க்கையிலே அதிகப் பற்றுவைக்காத கிருஷ்ண பாகவதருக்கு இது மேலும் விரக்தியை உண்டு பண்ணியது. மனம் கசந்து கொஞ்சம் புண்பட்டுத் தவித்தார். இந்த வேதனையிலிருந்து விடுபடு வதற்கு மார்க்கம் உண்டா என்று ஏங்கினார். வாழ்க்கையில் வேறு ஒன்றையும் அவர் விரும்பவில்லை. எதிர் பார்க்கவில்லை. எதற்காகத் தாம் வாழ்ந்து வருவதாக எண்ணியிருந்தாரோ, அந்த அடிப்படையில் கேடு விளைந்ததில் அவருக்கு நெஞ்சம் வெதும்பியது. பிரமை பிடித்தவர்போல மௌனமாக

உட்கார்ந்திருப்பார். யார் வந்தாலும் அவருக்குப் பேசப் பிடிக்காது. தன்னிடத்தில் வெறுப்பு; பிறவியில் வெறுப்பு; வாழ்க்கையில் வெறுப்பு; ஜனங்களிடத்தில் வெறுப்பு; ஏன் கடவுளிடத்தில் கூட அவருக்கு வெறுப்பு இல்லாமல் இல்லே.

அவருடைய நடவடிக்கைகளிலும் பெருத்த மாறுதல் ஏற்பட்டது. ஒழுங்கும் முறையும் கொண்ட அவருடைய வாழ்வில் குழப்பம் ஏற்பட்டது. வாசல் திண்ணேயில் வெகு நேரம் முழங்காலேக் கட்டிக்கொண்டபடியே உட்கார்ந் திருப்பார். நீலா, சாப்பிடவோ, தூங்கவோ கூப்பிட்டாலும் காது கொடுத்துக் கேட்கவே மாட்டார். எவ்வளவு நேரந் தான் அப்படி உட்கார்ந்திருப்பார் என்று சொல்ல முடியாது. அவர் என்ன யோசனே செய்து கொண்டிருக்கிறர். எதைப் பற்றித்தான் அப்படி நினேத்துக் கொண்டிருக்கிறர் என்று என்ன சொல்வது? நிமிஷம் மணி யாகும். இரவு பகலாகும். ஆனல், அவர் அதே நிலேயில்தான் உட்கார்ந்திருப்பார்.

திடீரென்று கூடத்திற்கு வருவார். கூடத்திலிருந்து குறுக்கும் நெடுக்குமாக உலாத்திக் கொண்டிருப்பார். இல்லே யானல், திடீரென்று கொல்லேப்பக்கம் போவார். அது எந்த நேரமானலும், கிணற்றடியில் போய் நாலு வாளி ஜலத்தை இறைத்து ஸ்நானம் செய்துவிட்டு விபூதியை நெற்றி நிறைய இட்டுக்கொண்டு நேரே பெரிய கோவிலுக்குச் சென்று சுப்ரமண்ய சுவாமி மண்டபத்தில் உட்கார்ந்து கொள்வார். இவருடைய போக்கைப் பார்த்தவர்கள் இவர் மனம் உடைந்து சித்தபிரமை ஏற்பட்டு விட்டதாக எண்ணும் படியாகவே இருந்தது. வாழ்க்கையில் தாம் ஏற்படுத்திக் கொண்ட வறுமையைத் தவிர வேறு ஒன்றில் அதிகம் அடி படாத அவருக்கு இந்த அதிர்ச்சியினல் மனம் உடைந்து போனதே இதற்குக் காரணமாக இருந்தது. வேறு ஒன்றிலும் அவர் பற்று வைக்கவில்லே. எதில் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்திருந் தாரோ அதிலேயே தாக்குண்டதால் அவர் நிலே குலேந்து தவித்தார்.

மாலே நேரம். நீலாம்பாள் வழக்கம்போல் பூஜை அறையில் விளக்குகளே ஏற்றிவைத்து விட்டு வந்தாள். தம்முடைய வழக்கமான அனுஷ்டானங்களே முடித்துவிட்டு உட்கார்ந்திருந்தார் கிருஷ்ண பாகவதர். பக்கத்துக் கோவிலி லிருந்து நாதஸ்வரக்காரன் வாசிக்கும் பூரி கல்யாணி அலே யலேயாக அவர் காதில் வந்து விழுந்தது. அந்த மாலேப் பொழுதிலும், அந்த இனிய நாதத்திலும் நெஞ்சை இழந்து

நின்றது அவர் மனம். எதிரேயிருந்த தம்புராவை எடுத்துச் சுருதி கூட்டினர். சுருதி கூட்டிவிட்டுக் கொஞ்ச நேரம் அதை மீட்டியபடி அந்த சுருதியைக் கேட்டுக்கொண்டே நின்ருர். அவர் அறியாமல் கண்கள் கலங்கின. தம்புராவை சோகம் ததும்பும் கண்களுடன் பார்த்தார். ''ஹே தேவி! என்னைத் தான் உதறித் தள்ளிவிட்டாயே!'' என்று வாயால் முணு முணுத்தபடியே அதை எடுத்து வைத்துவிட்டு வேகமாக நடந்து சென்ருர்.

அவருடைய கால்கள் அவரை அறியாமலே அவரை பஜனை மடத்துக்கு இழுத்துச் சென்றன. கிருஷ்ண பாகவத ரைப் பார்த்துவிட்டு எதிர்நோக்கி வந்தார் கந்தசாமி பாகவதர். இவர் இருக்கும் நிலைமையும், இவர் தற்காலத்தில் நடந்து கொள்ளும் போக்கும் அவருக்கு நன்ருகத் தெரியும். ஆகவே, மிக்க அனுதாபம் கொண்ட பார்வையுடன் அவரை நெருங்கினர்.

பஜனை மடத்தை நோக்கி வேகமாக வந்த கிருஷ்ண பாகவதர், பஜனை மடத்திற்கு எதிரே சட்டென்று நின்ருர். எதிரே, கொல்லன் பட்டரை ஒன்று இருந்தது. அதில் கொல்லன் இரும்பைப் பழுக்கப் பழுக்க ஜ்வாலையுடன் காய்ச்சி அதை அடித்து நீட்டிக்கொண்டிருந்தான். கிருஷ்ண பாகவதர், அப்படியே சில விநாடிவரை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். எதிரே வந்து நிற்கும் கந்தசாமி பாகவதரைப் பார்த்தவுடன், ''மாமா, அந்த செக்கச் செவேலென்று இருக்கிறதே இரும்புத்துண்டு. அதை என் தொண்டையில் விட்டுக் கொண்டேஞல் என் தொண்டை சரியாய்ப் போய்விடுமா'' என்ருர்.

கந்தசாமி பாகவதர் ஒன்றும் சொல்லவில்லை. நல்ல வேளை கேள்வியுடன் நிறுத்திக்கொண்டாரே, காரியத்தில் இறங்கிவிடாமல் என்று எண்ணியபடியே, ''இரும்பின் பக்கு வத்திற்கு ஒரு சூடு வேண்டியிருக்கிறது. மனிதன் பக்குவத் திற்கும் ஒரு சூடு வேண்டியிருக்கிறது, வா போகலாம்'' என்று கிருஷ்ண பாகவதரை அழைத்துக்கொண்டு வெளியே கிளம்பினர்.

இருவரும் பேசாமல் பெரிய கோவிலை அடைந்தார்கள். அந்த இருட்டில், மனிதனுடைய அஞ்ஞானத்திற்கு நடுவில் விளங்கும் ஆத்மசக்தியைப்போல் மகோன்னதமாக விளங்கிக் கொண்டிருந்தது, அந்தப் பெருங்கோவிலின் கோபுரம். அவர்கள் ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தையும் பேசாமல் கோவிலையடைந்தார்கள். வழியெல்லாம் இருண்டிருந்தது போலவே கிருஷ்ணபாகவதர் உள்ளத்திலும் இருள் சூழ்ந்திருந்தது. கோவில் வாசலை நெருங்கியதும் கிருஷ்ணபாகவதர் சொன்னார், "மாமா, நம்மை இந்த இருள் விழுங்குவது போலவே காலமும் விழுங்கப் போகிறது. இன்றே அது என்னை விழுங்கி விடாதா என்றுதான் நான் பிரார்த்திக்கப் போகிறேன்" என்றார்.

கந்தசாமி பாகவதர் பதில் பேசவில்லை. தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். தனி மனிதர்கள் எங்கே? காலம் என்னும் மகா வெள்ளம் எங்கே? இருந்தாலும், கிருஷ்ண பாகவதரின் மனோவேதனையை அறிந்து கொண்டு பேசாமல் இருந்தார். கிருஷ்ணபாகவதருக்கு எதைச் சொல்லிச் சமாதானப்படுத்தலாம் என்று தோன்றவில்லை. பதில் பேசாமலே இருவரும் கோவிலுக்குள்ளே நுழைந்தார்கள்.

மகத்தான அந்த நந்தியின் உருவம் ஒரு சிறு மலைபோல உட்கார்ந்து கிடந்தது. கிருஷ்ணபாகவதரைப் பார்த்தார் கந்தசாமி பாகவதர். ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டார். "இந்த நந்தியின் தத்துவம் தெரியுமா? இது தருமத்தின் சொரூபம். பகவான் இதை வாகனமாகக் கொள்வதற்குக் காரணம், பகவான் தருமத்தின் கண் வீற்றிருக்கிறார் என்பதைத்தான் குறிக்கிறது" என்றார்.

கிருஷ்ணபாகவதர் சிரத்தையில்லாமல் கேட்டுக்கொண்டிருந்தார். இந்த தத்வ விஷயங்கள் அவர் இருந்த நிலையில் அவருக்கு ருசிக்கவில்லை. அவருக்கு சிரத்தையில்லை என்பதைக் கந்தசாமி பாகவதரும் உணராமல் இல்லை.

ஈச்வரன் சன்னிதானத்தை அடைந்தார்கள். பிருகதீச்வரன் பிரும்மாண்டங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு பெருமையுடன் வீற்றிருந்தான். கந்தசாமி பாகவதர் கை கூப்பினார். கிருஷ்ணபாகவதரும் இயந்திரம்போல் தம் கைகளைத் தூக்கினார்.

மண்டபத்தின் கோடியில் இருந்தபடியே கந்தசாமி பாகவதர் சொன்னார், ''சில வருஷங்களுக்கு முன்பு இதே மாதிரி துன்பப் பட்டிருக்கிறாயில்லையா?'' என்றார்.

கிருஷ்ண பாகவதர் பதில் சொல்லவில்லை. தன் குடும்ப வாழ்க்கையில் தாம்பத்திய வேற்றுமையில் ஏற்பட்ட மனோ வேதனையைத்தான் குறிக்கிறார் என்பதை அறிந்து கொண்டார்.

''நான் முன்பே சொல்லியிருக்கிறேன். துன்பம் எதிலிருந்து உண்டாகிறது தெரியுமா? துன்பம் அஞ்ஞானத்தின் செல்வக் குழந்தை. நம்முடையது என்று சிலவற்றைச் சொல்லிக்கொள்கிறோம்; நம்முடையது இல்லை என்று சிலவற்றைப் பிரித்து வைத்துக்கொள்கிறோம். இந்த வேற்றுமையிலிருந்துதான் மனிதனுடைய சகல இன்னல்களும் பிறக்கின்றன. இந்த வேற்றுமை எவ்வளவு தூரம் உண்மை? நான் ஒன்று சொல்கிறேன் கேள். நீ உன்னுடைய அருமையான குரலை இழந்து வேதனைப்படுகிறாய். வாஸ்தவம்தான். அதனால் என்ன குடி முழுகிப்போய்விட்டது? உலகத்தில் அஸ்தமிப்பது நின்று விட்டதா? சூரியோதயம் நின்றுவிட்டதா? இப்பொழுது என்ன பிரளயம் வந்துவிட்டது?'' என்றார்.

கிருஷ்ணபாகவதருக்குச் சுருக்கென்றது. இப்படிக் கொடூரமாகக் கந்தசாமி பாகவதர் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும், அவர் சொன்ன வார்த்தைகளில் இருந்த உண்மை என்னவோ கிருஷ்ண பாகவதரைத் தூக்கி வாரிப் போட்டது.

''மாமா, நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான். உலகத்திற்காக நான் வருந்தவில்லை. ஆனால் எனக்கு அது ஒரு மகத்தான நஷ்டம் தானே? அதுதான் என்னைச் சொல்லொணாத வேதனையிலாழ்த்துகிறது?''

''கிட்டு, நீ வருத்தப்படுவதில் ஆச்சரியமில்லை. ஆனால், நீ இதை உணரவேண்டியதுதான். துன்பம் என்பது ஒரு மாயை. ஒவ்வொருதரம் இமைகள் மூடும்பொழுதும் ஒவ்வொருதரம் அவைகள் திறந்துதான் தீருகின்றன. துன்பமும்

அத்தகையதுதான். துன்பம் நம் அகக்கண்ணை இமைகள் போலத்தான் மறைக்கிறது. ஆனால், அவை மறுபடியும் திறந்துதான் ஆகவேண்டும். அறிவாளி தன் துன்பத்தைத் தன் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறான்.''

கிருஷ்ணபாகவதர் கேட்டுக்கொண்டே நின்றார். இருவரும் சற்று மெதுவாக நடந்துகொண்டே கர்ப்பக்கிருஹத்தின் பக்கத்தை அடைந்தார்கள். அந்த மஹத்தான லிங்கம் அமைதியே உருவாக அசைவற்று நின்றது. ''கிட்டு, அதோ பார். பகவானை ஏன் இந்த லிங்க ரூபத்தில் வணங்குகிறோம் தெரியுமா?'' என்றார் கந்தசாமி பாகவதர்.

கிருஷ்ணபாகவதர் தலையசைத்தார்.

''தோன்றியும் தோன்றாமலும் இருக்கும் பரம்பொருளுக்கு அறிகுறியாக இருக்கிறது அந்த லிங்கம். லிங்கம் என்றாலே ஆன்மாக்களுக்கும் உலகங்களுக்கும் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்குமான இடம் என்பது பொருள். ஆனால் அண்டங்களையும் தன்னுள் அடக்கி வைத்துக்கொள்ளும் பரம்பொருள் இந்த லிங்கத்திற்குள் அடங்கிவிட்டாரா? இல்லை. இந்த லிங்கம் ஒரு சின்னம்தான். வெறும் தத்துவத்தை விட்டு உன் விஷயத்திற்கு வருவோம் வா'' என்றார்.

கிருஷ்ணபாகவதர் சிரத்தையுடன் கேட்க ஆரம்பித்தார்.

''நீ இவ்வளவு தூரம் நாதத்தை உபாசித்து வந்தாயே. எதற்காக?'' என்றார்.

''இதோ தெரியும் சிவலிங்கத்தைப்போல அது பரம்பொருளின் சின்னமாக இருப்பதால்தான்'' என்றார் கிருஷ்ண பாகவதர்.

'வாஸ்தவம்தான்; ஆனால் அந்த நாதப் பிரும்மத்தை நீ உன் செவிகளினால்தானே உணர்ந்தாய்?'' என்றார் கந்த சாமி பாகவதர்.

''ஆம்'' என்று தலையசைத்துவிட்டு மேலே என்ன கேட்கப் போகிறார் என்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றார் கிருஷ்ணபாகவதர்.

''சரி. உன் செவிக்குள் அடங்கிக் கிடப்பதுதானா நாதம்?'' என்று கேட்டுவிட்டுக் கிருஷ்ணபாகவதரைப் பார்த்தார்.

கிருஷ்ணபாகவதர், ஆச்சரியத்துடன் கந்தசாமி பாகவதரைப் பிரமித்துப் பார்த்துக்கொண்டு நின்ருர். "நீங்கள் ஏதோ புதிர் போடுகிறீர்கள். கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்கள்" என்று மெதுவாகக் கேட்டார்.

"அங்கிங்கெனுதபடி யுள்ள பரம்பொருளுக்கு இந்த லிங்கம் எப்படிச் சின்னமாக நிற்கிறதோ, அதேபோல் வானிலும் வெளியிலும், அணுவிலும் இயங்கும் நாதபிரும்மத்தின் ஒரு திவலையைத்தானே உன் காதுகள் ஏற்றுவாங்கிக் கொள்ளுகின்றன? உன் செவிக்கு எட்டாது இயங்கும் நாத வெள்ளம் எவ்வளவு இருக்கிறது? உன் காதுகள் கேட்ட நாத வெள்ளத்தில் இது வரையில் ஈடுபட்டிருந்தாய். இனி செவிக்கு எட்டாத இனிய நாதத்தில் ஈடுபடுவதற்குத்தான் உனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. செவிகள் கேட்கும் இனிய கீதத்தில் ஈடுபட்டிருந்தாய். செவிக்கு எட்டாது நிற்கும் பரம கீதத்தில் ஈடுபடப்போகிருய். உன் செவிகள் வெளியே கேட்கும் நாதத்தில் ஈடுபட்டன. இப்பொழுது அவைகளை உள் நோக்கித் திருப்பு. எங்கும் நிலவி வரும் பரம ஒலியின் எதிரொலியை உன் உள்ளத்திலே கேட்பாய்" என்ருர்.

கிருஷ்ணபாகவதர் ஸ்தம்பித்து நின்ருர். அவர் உடம்பெல்லாம் புல்லரித்தது. விசுவரூப தரிசனம் கண்ட பார்த்தனைப்போல அவர் சிறிது நேரம் உணர்விழந்து நின்ருர். அவர் கண்களிலிருந்து நீர் பெருகியது.

"முன்பொருதரம் என் ஒரு கண்ணைத் திறந்தீர்கள். இன்று மற்ருெரு கண்ணையும் திறந்துவிட்டீர்கள்" என்று அவர் காலடியில் அப்படியே விழுந்து நமஸ்கரித்தார்" கிருஷ்ணபாகவதர்.

கந்தசாமி பாகவதர் அப்படியே அவரை அன்புடன் தூக்கி, "அப்பா, கிட்டு, நீ நாதத்தின் எல்லையைக் கடந்துவிட்டாய்; அடுத்தபடியில் இருப்பது மௌனம்; அதற்கு நீ வந்துவிட்டாய்" என்ருர்.

"அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்ருர் கிருஷ்ணபாகவதர்.

"தியானம்" என்ருர் கந்தசாமி பாகவதர்.

சிறிது நேரம் பேசாமல் யோசனையிலாழ்ந்தார் கிருஷ்ணபாகவதர்.

''வாஸ்தவம்தான். இது வரையில், பகவானைக் குரல் கொடுத்துக் கூப்பிட்டு வந்தேன். இனி என் இதயத்தால் அவரைக் கூப்பிடுவேன்'' என்றார்.

பூஜைக்காகக் கோவில் மணி குபீரென்று ஒலித்தது. கடவுளின் ஞாபகத்தை ஒவ்வொருவர் இதயத்திலும் அடிப்ப தற்காக ஏற்பட்ட ஒலி அது. இப்பொழுது எழுந்த ஒலி கிருஷ்ணபாகவதர் காதில் மாத்திரம் விழவில்லை. அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் விழுந்தது.

கடவுளைப் பார்த்தார். அவருடைய கண்கள் பார்க்க வில்லை. அவருடைய இதயம் பார்த்தது.

அவருடைய கண்களிலே ஒரு புது ஒளி வீசியது. அவ ருடைய உள்ளத்தில் ஒரு புதிய இசை பெருகியது.

சஞ்சலம் நீங்கியது. சாந்தம் பிறந்தது.

கந்தசாமி பாகவதருடன் வீடு திரும்பினார். வெளியே இருண்டுதானிருந்தது. ஆனால் கிருஷ்ணபாகவதரின் இதயத் தில் இருள் இல்லை.

தன் இதய நாதத்திலேயே ஈடுபட ஆரம்பித்துவிட்டார்.

சுபம்!

45947
O31:3N123:12
K4
MADURAI UNIVERSITY LIBRARY
16 JUN 1970
MADURAI.

# இனிய நாவல்கள்

| | ரூ. | ந. |
|---|---|---|
| சக்கரவர்த்தி பீட்டர்—A. டால்ஸ்டாய் | 12 | 50 |
| ஜெய சோமனுத்—கே. எம். முன்ஷி | 7 | 00 |
| சிற்றன்னை —புதுமைப்பித்தன் | 1 | 50 |
| பிரேத மனிதன் ,, | 1 | 00 |
| நாரத ராமாயணம் ,, | 1 | 00 |
| பஞ்சும் பசியும்—ரகுநாதன் | 4 | 50 |
| புயல் ,, | 1 | 50 |
| நான் இருவர் ,, | 1 | 50 |
| கன்னிகா ,, | 2 | 00 |
| தாராஸ் புல்பா—கோகோல் | 2 | 25 |
| காப்டன் மகள்—புஷ்கின் | 1 | 75 |
| கள்வனின் காதல் ,, | 1 | 50 |
| கோடையில் வசந்தம்—துர்க்கனேவ் | 2 | 25 |
| சீமானின் திருமணம் ,, | 1 | 00 |
| மூன்று தலைமுறைகள்—மாக்ஸிம் கார்க்கி | 6 | 50 |
| தாய் ,, | 9 | 00 |
| வசந்தமே வருக—இலியா எரன்பர்க் | 4 | 00 |
| தந்தையும் மகளும்—சாவி | 2 | 00 |
| ராஜநர்த்தகி—சரஸ்வதி ராம்நாத் | 5 | 50 |
| வீர சுதந்திரம் ,, | 5 | 00 |
| காதல் உள்ளம்—ஜே. எஸ். ரவீந்திரா | 3 | 50 |
| நாகமணி—சிதம்பர சுப்ரமண்யன் | 2 | 50 |
| நாடகக்காரி—துறைவன் | 3 | 50 |
| மாலதி - சரத்சந்திரர் | 4 | 50 |